

புண்ணிய
மகுடம்
கலைமாமணி
விக்கிரமன்

# அணிந்துரை

## மூன்று வரலாற்றுப் புதினங்கள்

'பாண்டிய மகுடம்', 'பகைவனின் காதலி', 'ஒரு வாள் ஒரு மகுடம் இரு விழிகள்' ஆகிய மூன்று வரலாற்றுப் புதினங்கள் அடங்கிய இந்தத் தொகுதியில் உள்ள மூன்று வரலாற்றுப் புதினங்களும் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை. வரலாற்றுச் சான்றுகளிலிருந்து மாறாமல் கற்பனை கலந்து எழுதுவதே என் குறிக்கோள்.

'எந்தையும், தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்று மகாகவி பாரதியார் நாம் பிறந்த நாட்டின் பெருமையை எண்ணிப் பெருமை கொள்கிறார். இந்தப் புவியில் உள்ள எல்லா வளங்களும் நிறைந்த நம் திருநாட்டின் வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் அறிவது மிக முக்கியம்.

வரலாறு ஒரு படிப்பினை. நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே படிக்கப் பலருக்கும் பொறுமை இராது. கதைவடிவில் சொன்னால் பலர் விரும்பிப் படிப்பார்கள். கதையை மட்டுமே சொல்வதென்றால் கற்பனை-உண்மையை மறைத்துவிடும். கற்பனைமட்டும் வரலாறாகாது. கற்பனையுடன் கூடிய வரலாற்று நிகழ்ச்சிகளை வரலாற்றுப் புதினம்-சரித்திர நாவல்- என்கிறோம்.

சங்க காலத்திலேயே முடியுடை மூவேந்தர்கள் தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். பிற்காலத்திலும் சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் ஆட்சி செய்தனர். ஆனால் மூவரும் ஒற்றுமையுடன் இருந்ததே குறைவு.

தேசிய ஒருமைப்பாடு என்கிறோம், தமிழக ஒருமைப் பாட்டைப் பற்றி யாரும் சிந்திக்க வில்லை. ஒருவரோ டொருவர் ஏதாவது சிறுகாரணம் பற்றித் தங்களுக்குள் பகை கொள்வார்கள்; பகை முற்றிப் போர் மூளும். ஒவ்வொரு போருக்கும் ஏதாவது காரணம் இருக்கும்.

பாண்டிய நாட்டின்மீது சோழர்கள் படையெடுத்துத் தங்கள் ஆளுகையின்கீழ் கொண்டு வருவதும், பாண்டியர்கள் சோழநாட்டின்மீது படையெடுத்து அந்த நாட்டின் பல பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவதும் வரலாற்று நிகழ்ச்சிகள்.

சேர,சோழ, பாண்டிய வரலாறு தொடர்பான நிகழ்ச்சிகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், நூல்கள் முதலானவற்றை ஏறத்தாழ 55 ஆண்டுகளாகப் படித்து வருபவன். பல வரலாற்றுப் புதினங்களுக்கான நிகழ்ச்சிகள் என்மனத்தில் பதிந்துவிட்டன. 32 வரலாற்று நாவல்களை எழுதியுள்ளேன். அவற்றுள் பாண்டிய மகுடம், பகைவனின் காதலி, ஒருவாள் ஒருமகுடம் இரு விழிகளும் அடங்கும்.

மூன்று வரலாற்றுப் புதினங்களின் கதைச் சுருக்கத்தை விவரிப்பதைவிட, வாசகர்கள் படித்து மகிழ விட்டு விடுவதே சிறந்ததாகும்.

என் உயர் நண்பர் புலவர் வரதகோவிந்தராசன் இந்த மூன்று வரலாற்றுப் புதினங்களையும் படித்து, மூன்றையும் ஒரே தொகுதியாக வெளியிட விரும்பினார். இப்போது நிறைவேற்றிவிட்டார். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விக்கிரமன்**

# பதிப்புரை

வரலாற்று வண்ணம் கொண்டு கற்பனைத் தூரிகை எடுத்து புதின ஓவியம் வரைவதில் - புனைவதில் வல்லவர் கலைமாமணி விக்கிரமன் அவர்கள். சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் தமிழகத்தை வளம் கொழிக்க வலிமை மிளிர நலம் செழிக்க ஆண்டு வந்தனர். அவர்களுக்குள் திருமண உறவுகளும் இருந்து வந்தன. ஆனால் அவர்கள் மணவிழாக் கொண்டாடி மகிழ்ந்த நாள்களைவிட மரணப் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீழ்ச்சியுற்ற அல்லது வெற்றி கண்ட நாள்களே மிகுதி.

பல காரணங்களால் அவர்களுக்குள் அடிக்கடி போர்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன. மூவேந்தர்களும் ஒற்றுமையுடன் ஆண்டிருந்தால் உலகத்தையே தம் அடிப்படுத்தியிருக்கலாம்.

முன்னோர்கள் வரலாற்றைப் பொன்னேபோல் போற்றுவதும் நம் கடமை. அவ் வரலாறுகள் நம் முன்னோர் வாழ்ந்த நாகரிக பண்பாட்டை விளக்குவன. நம் வாழ்விற்கு நல்ல படிப்பினைகளை நல்கி வளப்படுத்துவன. வரலாற்றுப் புதினம் எழுதுவது அவ்வளவு எளிதான செயலல்ல. மொழிஅறிவும், வரலாற்றை ஆயும் நுண்ணிய திறனும் சுவைபடக் கதைசொல்லும் ஆற்றலும் ஒருங்கே கைவரப் பெற்ற திருவிக்கிரமன் போன்றவர்களுக்கு அது கை வந்த கலை.

மூவேந்தர்களின் வரலாற்றைக் கருவாகக் கொண்டு முத்தமிழ் வித்தகர் விக்கிரமன் அவர்கள் முத்தான மூன்று வரலாற்றுப் புதினங்களைப் புனைந்து தமிழ் அன்னையின் தாள் மலர்களில் சமர்ப்பித்துள்ளார். மூன்று புதினங்களும் முற்றிய அடிக்கரும்பாக இனிக்கின்றன. படித்துச் சுவைத்தநான் மூன்று புதினங்களையும் சேர்த்து ஒரே நூலாகக் கொண்டுவர விரும்பினேன். என் விருப்பத்திற்கு இசைவுதந்த கலைமாமணி விக்கிரமன் அவர்களுக்கு நன்றி. அணிந்துரை நல்கிய எழுத்தாள நண்பர்களுக்கு நன்றி. வாசக நண்பர்கள் படித்து மகிழ்வார்களாக.

அன்பன்

**வரத கோவிந்தராசன்**

# பொருளடக்கம்

1. பாண்டிய மகுடம் 9
2. பகைவனின் காதலி 115
3. ஒரு மகுடம் ஒரு வாள் இரு விழிகள் 221

## அணிந்துரை
# என் எண்ணங்கள்
### ஸ்ரீவேணுகோபாலன்

சிவபெருமானே பாண்டிய வம்சத்திற்கு மகுடத்தை அளித்ததாக ஐதீகம், இத்தனை சிறப்பு வாய்ந்தது ''பாண்டிய மகுடம்!''

இந்தத் தெய்வ மகுடத்தை அடைய பல அரசுகளுக்கு ஆசை.

இதன் பின்னணியில் காதலும், கடமையும் மட்டுமே பின்னவிட்டு ஒரு அழகான வரலாற்றுப் புதினத்தைப் புனைந்திருக்கிறார் ஆசிரியர்.

கலைமாமணி விக்கிரமன் சிறந்த வரலாற்று அறிவு உள்ளவர். தமிழக வரலாறு அத்தனையும் அவர் விரல் நுனியில். (எனக்குத் திடீரென்று விளக்கம் - Reference தேவைப்பட்டால் உடனே அவருக்கு போன் பண்ணித் தெரிந்து கொள்வேன்.)

மதிவாணன் - மலர்க்கொடி காதலுக்கு அடுக்கடுக்கான சோதனைகளைக் கொணர்ந்து நம்மைக் கலங்க வைத்து, ஒவ்வொரு பக்கத்திலும் நமது கவலைகளை வளரவிட்டு, கடைசியில் அந்தத் தெய்வீகக் காதலின் முடிவை ஆசிரியர் நமக்குத் தெரிய வைக்கும்போது, அது ஒரு சுபத்தில் முடிந்தாலும் மனசில் இன்னதென்று

சொல்ல முடியாத ஒரு வேதனையும் நெருடுகிறது. ஏதோ ஒரு விதத் தவிப்பும் நமக்குள் ஏற்படுகிறது.

உண்மையில் மதிவாணன் மலர்க்கொடி காதல் காகிதப் பக்கங்களில் வளரவில்லை. நமது உள்ளங்களில்தான் பின்னிக் கொண்டு வளர்கிறது. கதையுடன் இப்படி நம் உள்ளங்களை ஒன்றச் செய்த திறன் ஆசிரியருடையது.

அங்கங்குச் சரித்திர செய்திகள் ஆசிரியர் பேனாவையும் தாண்டி முன்வரத் துடித்தாலும், அவைகளை அடக்கி வாசித்து, கதைக்கு வெகு தூரத்திலேயே ஒதுக்கி வைத்திருக்கிறார் அவர்.

மதிவாணன், மலர்க்கொடி, இராச சிம்மன், வானவன்மாதேவி, மாரப்பன், மலர்க்கொடியின் தந்தை ஆகியோரிடையே எழும் காரசாரப் பேச்சுகள், மோதல்கள், வாதங்கள் யாவும் அங்கங்குத் தீப்பொறிகளைத் தெறிக்கின்ற நிலையில்,

'இருட்டின் கண்கள் போல மின்மினிகள்'
'முத்துகள் சிதறி விழும் சிரிப்பு'

என்ற இதுபோன்ற எத்தனையோ உவமை அழகுகளும் விவரிப்புகளும் மனங்களில் அருமையான சித்திரங்களாகப் பதிக்கின்றன.

பாண்டிய 'மகுடம்' அல்லது கிரீடத்தின் முடிவும் சரி. அந்தப் பெயர் தாங்கிய சரித்திர புதினத்தின் முடிவும் சரி, இரண்டும் படிப்பவர் நெஞ்சங்களில் நன்கு உறைந்து விடுகின்றன.

333856
604398

# பாண்டிய மகுடம்

## 1

பாண்டிய நாட்டின் வட எல்லையை அடுத்திருந்த கானகத்தை ஒட்டிய கோட்டையின் காவல் கூடத்தில் அமர்ந்து, மதிவாணன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். கோட்டைக்கருகே குடிநீருக்காகப் புதிதாகக் குளமொன்று வெட்டப்பட்டிருந்தது. குளத்தின் படிக்கட்டுகளின் வழியே மலர்க்கொடி இறங்கிச் செல்வது அங்கிருந்து அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. 'இன்னும் சில கணத்தில் அவள் சிறுசெம்பில் நீருடனும், கஞ்சிக் கலயத்துடனும் வந்து விடுவாள்.

மலர்க்கொடியால் அவ்வளவு சரியான நேரத்திற்கு எவ்வாறு வரமுடிகிறது என்று மதிவாணன் நினைத்து முடிப்பதற்குள், ''அத்தான்'' என்ற குரல் காவல் மாடத்தின் கீழிருந்து கேட்டது. அந்தக் குரலில்தான் எத்தனை இனிமை! இனிமையை ஆண்டவன், தோற்றத்தில் மட்டும் படைக்கவில்லை; குரலிலும் படைத்திருக்கிறான். நாள் முழுமையும் அந்தக் காட்டுப் பகுதியில் காவல் காத்துக் கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை உற்று நோக்கியவாறிருப்பவனுக்கு மலர்க்கொடியின் வருகை, இருண்டபோதில் தோன்றும் மதி போன்றிருக்கும்.

மலர்க்கொடி வழக்கம்போல கஞ்சிக் கலயத்தைச் சுமந்து வந்தாள். மதிவாணன் கைகளைக் கழுவிக்கொண்டு அவளருகே வந்தமர்ந்தான்.

கை இரண்டையும் அவன் குவித்துக் கொண்டான். மலர்க்கொடி கூழை அதில் ஊற்றினாள். ஆகா அந்தக் கூழுக்குத்தான் புதிய ருசி எங்கிருந்து வந்தது? அவள் கரத்தில் சுமந்து வந்த கலயத்திலிருப்பதாலேயே அந்தக் கூழ் அதிகச் சுவை பெற்று விட்டதா? இல்லை, அவள் முகத்தை நோக்கியவாறு அவன் அதைப் பருகுகிறானே, அதனால் சுவை அதிகமா? மலர்க்கொடி அவன் முகத்தருகே நெருங்கி அவன் கண்களை உற்று நோக்கினாள். கலீரெனச் சிரித்தாள். மதிவாணன் கூழின் சுவையை ரசிப்பதை நிறுத்தி, "மலர்க்கொடி என் சிரித்தாய்?" என்று கேட்டான். "காலையினின்று நீராடாமல் எதிர் வெயிலின் தாக்குதலால் கருகிப் போயிருக்கும் என் முகத்தைக் கண்டு உனக்குச் சிரிப்பு வந்து விட்டதா? இல்லை கலயத்துக் கஞ்சியை ஒரே மூச்சில் குடித்து விட்டேனே, அதை நினைத்து உனக்குச் சிரிப்பு எழுந்து விட்டதா?" என்றான்.

மலர்க்கொடி மீண்டும் நகைத்து, "அதுவா? என் சிரிப்பு பூத்துக் குலுங்கும் புதுமலர்போல் இருக்கும் என்பீர்களே, கண் சிமிட்டும் தாரகையை வெல்லும் என்பீர்களே, முத்தாபரணம் சிதறியது போல் இருக்கும் என்றெல்லாம் வர்ணிப்பீர்களே- அவை எப்படி இருக்கும் என்பதை நான் கண்டறியத்தான் இப்போது நகைத்தேன்"-என்றான்.

"ஓகோ! உன்னால் அவற்றை எப்படிக் காணமுடியும்?"

"என் கண்ணை உற்றுநோக்கி நீங்கள் என்ன காண்கிறீர்கள், அதுபோல உங்களுடைய கண்களில் தெரியும் என்னுடைய வடிவை நான் காணமுயல்வேன்...!"

இதைக் கேட்டு மதிவாணனும் மலர்க்கொடியும் சேர்ந்து நகைத்தது, அந்தக் காவல் கூடத்தின் மீது பறக்கும் மீன்கொடியை இன்னும் அதிவேகமாக அசைந்தாடச் செய்தது.



"இப்படி நாம் இருவரும் எத்தனை நாள் ஒருவரையொருவர் பார்த்து ரசித்துக் களித்திருக்கப் போகிறோமோ? இன்னும் எவ்வளவு நாட்கள் உன் சுவையுணவை உண்டு நான் வாழப்போகிறேனோ?" என்று பெருமூச்சு விட்டவாறு கூறிய மதிவாணனின் பேச்சை மலர்க்கொடி விரும்பவில்லை.

"என்ன சந்தேகம் உங்களுக்குத் திடீரென்று வந்துவிட்டது? இங்குப் பறக்கும் மீன்கொடி அசைந்தாடித் தவழும் வரையில் நாமும் குதூகலமாய் இருப்போம். நம் அரசர் ராஜசிம்ம சக்கரவர்த்தியின் முடியில் திகழும் பாண்டியர்களின் பரம்பரை மகுடத்திலுள்ள வைர, வைடூரிய நவரத்தினங்கள் ஒளிவிட்டு மிளிரும் வரையில் நம் அன்பும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்."

"மலர்க்கொடி நீ சொல்வது உண்மைதான். மீன் கொடி அழிவற்றது. அரசரின் மகுடமும் அழியாதது. ஆனால், அசைந்தாடும் மீன் கொடிக்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறதே? மதுரை நகரை நீ கண்டிருக்கிறாயா? நுழைவாயில் மிகப் பிரம்மாண்டமாயிருக்கும். அவ்வாயிலின் மீது ஏற்றப்பட்டிருக்கும் கொடியிருக்கிறதே அது ஆடி அசையும்போது, எதிரிகளைப் போருக்கு 'வா, வா' என்றழைப்பது போலிருக்கும். அது மட்டுமின்றி மலர்க்கொடி, வேடிக்கையாக ஒன்றுண்டு. பந்தும்-பாவையும் கொடி மரத்தருகே வைக்கப்பட்டிருக்கிறது எதற்குத் தெரியுமா? பகைவர்கள் நம் மன்னருக்கெதிரே பந்தாடும் பாவையர்போலத் தானாம். இவற்றைக் காணும் எந்த வீரனுக்குத்தான் ரோசம் வராது? இப்போது சோழ மன்னனுக்கு அந்தப் பாவைமீது ஆசை. அவள் ஆடும் பந்தின் மீதாசை. 'வா, வா' என்றழைக்கும் மகரக்கொடிமீது ஆசை. பாண்டிய மண்டலத்தைப் பிடிக்கத் திட்டமிட்டிருக்கலாம்.

எந்த நிமிடம் போர் வருமோ? போர் வந்தால் நான் போக வேண்டாமா? வேலையற்றிருக்கும் வாளுக்கு விருந்தளிக்க நான் செல்ல வேண்டாமா? அதனால்தான் சொன்னேன், இன்னும் எத்தனை நாட்களுக்கு நீ அளிக்கும் சுவை உணவை உண்டு வாழக் கொடுத்து வைத்திருக்கப் போகிறேனோ என்று'' என்றான்.

மலர்க்கொடி மௌனம் சாதித்தாள். போர் வரப்போவதைப் பற்றிச் சில நாட்களாக அந்தக் கிராமத்தில் எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். தன் தந்தையும் அதைப் பற்றித் தன்னைக் கேட்பதை அவளறிவாள். ஏன் போர், எதற்காகப் போர்? இதுதான் அவளுக்குப் புரியவில்லை.

அப்போது சோழ நாட்டைப் பரகேசரி பராந்தக சோழதேவன் ஆண்டு வந்தான். போர்த் தினவெடுத்த சோழ வீரர்களுக்கு விருந்தளிக்க அவன் துடித்தான். பாண்டிய நாட்டைக் கைப்பற்றிச் சோழ நாட்டுடன் சேர்க்கப் பேராவல் கொண்டான். அதற்காக முதல் ஏற்பாடாக ஒற்றர்களைப் பாண்டிய நாட்டில் சென்று குடியேறச் செய்தான். பாண்டியர்களது கோட்டைக் கொத்தளங்களின் இரகசியத்தை அறியச் செய்தான். அப்படி வந்தவர்களுள் ஒருவர்தான் மலர்க்கொடியின் தந்தை மாரப்பன். மலர்க்கொடி தாயற்றவள். பிறந்த ஐந்தாண்டுகளுக்குள்ளேயே அவள் தாய் இறந்தாள். மாரப்பன் மறுமணம் புரிந்து கொள்ளவில்லை. உறையூரின் அகன்ற கடைவீதியில் சிறுகடை வைத்து வணிகராய்த் திகழ்ந்தார். ஒருநாள் பராந்தக மன்னரின் படைத்தலைவர் அவரை அணுகினார். இரகசியமாக ஏதோ வெகுநேரம் பேசினார். கடைசியில் பாண்டிய நாட்டிற்குச் செல்லக் கட்டளையிட்டார். மறுநாளே மாரப்பன் தன் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார். திடீர்ப் பயணத்தின்



காரணத்தைக் குறித்து மலர்க்கொடி தன் தந்தையை ஓரிரு தடவை கேட்டுப் பார்த்தாள். அவர் சரிவர மறுமொழி கூறவில்லை. உறையூரில் தொழில் திருப்திகரமாக நடத்தமுடியாமல், பாண்டிய நாடு செல்வதாகக் கூறினார். இளம்பருவத்து மலர்க்கொடி அதற்குமேல் தந்தையைக் கேட்கவில்லை.

மதுரை மாநகர் செல்லாமல், மாரப்பன் நாடு நகரமெல்லாம் சுற்றிக் கடைசியில் பாண்டிய நாட்டு வட எல்லைக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். வளப்பு மிக்க அந்தச் சூழ்நிலை மலர்க்கொடிக்குப் பிடித்திருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் வந்த சில நாட்களுக்குள் அந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்த அந்த வீரன் மதிவாணனை அவளுக்கு நிரம்பவும் பிடித்துவிட்டது. சோழர்களின் படையெடுப்பு ஆசையைப் பாண்டியர்களும் மோப்பம் பிடித்து அறிந்து கொண்டனர். வடதிசை எல்லையைத் தக்க முறையில் பாதுகாக்க முடிவு செய்தனர். சோழநாட்டை நெருங்கியிருந்த கிராமத்திற்கு மதிவாணனை அனுப்பினர். மதிவாணன் பாண்டியர்களின் ஆபத்துதவி படை வீரர்களுள் ஒருவன். எல்லைக்காவல் படையின் தலைமைப் பொறுப்பை அளித்து அவனை அந்தக் கிராமத்திற்கு அனுப்பினார்கள்.

எல்லைக் காவல் படையைச் சேர்ந்த மதிவாணனை மலர்க்கொடியின் தந்தை வெகு எளிதில் நட்பினராக ஆக்கிக் கொண்டார். முகம் அறியாத அந்தக் கிராமத்தில் உணவு அளிக்கும் பொறுப்பை அவர் ஏற்றார். அவனைத் தனக்குப் பிடித்து விட்டதென்று கூறினார். அவனைத் தன் சொந்த மகன்போல் பாவிப்பதாகக் கூறினார். மலர்க்கொடியின் தந்தையின் இனிய வார்த்தைகள் மதிவாணனைக் கவர்ந்தன.

ஆனால் மலர்க்கொடி தன் தந்தையின் கூற்றை ஒப்புக்கொள்ளவில்லை. அந்த அழகிய வீரனை அவர் தன்

மகன் எவச் சொந்தம் பாராட்டுவதை அவள் ஒப்புக்கொள்ளவில்லை. மதிவாணன் அவள் நெஞ்சில் நிறைந்தவிதமே வேறு. மதிவாணனின் அழகிய முகம், பரந்த தோள்கள்; கம்பீரமான பார்வை எல்லாவற்றையும் அவள் இதயத்திற்குள் புதைத்து வைத்துக் கொண்டாள்.

இப்போதெல்லாம் மதிவாணனால் பகல்பொழுதில் உணவு உண்ண வரமுடிவதில்லை. இரவு பகல் எந்நேரமும் அந்தக் காவல் மேடையில் ஒருவர் மாற்றி மற்றவர் என இருக்குமாறு நேரிட்டது. தன் மகளை அவனுக்கு உணவு எடுத்துச் செல்லுமாறு மலர்க்கொடியின் தந்தை பணித்தார். தன் மகள் அந்தக் காவல் கூடத்திற்குச் செல்வதானால் இன்னும் பல உண்மைகளை அறிய இயலும் என்பது அவர் எண்ணம். மதிவாணனுக்கு நடுப்பகல் உணவு எடுத்துச் செல்லும் வாய்ப்பு அவளுக்கு ஏற்பட்டவுடன், அவள் மலர் விமானத்தில் கதிரவன் உச்சிப் பொழுதை அடையும் வேளையில்தான் மலர்க்கொடி கஞ்சிக் கலயம் நிறைய சுவையான கஞ்சியும் சிறுகிண்ணத்தில் தயிர்ச்சோறும் எடுத்துக்கொண்டு புறப்படுவாள். வெயிலில் கால்சுடும். உச்சிப்பொழுது வெயில் சுடுமையாகத் தாக்கும். மலர்க்கொடிக்கு அந்தக் கடும்வெயில் பனிமழை போன்றிருக்கும். காயும் வெயில் மதிஒளிபோல் குளிர்ச்சி யளிக்கும். மதிவாணனைச் சந்தித்துப் பேசுவதில் அவளுக்குத் தனித்த ஓர் இன்பம் ஏற்படும்.

அவனுடைய இனிய பேச்சு அவளைக் கவர்ந்தது. வீரச் சுவை நிறைந்த சம்பவங்களை அவன் கூறுவது அவளைக் கவர்ந்தது. அவனிடமிருந்த இயற்கையான நகைச்சுவை உணர்ச்சி அவளைப் பெரிதும் கவர்ந்தது. வீடு திரும்பியபோது தந்தை அவளுக்காகக் காத்திருந்து காவல்கூடத்தில் நடைபெற்ற சம்பவத்தை ஆவலுடன் விசாரிப்பார்.



அவள் என்னவென்று கூறுவாள்? தானும், அவரும் களிப்புடன் பேசிக்கொண்டிருந்ததைக் கூறுவாளா? மெய் மறந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கூறுவாளா? அங்கு எழுந்த நகைப்பொலியைக் கூறுவாளா? என்ன கூறுவாள்? முக்கிய நிகழ்ச்சி எதுமில்லாதபோது அவள் தன் தந்தையிடம் எதும் கூறாது மௌனமாகச் சென்றுவிடும் தன் மகளின் இதயமறியாது தவிப்பார் மாரப்பன்.

## 2

தஞ்சை மாநகரத்துச் சோழ மாளிகையின் அந்தரங்க சபை மண்டபத்தில் பரகேசரி பராந்தகன் மந்திரி மண்டலத்தாருடன் ஆலோசனை நடத்திய வண்ணம் இருந்தார். கொடும்பாளூர் குறுநில மன்னர் பூதி விக்கிரமகேசரி வீற்றிருந்தார். சோழநாட்டிற்கு அருந்தொண்டாற்றுவதையே நம் கடமை யாகக் கொண்ட பழுவேட்டரையர் கண்டன் அமுதன் வீற்றிருந்தார். படைத்தலைவர் சென்னிப் பேரரையன் பராந்தகனருகே நின்றிருந்தான். இளம் வயதினனான அவனது வீரதீரச் செயல்களுக்காக... அவனை தீரன் சென்னிப் பேரரையன் என்று பராந்தக சோழர் அழைப்பது வழக்கம்.

கையகலமிருந்த சோழ நாட்டை விஜயாலய சோழன் விரிவுபடுத்தினார். அவன் மகன் ஆதித்த சோழன் சோழ நாட்டை மேலும் விரிவுபடுத்தினார். ஆதித்த சோழனின் மகன் பராந்தகனோ அடுத்துள்ள பாண்டி நாட்டையும் பிடித்து, மதுரைகொண்ட மாமன்னன் எனும் பட்டம் சூட்டிக்கொள்ள விரும்பினார். ஒருமுறை அந்தப் பலப்பரீட்சையைக்

கொடும்பாளூர் சிற்றரசர் மூலம் நடத்திப் பார்த்தார். ஆனால் காலம் அப்போது சரியில்லை. இப்போது காலக்காற்று அனுகூலமாய் வீசியது. சோழர்ப் படையில் பதினாயிரக் கணக்கான வீரர்கள் இருந்தனர். சோழர்ப்படையில் வேழங்கள் மிகுந்திருந்தன. பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் செல்வதற்கு முன்பு அந்நாட்டின் பலம் அறிய ஒற்றர்களைப் பரவலாக அனுப்பியிருந்தார் பராந்தகன்.

பாண்டிய நாட்டின் பலமறியச் சென்றிருந்த மற்றொரு படைத் தலைவன் நக்கன் சாத்தன் அதுபோது சபைமண்டபத்திற்குள் நுழைந்தான்.

''சாத்தா, இதுவரை கிடைத்த செய்தி என்ன? படையெடுத்து வர நாள் குறித்து விட்டாயா?'' என்று பூதி விக்கிரமகேசரி தன் மீசையை முறுக்கிவிட்ட வண்ணம் கேட்டார்.

''கொடும்பாளூராருக்கு மிக அவசரம் போலும். சாத்தன் வந்த களைப்பை இன்னும் மாற்றிக் கொள்ளவில்லையே! அதற்குள் நாம் கேள்விமேல் கேள்வி கேட்டால்...'' என்று இடிபோன்ற குரலில் பேசினார் பராந்தகன்.

''ஆமாம்; ஆமாம்; அவசரமிருக்காதா? அந்த ராஜசிம்மனி·_ம் கொடும்பாளூரார் பட்ட அடியை அதற்குள் மறந்திருப்பாரா? அவர் தோற்று ஓடியதை, அந்த மீன்கொடிப்பாண்டியன் சோழப் பேரரசே தோற்றதுபோல், அதற்குள் கல்வெட்டில் பொரித்துவிட்டான். அதனால்தான் இழந்த அவப்பெயரை மீண்டும் பெறத் துடிக்கிறார் கொடும்பாளூரார்'' என்றார் கண்டன் அமுதன்.

கொடும்பாளூர் பூதி விக்கிரமகேசரி ஒருமுறை அவரை தீ உமிழும் கண்களால் நோக்கினார். அதற்குள் சாத்தன் பேசவே, அவர்கள் கோபம் மறந்தனர்.



பாதூருடையான் நக்கன் சாத்தன் பாண்டிய நாட்டில், தான் கண்டு அறிந்தவற்றை விவரமாகக் கூறி வந்தான். பாண்டி நாட்டின் படைப்பலத்தைக் கூறினான். யானைப்படை, குதிரைப்படை எண்ணிக்கைகளைக் கூறினான். சோழ நாட்டினின்று மரக்கலங்களில் ஏராளமாகக் குதிரைகளை வரவழைப்பதைக் கூறினான். கோட்டைப் பலத்தைக் கூறினான். அகழியின் ஆழத்தைக் கூறினான். எல்லாவற்றிற்கும் மேலாக ராஜசிம்ம பாண்டியனது முடியிலே ஒளிவீசித் திகழும் மகுடத்தைப் பற்றிக் கூறினான். அந்த எழில்கொழிக்கும் சுந்தர மகுடத்தில் பதிக்கப்பட்டிருக்கும் வைர வைடூரியங்களைப் பற்றிக் கூறினான். அவை அனைத்தையும் விவரித்து பின் இராசசிம்மன் இடையில் திகழும் அந்த வாளின் அற்புதத்தைக் கூறிவரும்போது, பராந்தகனால் அதைக்கேட்டு மௌனமாக இருக்கையில் அமர்ந்திருக்க முடியவில்லை.

''பழுவேட்டரையரே, என்னால் இனி ஒரு கணம்கூடத் தாமதிக்க முடியாது. அந்தச் சுந்தர மகுடத்தைப் பற்றி நான் முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். பரம்பரையாக வரும் அந்தப் பாண்டியன் மகுடத்தை நான் அடையாமல் தொண்ணூற்றாறு விழுப்புண் கொண்ட விஜயாலய சோழரின் பெயரராயிருந்துதான் பயனென்ன? வரகுண பாண்டியனைத் திருப்புறம் பயத்தில் ஓட ஓட விரட்டிய ஆதித்த சோழனின் மகனாயிருந்துதான் பயனென்ன? நம் ஒற்றர்களிடமிருந்து செய்தி வரும்வரை நாம் காத்திருக்க வேண்டாம். உடனே படைகள் புறப்படட்டும்'' என்று பராந்தகன் முழங்கினார்.

''அரசே!'' என்று சாத்தன் ஏதோ கூற வாயெடுத்தான். பராந்தகன் அவன் பக்கம் திரும்பினார். என்ன என்று கேட்பதுபோல் அவர் பார்வை தோற்றமளித்தது.

''அரசே, நம் படை திரட்டுவதைப் பாண்டி நாட்டில் நன்குணர்ந்துள்ளனர். அவர்கள் ஆயத்தமாயிருக்கின்றனர்.

வட எல்லையைப் பாதுகாக்கப் படைகளை அனுப்பி இராசசிம்மன் ஏற்பாடுகள் செய்து வருகிறான். இதைத் தவிர, ஈழத்திற்கும் உதவிகேட்டு ஓலையனுப்பியுள்ளான்'' என்று கூறியதும், பராந்தகன் பயங்கரமாக நகைத்தார்.

''ஈழமாம் ஈழம்! ஈழத்துப் படைகள் பாண்டிய நாட்டிற்குள் நுழைவதற்குள், நம் கடற்படை அவர்களை நிர்மூலமாக்கிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாது!'' என்று கூறிவிட்டுச் சென்னிப் பேரரையனை நோக்கி, ''எதற்கும் நீங்கள் கடற்படையை ஆயத்தப்படுத்துங்கள்'' என்று கட்டளையிட்டார்.

## 3

வடஎல்லைக் காவல் தலைவன் மதிவாணனுக்கு மதுரையினின்று மிக அவசரமாக அழைப்பு வந்தது. மதிவாணன் மலர்க்கொடியினிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரைக்கு விரைந்து சென்றான். மதுரை மாநகர்க்கு அவன் இதற்கு முன்பு பல முறை சென்றிருக்கிறான் ஆனால் அப்போது அவன் தன்னந்தனியாய்ச் சாதாரணக் குடிமகனாய் அல்லங்காடி வீதியில் நுழைந்து சுதந்திரமாக அலைந்திருக்கிறான். அப்படிச் சென்ற காலத்தே அவன் நினைக்கவில்லை, பாண்டிய படைத்தலைவரின் கவனம் தன்மீது விழுமென்று. சாதாரண வீரனாகப் படையில் சேர்ந்த அவன் வெகு விரைவில் ஆபத்துதவிகளின் படையில் சேர்க்கப்பட்டான். அவன்மீது தனி அன்பு எல்லோருக்கும் ஏற்பட்டது. மதுரை மாநகரம் முழுமையும் அப்போது சுற்றியிருக்கிறான். இன்றோ படைத்



தலைவனுக்குள்ள மதிப்புடன், தோற்றத்துடன் உடையுடன் செல்கிறான்.

கலகலப்பும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் அந்த மாநகரத்து மாடவீதிகளில் இப்போது கலக்கம் மிகுந்திருந்தது. போர்க்கோலம் பூண்ட வீரர்கள் படை வீடுகள் இருக்கும் இடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். குதிரை மீதேறி மதிவாணன் வரும்போது வீரர்கள் நின்று தலைவணங்கினர். அவனும் பதில் வணக்கம் தெரிவித்தான். ஆனால் அவனுக்கு வியப்பாக இருந்தது; 'சாதாரணப் போர் வீரனொருவனுக்கு இவ்வளவு மரியாதை கிடைக்கிறதா?' என்று அவன் வியந்தான். பாண்டிய நாட்டு வீரர்கள் மரியாதை நிறைந்த நல்ல குணத்திற்காகவாவது வெற்றித்திரு பாண்டியர்களுக்கு மாலையிட வேண்டுமென்று கூடல் பெருமானை அவன் வேண்டினான்.

அரண்மனை வாயிலினுள் அவன் நுழையும்போது, அவ்விதமே காவல்காரர்கள் தலைகுனிந்து இடுப்பை வளைத்து வணங்கினர். அதிகாரி ஒருவர் மதிவாணனை இராசசிம்மனிடம் அழைத்துச் செல்லவந்தார். வந்தவர் ஒரு கணம் திகைத்து நின்ற பிறகு, ஏதோ யோசித்தவராய் அவனை அழைத்துச் சென்றார். இராசசிம்ம பாண்யடின் மதிவாணனை இதற்குமுன்னர் சந்தித்தது கிடையாது. வட எல்லைக்கு ஏற்ற வீரன் என்ற முறையில் அவனுடைய பிரதாபங்களை அவர் கேள்விப்பட்டிருக்கிறார். மதிவாணன் கம்பீரமாக மன்னன் இருப்பிடத்திற்குள் நுழைந்தான். அவனும் இதற்கு முன்னர் மன்னரைக் கண்டது கிடையாது. துணிவு மிக்கவர் அவர் என்று கேள்விப்பட்டிருக்கிறான். தெளிவான அறிவு மிக்கவர் என்று கேள்விப்பட்டிருக்கிறான். காலனே எதிர்த்து வரினும் கலங்கா உள்ளங் கொண்டவர் எனக் கேள்விப்பட்டிருக்கிறான்.

கொடும்பாளூர் வேளிரை ஓட ஓட விரட்டிய தீரர் என்று அவன் அறிந்திருக்கிறான். அவரை இப்போது நேரிடையே சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததே பெரும்பேறுதானே?

மதிவாணன் ஒரு கணம் சிலையென நின்றான். பாண்டிய மன்னர்களின் பரம்பரை மகுடத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். சொக்கநாதப் பெருமானே மனமுவந்து பாண்டிய மன்னர்களுக்கு அந்த மகுடத்தை அளித்திருப்பதாகப் பலர் அவனிடம் கூறியிருக்கின்றனர். மகுடத்தின் அழகைப் பற்றி இதுவரை கேள்விதான் பட்டிருக்கிறான். இப்போது நேரே காண்கிறான். ஆகா! எல்லாரும் கூறுவது உண்மைதான். வேற்று நாட்டார் பெருமைப்படுவது நியாயம்தான். இராசசிம்மன் கிரீடத்தை ஏன் நம் கண்ணால் காண இயலவில்லை? நம் கண் ஏன் அப்படிக் கூசுகிறது? ஆயிரமாயிரம் நட்சத்திரங்களை அதில் பதித்திருக்கிறார்களா? ஆதிசேஷனின் தலைமீது இருக்கும் மாணிக்கக் கல்லை எடுத்து வந்து பதித்திருக்கிறார்களா? பாண்டியநாட்டு பொற்கொல்லர்களின் திறமையே அலாதிதான்.

மதிவாணன் திகைத்து நிற்பதைக் கண்ட இராசசிம்மன் புன்முறுவல் முகத்தில் பரவ, ''மதிவாணா! ஊரும் உலகமும் நலம்தானே?'' என்று அன்புக் குரலில் பேசி, அவனுடைய மௌனத்தைக் கலைத்தார். மா மன்னன் தன் பெயரைக் கூறி அழைக்கிறார். அவருக்குத் தன்னை முன்பே தெரியுமா? மதிவாணன் திகைத்தான். அவன் எவ்வளவோ பேசவேண்டும் என்ற எண்ணத்தில்தான் வந்தான். பாண்டியர்ப்படைகளின் பிரிவுகளைப் பலப்படுத்துவது குறித்து யோசனை கூற எண்ணினான். சோழர்களின் தாக்குதலின்போது இரண்டு, மூன்று வியூகமாகப் பிரிந்து தாக்கவேண்டிய அவசியத்தை எடுத்துரைக்க எண்ணியிருந்தான். ஆனல் இராசசிம்மனின்



தோற்றமும், அவர் திருமுடியின் ஜ்வலிப்பும், அவரது சொல்லில் ததும்பும் இனிமையும் அவனைத் திக்குமுக்காடச் செய்தன.

''மதிவாணன் என்பதுதானே உன் பெயர்?'' என்று மன்னன் மீண்டும் கேட்டுத் தொண்டையைக் கனைத்தபோது தான், மதிவாணன் சுயநினைவடைந்தான்.

''மன்னாதி மன்னா! என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களைச் சந்தித்தவுடன் எனக்குப் பேச நா எழவில்லை. என்னைச் சமூகம் வருமாறு பணித்தவுடன் விரைந்து வந்திருக்கிறேன். என்ன பணியுண்டோ, அதை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்'' என்றான்.

இராசசிம்மன் மெல்ல நகைத்தார். துடிப்பும், வேகமும் நிறைந்த மதிவாணனை அவனுக்கு முதல் சந்திப்பிலேயே பிடித்துவிட்டது. பேச்சுச் சிறப்புடன், அவன் தோற்றமும் அவரைக் கவர்ந்தது. வடஎல்லையைப் பற்றிப் பேசுவதற்காக அவனை வரவழைத்திருந்த இராசசிம்மன் சற்றுநேரம் மௌனமாக இருந்தார். கடந்த இரு நாள்களாக வெவ்வேறு படைத்தலைவர்களைச் சந்தித்துப் போர் குறித்து ஆலோசனை அவர் நடத்தி இருக்கிறார். எந்த அளவுக்குப் பேச வேண்டுமோ அந்த அளவு மட்டும் பேசி அவர்களை அனுப்பி இருக்கிறார். ஆனால் மதிவாணனைக் கண்டவுடன், அவருக்கே புரியாத ஒரு வித உணர்ச்சி ஏற்பட்டது. மதிவாணனைச் சந்தித்துப் பலபல ஆண்டுகள் அளவளாவிய உணர்ச்சி ஏற்பட்டது. ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட சொந்தம் ஏதோ இருக்கிற உணர்ச்சி ஏற்பட்டது.

மன்னரின் மௌனங் கண்டு மதிவாணன் திகைத்தான். அவர் ஒரு கண நேரத்தையும் வீணே கழிக்கக் கூடியவரல்லர்

என அவன் அறிவான். இப்போது மிகவும் முதன்மை வாய்ந்த ஏதோ செய்தியைத் தன்னிடம் அறிவிக்கவோ, போர் முறைகளைப் பற்றிப் பேசவோ, தன்னை அழைத்திருக்கும் போது மன்னரின் மௌனம் அவருடைய ஆழ்ந்த சிந்தனையைக் குறிக்கிறதென எண்ணி அவனும் சற்றுநேரம் ஏதும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவனால் அப்படி நெடுநேரம் இருக்க முடியவில்லை.

''அரசே'' எனக் குரல் எழுப்பி அந்த இடத்து அமைதியை நீக்கினான்.

ஏதோ சிந்தனையினின்று விடுபட்டவர் போன்று மன்னர் ''ஹும்'' என்று கூறி, மதிவாணனை நிமிர்ந்து நோக்கினார். அவர் இதயம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அப்போது அங்கே யாரோ வரும் காலடியோசை கேட்டது. முதுமைப் பிராயத்தினளான வானவன் மாதேவி வந்து கொண்டிருந்தாள். வானவன் மாதேவி இராசசிம்மனின் தாய். இளம் பிராயத்தனனான அவனுக்கு நல்லுரை கூறி நல்ல வழிகாட்டி வந்தவள் அவளே.

இராசசிம்மன் எழுந்து நின்று தாயை வரவேற்றான். பழுத்த பழம் போன்று செக்கச் செவேலென்று தோற்றமளித்த வானவன் மாதேவி இராசசிம்மனையும், மதிவாணனையும் உற்று நோக்கினாள். வானவன் மாதேவியும், அங்கு வந்தவுடன் இருக்கையில் அமர்ந்து உடனே பேசிவிடவில்லை. அந்தக்கூடத்தில் இருந்த இராசசிம்மனையும், மதிவாணனையும் திகைப்பு மேலிட மாறி மாறி நோக்கினாள். பேரரசியார் ஏன் இவ்வாறு நோக்கினாள்?

''தாயே, சில நாள்களாகத் தங்களை நான் சந்திக்கவில்லை; கண் இமை மூடாத அளவுக்கு அவ்வளவு



வேலை'' என இராசசிம்மன் பேசியவுடன்தான் வானவன் மாதேவி வியப்பு நிறைந்த - எடுத்த - பார்வையை மாற்றாத நிலைபெற்ற விழியைக் - குரல் வந்த திசையில் திருப்பினாள்.

''போர் நெருங்கிவிட்டதா? இது என்ன கோலம்?'' என்று அவள் இருவரையும் பொதுவாகப் பார்த்துப் பேசினாள். அவள் கண்களுக்கு இராசசிம்மனும் மதிவாணனும் ஒன்றாகவே தோன்றினர்.

''தாயே, என்ன பார்க்கிறீர்கள், அப்படி? போர் நெருங்கித்தான் விட்டது. வடக்கே இருந்து செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. சோழ மன்னன் பராந்தகன் போர் வெறி பிடித்திருக்கிறான். கேட்டீர்களா, தாயே! சோழ மன்னன் சாளுக்கியர்களை வென்று விட்டானாம்! வடபெண்ணை வரை நாட்டை விரிவுபடுத்தியிருக்கிறானாம். ஈழத்தை நடுநடுங்க வைத்திருக்கிறானாம். அதனால் நாமும் அவனுக்குப் பணிய வேண்டுமாம். திறைகொடுத்து அடிமையாக வேண்டுமாம். புலிக்கொடி பிடித்துத் தூதுவன் வந்து சென்றான். தாயே, பாண்டிய மன்னர் சோழர்களுக்குத் திறைகொடுப்பதா? அது என் வாழ்நாளில் கிடையாது. வாளுக்கு வாள்; இல்லையெனில் மண்ணோடு மண்! இதுவே என் பேச்சு. அதுவே கடைசிவரை என் மூச்சு!...''- இராசசிம்மன் ஆவேசமாகப் பேசியதைக் கேட்டவுடன், வானவன் மாதேவி இராசசிம்மன் பக்கம் திரும்பினாள்.

''அதுதானே பார்த்தேன்; என் கண்ணைத் திரை மறைக்கிறதோ'' என்று முணுமுணுத்தாள். தாய் தன்பக்கம் திரும்பியதையும் தன் பேச்சின்மீது அதிகக் கருத்துச் செலுத்தியதையும், ஏதோ தனக்குள்ளே முணுமுணுப்பதையும் கண்ட இராசசிம்மன், ''தாயே, ஏதோ கூற விரும்புகிறீர்கள் போலிருக்கிறதே. தங்களைப் பேசவிடாமல் நானே பேசிக்கொண்டு போகிறேன்....'' என்றான்.

வானவன் மாதேவி மெல்ல நகைத்தாள். ''இல்லை மகனே... நான் ஒன்றும் கூற வரவில்லை. நீ கூறுவதைக் கேட்டுப்போகவே வந்தேன். இந்தக் கூடம் அமைதியாக இருக்கிறதே-இருவரும் மௌனமாக நிற்கிறீர்களே எனப் பார்த்தேன். அதுசரி, குழந்தாய்! இந்த இளைஞன் யார்? எங்கேயோ பார்த்ததுபோல் இருக்கிறதே என்று எண்ணினேன்'' என்று கேட்டாள்.

''தாயே, அவனும் தங்கள் மகனே. இந்த நாட்டுப் பிரஜைகள் யாவரும் தங்கள் புதல்வர்கள் தாமே! நாட்டுப் பற்று ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாச் செல்வர்கள் தாயே! அத்தகைய கருவூலங்களுள் ஒருவனே இந்த வீரனும், மதிவாணன் என்று இவனுக்குப் பெயர்'' என்றான் இராசசிம்மன்.

தேவி, மதிவாணனைக் கடைக்கண்ணால் நோக்கி, 'ஆமாம் என் மகன்தான்' என்று மனத்துக்குள் கூறிக்கொண்டு, ''மகனே சற்று முன்பு என்ன கூறினாய்! போர் வருகிறது என்றா கூறினாய். சோழ மன்னர் போருக்குத் துடிதுடிக்கிறாரோ? நாட்டுப்பற்று மிக்க பாண்டிய நாட்டு மக்களுக்கு இப்போது சோதனைக் காலம் நெருங்குகிறது போலும். மகனே, போர் இன்றி வேறு எவ்வகையிலும் நாம் சோழர்களுடன் நட்புரிமை கொள்ள முடியாதா? சோழர்களும் பாண்டியர்களும் சேரர்களும் அந்நியர்களா? தமிழ்த்தாயின் குழந்தைகளான நமக்குள் வேற்றுமை ஏன்? பகைமை ஏன்? தமிழ் வேந்தர்களாகிய நமக்குள் என்ன சச்சரவு?'' என்றாள்.

வேறு எவரேனும் இதுபோல் கூறியிருப்பின், கொதித்துக் குதித்தெழுந்து கூவியிருப்பான் நரசிம்மன். வாளினும் கூர்மையான சொல்லால் தாக்கியிருப்பான். தாய் கூறுகிறாள். திருநாட்டுக்கிணையான பெற்ற தாய் கூறுகிறாள். இராசசிம்மனிடம் துடிப்பு அடங்கவில்லை.



''தாயே!'' என்று மென்ன அழைத்தான். அது அடக்கி வைத்திருக்கும் ஆத்திரத்தைப் பூசி மூடுவதுபோல் தோன்றியது.

''நாடு பிடிக்கும் ஆசையுடன் போர்வெறி பிடித்துவரும் சோழ மன்னருடன் எந்த விதத்தில் நட்புரிமை கொள்ளச் சொல்கிறீர்கள்?'' என்றான். அவன் குரலில் படபடப்பு மிகுந்து இருந்தது.

வானவன்மாதேவி, இரசாசிம்மனின் சீற்றம் அறிந்தவளாய், உதட்டில் முறுவல் தவழ, ''ஏன், இல்லை? நட்புரிமைக்கு வழி இல்லையா? பராந்தகன் மகள் வீரமா தேவி இருக்கிறாள். அவள் அழகு மிகுந்தவளாம். மணப்பருவம் அடைந்திருக்கும் அவளை உனக்கு மணம் பேசுகிறேன்! திருமணத் தொடர்பு நட்பினை வளர்க்கும். பாசம் உறவைப் பலப்படுத்தும்'' என்றாள்.

இராசசிம்மனின் நெஞ்சச் சிறையில் இதுவரை அகப்பட்டுக் குமுறிக்கொண்டிருந்த சொற்கள் பொங்கிச் சீறின.

''தாயே! என்ன வார்த்தை கூறினீர்கள்! மாற்றான் மகளையா மணமுடிப்பதாகச் சொல்கிறீர்கள்? அதைவிடக் கூற்றுவன் மகளுக்கு மாலையிடு எனக் கூறியிருக்கலாமே? பராந்தகனைப் போன்றே அவர் மகள் தலைக்கனம் பிடித்தவள். தான் எந்த அரசகுமாரனை மணந்தாலும் அவனுடன் தஞ்சையிலேயே தான் தங்கியிருப்பேன் என்று அவள் சபதம் செய்திருக்கிறாளாம்! அவளை மணந்துகொண்டு தஞ்சையில் சேவகனாக இருக்கச் சொல்கிறீர்களா? யுத்தமின்றி இரத்தமின்றிப் பாண்டிய நாட்டைச் சோழர்களுக்குப் பரிசாக அளிக்கக் கூறுகிறீர்களா? பெண் எடுத்துச் சம்பந்தம் செய்து,

போரின்றிப் பணிந்து போகச் சொல்கிறீர்களா?'' இராச சிம்மன் முழக்கமிட்டான் என்றே சொல்லலாம்.

''சரி, அவள்தான் வேண்டாம்; கர்வம் மிக்கவள். அவள் தங்கை அநுபமா இருக்கிறாளே!''

''தாயே! என்னைச் சோதிக்கிறீர்களா! பாண்டியப் பேரரசியாகிய தாங்கள் என் வீரத்தைச் சோதிக்கலாமா? தாயே உங்களுக்குத் தெரியுமா? பராந்தகன் சபதம் தங்கள் செவியில் எட்டியிருக்கும். நம் நாட்டைப் பிடித்து, மதுரை மாநகரில் மகுடாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறானாம். பரம்பரை மகுடத்தை அணிந்துகொண்டு, வெற்றி பெருமிதத்துடன் அமர்ந்து, 'மதுரையும் ஈழமும் கொண்டவன்' எனும் விருதைத் தான் சூடிக்கொள்ளப் போகிறானாம். அத்தகைய அகம்பாவம் பிடித்தவர்களுடனா மணவினைத் தொடர்பு? சோழ இரத்தத்தை மணவினைத் தொடர்பால் நான் அடையப் போவதில்லை; எப்படியாவது நம்முடைய நாட்டை அடைய வேண்டுமென்று அவர்கள் காதல் கொண்டிருக்கிறார்களே, இந்த வாள் கொண்டு, என் மூதாதையர் பொற்கைப் பாண்டியனுக்கும் முன் பலகாலமாகத் திகழுகின்ற இந்த வாள்-இதைக் கொண்டு சோழர்களின் குருதியின் சுவையை அறிவதன் மூலம் இரத்தத் தொடர்பு கொள்ளப் போகிறேன்'' என்று போர் முழக்கம்போல் பேசினான்.

கடல் ஓசை நின்றதுபோல், மறுகணமே சாந்தமடைந்த வனாக, ''எனக்குப்பின் சந்ததியை ஏற்படுத்தவாவது நான் மணந்துதான் தீரவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் எங்காவது குடிசையிலிருக்கும் ஓர் ஏழை எழில் மங்கையைத் தேடி வாருங்கள் சரி; சரி, இப்போது திருமணத்தைப் பற்றி என்ன பேச்சு? புறக்கடை வாயிலில் போர்



காத்திருக்கும்போது, திருமணப் பேச்சு ஏன்?'' எனக் கூறியவாறு மதிவாணனின் பக்கம் திரும்பினான்.

''வட எல்லைப் பாதுகாவல் எப்படி இருக்கிறது? அதைப் பற்றி அறியவே உன்னை இங்கே வரவழைத்தேன். நாளையே பதினாயிரம் வீரர்கள் வட எல்லைக்குப் புறப்படட்டும்'' என்றான்.

''அரசே, பதினாயிரம் வீரர்களையும் ஒரே பகுதியாக வருமாறு செய்யாதீர்கள். ஒரே இடத்தில் அவர்கள் பாடி இறங்குவதைவிட மூன்று பிரிவுகளாக அவர்கள் பிரிந்துவரின் நலம்'' என்றான் மதிவாணன்.

இதுவரையில் தான் கூறுவதற்குப் படைத் தலைவர்கள் தலையசைப்பரேயொழிய, உற்ற யோசனை கூறமாட்டார்களே! மதிவாணன் உடனே தக்க யோசனை கூறுவது கேட்டு மகிழ்ந்த இராசசிம்மன் மதிவாணனை நோக்கி, ''உன் கருத்துப்படியே செய்கிறேன். வட எல்லையை அடையும் முன்னரே சோழர்ப் படைகளைத் தாக்கி நிர்மூலமாக்குமாறு திட்டம் தீட்டி யிருக்கிறேன். உங்களைப் போன்றவர்களையே நாடு நம்பி யிருக்கிறது'' என்றான். மன்னரின் இச் சொல்கேட்டு மதிவாணனின் உடல் துடித்தது. அவன் மெய் சிலிர்த்தது. எத்தனை எத்தனையோ நாட்களாகக் காத்திருந்த யுத்தம் வரப்போகிறது; போரில் தனக்கு மிக முக்கியப் பங்குக் கிடைக்கப் போகிறது; அந்த வாய்ப்பைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதினான்.

வானவன் மாதேவி இப்போது குறுக்கிட்டு, 'உன் உடலில் ஓடும் குருதிதானே மதிவாணன் உடலிலும் ஓடுகிறது? மதிவாணன் நிச்சயம் பாண்டிய நாட்டுக்காக எவ்விதத் தியாகமும் செய்யத் தயங்க மாட்டான். இன்று பேச்சு

வார்த்தையிலேயே நேரம் போக்க வேண்டாம். உடனே மதிவாணனை எல்லைக்குப் போகச் சொல்'' என்றாள்.

மதிவாணன் இராசசிம்மனையும், வானவன் மாதேவியையும் வணங்கிவிட்டு விரைந்தான்.

## 4

மதிவாணன் பரிமீதேறி வட எல்லைக் கோட்டையை நோக்கிக் காற்றினும் கடுகி விரைந்தான். மதுரை சென்றிருந்த வரை அவன் மலர்க்கொடியின் மதிமுகத்தை மறந்தே இருந்தான்.

அன்று கீழ்வானில் வட்டமதி தோன்றியதைக் கண்டவுடன்தான், அவனுக்கு மலர்க்கொடியின் நினைவு வந்தது. தான் மதுரை சென்றதை அவளிடம் கூற விழைந்தான். மதுரையின் கூட கோபுரத்தின் கம்பீரத்தைத் தெரிவிக்க விரும்பினான். வழியே கண்ட கவின்பெரும் காட்சிகளை வர்ணிக்க விரும்பினான். பரி விரைந்தது. ஆனால் பாதை மாளவில்லை.

மதுரை மாநகர நிகழ்ச்சிகளை அவன் மீண்டும் ஒருமுறை நினைத்துக்கொண்டான். பாண்டிய மன்னர் இராசசிம்மனை நேரே கண்டு பேசியதை மலர்க்கொடியிடம் கூறும்போது வியப்பால் அவள் முகம் எவ்வாறு மாறும் என்பதை நினைக்கும்போது அவன் மெல்லச் சிரித்துக்கொண்டான். பேரரசி வானவன் மாதேவியார் தன்னை உற்சாகப்படுத்திக் கூறிய சொற்கள் அவன் செவிகளில் வட்டமிட்ட வண்ணமிருந்தன. ''மன்னரையும் என்னையும் ஒன்றுபடுத்திப்



பேசினாரே அந்த மூதாட்டி, அவரது பெருந்தன்மைதான் என்ன?'' என்று வியந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக மதுரையில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் அவன் சிந்தையில் வந்து வந்து போயின. மதுரை நகரில் அவனிடம் வீரர்கள் காட்டிய மதிப்பு அவன் மனத்தில் வட்டமிட்டது. திகைப்பு அவன் நெஞ்சில் நிறைந்தது.

அதேபோல், மதிவாணன் சென்றவுடன் இராசசிம்மனுக்கும் திகைப்பு ஏற்படாமலில்லை. தன்னையும் மதிவாணனையும் கண்டு தாய் ஏன் முதலில் திகைத்தாள்? பிறகு தாயின் பேச்சே ஒரு விதமாக இருந்ததே? கடைசியில் தாய் சொன்ன வார்த்தைகளை நினைவுப்படுத்திக் கொண்டதாக 'உன் உடலில் ஓடும் இரத்தம்தானே அவன் உடலிலும் ஓடுகிறது' என்றாளே. ஏன்? இராசசிம்மனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் மனத்தில் பலநூறு கேள்விக் குறிகள் எழுந்தன. சந்தேக வண்டு சுற்றிச் சுற்றி வந்தது. தாயிடமே தன் சந்தேகத்தைக் கேட்டுவிடுவோம் எனத் தயங்கினான். அவன் சந்தேகத்தைப் புரிந்துகொண்டாளோ என்னவோ, வானவன் மாதேவி இராசசிம்மனை அழைத்தாள்.

சுற்றுமுற்றும் பார்த்து, வாயிற் கதவருகே நின்றிருந்த காப்போனையும் போகச் சொல்லிவிட்டு, ''மகனே, இராசசிம்மா! இவ்வளவு நாள் என் இதயத்தை அழுத்தி வைத்துக்கொண்டிருந்த சந்தேகப் பாரமொன்று இன்று குறைந்துவிட்டதடா! இப்போது வந்து சென்றானே வீரன் வடிவில், அவனிடம் சற்று எச்சரிக்கையுடன் நீ நடந்து கொள்ளவேண்டும்'' என்றாள்.

இராசசிம்மன் ஒருகணம் திடுக்கிட்டான். தாயின் பேச்சு அவனுக்கு விளங்கவில்லை. சாதாரணப் போர்வீரனிடம் எச்சரிக்கையாயிருக்குமாறு தாய் கட்டளையிடுகிறாள். நமக்கோ அவனைக் கண்டவுடன் தனித்த ஓர் பாசம்

ஏற்படுகிறது. தாய் அந்த வீரனைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறாள். நாம் புரியாப் பாச விழிகளுடன் காண்கிறோம். இருவருக்கும் இருவித உணர்ச்சி ஊட்டிய அந்த வீரனிடம் அப்படியென்ன இரகசியம் பொதிந்திருக்கிறது?

''தாயே, அவன் வேற்று நாட்டைச் சேர்ந்தவனா? பகைவனின் கையாளா? சொல்லம்மா, சொல். அவனிடம் நான் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னீர்கள், ''என் உடலில் ஓடும் குருதிதானே அவனுடலிலும் ஓடுகிறதென்று. இப்போது அவனிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு கட்டளையிடுகிறீர்கள் தாயே! அருள் கூர்ந்து தெளிவாகக் கூறக்கூடாதா'' என்று கேட்டான்.

வானவன் மாதேவி பரபரப்பு ஏதுமின்றி, ''அவன் பகைவனது ஒற்றனல்லன், மகனே! பகைவனது ஒற்றனிடம் மட்டும்தானா எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உடனிருந்து கொல்லும் உற்றார்களிடம் கூடக் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அந்த இளவீரனுக்குத் தன் மதிப்பு எள்ளளவும் தெரியாது. ஆனால், வாய்ப்பு நேரும்போது, தன்னை உணரும்போது, அவன் இந்த நாட்டைத் தனதாக்கிக் கொள்ள முயலலாம். அந்தத் தகுதியும் அவனுக்கு இருக்கிறது'' என்றாள்.

இராசசிம்மன் கடகடவென நகைத்தான். ''பெரும் பொறுப்பு பெற்றுள்ள படைத்தலைவர்கள் அரசர்க்கெதிராக கலகம் செய்வதும், சதி செய்வதும் இயல்பே! ஆனால், நான் அவ்வளவு ஏமாந்தவனல்லன். ஒற்றர்க்கு ஒற்றரை நியமித்திருக்கிறேன். அப்படியேதான் அவன் புரட்சி செய்யட்டுமே? படையெடுத்து வரும் பராந்தகனுக்குத்தான் தொல்லை. அவனுக்கு இரண்டு வேலைகள் ஏற்படும்.



என்னை வென்று, புரட்சிக்காரனையும் வென்று இந்த நாட்டை ஆளவேண்டும். அவ்வளவுதானே?'' என்று கூறி நகைத்தான். குழந்தையின் கபடமற்ற சிரிப்பு பிரதிபலித்தது. பிறகு தொடர்ந்து, ''தாயே! தாங்கள் என்னிடம் எதையோ இன்னும் மறைக்கப் பார்க்கிறீர்கள். தங்கள் இதயத்தை அழுத்தியிருந்த சந்தேகபாரம் தணிந்ததாகக் கூறினீர்கள். அதை என்னிடம் கூறுவதில் என்ன தவறிருக்கிறது, அம்மா?'' என்று கெஞ்சுவதுபோல் கேட்டான்.

வானவன் மாதேவி வாய் திறந்து ஏதோ கூற முற்படுவதற்குள், ஈழத்துத் தூதுவன் வந்திருப்பதாகவும், அவனைத் தவிரத் தஞ்சை சென்றிருந்த ஒற்றனும் திரும்பி வந்து மிக முக்கியமான செய்தியைத் தெரிவிக்கக் காத்திருப்பதாகவும் வாயிற்காப்போன் கூறினான்.

தஞ்சையினின்றும் வந்த ஒற்றனை முதலில் இராசசிம்மன் அழைத்தான். ஒற்றன் கூறிய செய்தி இராசசிம்மனைத் திடுக்கிட வைத்தது. சோழப் படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரித்துத் தாக்க வருவதாகவும், ஒரு பிரிவு நேரிடையே தூசிப்படைகளாகவும், இரண்டாவது பிரிவு பெரும் யானைப்படைகளாகவும் மூன்றாவது கடல் வழியாகவும் வருவாதகக் கூறினான். கடற்படை ஈழத்தினின்று வரும் படைகளைச் சுற்றிச் சூழ்ந்து விடும் என்றும் அவன் தெரிவித்தான்.

ஒற்றனைப் போகுமாறு கூறிவிட்டு, இராசசிம்மன் மௌனமாகச் சிறிது நேரம் இருந்தான்.

ஒரு சமயம் பாண்டியர்களின் பலங்கண்டு மாற்றார்கள் அஞ்சி நடுங்கி இருந்தனர். சோழர்கள் பாண்டிய எல்லைப் பக்கம் அடியெடுத்து வைக்கவே அஞ்சினர். அதை அறியாது பாண்டிய நாட்டின் மீது பாய்ந்த கொடும்பாளூர் குறுநில

மன்னனை இராசசிம்மன் ஓட ஓட விரட்டினான். அந்த நாள் இன்று எங்கே போனது? பாண்டியரை எளிதாக மதிக்கும் அளவுக்குச் சோழர்கள் எப்படி மாறினர்? இராசசிம்மனால் இப்படி எண்ணாமலிருக்க முடியவில்லை.

ஒற்றன் கூறியதினின்று சோழப் படைகளின் எண்ணிக்கையை இராசசிம்மன் கற்பனை செய்துகொண்டான். முப்பிரிவுகளாக வரப்போகும் பராந்தகன் படைகளின் எண்ணிக்கையும், அளவில் குறைந்த தன் படைகளையும் எண்ணிப் பெருமூச்சு விட்டான். பாண்டிய நாட்டைக் கவர்வதற்கென்றே திட்டமிட்டச் சோழர்ப் படைகள் அடைய முடியுமா? தனது படைகளின் அளவை, அமைதி விரும்பும் பாண்டியர்ப் படைகள் தந்திரமான போர்த்திட்டத்தைச் சோழர்கள் அறிந்து விடுகின்றனரா? எவராவது உடனிருந்தே செய்திகளை அவ்வப்போது எதிரிகளுக்குத் தெரிவிக்கின்றனரா?

வானவன் மாதேவி அவனது சிந்தனையைக் கலைத்தாள். ஈழத்துத் தூதுவன் வந்திருப்பதை அவள் நினைவு படுத்தியவுடன், இராசசிம்மனின் முகம் மலர்ந்தது.

அவன் ஈழத்து மன்னரிடமிருந்து செய்தியை எதிர்பார்த்து இருந்தான். ஈழ மன்னன் காசியபனின் உதவி என்னும் நம்பிக்கை இராசசிம்மனுக்கு உறுதியாக இருந்தது. ஈழ மன்னனின் உதவி இருந்தால் சோழ மன்னனுக்குத் தக்க பாடம் கற்பிக்கலாம்.

ஈழ மன்னன் காசியபன் அனுப்பிய தூதுவன் இராசசிம்மனுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தான். காசியபன் முழு மூச்சுடன் இராசசிம்மனுக்கு உதவுவதாகத் தூதுவன் மூலம் வாக்களித்திருந்தான். சில போர்த் திட்டங் களையும் அறிவித்திருந்தான். இதைக் கேட்டுச் சோழ மன்னனை வென்று விட்டதாகவே இராசசிம்மன் பெரும்



உற்சாகம் கொண்டான். உடனே படைகளுடன் புறப்பட்டு வருமாறு ஓலை அனுப்பினான். ஈழத்துத் தூதுவனுடன் தன் மகன் பேசிக் கொண்டிருக்கும்போது, வானவன் மாதேவி உடன் இருந்தாள். பதினாயிரக் கணக்கான ஈழத்து வீரர்கள் பாண்டியர்களின் உதவிக்கு வருகிறார்கள். தோள் வலியும், முரட்டுத்தனமான போர் முறைகளும் அறிந்திருந்த ஈழத்தவர்கள் உதவியால், சோழியப் படைகளை அழித்து விடலாம்; உண்மைதான். ஆனால், பெரும் பரம்பரையான பாண்டியர்கள் வேற்று நாட்டு உதவியை நாடித்தான் செல்ல வேண்டுமா?

வானவன் மாதேவிக்கு இந்தத் திட்டத்தில் முழு சம்மதம் இல்லை. பாண்டிய மண்ணில் அயல் நாட்டுப் படைகள் வருவதை அவள் விரும்பவில்லை. அவள் போரையே விரும்பவில்லை. அவள் மனம் சமாதானத்தை நாடியது.

அன்று பொழுது புலர்ந்ததிலிருந்து நடைபெறும் நிகழ்ச்சிகள் அவள் உள்ளத்தில் வெவ்வேறு விதமான போராட்டத்தை ஏற்படுத்திய வண்ணமிருந்தன. வட எல்லைக் காவல் தலைவனாக மதிவாணனைக் கண்டது முதல் அவள் குழப்பம் அதிகமாகியது.

தாயின் மௌனம் இராசசிம்மனின் ஆவலை அதிகமாக்கியது. ''தாயே!'' என்றழைத்தான் இராசசிம்மன்.

ஈழத்து தூதுவன் வந்துபோன பிறகு அவள் மனத்தில் ஏற்பட்ட பலவித எண்ணச் சுழல்களால் வானவன்மாதேவி ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

''கேட்டீர்களா, தாயே! ஈழத்து மன்னன் நமக்கு உதவ ஆவலுடன் துடித்து நிற்பதை, நமக்கு வடக்கிலும் தெற்கிலும் தக்க பாதுகாவல் ஏற்பட்டு விட்டது. தஞ்சையினின்று படைகள் புறப்பட்டுவிட்டன என்றால், நம் வீரர்கள்

அவர்களை எல்லையைத் தாண்டிச் சென்றே சந்திப்பர். மின்னும் வாள் காட்டி வரவேற்பர். செங்குருதியால் சீராட்டுவர்'' என்று உற்சாகத்துடன் பேசினான். பாண்டி நாட்டு வீர மன்னனான தன் மகன் இன்னும் பிள்ளைப் பருவத்துக் குணத்துடன் இருப்பதறிய வானவன் மாதேவி மனத்தே வேதனையுற்றாள். அமைதியை நிலைநாட்ட விரும்பும் தன் எண்ணமெங்கே? யுத்தத்திற்குத் துடிக்கும் மகன் மனம் எங்கே? போர்ப் பறை கொட்டி முடிக்க ஆயத்தமடைந்திருக்கும் மகனின் மனத்தை மாற்றுவது கடினமென்பதை உணர்ந்தாள். ஆனால், தக்க சமயத்தே சிலவற்றை எச்சரிக்க விரும்பினாள்.

சிறிது நேரம் மகனை உற்று நோக்கியபடி இருந்து, பிறகு, ''மகனே!'' என்று பாண்டியமாதேவி தொடங்கினாள். ஈழத்துத் தூதுவனைவிட மதிவாணனைக் குறித்து எச்சரிக்கை செய்ய விரும்பினாள்.

''இப்போது வந்து சென்ற வட எல்லைக் காவல் தலைவனிடம் நீ சற்று எச்சரிக்கையாயிருக்க வேண்டும்!'' என்றாள். மேற்கொண்டு அவள் தொடர்ந்து பேசு முன்னர், இராசசிம்மன் கடகடவென நகைத்து, தாயின் தவறான மதிப்பீட்டை மாற்ற விரும்பி, ''தாயே, உங்களுடைய மௌனத்தின் காரணத்தை இப்போது அறிந்தேன். அவன் வந்தவுடன் திகைத்து நின்றீர்களே, அதையும் இப்போது புரிந்து கொண்டேன். அவனைப் பார்த்தவுடன் உங்களுக்கு எப்படிக் கலகக்காரன் என்று தெரிந்துவிட்டது?'' என்று வேடிக்கையாகக் கேட்டுவிட்டு, ''தாயே நமது நாட்டு வீரர்களுக்குள் மிக நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்று பல கடுஞ் சோதனைக்குப் பிறகு அவனைப் பற்றித் தெளிந்த நான், அவனுக்குப் பெரிய பொறுப்பை அளித்திருக்கிறேன். அவன் கலகக்காரன், சதிகாரன் என்பதுதான் உண்மை



என்றால், அவனை இதுவரை கண்காணித்தவர் அனைவரும் பூரண அறிவு நிரம்பப் பெறாதவர்கள் என்றுதான் கூறவேண்டும்!'' என்றான்.

வானவன் மாதேவி வேதனை கலந்த குரலில், ''மகனே அவனை எனக்கு இதற்கு முன்னர் தெரியாது. அவனது நடவடிக்கைகளை இதுவரை கண்காணித்து வரும் எவரும் என்னிடம் கூறியது கிடையாது. ஆனால் அவன் தோற்றம் எனக்கு ஏதோ கடந்துபோன சம்பவங்களை நினைவுறுத்தியது'' என்றாள்.

''அவனது தோற்றம் பயம் நிரம்பியதா? அவன் பார்வைக்குப் பயங்கரமானவனாகவா இருக்கிறான்? அவன் விழி வஞ்சகத்தை உமிழ்கின்றதா?'' என்று கேட்டான்.

வானவன் மாதேவியின் குரல் சற்றுத் தழுதழுத்தது. ''மகனே! அவன் தோற்றத்தில் பயங்கரத்தைக் காணவில்லை. அவனது தோற்றத்தில் நான் உன்னைக் கண்டேன். இறையடி சேர்ந்த உன் தந்தையைக் கண்டேன் அதனால்..''

இராசசிம்மன் திடுக்கிட்டான். ''என்னைக் கண்டீர்களா? தந்தையைக் கண்டீர்களா? அதற்கும் புரட்சிக்கும், அவனால் கெடுதல் சம்பவிக்குமென்பதற்கும் என்ன காரணம்...? ஒன்றும் புரியவில்லை, தாயே?''

''அப்படிக் கேளடா என் செல்வமே! உனக்கு அதைச் சொல்ல எவ்வளவோ நாள்களாகத் துடித்தேன். என் நெஞ்சில் மூடி வைத்திருந்தவற்றைக் கூற இப்போது வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. நாம் பேசுவதை எவரும் அறியக்கூடாது. காவலர்களைக் கூடப் போகச் சொல்லிவிடு!'' என்றாள் வானவன் மாதேவி.

தாயின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் பெரும் இரகசியத்தை அறிய ஆயத்தமானான் இராசசிம்மன்.

## 5

வானவன் மாதேவி சேரநாட்டு அரசரின் மகள். வரகுண பாண்டியனுக்குப் பிறகு அவனது சகோதரன் பராந்தகப் பாண்டியன் பட்டமேறினான். அவனை மணந்த வானவன் மாதேவி அறிவும் அடக்கமும் சேர்ந்தவள். வானவன் மாதேவியை மணப்பதற்கு முன்னர் ஒருநாள், பராந்தக பாண்டியன் பொதிகை மலைச்சாரல் அருகே சென்றிருந்த போது அழகிய மங்கையொருத்தியிடம் மனத்தைப் பறிகொடுத்தான். அங்கேயே அவளுடன் இன்பமாகச் சிலகாலம் கழித்தான். மதுரையினின்று அவசரச் செய்தி வரவே, பராந்தகன் அவளை விட்டுப் பிரிய நேர்ந்தது. அவன் பிரியும்போது அந்த மங்கை நல்லாள் அரசனின் வடிவொன்றைத் தன் கருவில் வளர்த்து வந்தாள். மதுரை சென்ற மன்னன், அந்த மங்கையை மறந்து விடவில்லை, அவள் வேண்டிய உதவிகளைப் பெற வழிவகை செய்தான்.

பொதிகை மலை மங்கை அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். ஆனால், பெற்ற தன் குழந்தையின் முகத்தைக் காண அவள் கொடுத்து வைக்கவில்லை. அரச மகனான அவனது எழிலைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைய அவள் பாக்கியம் செய்திருக்கவில்லை. குழந்தையைப் பெற்றெடுத்த மூன்றாம் நாள் அவள் மீளாத்துயிலில் ஆழ்ந்தாள். அந்தப் பெண்ணின் தாய்மாமன், அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்தான், தன் வீரத்தை அவனுக்கு ஊட்டினான். அவன்தான் மதிவாணன். அவன் தாய் மாமனுக்குத் தெரியும் மதிவாணன் அரச குலத்து மகன் என்று. இந்தப் பாண்டிய நாடே ஒரு சமயம் மதிவாணனை வந்தடையலாம். மன்னரிடம் மதிவாணனை அழைத்துச் சென்று அவனுடைய உரிமையை நிலை நாட்டவேண்டும்



என்று மாமன் எண்ணியதுண்டு. ஆனால், அதை அவன் செய்வதற்குள் திடீரென அவன் சிறையிலடைக்கப்பட்டான். அதனால் மதிவாணனுக்குத் தன்னைப் பற்றி உண்மைக் கதை தெரிய வழியில்லாது போய்விட்டது. அனாதையாய் மதிவாணன் மதுரை வீதிகளில் சிலபொழுது திரிய நேரிட்டது. பிறகு போருக்குப் படை திரட்டியபோது வீரனாகச் சேர்ந்து வாள்வீச்சு, வில் எய்தல் முதலியவற்றைக் கற்றான்.

இந்தச் செய்தியை வானவன் மாதேவி இராசசிம்மனுக்குக் கூறி வந்தபோது அவன் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை. தாய் கூறி வந்ததைக் கூர்ந்து கேட்டு வந்தான். பிறகு மெல்லத் தாயை வினவினான்:

''தாயே, இந்தச் செய்தியை இதுவரை எனக்கு ஏன் சொல்லாமல் இருந்தீர்கள்? என் தந்தை தனக்குப் பிறந்த மகனைக் கவனிக்காமல் ஏன் விட்டுவிட்டார். அந்தச் செயல் சரிதானா?''

வானவன் மாதேவி மெல்ல நகைத்துக் கூறினாள். ''இந்தக் கேள்வியை நீ கேட்பாய் என்று தெரியும். ஒரு கணத்தில் மதிமயங்கி விட்ட உன் தந்தை, பிறகுதான் தன் பிழையை உணர்ந்தார். பாண்டிய நாட்டு அரியணைக்குக் காதல் கிழத்தியின் மகன் போட்டியிடும் அபாயம் நேரிடும் என்பதை அவர் அறிந்தார். மதிவாணனுக்கு அந்த உண்மை தெரியாதிருக்க வழி செய்தார். அதே சமயம் அவன் துன்பப்படாமல் வாழவும் வகை ஏற்படுத்தினார். முதல் அமைச்சரிடமும் மற்றும் ஒரு சில நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களிடமும் மட்டுமே நடந்தவற்றைக் கூறி ஆலோசனை கேட்டிருக்கலாம். ஆனால் அவர் என்னிடம் மட்டுமே ஒருநாள் தன் மனந் திறந்து கூறித் தன் மனப் புண்ணுக்கு மருந்து கேட்டார். அப்போது நீ என் வயிற்றில் இருந்தாய். எந்தத் தாய்க்கும் உள்ள கவலை எனக்கும்

இருந்தது. எங்கே உனக்கு அரியணை கிடைக்காமல் போய்விடுமோ எனும் பயத்தில், ஒன்றும் தோன்றாமல் அன்றெல்லாம் நான் சிந்தித்தேன்; ஒரு சமயம் அழுதேன்; ஒரு சமயம் அரசர் மீது சீற்றம் கொண்டேன்; எல்லாம் ஒரே நாளில் ஏற்பட்ட வெவ்வேறு அனுபவத்தைத்தான் கூறுகிறேன். அந்த இரகசியம் அறிந்தவரெவராவது இருக்கிறார்களா என்று மன்னரைக் கேட்டேன். அந்தச் சிறுவனின் தாய்மாமன் சிறையில் இருந்தார். அவருக்குத்தான் அந்த இரகசியம் தெரியும் என்பதைத் தெரிந்துகொண்டேன். அவர் வெளியே இருந்தால், எந்தப் போதிலும் உனக்கு ஆபத்து என்று உணர்ந்தேன். அதனால் அவரை ஒழித்து விடுவதுதான் சரியென்ற முடிவுக்கு வந்தேன். மன்னரிடம் கூறினேன். மகனே! அந்த எண்ணத்தையும், முடிவையும் இப்போது நினைக்கும்போதுகூட நான் வெட்கப்படுகிறேன். அந்த இரகசியம் அறிந்திருந்த அந்தச் சிறுவனது தாய் மாமன்மீது பழியொன்று சுமத்தி, மீள முடியாப் பாதாளச் சிறையிலடைத்தேன். அந்தச் சிறுவன் அனாதையானான். அதன் பிறகு எங்குச் சென்றானென்பதே தெரியவில்லை. என் கவலை ஒரு வழியாகத் தீர்ந்தது. ஆனால், ஓர் உண்மையை மட்டும் என் மனச் சாட்சியால் அழித்து விட முடியவில்லை. அந்தச் சிறுவன் உன் தந்தையின் வடிவை அப்படியே கொண்டு வந்திருக்கும் உருத்தோற்றத்தையும் உன் தந்தையின் குருதி அவன் உடலில் ஓடுகிறதென்ற உண்மையையும் என் இதயம் எளிதில் மறக்க விரும்பவில்லை. எந்தச் சமயத்திலாவது உன் சகோதரன் பட்டத்துக்குப் போட்டிப் போட வருவான் எனும் பயம் என்னுள்ளத்திலிருந்து கொண்டிருந்தது. அதை உன்னிடம் எப்படியாவது கூறிவிடவேண்டும் எனத் துடித்தேன். இன்று நான் மதிவாணனைக் கண்டவுடன் உறுதி கொண்டேன். என் மனம் ஏனோ வேதனையடைகிறது.



திருச்செந்தூர் முருகபிரானது வேலின் நினைவோடு நான் பேசுகிறேன்; மகனே, நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். வேற்று நாட்டின் உதவியுடன் மாற்றானை எதிர்ப்பது எனும் உனது திட்டம் எனக்குப் பிடிக்கவில்லை. என் பிறந்த நாடான சேர நாடு சென்றும், படை உதவி நான் கேட்கமாட்டேன். நம் படைகளைக் கொண்டுதான் போரிடவேண்டும். அதனால் சற்றுக் கவனமாகச் செயல்களைப் புரிவாய் என நம்புகிறேன்!...''

இராசசிம்மன் கேட்டான்: ''தாயே, மதிவாணன் தான் என் தந்தைக்கும் அந்த மலைநாட்டு மங்கைக்கும் பிறந்தவன் என்று எப்படி உறுதிகூற முடியும்?''

''என் இதயத்தில் பதித்து வைத்திருக்கும் உருவத்தை அவ்வளவு எளிதில் நான் மறந்துவிட மாட்டேன். ஒருமுறை நான் மதிவாணனைச் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். உன் தந்தையின் எடுப்பான நாசியும், புருவ வளைவும், முகவாயும் அச்சு போல் அவனுக்கு அமைந்திருக்கின்றன. அந்த நினைவை என்னால் என்றுமே மறக்க முடியவில்லை. அவன் இருப்பிடம் கண்டறிய முயன்றும் முடியவில்லை. அவனைக் கொல்ல முயன்ற என் ஒரு கணத் தீக்குணத்தை எண்ணி, நான் பலநாள் வேதனையுற்றிருக்கிறேன். இப்போதோ, அவனால் உனக்கு ஏதாவது துன்பம் நேரப் போகிறதோ என எண்ணும்போது, என்னால் அந்தப் பயங்கரத்தை நினைத்துப் பார்க்கவே முடியவில்லையடா!''

இராசசிம்மன் மெல்ல இதழ்க்கடையில் சிரிப்பை வரவழைத்தவாறு, ''தாயே, மதிவாணன்-இல்லை இல்லை என் சகோதரன் அப்படிப் புரட்சி செய்ய முனைந்தால், அவனுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நான் செய்வேன். கோட்டைக்குள் நுழையும் இரகசிய வழியைக்

காட்டுவேன். ஆபத்துதவிகளை அவனுக்கு உறுதுணையாயிருக்குமாறு ஆணையிடுவேன்: என் சகோதரன் இவ்வளவு நாள் காட்டிலும் மேட்டிலும் வாழ்வதா? நான் அரண்மனையில் வாழ அவன் அனாதையாய்க் காவலரணில் காத்துக் கிடப்பதா? தாயே! வேண்டாம்! மதிவாணன் வட எல்லையைக் காக்க வேண்டாம். நான் வட எல்லையைக் காப்பேன். அவன் மதுரை அரியணை ஏறத் தன்னைத் தகுதி செய்து கொள்ளட்டும். இவ்வளவு நாள் மறைத்து வைத்திருந்ததை இன்றாவது தெரிவித்தீர்களே! தாயே...! நாளையே வட எல்லை செல்கிறேன். மதிவாணனைச் சந்தித்து மறைந்திருக்கும் இரகசியத்தைத் தெரிவிக்கிறேன்...'' என்று கூறி இராசசிம்மன் அங்கிருந்து செல்ல எழுந்தான்.

பரபரப்புடன் பாண்டிய அரசி, ''இராசசிம்மா, என் மகனே! அந்த இரகசியத்தை மட்டும் கூறாதே. வேண்டாம், மகனே! என்னாலே உனக்குத் தீங்கு வரவேண்டுமா? ஐயோ நான் ஏன் அந்த ரகசியத்தைக் கூறினேன்? ஆபத்தைக் காப்பதுபோக அதை அருகே அழைத்து விட்டேனே?... மகனே!... மகனே!... ஒருவேளை அவனுக்குப் பிறப்பில் உண்மை தெரியாமலிருந்திருக்கலாமல்லவா?'' வானவன் மாதேவி துக்கம் தொண்டையை அடைக்க இராசசிம்மனை அழைத்தவண்ணம் மண்டப வாயில்வரைத் தொடர்ந்து வந்தாள். இராசசிம்மன் திரும்பிப் பாராமல் விரைந்து எங்கோ சென்றான்.

## 6

மதிவாணன் காவல் அரணின் மேல் மாடத்து காலதரின் வழியே வெளியே உற்று நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தான். நீலவானைத் திரைச்சீலையாய் அமைத்து,



வெண்மதியை நடுவே தீட்டி, இயற்கைத்தாய் அழகிய ஓவியம் ஒன்றை வரைந்திருந்தாள். மதிவாணன் அந்த அழகோவியத்தை விழிகளால் பருகிய வண்ணம் மனக் கற்பனையைக் குழம்பாக்கி, எண்ணமெனும் தூரிகையால் இதயச் சீலையில் எழிலோவியம் வரைந்து கொண்டிருந்தான். அந்த ஓவியம் அழகு மங்கையாக உருப்பெற்றது. அந்த ஓவியம் சிரித்தது. முத்துப் பற்கள் தெரிய நகைத்தது. மோகன முகத்தில் இன்பம் நடனமிட வந்து நின்றது அந்த உருவம். யார்-! யார்-! மலர்க் கொடிதானா, முத்துப்பல் மிளிர மோகன முகங்காட்டி, அந்த ஓவியமாக உருவாகிக் கொண்டிருந்தாள்? அருகே இருந்த கிராமத்து வீடுகள் சிலவற்றில் ஏற்றப்பட்டிருந்த விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றும் மினுக்மினுக்கென்று ஒளிவிடுவது காவல் அரணிலிருந்து தெரிந்தது. எதிரேயிருந்த அடர்ந்த கானகத்தில் மின்மினிப் பூச்சிகள் சூழ்ந்து கொண்டு, கானகத்துக் கண்கள் போல் பயங்கரத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. எங்கோ நரிக் கூட்டம் ஊளையிடும் ஒலி, போரின் புதுவிருந்தின் ஆரம்பக் கீதம் இசைப்பதுபோல் தோன்றியது.

மதிவாணனின் மனம் ஒரு நிலையிலில்லை. தான் மதுரை சென்றதையும், அங்கே தனக்குக் கிடைத்த பெரும் வரவேற்பையும் எண்ணிப் பார்த்தான். மன்னர் இராசசிம்மனின் கம்பீரத் தோற்றத்தை ஒருமுறை மனத்தில் நினைத்துப் பார்த்தான். மதுரை மாநகரின் மாட மாளிகைகளின் வனப்பை உருவகப்படுத்திப் பார்த்தான். ஆகா, இவற்றிற்கெல்லாம் ஆபத்து நெருங்கி வருகிறது. தமிழ் கண்ட வைகையும் பொருனையும் வளமிக்க பூமியைக் கவர்ந்துவிடப் புலி துடிக்கிறது. முத்தும் சந்தனமும் மொத்தமாகப் பறிக்கத் துடிக்கிறான் சோழவேந்தன். சங்கம் வளர்த்த மதுரை நகருக்குப் பங்கம் விளைவிப்பதா?

இராசசிம்மன் போன்ற உயர்ந்த குணம் கொண்ட ஒப்பற்ற மன்னருக்குத் தீங்கு வருவதை அனுமதிப்பதா? முடியாது. நம் மூச்சுள்ளவரை அப்படி நேர விடக்கூடாது. ஓராயிரம் சோழர்களையாவது அழித்த பின்னரே மாள்வது, என்று வீரசபதம் செய்து கொண்டான். அவன் கரங்கள் உயர்ந்தன. அவன் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. அவன் எதிரே சோழர்களே நிற்பதுபோல் ஓர் உணர்ச்சி வேகம் ஏற்பட்டது!

'களுக்'கென்ற சிரிப்பொலி எழுந்து மதிவாணனைத் திடுக்கிட வைத்தது. மலர்க்கொடி நின்று கொண்டிருந்தாள். தலையில் சூடியிருக்கும் மல்லிகைக் கொத்தும், மயக்கும் இரு விழிகளும், நெற்றித் திலகமும், வளைந்த விற்புருவமும், பருவச் செழிப்பும் சேர்ந்துவிட்ட தோற்றமாய் மலர்க்கொடி நின்றிருந்தாள்.

''யாருடன் பேசி எவரைப் போருக்கழைக்கிறீர்கள்?'' என்று மெல்லக் கேட்டாள் மலர்க்கொடி.

மதிவாணன் ஒன்றும் பேசவில்லை. அவனுக்குப் பேச்சேதும் வரவில்லை. அவளையே உற்று நோக்கிய வண்ணமிருந்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்?''

''போர் வருகிறதே, அதற்குப் போர்க்கலன்கள் செய்ய வேண்டுமே! உன்னிடமிருந்து எந்த ஆயுதத்தைக் கவரலாம் என்று பார்க்கிறேன்.''

''என்னிடமிருந்தா?''

''ஆம்; உன் விழியை வேலாக்க எண்ணுகிறேன். வளைந்த புருவத்தை வில்லாக்க விரும்புகிறேன்!...''

''போதும், போதும்... என்னையே போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டு, நீங்கள் சுகமாயிருக்கப் போகிறீர்களாக்கும்!



இந்த நாட்டில் ஆண் பிள்ளைகளுக்கு வீரம் குறைந்து விட்டதா?''-மலர்க்கொடி பொய்க் கோபம் கொண்டாள்.

மதிவாணன் கலகலவென்று நகைத்தான். மலர்க்கொடியின் முகத்தை மெல்லத் திருப்பி, ''சோழப் படைகளை வெல்வதற்கு இன்னும் எந்த விதப் புது ஆயுதங்களைக் கண்டுபிடிக்கலாம் என எண்ணுகிறேன். ததீசி முனிவரைப் போன்று என் எலும்பையே வாளாக்கி விடலாமா என்றும் எண்ணுகிறேன்'' என்றான்.

''மதுரை சென்று வந்தீர்களே! என்ன புதுச் செய்தி? எனக்குச் சொல்லவில்லையே, யுத்தம் வருவது நிச்சயம் தானா?''-மலர்க்கொடி மெல்ல அவன் பரந்த தோள்மீது சாய்ந்தாள்.

''நிச்சயமா? சூரியன் உதிப்பது எவ்வளவு உறுதியோ, அவ்வளவு நிச்சயம் போர் வருவதும். சோழியப் படைகள் புறப்பட நாள் பார்த்து விட்டார்களாம். அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும், போர்வருவது மட்டும் நிச்சயம். சோழியப் படைகளை வழியிலேயே சென்று தாக்குவோம். அவர்களை ஓட ஓட விரட்டுவோம். தஞ்சைக் கோட்டையிலே மீன்கொடியைப் பறக்க விடுவோம்!'' மதிவாணன் கம்பீரமாகப் பேசப்பேச, மலர்க்கொடியின் மெய் சிலிர்த்தது. அவள் பிறந்த சோழ மண்ணைப் பற்றி மதிவாணன் குறைவாகப் பேசுகிறான். ஆனால் அது அவளுக்குப் பெருமையாக இருந்தது. தஞ்சையைக் கொளுத்துவோம் என்கிறான், மதிவாணன்!-அச்சொல் அவளுக்கு தண்ணென்றிருந்தது.

''நீங்கள் சோழியப் படைகளை அவர்கள் தங்குமிடம் சென்று தாக்கப் போகிறீர்களா? அப்படிப் போகும்போது அங்கே அகண்ட காவிரி இருக்கும்; அழகான திருவரங்கக்

கோயிலிருக்கும். உறையூர் இருக்கும். உறையூரில் அழகிய மாளிகையிருக்கும். அவற்றின் அழகிலே நீங்கள் போரிடுவதை மறந்துவிடாதீர்கள்!'' என்றாள் மலர்க்கொடி.

மதிவாணன் திடுக்கிட்டான். 'உறையூரை நீ எப்படி அறிவாய்? அகண்ட காவிரியைக் கண்டதெப்படி? திருவரங்கம் எப்போது சென்றாய்?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

மலர்க்கொடி சிரித்து, ''இது என்ன கேள்வி? உறையூரின் மண்ணில்தானே நான் பிறந்தேன்! காவிரியின் தண்புனலில் தானே நான் வளர்ந்தேன்!'' என்றாள்.

''நீ சோழ நாட்டவளா?''

''ஆம்; அப்படியென்றால் என்மீது வெறுப்படைந்து விடுவீர்களா?'' இதைக் கேட்டுவிட்டு, சற்று நகர்ந்து அவனை அச்சத்துடன் நோக்கினாள் மலர்க்கொடி.

மதிவாணன் மெல்ல நகைத்தான். ''நாடும், மண்ணும், பூமியும் வேறுபடுவதால் காதலில் வேற்றுமை ஏற்படுவதில்லையே!'' என்றான். இப்படிக் கூறிவிட்டு, மதிவாணன் மௌனமாக இருந்தான். அவன் அங்கிருந்து நகர்ந்து, பலகணியின் வழியே வானத்தை நோக்கினான்; அமைதியான அந்த நீல வானத்தில் பஞ்சு மேகங்கள் பறந்து சென்று கொண்டிருந்தன. மலர்க்கொடியின் கண்களில் அதற்குள் நீர்த்துளிகள் எங்கிருந்தோ சேர்ந்துவிட்டன. அதை மதியொளியால் மதிவாணன் கண்டுவிட்டான். வெளியே காற்று விர்விர் என வீசியது. காற்றில் மரங்கள் அசைந்தன. அந்த ஒலியில் படிக்கட்டுகளின் வழியே மலர்க்கொடியின் தந்தை ஏறிவரும் காலடியோசை கேட்கவில்லை. மதிவாணன் மலர்க்கொடியருகே சென்றான்.



அவளது கண்ணீரைத் துடைத்தவாறு, 'மலர்க்கொடி, நான் கேட்டது உனக்கு வருத்தத்தை உண்டாக்கிவிட்டதா? ஒரு காரணமுமின்றி நாடு பிடிக்கும் ஒரே ஆசையால், இந்த நாட்டின் மீது படையெடுத்து வரும் சோழர்களை நான் பரம்பரை விரோதியாகக் கருதுகிறேன். அவர்களை ஆதரிப்பவர்களையும் என் ஆயுள் விரோதியாகக் கருதுகிறேன். அதனால் சோழ நாட்டைச் சேர்ந்தவள் நீ என்றவுடன் எனக்குக் கணத்தில் கோபம் பொங்கியது!''

''அதனால் என்னை விரோதியாகக் கருதி விட்டீர்களா, ஆயுள் விரோதியாகக் கருதி விடுவீர்களா?''

''அப்படி இல்லை, மலர்க்கொடி! விரோதியாக நான் எண்ணவில்லை. சோழ நாட்டினின்று இந்தச் சிறு கிராமத்திற்கு வந்து என்ன செய்கிறார் உன் தந்தை என்றே ஒரு கணம் எண்ணினேன். ஆழ்கடலில் பிறக்கும் முத்தினைப் போன்று, உன் இதயக் கடலினின்று எழுந்து, கண்களிலே பிறந்த முத்து என்னைக் குழப்ப நிலையிலாழ்த்தியது.''

''நீங்கள் என்னை விரோதியாகவோ, விரோதியின் மகளாகவோ, எப்படி வேண்டுமானாலும் கருதுங்கள். நான் உங்கள் கட்சி. நீங்கள் யார் பக்கமோ, நான் அந்தப் பக்கம்; உங்களுக்கு யார் விரோதியா, அவர்களுக்கு நான் விரோதி. உங்கள் உள்ளத்தோடு கலந்துவிட்ட என்னை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லையா?''- மலர்க்கொடி விம்மினாள். துன்பச் சூழ்நிலையிலும் இன்ப உதயம் நிகழ்ந்தது. மதிவாணனின் பரந்த மார்புகளில் மலர்க்கொடி புதைந்தாள். அவனுடைய விரிந்த மார்பகத்திலே செழித்து வளர்ந்திருக்கும் உரோமங்களில் கண்ணீர் முத்துக்கள் சேர்ந்து நின்றன. அவனது இதயத் துடிப்பு அவளது செவிகளில் வீழ்ந்தது. அவளது மென்மையான பூமேனியை அந்த மாவீரனின் உறுதிவாய்ந்த

கரங்கள் அணைத்தன. தலையில் சூடியிருந்த மலர்க்கொத்தின் மணம், அவன் மனச் சஞ்சலத்தை மாற்றியது. துவளும் அவள் இடை சரிந்துவிடாது அந்த வீரனின் கரங்கள் பாதுகாப்பளித்தன. தஞ்சமென்று வந்தவருக்கு அஞ்சலென்று ஆறுதளிக்கும் கோட்டை போன்ற அவனது பலம் பொருந்திய கரக் கோட்டையிலே அவள் சிக்கினாள். மெல்லிய விசும்பலுடன் கூடிய அவளது பெருமூச்சு, அவன் இதயத்தோடு இதயமாகப் பல செய்திகளைக் கூறின.

''கோபமா?''

''ஊஹூம்!''

''இவ்வளவு நாள் கண்ணீரை எங்கு அடக்கியிருந்தாய்?''

''உங்கள் அன்பில்!''

''இதே அரணில் நாம் என்றுமே வாழ்வோமா?''

''நம்மை பிரிப்பவர் எவர்?''

''போர்க்களம் புகுந்தாலும், என்னையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும்!''

''நீ அங்கு வந்து என்ன செய்வாய்?''

''போரில் விழுப்புண் பெற்ற பாண்டிய நாட்டு வீரர்களுக்கு மருந்திட்டு நோய் தீர்ப்பேன்.''

''ஆகா! உன் கரம் படும் பேறு பெறப் போகும் அந்த வீரர்கள் வாழ்க! நானும் போர்க்களத்தில் அடிபட்டு வீழ்ந்தால், உன் கரங்களின் இனிய அரவணைப்பைப் பெறலாமே!''

''ஐயா, என்ன வார்த்தை பேசுகிறீர்கள்? என் கையின் ஸ்பரிசத்திற்காக நீங்கள் புண்பட வேண்டுமா? போர்க்களத்தில் விழுப்புண் பெறும் காலம்வரை, என் பூங்கரம் காத்திருக்க வேண்டுமா? இதோ!''



அவள் பூங்கரங்கள் அவன் மேனியெங்கும் பாவிக் களித்தன. அவன் பொதிகைமலைச் சாரலின் குளுமையை உணர்ந்திருக்கிறான்; அவளது மென் தீண்டலுக்கு அது ஈடாகுமா?

வெண் பஞ்சின் மென்மையை அவன் அறிவான்; அது அவளது பூங்கரத்திற்கு இணையாகுமா?

பழமுதிர்ச் சோலையின் இனிய கனிகளின் சுவை அறிவான்; அந்தச் சுவை மலர்க்கொடியளிக்கும் இன்சுவைக்கு எம்மாத்திரம்?

மலர்க்கொடியின் தந்தை மறைந்திருந்து இளங் காதலர்கள் இன்பப் படகில் மிதப்பதைப் பார்த்துத் தானிருந்தார். அவ்வளவு பெரியவர் இளவயதினரின் உல்லாச நிலையினைக் காண்பது முறையல்ல; ஆனால் அவர்கள் நெருக்கம் அவரது திட்டத்திற்கு மிக உதவுமே!

## 7

மறுநாள் காலையில் ''அப்பா'' என்று மலர்க்கொடி அழைத்தாள். மதிவாணனுடன் தான் பழகுவதற்கு, அவர் மீது காதல் கொண்டிருப்பதற்குத் தந்தை என்ன நினைக்கிறாரோ என அவள் அஞ்சியிருந்தாள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியறியாத மலர்க்கொடியால் தன் இதயத்தில் ததும்பும் 'காதல் கதையை' மறைத்து வைத்திருக்க முடியவில்லை. தந்தையிடம் சூசகமாக அவள் தெரிவிக்க முயன்றபோது,

அவர் புன்முறுவலுடன் அவள் காதலுக்கு ஆசி கூறினார். அவரது போக்கு அவளைத் திகைக்க வைத்தது.

''அப்பா, என் செவியில் விழும் தங்கள் சொல் உண்மைதானா? பாண்டியநாட்டு வீரரை நான் காதலிப்பதற்குத் தங்கள் ஆசி பூர்ணமாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''என் இதய பூர்வமான ஆசி உனக்குண்டு. உன் திருமணமும் உறையூரில் நடந்தால்தான், நான் இன்னும் பெருமகிழ்ச்சியடைவேன்'' என்றார் அவர்.

மலர்க்கொடி திடுக்கிட்டாள். ''உறையூரிலா? தந்தை என்ன கனவு காண்கின்றாரா? பாண்டிய நாட்டு வட எல்லைத் தளபதிக்கு உறையூரில் திருமணமா? சோழநாட்டை வெறுக்கிறார் அவர். என் தந்தையோ சோழநாட்டிலே திருமணம் செய்து வைக்கத் துடிக்கிறார். திருமணம் எப்படி நடபெறும்? காதல் வயப்பட்டவர்களுக்குச் சோதனையும் துன்பமும் தண்டனையும் வரும் என்பார்களே? என் வரையில் தந்தையின் எதிர்ப்பு நேரிடையே இல்லாவிடினும், வேறு விதமான இடையூறுகளை அவர் செய்வாரோ? ஏதும் புரியவில்லையே?'' என்று மனத்தை ஒரு பக்கம் களிப்பிலும், ஒரு பக்கம் வேதனையிலுமாகக் கழித்தாள் மலர்க்கொடி.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது, மலர்க்கொடி புதுத் தெம்புடன் எழுந்தாள். அவள் கண்களுக்குக் கிராமமே கலகலப்பாக இருப்பதுபோல் தோற்றமளித்தது. குதிரை வீரர்கள் பலர் அங்கு வந்து போயினர். புழுதிப் படலத்தைக் கிளப்பிய வண்ணம், அவர்கள் விரைந்து செல்வதைப் பார்த்துக் கிராம மக்கள் பலவாறாகப் பேசிக்கொண்டனர்.

வழக்கம்போல் உச்சிப் பொழுதில் கஞ்சிக் கலயத்துடன் மலர்க்கொடி மதிவாணனிருக்குமிடம் சென்றாள். காவல்



கூடத்தின் மீது படிக்கட்டுக்களின் வழியாகச் சந்தடி செய்யாமல் ஏறினாள்.

மதிவாணன் வெளியே நோக்கிய வண்ணம் பலகணியருகே அமர்ந்திருந்தான். மலர்க்கொடி மெல்ல அவன் அருகே சென்று அவன் முதுகில் சட்டெனத் தன் முகத்தைப் பதிய வைத்துக்கொண்டு, ''சோழிய வீரர்களை நசுக்கத் திட்டம் தீட்டி விட்டீர்களா?'' என்றாள். மதிவாணன் திரும்பவில்லை.

''ஆழ்ந்த சிந்தனையோ?''

மதிவாணன் பேசவில்லை.

''இன்றைய உணவில் இன்சுவை அதிகம். வழக்கத்தைவிடச் சிறப்பாகச் சமைத்திருக்கிறேன்.''

மதிவாணன் மௌனமாயிருந்தான்.

''ஏன் மௌனம் மீண்டும் கோபமா?'' என்று மலர்க்கொடி சட்டென அவன் முகத்தைத் திருப்பினாள்.

அவள் நடுங்கினாள். வீரிட்டலறக்கூட அவள் நெஞ்சினின்று குரல் எழவில்லை. அவள் கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் ஒருமுறை பார்த்தாள். மதிவாணனைப் போன்றுதான் இருக்கிறார். ஆனால் அவள் இதயம் நம்ப மறுக்கிறதே. அவள் உள்ளுணர்வு 'மதிவாணனல்லன், மதிவாணனல்லன்' என்று கூறுகிறதே..?

பிறகு இவர் யார்? மதிவாணன் சகோதரரா? அப்படி ஒருவர் இருப்பதாகத் தெரியவில்லையே? மலர்க்கொடி உடல் பின்புறமாக நகர்ந்தாள். அவன் ஓரடி எடுத்து வைத்தால், அவள் படிக்கட்டுகளில் உருண்டிருப்பாள். அவள் கையிலிருக்கும் கலயம் உடைந்துச் சிதறும். அவள் உள்ளமும் சிதறி விடலாம்!

''பெண்ணே, அஞ்சாதே! என்னால் உனக்கு எந்தவிதத் துன்பமும் நேராது. உன் இதயத்தரசன் மதிவாணன் வெளியே சென்றிருக்கிறான். விரைவில் வந்து விடுவான். கலயத்திலுள்ள கஞ்சியில் ஒரு பகுதி எனக்குக் கொடுக்க முடியுமானால் கொடு. நானும் பசியால் துடிக்கிறேன். வழக்கத்தைவிடச் சுவை மிகுதியாக சமைத்திருப்பதாகக் கூறினாயே! அதை நானும் சுவைக்கலாமா?'' என்று மதிவாணனன் இடத்தில், அமர்ந்திருந்த இராசசிம்மன் கேட்டான்.

தன் தாய் கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பாராமல், இராசசிம்மன் மதுரையினின்று புறப்பட்டு வந்தான். உடன் மெய்க் காவலரையும் அழைத்து வரவில்லை. போகுமிடத்தை அமைச்சருக்கும் கூறவில்லை. ஆங்காங்கேயுள்ள பாடி வீட்டில் வீரர்களைச் சந்தித்து உற்சாகமூட்டினான். பிறகு எங்கே செல்கிறோமென்று எவரிடமும் கூறாமல் வடக்கு நோக்கி விரைந்தான். அவன் வந்தபோது, மதிவாணன் காவல் கூடத்தில் இல்லை. அருகேயிருந்த காட்டிற்குள் சென்றிருந்தான். பாடிக் காவல் மாடத்தில் ஏறி, அமர்ந்து அதன் பலகணி வழியே வெளிப்புறத்தை நோக்கியவாறு இராசசிம்மன் சிந்தனையிலமர்ந்திருந்தபோதுதான், மலர்க்கொடி அங்கு வந்தவள், அவனைத் தவறாக எண்ணி அவன் முதுகில் சட்டெனத் தன் முகத்தைப் புதைத்தாள்.

இராசசிம்மன் பேசியது கேட்ட மலர்க்கொடிக்கு இன்னும் அச்சம் தாளவில்லை. உடல் படபடத்தது. மேலும் அங்கு நின்றிருந்தால், ஆபத்தென எண்ணி அவள் தடதடவெனப் படிக்கட்டுக்களில் இறங்கி ஓடினாள். அவள் சென்ற பிறகே மதிவாணன் அங்கு வந்தான். வந்தவுடன் அங்கிருப்பவரைக் கண்டு ஒரு கணம் திகைத்தான்; வியப்புற்றான். உடலில் லேசான நடுக்கமும் கூட.



53786 Vol,3981

''அரசே! வாருங்கள், வாருங்கள்'' என்று கூற அவன் நா துடிதுடித்தது. அவனை அதிக நேரம் நிற்க வைக்காமல் இராசசிம்மனே, ''மதிவாணரே! வாரும். உங்களைக் காணத்தான் நான் வந்தேன். காவல் எல்லாம் எப்படி இருக்கிறது? சோழ நாட்டிலிருந்து சேதி ஏதாவது கிடைத்திருக்கிறதா?'' என்று முகத்தில் முறுவல் நிகழக் கேட்டான்.

மதிவாணனுக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. அவன் காண்பது உண்மைதானா? மதுரை மன்னர் அவன் எதிரே இருப்பது உண்மைதானா? தன்னை மிக மரியாதையான சொல்லில் அழைக்கிறாரே? அவ்வளவுக்கு நானென்ன பெரும்பணி செய்துவிட்டேன்?

''இப்படி அமருங்கள், மதிவாணரே! உங்களுக்கு உணவு வந்தது. அதைக் கொண்டு வந்தவள் என்னைக் கண்டு அஞ்சி ஓடிவிட்டாள். நான் மாற்றானுக்குக் கூற்றுவன். நல்லவர்களுக்குமா, என்னைக் கண்டால் நடுக்கம்?'' என்று கூறி நகைத்தான் இராசசிம்மன. ''மதிவாணரே, அலைந்து களைத்து வந்த உமக்குக் கிடைக்க வேண்டிய உணவு என்னால் பறிபோயிற்று. இல்லை, இல்லை, அதைக் கொண்டுவந்த பசுங்கிளி பறந்துவிட்டது'' என்று கூறி இராசசிம்மன் மீண்டும் நகைத்தான்.

அங்கிருந்து அச்சத்துடன் விரைந்த மலர்க்கொடி சிறிது தூரம் சென்றதும் மனத்திடத்துடன் என்ன நடக்கிறது, அங்கே காணுவோம் என்ற ஆவல் உந்த மீண்டும் அங்கு வந்து மறைந்து நின்றாள். மதிவாணனும் மன்னரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மதிவாணன் திடமான நெஞ்சுடன் ''அரசே! என்னைப் பொறுத்தருள வேண்டும். தாங்கள் வரும்போது நான்

இங்கில்லை. இன்று ஏதாவது சேதி கிடைக்கிறதா என அறியச் சென்றேன்'' என்றான்.

''அதனாலென்ன, ஆபத்தான வேளைகளில் எதையெதை எப்போது செய்வது எனப் பார்த்துச் செய்ய முடியாது. நிற்கிறீர்களே, உட்காருங்கள்!'' என்றான் இராசசிம்மன.

''அரசே! இது என்ன. என்னை நீர், நீங்கள் என்று அழைக்கிறீர்களே! திடீரென நான் அத்தகைய பேறு பெற என்ன செயல் செய்தேன்?'' என்று பரபரப்புடன் கேட்டான் மதிவாணன்.

''வேறு என்ன செய்யவேண்டும்? என் சகோதரராகப் பிறந்ததொன்று போதாதா?'' என்றான் இராசசிம்மன்.

மதிவாணன் ஒன்றும் புரியாமல் திகைத்தான்.

''ஆம்; நான் கூறுவது ஒன்றும் புரியாதுதான். மதிவாணரே! என் சகோதரர் நீங்கள். அன்று மதுரைக்கு நீர் வந்ததால், அவ்வுண்மை தெரிய வந்தது. இதுகாறும் நான் என் சகோதரனை அறியாதிருந்தேன். சாதாரண படை வீரனாக உம்மை நியமித்து ஆட்சி செலுத்தினேன். நான் மன்னனாயிருந்தேன்; நீங்கள் சாதாரண பாண்டிய நாட்டு மக்களுள் ஒருவராயிருந்தீர்; அது மாறும் வேளை வந்துவிட்டது. அதை அறிவிக்கவே இப்போது ஓடோடி வந்தேன்!'' இராசசிம்மன் உணர்ச்சி மிகுதியால் ஆர்வத்துடன் பேசினான்.

மதிவாணனுக்கு மிகக் குழப்பமாக இருந்தது. மன்னர் தன்னைச் சோதிக்கிறாரா? நான் அவர் உடன்பிறந்தவனா? ஒன்றும் புரியவில்லையே? மதுரையினின்று மன்னர் ஓடோடி வந்திருக்கிறார்; இதை கூறத்தானா? மதிவாணன் திகைப்புடன் இராசசிம்மனை நோக்கியவாறு நின்றான்.



''மதிவாணரே, என் அருமைச் சகோதரரே! நான் திடீரென்று இப்படியெல்லாம் கூறுவது உமக்கு வியப்பாக இருக்கலாம். நீர் திடுக்கிடலாம். சிறிது நேரத்திற்கு முன்பு உமக்கு இளம் பெண் ஒருத்தி உணவு கொண்டு வந்தாள். என்னை முதுகுப் புறம் கண்டு நீங்கள் என எண்ணி அருகே நெருங்கினாள். நான் திரும்பினேன். ஒருகணம் அவள் வியந்து நின்றாள். பிறகு ஓவென அலறிய வண்ணம் ஓடிவிட்டாள். அவள் ஏன் வியந்து நின்றாள்; பிறகு ஏன் 'ஓ'வென அலறியவண்ணம் ஓடிவிட்டாள். அவள் ஏன் அலறி ஓடினாள், தெரியுமா? நீங்களும் நானும் ஒரே தோற்றமுடையவராய் இருக்கிறோம்!

''ஏன் ஒரே தோற்றமுடையவராய் இருக்கிறோம் தெரியுமா?- எதிர்பாராதவிதமாக நேர்ந்துவிட்ட உருவ ஒற்றுமையன்று, உண்மையிலேயே உம் தந்தையும் என் தந்தையும் ஒருவரே...''

மதிவாணன் செவிகளில் மன்னரின் சொற்கள் வீழ்ந்தன. ஒருகணம் அவன் வானவெளியே பறந்தான். மறுகணம் ஆழ்கடலின் அடியில் சென்று கொண்டிருந்தான். முத்தையும் வைர வைடூரியங்களையும் யாரோ ஒரு கணம் எடுத்து, அவன்மீது அபிஷேகமாகப் பொழிந்தார்கள். முல்லையும், காந்தளும், கமலமும், கடம்ப மலருமாக எடுத்துத் தூவினார்கள்; ஆனால் மறுகணம் யாரோ அவனைப் பிடித்திழுக்கிறார்கள். 'தட தட தட' வென்று அண்ட பேரண்டம் குலுங்கும்படியான பேரிடி இடிக்கிறது. அவன் கூவுகிறான்.

''அரசே!'' என்று மதிவாணன் கூவித்தானிருக்கிறான். அவன் கண்களில் தாரைதாரையாக நீர் வழிந்தவாறிருந்தது.

''அரசே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லையே, அரசே? இந்த சாதாரண காவல்காரனிடம் ஏதேதோ கூறுகிறீர்களே? என் இதயம் வெடித்து விடுமளவுக்குக் கூறாதீர்கள் அரசே! என் மனத்திலே அரச குடும்ப ஆசையைப் புகுத்தாதீர்கள், அரசே! நான் இப்படியே காவல் தளபதியாகக் காலத்தைக் கழித்து விடுகிறேன். மாற்றரசர்கள் நடுநடுங்க வாளெடுத்துச் சுழற்றுவது ஒன்றே என் வேலையாக இருக்கட்டும். ஏதேதோ கூறி மன்னரது சகோதரர் எனும் மதிப்பிலே எனை உயர்த்தி, என்னைத் தொடர்ந்து பலரை வரச்செய்து, அவர்களுடைய புகழ்மாலைக்கும் சூழ்ச்சிக்கும் என்னை ஆளாக வைக்காதீர்கள், அரசே!''... மதிவாணன் விம்மினான்.

இராசசிம்மன் மதிவாணனை நெருங்கி அவன் கண்களைத் துடைத்து, கண்ணீரால் ஈரமான அந்தக் கரத்தால் அவன் முதுகைத் தடவி, ''அண்ணா, நீங்கள் அழலாமா? அழவேண்டியவன் நானன்றோ? இதுகாறும் உங்களைச் சந்திக்காதிருந்ததற்காக வருந்த வேண்டியவன் நானன்றோ! அரண்மனையில் சகல சுகபோகத்துடன் வாழவேண்டிய நீங்கள், காட்டுப் பகுதியிலே கஞ்சியும் கூழும் உண்டு காலங் கழிப்பதற்குக் கண்ணீர் விட வேண்டியவன் நானன்றோ? அண்ணா, உண்மையில் நீங்கள் என் சகோதரர். பதவிப் பித்து என் உச்சி மண்டையில் ஏறியிருந்தால், நான் அதை மறைத்திருப்பேன். என் அரியணைக்குப் போட்டியாக முளைத்த உம்மை அழித்துவிடப் பயங்கரச் சூழ்ச்சி செய்திருப்பேன்!... ஆனால் என் தந்தையின் மறுபிறவியாக இருக்கும் உங்களை மறந்து, மறைத்து விட மனம் இடங் கொடுக்கவில்லை.

என் தாய் கூறினாள். உங்கள் பிறவியைப்பற்றி. உங்கள் தோற்றத்தைக் கண்டவுடனே, உங்கள் பிறப்பின்



இரகசியத்தை என்னுடைய அருமைத் தாய் கூறிவிட்டாள். அதை அறிந்தவுடன் நான் இங்கு ஓடோடி வந்தேன். என்னை அரசே என்று அழையாதீர்கள். தம்பி என்று ஆசையுடன் கூப்பிடுங்கள். சூழ்ச்சிக்காரர்களும் சதிகாரர்களும் உதட்டில் மட்டும் உறவும், உள்ளத்தில் கள்ளவும் கொண்டிருப்போர்களும் சூழ்ந்த இந்தப் பூமியிலே, என்னைத் தம்பி என்று உள்ளன்புடன் கூப்பிடுங்கள்!'' இராசசிம்மன் மதிவாணன் கரங்களைப் பிடித்துக்கொண்டான். அவன் கரங்களைப் பிரித்து உள்ளங்கையை நோக்கினான். விரல்களை நோக்கினான். ஆகா! உழைத்து உழைத்து அவை உறுதி பெற்றிருக்கின்றன.

மதிவாணன் திடீரென்று ஏற்பட்ட நிகழ்ச்சியால் பேசும் சக்தியிழந்தான். அவனால் இராசசிம்மன் கூறுவது முழுமையையும் நம்ப முடியவில்லை. மன்னர் ஏனோ இப்படிக் கூறிச் சோதிக்கிறார் என எண்ணினான். ஆனால், தான் மதுரை சென்றபோது வழியே கண்ட வீரர்கள் பயபக்தியுடன் வணங்கினரே, ஏன்? அரண்மனை காவலர்கூட ஒருகணம் திகைத்தனரே, ஏன்? அங்கு வந்த வானவன் மாதேவியும் ஒரு கணம் திகைத்து நின்றனளே, ஏன்? -ஒருவேளை அரசர் கூறுவது உண்மையாக இருக்குமோ?

இராசசிம்மன் மதிவாணன் தோள்களைப் பிடித்து அவனைப் பலவந்தமாக உட்கார வைத்து, ''இப்படி நின்றுகொண்டே இருந்தால் நானும் நின்று கொண்டுதான் இருப்பேன்'' என்றுகூறி, ''அண்ணா, நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். யாருமே நம்பமாட்டார்கள். புராணக்கதைபோல் இருக்கிறதல்லவா? ஆனால் என் தாய் பொய் சொல்ல மாட்டார்கள்; எனும் முதல் அடிப்படைதான் எனக்கு ஆதாரம். அவர்கள் கூறியதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் பொய் சொல்வேனா? பிறகாவது நீங்கள் நம்புங்கள்!'' என்றான்.

மதிவாணன் பிறந்த கதையும் வளர்ந்த கதையையும் வானவன் மாதேவி கூறியதுபோன்று இராசசிம்மன் சிறிதும் மாற்றாமல் கூறிவந்தான்.

இராசசிம்மன் கூறிவரும்போது, மதிவாணன் முகத்தில் பலவித உணர்ச்சிகள் எழுந்தன. சோகமும், தாபமும், விருப்பும், வெறுப்பும் மாறி மாறி வந்தன.

இராசசிம்மனுக்கும், மதிவாணனுக்கும் நடந்த உரையாடலை மறைந்திருந்து கேட்டுவந்த மலர்க்கொடிக்கும் பரபரப்பு அதிகமாகியது. தன் இதயங் கவர்ந்தவர், அரசகுமாரர் எனும் செய்தியை அறிந்தபோது, அவள் இந்த மண்ணுலகில் இல்லாதது போன்ற உணர்ச்சியை அடைந்தாள்.

ஆனால், அந்தப் பேதை பெண், தான் கேட்ட செய்தியை ஒரு நொடியில் தன் தந்தையிடம் கூறி மகிழ விரைந்தாள். அதனால் மகிழ்ச்சியா உதயமாயிற்று?

## 8

தன் தாய் தன்னிடம் கூறியவற்றை ஒன்றுவிடாமல் இராசசிம்மன் மதிவாணனிடம் கூறி முடித்தவுடன் மதிவாணன் பெருமூச்சுவிட்டான். அரசர் தன்னை சோதனை செய்யவில்லை; உண்மையைத்தான் கூறுகிறார். என்றுணர்ந்தான். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. என்ன பேசுவதென்றும் புரியவில்லை. உணர்ச்சி மிகுதியால் நெஞ்சு தழுதழுத்தது. 'தம்பி' என்று இராசசிம்மனை அணைத்து மகிழவேண்டும் போன்றிருந்தது.



உற்றார் உறவினரின்றி, உறவுமுறை கூறி அழைப்பதற்கு ஒருவரில்லாதிருந்த தனக்கு ஒருதம்பி-சாதாரணத் தம்பி அல்லன், மன்னன்! பாண்டிய நாட்டு மாமன்னன் என் தம்பி! அவனுக்கு 'ஹோஹோ' என்று சிரிக்க வேண்டும் போலிருந்தது. மன்னரைத் 'தம்பி' என்று அழைப்பது எவ்வாறு? விவரம் தெரிந்த பொழுதிலிருந்து மன்னராக உள்ளத்தில் உருவகப்படுத்தியவரைத் திடீரெனத் தம்பி என எப்படி அழைப்பது? ஒரு வயதோ இரண்டு வயதுகளோ வித்தியாசம் இருக்கலாம். அதனால் தம்பி என்று அழைக்க முடியுமா?

மதிவாணன் இப்போது இராசசிம்மனின் கரங்களைப் பிடித்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

இராசசிம்மன் எழுந்து நின்றான். "அன்பு நிறைந்த மூத்தவரே! இதுவரை உங்களை நான் சந்திக்காது இருந்தது குறித்து வருத்தப்படக் கூடாது. மதுரையின் மகுடம் உங்களுக்குத்தான் உரியது. உடனே என்னோடு வாருங்கள். நாம் இருவரும் பொது விரோதியான சோழர்களை முறியடிப்போம். ஓட ஓட விரட்டுவோம். வெற்றிக் கொடியை நாட்டியவுடன் உங்களை மதுரை அரியணையில் அமர்த்துவேன். பிறகு தஞ்சை வரை அவர்களை ஓட்டிச் செல்லுவோம். தஞ்சை கொண்ட பாண்டியன் என்ற புகழடைவோம். எனக்கு வேண்டுமானால் தஞ்சையில் மகுடாபிஷேகம் செய்து வையுங்கள்" என்றான்.

மதிவாணனுக்கு இந்த வார்த்தை பிடிக்கவில்லை. சற்றுக் கோபமான குரலில், "மதுரையின் மகுடமா? முடியவே முடியாது. ஒருக்காலும் முடியாது. நாட்டில் குழப்பம் ஏற்பட வேண்டும் என்பது உங்கள் எண்ணமா? தங்களை இதுவரை அரசராக மதித்து மக்கள் மகிழ்ந்திருப்பது போக, நானொருவன் இடையில் முளைத்து, நாட்டில் இருவிதக்

கட்சிகளைத் தோற்றுவிக்க வேண்டுமா? நான் தங்கள் அண்ணனாக இருக்கலாம்; அதற்காக அரசுரிமை எனக்கு வந்துவிடாது. நம் தந்தையின் ஒரு கண நோக்கவறு என்னை மன்னராக்கிவிட முடியாது. அரச குடும்பத்தில் பிறக்காத சாதாரண குடிமகள் வயிற்றில் பிறந்த நான் அரசனாகி விட முடியாது. கருணை கூர்ந்து பொருத்தருளுங்கள். நடந்தவற்றை மறந்துவிடுங்கள். எனக்கு அரியணை ஆசையை ஊட்டாதீர்கள். இங்கிருந்து போய்விடுங்கள். ஆபத்து நெருங்கும் இந்த வேளையில் மாற்றுடையில் இப்படி அலைவது சரியன்று. இந்தச் செய்தியையும் வேறு எவர் காதிலும் விழுமாறு கூறிவிடப் போகிறீர்கள். வெளி விரோதியை விரட்டி விடலாம். உள் விரோதியை அடக்குவது எளிதன்று. போய்விடுங்கள்!'' என்று மதிவாணன் கண்கலங்கக் கேட்டுக் கொண்டான்.

''அண்ணா உங்களைப் போன்று வேறு எவரையாவது ஈரேழுகில் காண இயலுமா? தங்களுக்குச் சேர வேண்டிய உரிமையை வேண்டாம் என்று தள்ளும் உயர் குணமுடையவரைக் காணமுடியுமா?'' என்றான் இராசசிம்மன்.

'ஏன் முடியாது...? இதோ, நீங்கள் இருக்கிறீர்களே! எங்கோ அலைந்து திரிந்து கிடக்கும் என்னை உங்கள் அண்ணன் எனக் கண்டு பிடித்தீர்கள். அப்படித்தான் கண்டுபிடித்தீர்களே, நான் அந்த இரகசியம் அறியாதவாறு என்னைப் பாதாளச் சிறையில் தள்ளி இருக்கலாமே! அப்படியில்லாவிடினும் பாண்டிய மகுடத்தைத் தருகிறேன் என்றாவது கூறாமலிருக்கலாமே. உங்களைவிடத் தியாகசீலர் வேறு எவரை ஈரேழுலகில் காண இயலும்?...''

மதிவாணன் கூறியவற்றைக் கேட்கும்போது இராசசிம்மன் கண்கள் கலங்கின. கலங்கி அறியா அம்



மாவீரனின் கண்கள் கலங்கின. ''அண்ணா!'' என்று மதிவாணனைச் சேர்த்து அணைத்தவாறு, என் தாய் உங்களைத் தவறாக எடை போட்டுவிட்டாள். உங்களிடம் மிக எச்சரிக்கையாக இருக்கச் சொன்னாள். நாட்டை ஆளும் உரிமை உங்களுக்கும் உண்டென்பதை நீங்கள் அறிந்தால் என்னை எதிர்த்துக் கலகம் செய்வீர்கள் என்று கூறினாள். ஆனால், உங்களிடமிருந்து எந்தவிதமான ஆசையுணர்ச்சியையும் இதுவரை நான் எதிர்பார்க்க முடியவில்லையே?'' என்றான்.

''அரசே!...'' என்றான் மதிவாணன்.

''என்னை நீங்கள் அரசே என அழைக்காமல் தம்பி என்றழைக்கக்கூடாதா?''

''உறவு என்பது அவ்வளவு எளிதில் மாற்றிக் கொள்ளக் கூடியதன்றே.''

''மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிடில் என் மனம் வேதனைப்படும். அதே சிந்தனையில் வேறு செயல் ஏதும் புரியாது இருந்து விடுவேன். நீங்கள் இங்கு வடஎல்லையில் இருக்க வேண்டாம். மதுரைக்கு என்னுடன் வாருங்கள். சேனைத் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்! வட எல்லைக்கு வேறு ஒருவரை நியமிப்போம்?''

''அது சரியன்று நான் இங்கிருந்து நகரக்கூடாது. முன் திட்டப்படியே இங்கிருந்து பதினாயிரம் வீரர்களை அனுப்புங்கள். அவர்களைக் கொண்டு சோழியப் படைகளை முன்னேற முடியாது அடிக்கிறேன்.''

''அண்ணா! பாண்டிய நாட்டின் மீது உமக்குள்ள பற்று கண்டு வியக்கிறேன். போர் முடியும் வரைத்தான் நான் மன்னர் என்பது நினைவிருக்கட்டும். அதற்குப் பிறகு வாகை சூடிய

வண்ணம் அரியணையில் அமர வேண்டியவர்கள் நீங்கள்! அந்த என் ஆசையையாவது நிறைவேற்றுவீர்களா?''

''அரசே! அதைப் பற்றி இப்போது என்ன? நான் ஒரே ஒரு சலுகையைக் கேட்கிறேன். அதைத் தாங்கள் செய்தால், நானே மன்னனான மகிழ்ச்சியுண்டு.''

''சலுகையா? கட்டளையிடுங்கள், நொடியில் நிறைவேற்றுகிறேன்!''

''இப்போதுதான் என் நினைவுக்கு வருகிறது. நான் சிறுவனாக இருந்தபோது என்னை ஒருவர் சோறு போட்டு வளர்த்து வந்தார். அவர் தன்னை என் தாயின் சகோதரர் என்று கூறிக்கொண்டது நினைவிருக்கிறது. ஒருநாள் அவரைத் திடீரென அரசாங்கக் காவலர்கள் வந்து பிடித்துக்கொண்டு போயினர். அவரை ஒரு வழிப்பறிக் கொள்ளை வழக்கில் சம்பந்தப்படுத்திக் குற்றஞ்சாட்டி சிறையிலடைத்தனர். அவரை என்னிடமிருந்து பிரித்தபிறகு, நான் சில நாள்கள் சோறு தண்ணீரின்றித் திண்டாடினேன். நாங்கள் வாழ்ந்த இடத்தருகே வெகு தூரத்துக்கு வீடே கிடையாது. பிறகு நடந்து வந்து அருகிலுள்ள நகரத்தை அடைந்தேன். அது வேறு கதை. பிறகு நான் அவரை மீண்டும் இப்போது காண வேண்டும் போலிருக்கிறது. அவரை விடுதலை செய்ய முடியுமானால் நல்லது. இந்தச் சலுகையைக் கேட்பதற்கே எனக்குக் கூசுகிறது!.. ஆனால் உயிர் கொடுத்துக் காப்பாற்றியவரை மறப்பது வீரனுக்கு அழகன்றே!'' என்று மதிவாணன் கூறினான்.

இராசசிம்மன் மெல்ல நகைத்து, ''அண்ணா, என்னைக் கேட்பானேன்? நீங்கள் உத்தரவு போடலாமே, உங்கள் மாமனை நாளையே விடுதலை செய்து விடுகிறேன். நீங்கள் மதுரைக்கு எப்போது வருகிறீர்கள்?'' என்று கேட்டான்.



மதிவாணன் முகத்தில் இப்போது மகிழ்ச்சி நிறைந்தது. ''வெற்றி முழக்கம் கேட்கும்போது வருவேன்!'' என்றான்.

இராசசிம்மன் மதிவாணனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான். அவன் புறப்படு முன்னர், ''நீங்கள் கூறிய செய்தி இன்னும் சிறிது காலத்திற்கு எவருக்கும் தெரியாமல் இருத்தல் நலம்'' என்று மதிவாணன் கேட்டுக் கொண்டான்.

இராசசிம்மன் காவல் கூடத்திலிருந்தும் விரைந்து இறங்கி வந்து பரிமீதேறிப் பறந்தான். அங்கு அரசர் வந்ததோ சென்றதோ எவருக்கும் தெரியாது; ஆனால் மலர்க்கொடியின் தந்தை, அரசர் சொல்வதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மதிவாணனுக்கும் மன்னருக்கும் உள்ள உருவ ஒற்றுமையை மனத்தில் எண்ணி ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய்த் தலையை அசைத்தார்.

## 9

மதிவாணன் அரசரின் சகோதரர் என்பதை மறைந்திருந்து கேட்ட மலர்க்கொடி,விரைந்து தந்தையிடம் ஓடினாள். தான் அறிந்த இரகசியத்தை மகிழ்வான செய்தியென நம்பித் தந்தையிடம் எடுத்துக் கூற விரைந்தாள்.

''அப்பா, அப்பா! அவர் சாதாரண படைவீரர் இல்லை, அப்பா!'' என்றாள் மலர்க்கொடி.

''எவர்?''

''அவர்தானப்பா, உன் வருங்கால மருமகன்'' என்று கூறி மலர்க்கொடி முகத்தில் வெட்க ரேகை படரத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''சாதாரண வீரர் அல்ல ரென்றால், மாவீரரா?''

''அதற்கும் மேலே! இந்த நாட்டு அரசரின் சகோதரர்.''

''ஓ!''

''ஆமாம்; அரசரே அங்கு வந்திருக்கிறார். அப்பா அவர் கூறுவதற்கு முன்னமே அரசரும் இவரும் ஒரே உருவ ஒற்றுமையுடனிருப்பதைக் கண்டேன்.''

''அரசர் வந்திருக்கிறாரா?''

''ஆமாம்.''

மதிவாணனுக்கும் மாறாக மற்றொருவர் இருப்பதையும் அவர் பாண்டிய மன்னர் என்பதையும் அறிந்த மலர்க்கொடி அந்த நற்செய்தியை உடனே ஓடிச் சென்று தந்தையிடம், தெரிவித்துவிட்டு மீண்டும் ஓடோடிக் காவல் கூடம் வந்தடைந்தாள். பாண்டிய மன்னர் வந்திருப்பதறிந்து அவள் தந்தையும் அவளறியாமல் பின் தொடர்ந்து வந்து மறைந்திருந்தார். பிறகு வீடடைந்தும் ஏதும் தெரியாது போலிருந்த தந்தையிடம், மலர்க்கொடி தான் மறைந்திருந்து கேட்டவற்றைக் கூறினாள். அவர் அப்போது ஏதும் பேசவில்லை. மகளுக்குத் தெரியாமல் தான் கேட்டறிந்த வற்றைக் கூறாத அவர் மனம் பெரும் சிந்தனையி லாழ்ந்திருந்தது. மதிவாணன் இராசசிம்மனின் சகோதரன். இதைக் கொண்டு நாம் தகுந்தவற்றைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். மறுநாள் மலர்க்கொடியிடம் சொன்னார்:

''மகளே, நீ பாக்கியசாலி. பேரரசரின் சகோதரனைக் காதலிக்கிறாய். அப்போதே எனக்குத் தெரியும். மதிவாணன் சாதாரணமானவனல்லன் என்று. அதனால்தான் உன் திருமணத்தைச் சோழ நாட்டிலே நடத்துவதாகக் கூறினேன். அப்போது நீ நகைத்தாய். அது நிச்சயம் நடக்கும்.''



''சோழ நாட்டிலா? பாண்டிய நாட்டரசரின் சகோதரருக்குச் சோழ நாட்டில் திருமணமா?''

''ஆம்; உன் உதவியிருந்தால்!''

''என் உதவியா?'' மலர்க்கொடி கலகலவென நகைத்தாள்.

''மணப்பெண் நான்தானே, என் உதவி எதற்கு?''

''உன் உதவி பெரிதும் தேவை. உன் திருமணத்திற்குத் தேவை. அதற்கு முன்னர் பரகேசரி பராந்தக மன்னருக்கு உன் உதவி மிக மிகத்தேவை. நீ உதவி செய்தாய் என்று சோழ அரசரிடம் கூறுவேன். பாண்டிய மன்னரைச் சிறைப்பிடிக்க, நீ பெரிதும் உதவி செய்தாய் என்று அரசரிடம் கூறுவேன். மன்னர் மிக மகிழ்வார்!''

மலர்க்கொடிக்குப் புரிந்துவிட்டது. தன்னைக் கொண்டு பாண்டிய நாட்டரசரைச் சிறைப் பிடிக்கத் தன் தந்தை திட்டமிடுகிறார். இவர் எதற்கு இந்தக் காரியங்களில் அதிகச் சிரத்தைக் காட்டுகிறார். இவர் சோழ நாட்டு ஒற்றரா? மலர்க்கொடிக்கு ஒன்றும் புரியவில்லை. தானறிந்தவற்றை ஏன் சொன்னோம் எனத் துடித்தாள் அவள்.

''மலர்க்கொடி, என்ன சொல்கிறாய்? உன் தந்தைக்கு நல்ல பெயர் கிடைக்க நான் சொல்வதைச் செய்யமாட்டாயா?'' என்று அவர் கேட்டார்.

நேரே மறுமொழி கூறாத மலர்க்கொடி, ''அப்பா! நாம் இந்தக் கிராமத்தில் எதற்கப்பா இவ்வளவு நாள் தங்கியிருந்தோம்?'' என்று கேட்டாள்.

''அதைப் பற்றி இப்போது என்னம்மா கேள்வி? வெகு விரைவில் நான் கூறுவதை நீ செய்யவேண்டும்.''

''அப்பா! நீங்கள் இதைச் செய்யச் சொல்வதைவிட என்னை உங்கள் கைகளாலேயே கொன்று விடலாம். மன்னரைப் பிடித்துக் கொடுக்க நானா அகப்பட்டேன்? சோழ மன்னன் ஒரு பெண்ணின் உதவியை நாடுமளவுக்குப் பயந்தவரா? அவர் வீரம் எங்கே சென்றது? அவர் படைப்பலம் எங்கே சென்றது? அவரது ஒற்றர் படைகள் எங்கே சென்றன? என்னால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது!''

மலர்க்கொடியின் கண்டிப்பான பேச்சு அவள் தந்தையைத் திகைக்க வைத்தது. தன் மகளின் உதவிகொண்டு மாபெரும் செயலைச் சாதித்து விடலாம் என்றெண்ணிய அவர் எண்ணம் ஈடேறாது போலிருந்தது. நயத்தாலும், பயத்தாலும் அவளிடமிருந்து காரியத்தைச் சாதிக்க வேண்டும். ''அம்மா மலர்க்கொடி! உன் நன்மைக்காகச் சொல்கிறேன். அதற்காக வேனும், நீ உதவக் கூடாதா?''

''என் நன்மை இதிலென்ன இருக்கிறதப்பா? பாண்டிய அரசரையும், அவரது சகோதரரையும் சோழர்களிடம் பிடித்துத் தருவதால் எனக்கென்ன நன்மை?''

'நன்மை இருக்கிறது. உன் காதலருக்குப் பாண்டிய சிங்காதனத்தைப் பெற்றுத் தருவேன். மதிவாணனுக்கு இந்த நாட்டில் உரிமை இருக்கிறது.''

''வேண்டாமப்பா, ஒருவரைப் பலிகொடுத்து மற்றொருவர் பயன்பெற வேண்டாம்.''

''உலகில் அது சகஜம், மகளே! ஒருவர் வாழவேண்டுமானால், மற்றவர் வீழவேண்டும்.''

''நான் வாழ விரும்பவில்லை!''

''உன் தந்தையின் நலனுக்காகவேனும், நீ உதவக்கூடாதா? இவ்வளவு நாள் சோழ மன்னரின் உப்பைத்



தின்றுவரும் நான், செஞ்சோற்றுக் கடன் கழிக்க உதவக் கூடாதா?''

''நீங்கள் அந்தப் பணியை எடுத்ததே தவறப்பா. சோழநாட்டு ஒற்றராக இங்கு வந்திருக்கிறீர்கள் என நான் முன்பே அறிந்திருந்தால், நான் உங்களிடம் எதும் கூறியிருக்க மாட்டேன்.''

''மலர்க்கொடி, நீ நன்றாக யோசனை செய்து பார். உனக்கு இந்தக் காரியம் கடினமன்று. உன் மீதுள்ள அளவற்ற ஆசையால் மதிவாணன் உன் சொற்படி நடப்பான். அத்துடன் அவனுக்குப் பட்டத்துரிமையும் கிடைக்கப்போகிறது. இதை அவனிடம் சொல் மகளே, சொல். நீ எனக்கு உதவாவிடில் உன் தந்தை தலைநிமிர்ந்து வாழமுடியாது. உளவு தெரிந்தும் அதைக் கூறாத குற்றத்திற்காக என்னைச் சிறையில் தள்ளிவிடுவார்கள். நான் சிறைக்குச் சென்றால், நீ அநாதையாக வாழ வேண்டும்... பெற்ற தந்தை வாட, நீ சுகமாக வாழ விரும்புவாயா, மகளே?''

மலர்க்கொடியின் தந்தை இப்படிக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். மலர்க்கொடி வெகுநேரம் திக்பிரமை பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள். பிறகு மதிவாணனுக்கு உணவு கொண்டு சென்றாள். அவள் முகம் வாடி இருந்தது. அவளது முகவாட்டம் குறித்து மதிவாணன் கேட்டான்.

அவள் என்னவென்று கூறுவாள்? கலகலப்பாக இருப்பது போன்று நடித்துவிட்டு வந்துவிட்டாள். மதிவாணனோ தன்னைப் பற்றி மலர்க்கொடியிடம் கூறத் துடித்தான். தான் சாதாரணப் போர் வீரனல்லனென்றும், அரசரின் சகோதரன் என்றும் மலர்க்கொடியிடம் கூறவேண்டும்

என விரும்பினான். மலர்க்கொடியோ தந்தை கூறியவற்றை அவனிடம் கூறத் துடித்தாள்.

மறுநாள் மலர்க்கொடி வந்தாள். அதே முகவாட்டம். "மலர்க்கொடி, இரண்டு நாள்களாக உன் முகத்தில் கவலைக் கோடுகளைக் காண்கிறேன். புது மலர்க்கான மணம் உன் முகத்தில் வீசவில்லையே? மீண்டும் வெப்பம் கண்டு வாடும் மலர் போன்றிருக்கிறாயே? உன் முகவாட்டம் போக்க நான் ஒரு நற்செய்தி கூறப்போகிறேன். எங்கே கொஞ்சம் சிரித்து முகவாட்டத்தை மாற்றிக்கொள்!" என்று கூறிய மதிவாணன் மெல்ல அவளது முகத்தைத் தன் பக்கம் திருப்பினான்.

மலர்க்கொடி உள்ளத்துப் பாரத்தின் அழுத்தத்தினின்றும் சிறிது விடுபட்டு பெருமூச்சு விட்டாள். முகத்தில் புது நகையை வரவழைத்துக் கொண்டாள்.

"ஊம்... அப்படித்தான், எங்கே, சிறிது சிரி... எப்போதும் மகிழ்வோடு இருக்க வேண்டும். மலர்க்கொடி, உனக்கு இரண்டு நாள்களாகப் புதுச்செய்தி கூறத் துடிக்கிறேன். எவருக்கும் கூறக்கூடாது என்று நானே மன்னரிடம் கட்டளையிட்டிருக்கும் அந்த இரகசியத்தை உனக்குக் கூறப் போகிறேன். மலர்க்கொடி, உன் உள்ளம் வேறு, என் உள்ளம் வேறு என என்னால் பிரித்துப் பார்க்க முடியவில்லையே, அது ஏன்?" மதிவாணன் குதூகலமாகப் பேசினான்.

மலர்க்கொடியின் முகம் வெட்கத்தால் சிவந்தது; அதனுடன் ஒருவித அச்சமும் கலந்தது.

"மலர்க்கொடி, நான் யாரென்று உனக்குத் தெரியுமா?"

மலர்க்கொடி அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். பேசவில்லை. "தெரியுமே, நீங்கள் மதுரை மன்னர்" என்று கூறிவிட அவள் துடித்தாள்.



"மலர்க்கொடி, என்மீது உனக்குக் காதல் அரும்பும்போது நான் சாதாரணக் காவலன். இப்போது நாட்டுக் காவலனின் சகோதரன். நான் காவல்படைத் தலைவனாக இரண்டு நாள்கள் முன்புவரை இருந்தேன். இப்போது நான் இந்நாட்டு மன்னரின் சகோதரன். என் நிலை திடீரென்று உயர்ந்தாலும், உன்வரை அப்படியே நான் உன் இதயச் சிறையில் சிக்குண்டவனே"

மலர்க்கொடி சோழ நாட்டுப் பெண். உள்ளத்தில் களங்கமற்றவள். புன்னை மரத்தில் அமர்ந்த அன்னங்களைப் பார்த்து, சந்திரன்தான் உதயமாகி விட்டானோ என ஆம்பல் மலர்வது போன்று கபடமற்ற இதயம் படைத்தவள்.

அவள் மதிவாணன் சொல் கேட்டுக் குதூகலம் அடையவில்லை. மதிவாணன் அரசகுமாரன் எனும் புதுச் செய்தியால் உளம் பொங்கி மகிழவில்லை. அதற்கு மாறாக, அவள் விம்மினாள். களிப்புக் கூத்தாட வேண்டிய விழிகளில் கண்ணீர் ததும்பியது.

"மலர்க்கொடி, அழுகிறாயா. அல்லது நற்செய்தி கேட்டு ஆனந்தக் கண்ணீர் உகுக்கின்றாயா?"

மலர்க்கொடி விம்மினாள்.

"மலர்க்கொடி, ஏன் அழுகிறாய்? அரசகுமாரனென என் நிலை உயர்ந்தால், என் இதயபீடத்தில் உனக்குள்ள இடம்மாறி விடுமா? அதற்காக வருந்துகிறாயா? நான் என்றும் சாதாரண வீரனே. முழுக் கதையையும் உனக்குக் கூறினால் நீ என்னைப் பற்றிய உண்மையை அறிவாய்!"

"வேண்டாம், நீங்கள் கூறவேண்டாம். எல்லாவற்றையும் நானறிவேன். அப்படி நான் அறிந்ததால் வந்த ஆபத்துத்தான் இந்த முகவாட்டம்!"

''உனக்குத் தெரியுமா, மலர்க்கொடி?''-மதிவாணன் வியப்புடனும் அதிர்ச்சியுடனும் கேட்டான்.

''என்னைப் பொறுத்தருளுங்கள். அன்று இராசசிம்ம சக்கரவர்த்தி இங்கு வந்தார். நீங்களென அவரை நான் தவறாக எண்ணிவிட்டேன்.''

''அதுவா? அவரே சொல்லிவிட்டார். வியந்து நின்ற நீ பயந்து ஓடினாயாம்!''

''நான் ஓடினேன். ஆனால் நீங்கள் திரும்பி வந்தவுடன் உங்களைப் பின்தொடர்ந்து வந்து மறைந்து நின்று கொண்டேன். உங்களுக்கும் அவருக்கும் நடந்த உரையாடலைக் கேட்டேன். உங்கள் பிறவி இரகசியத்தை அறிந்தது எவ்வளவு தவறு என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன். மாபெரும் தவறு செய்துவிட்டு மன வேதனையால் துன்பப்பட்டு உழல்கிறேன்.''

''மலர்க்கொடி, நீ மறைந்து கேட்டதில் என்ன தவறு? இப்போது நான் சொல்ல வந்ததை நீ முன் கூட்டியே அறிந்துவிட்டாய். இரண்டு நாள்களாக நல்ல சேதியை உடனே நான் கூறாமல் மறைத்து வைத்தேன். இரண்டு நாள்களாக அறிந்த செய்தியை நீ என்னிடம் கேட்காமல் அடக்கி வைத்தாய். இருவரும் இதில் சமமே; உள்ளம் இருவருக்கும் ஒன்றே!''

''அடக்கி வைத்திருக்கவில்லை, அன்பே! அத்தகைய உயர் குணம் எனக்கிருக்கவில்லையே! என் தந்தையிடம் அந்த இரகசியத்தை உடனே கூறிவிட்டேன்!''

''உன் தந்தைக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவிருந்திருக்காதே.''



''ஆனந்தமா? ஐயோ...''

''மலர்க்கொடி என்ன சொல்கிறாய்?''

''என்ன சொல்ல இருக்கிறது? பெரும் பிழை செய்து விட்டேன். பெற்ற தந்தை துரோகி என்று எனக்குத் தெரியாது. என் தந்தை சோழ நாட்டு ஒற்றர். ஐயோ! என் தந்தை சோழ நாட்டு ஒற்றர்! அவரிடம் உண்மையைக் கூறியதால் பெரும் ஆபத்தை விலைக்கு வாங்கிவிட்டேன். எனக்கு எந்தவிதத் தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள், ஏற்கிறேன்'' மலர்க்கொடி விம்மினாள்.

மதிவாணன் ஏதும் பேசவில்லை. ''ஒற்றரின் மகள், ஒற்றரின் மகள், ஒற்றரின் மகள்!'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. அப்போது யாரோ படிக்கட்டில் ஏறிவரும் ஓசைகேட்டது.

''மலர்க்கொடி வருந்தாதே நீ உறுதியாய் இரு. ஒருவித ஆபத்தும் வந்துவிடாது. அமைதியாக வீடுசெல். நாளை சந்திப்போம்!'' என்றான்.

அப்போது அங்கே முகமெல்லாம் மீசையும் தாடியும் அடர்ந்து வளர்ந்த முதியவரொருவர் தள்ளாடி வந்து கொண்டிருந்தார். அவர் குதிரை மீதேறி வந்திருக்க வேண்டும். அவரைத் தொடர்ந்து வழிகாட்டிப் பாண்டிய நாட்டு வீரனொருவன் வந்திருப்பது, கீழே நோக்கும்போது தெரிந்தது. குதிரையை மரத்தில் கட்டியிருந்தார்கள்.

# 10

அடர்ந்து வளர்ந்த தாடி மீசையும், தள்ளாடும் நடையும் கொண்ட அந்த முதியவரை உடனே மதிவாணனால் அடையாளங்கொள்ள முடியவில்லை. மலர்க்கொடியும் ஒன்று புரியாமல், அங்கு ஒவ்வொரு நாளும் நடைபெறும் சம்பவங்களைக் கண்டு வியந்து நின்றாள்.

''மதிவாணா, என்னை மறந்து விட்டாயா? என்னை அடையாளம் தெரியவில்லையா? உன்னைத் தோளிலே தூக்கித் திரிந்த அன்பு மாமன் நான். இந்த நாட்டு மாணிக்கம் என்று உன்னை அறிந்து உன்னைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தவன் நான்-'' அவர் முடிக்கவில்லை.

மதிவாணன், ''மாமா'' என்று கூவி அவரை அணைத்துக் கொண்டான். அவரை அவன் சின்னஞ்சிறு வயதிலே சந்தித்ததுதான். மதிவாணனைப் பற்றிய இரகசியம் அறிந்தவர் என்பதால் அவரைக் கடுஞ்சிறையில் தள்ளி விட்டார்கள். இதை நினைத்து மதிவாணன் விம்மினான்.

''மாமா என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களை நான் மறந்துவிடவில்லை. எனக்காக இவ்வளவு காலம் கொடுந்தண்டனை அனுபவித்த தங்களை நான் மறக்க முடியுமா? சிறைவாசம் தங்களை உருமாற்றி விட்டது'' என்றான் மதிவாணன்.

தாய்மாமன் மெல்ல நகைத்தார். ''மதிவாணா, என்னை நீ மறந்து விடவில்லை என்பதை நானறிவேன். மறக்கவும் மாட்டாய் என்பதுமறிவேன். உன் உத்தரவினால் அன்றோ, நான் விடுதலையடைந்தேன். என்னை விடுதலை செய்ய உத்தரவிட்டபோது சிறைச்சாலைக்குச் சற்றுத் தொலைவில் நீ நின்றிருந்தாய். என்னை விடுதலை செய்துவிட்டு விரைந்துவிட்டாய். நான் வெளியே வந்தவுடன் உன்னிடம் என்னைக் காவலர்கள் அழைத்து வந்தார்கள்'' என்று அவர் கூறுவதற்குள் மதிவாணன் பெரிதாய் நகைத்து, ''மாமா, விடுதலை செய்த இடத்தில் நான் இல்லவே இல்லை. பாண்டிய மன்னரிடம் நான் தங்கள் விடுதலை குறித்து வற்புறுத்தினேன், உடனே அதை அவர் நிறைவேற்றியிருக்கிறார். அரசரைப் பார்த்து நானென்று தவறாக நினைத்திருப்பீர்கள்'' என்றான்.



மாமா அவனை உற்று நோக்கினார், ''மதிவாணா, நான் இப்போதுள்ள பாண்டிய குமாரனைப் பார்த்ததில்லை. அவனைப் பார்க்க விரும்பவும் இல்லை. நீயும் பாண்டிய குமாரன்தான். இந்த நாட்டை ஆள உரிமை பெற்றவன்தான். நீ சாதாரண வீரனாக இங்கே திகழ்கிறாய். பராந்தகப் பாண்டியனுக்குப் பிறந்த முதல் மைந்தன் நீ. உனக்குத்தான் இந்த நாட்டுரிமை. நீ இதை அறிவாயா?''

''அறிவேன் மாமா; மன்னரின் சகோதரன் நான் என அறிவேன். பட்டத்துக்கு எனக்கும் உரிமை இருக்கிறதென்பதை நான் அறிவேன்.''

''நீ அறிவாயா? அறிந்துதானா இப்படி மௌனமாயிருக்கிறாய்?''

''மௌனமாயில்லையே, அறிந்ததாலன்றோ தங்கள் விடுதலைக்கு வழி செய்தேன். இல்லாவிடில் தாங்கள் சிறையிலன்றோ வாடியிருக்க வேண்டும்.''

''அவ்வளவுதான் பலனா? மதிவாணா, நீ அடைய வேண்டிய பலன் என் விடுதலையைக் கண்டு களிப்பது மட்டுமன்று; மதுரையிலுள்ள அரியணையிலமர வேண்டும். பரம்பரைப் பாண்டிய மணி மகுடத்தை அணிய வேண்டும். வீரவாளைத் தரிக்க வேண்டும்.''

தாய்மாமன் பேசிக்கொண்டிருக்கும்போதே, மதிவாணன் தன் இரு செவிகளையும் மூடிக் கொண்டான். ''மாமா'' என்று கூவினான். ''எனக்கு வேண்டாம். இந்த நாடு வேண்டாம். மணிமகுடம் வேண்டாம் என்னைக் குழப்பாதீர்கள்.''

''வேண்டாமா? மதிவாணா எனக்குத் தெரியும், பாண்டியர்களின் மகுடம் இருக்குமிடம். முக்கிய நாளில் அணிந்துவிட்டுப் பிறகு நிலவறையில் உள்ள பொக்கிஷப் பெட்டியில் வைத்து விடுவார்கள். நான் அந்த இடத்தைக் காட்டுகிறேன்.''

''மாமா, வெளியே இதைப் பற்றிப் பேசாதீர்கள். இருக்கும் குழப்பம் போதும். நாடு இருக்கும் நிலையில் தாங்கள் வேறு புதுப் பிரச்சனைகளை உண்டாக்கி குழப்பிவிடாதீர்கள். நான்தான் இந்த நாட்டுக்கு உரிய அரசன் என்பதை வெளியில் கூறாதீர்கள் மாமா'' என்றான் மதிவாணன். அவன் குரலில் கண்டிப்பு இருந்தது.

''மதிவாணா உன் முடிவு இதுதானா?'' என்று கேட்டுப்பெருமூச்சு விட்ட அவரை நோக்கி, ''மாமா, சற்று அமைதியடையுங்கள். வந்த களைப்புத் தீர இளைப்பாறுங்கள். நாளைக்கு நாம் விரிவாகப் பேசிக் கொள்வோம்'' என்று கூறி மலர்க்கொடியின் பக்கம் திரும்பி, ''மலர்க்கொடி, என் மாமா மிகப் பசியுடன் வந்திருக்கிறார். அவருக்கு ஏதாவது உண்பதற்குக் கொண்டுவா'' என்றான்.

மாமா, மலர்க்கொடியை ஒருமுறை நோக்கினார். அவள் சென்றவுடன் அவளைப் பற்றி விசாரித்தார். மதிவாணனால் எதையும் மறைக்க முடியவில்லை; மறைக்கவும் விரும்பாதவன். அவன் மலர்க்கொடியைப் பற்றிக் கூறினான். அவள் தந்தையைப் பற்றிக் கூறினான். அவள் தந்தை எவ்விதம் சோழநாட்டு ஒற்றராகப் பணியாற்றி வருகிறார் என்பதைப் பற்றிக் கூறினான்.



மாமா எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். அவர் அப்போது எதும் மதிவாணனிடம் பேசவில்லை. அவரது மூளை வேலை செய்தது. 'மதிவாணனுக்குப் பாண்டிய மகுடம்' எனும் ஒரே நோக்கத்தில் அவர் சிந்தித்தார்.

பொழுது புலர்ந்ததும் அவர் அந்தக் கிராமத்தைச் சுற்றிப் பார்த்து வருவதாகக் கூறிச் சென்றார். அவர் கிராமத்தைச் சுற்றிப் பார்க்கவில்லை. மலர்க்கொடியின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தார்.

மலர்க்கொடி அவரை அடையாளங் கண்டுகொண்டு வரவேற்றாள். தன் தந்தைக்கு அறிமுகம் செய்து வைத்தாள். மலர்க்கொடியின் தந்தைக்கு உற்சாகம் தாங்கவில்லை. அவரை வைத்துக்கொண்டு ஒரே கல்லில் இரண்டு கனிகளை உதிர்க்க எண்ணினார்.

மதிவாணனுக்குள்ள உரிமையை வற்புறுத்திப் பாண்டிய மகுடத்தை அடையக் கிளர்ச்சி செய்யுமாறு கேட்பது; பாண்டியர்ப் படைகளிடையே குழப்பம் விளைவித்து இரண்டாக அதைப் பிரிப்பது; அதே சமயத்தில் சோழர் படைகளைப் பரபரவென முன்னேறச் செய்வது; சோழர்களின் வெற்றிக்குப் பிறகு மதிவாணனைப் பற்றிய முடிவை பராந்தக் சோழரிடம் விட்டுவிடுவது; அவர் ஏதாவது முக்கியப் பதவி தராமலா போகப் போகிறார்.

இந்த எண்ண அடிப்படையிலேயே அவர் மதிவாணனின் மாமனிடம் பேசத் தொடங்கினார். இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு வாக்கில் மதிவாணனின் மாமன், மலர்க்கொடியின் தந்தையிடம் பாண்டியர்களின் மகுடம் எப்போதும் வைக்கப்படும் இடம் தனக்குத் தெரியுமென்றும் கூறிவிட்டார்.

இந்தச் செய்தி பெரும் வரப்பிரசாதம் போல் மலர்க்கொடியின் தந்தைக்குத் தோன்றியது. அதனால் அவனைப் பயன்படுத்தாது விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் மதிவாணனின் உரிமைக்காக உதவுவதுபோல் நடித்துப் பேசலானார்.

''மதிவாணனுடன் என் மகள் பழகும்போது அவன் திறமையை நான் புரிந்துகொண்டேன். அவனிடம் ஏதோ ஒரு சக்தி புதைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.''

''சக்தியா, அவன்தான் இந்தநாட்டின் உண்மை வாரிசு.''

''ஓகோ! உண்மை வாரிசு இங்கே வாட, போலி அங்கே நாடாளுகிறதோ?''

''ஆம்; அதை நீக்கத்தான் நான் வந்தேன்.''

''அப்படியா, என் உதவி முழுமையும் உமக்குத் தருவேன். சோழ மன்னருக்கு உதவுவதாக வாக்களியுங்கள். அவரைக் கொண்டே உங்கள் மதிவாணனுக்குப் பாண்டிய மகுடத்தை அணிவிப்பேன்.''

''என்ன உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன்.''

''வேறென்ன செய்ய வேண்டும்? மதிவாணனைச் சோழர் படைகளுக்கு உதவுமாறு செய்ய வேண்டும்.''

''அது இலேசான காரியமன்று. அவன் ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவன். அவன் மனம் மாற மாட்டானே.''

''மாறுவான். மனமாறச் செய்ய என் மகள் இருக்கிறாள். அவள் அவனை மாற்றி விடுவாள். நீங்களும் பிடிவாதம் பிடிக்க வேண்டும். அவனைச் சம்மதிக்க வைத்தால் நான் பிறகு திட்டங்களைக் கூறுவேன்'' என்றார்.



மதிவாணனின் தாய் மாமன் இச் செய்திகளைக் கேட்டு நிறைந்த உள்ளத்தினராய் மதிவாணனிடம் சென்றார்.

மதிவாணனைக் காவல் கூடத்தில் சந்தித்துவிட்டு, இராசசிம்மன் தாயிடம் விரைந்து சென்றான். மதிவாணனின் உயர்ந்த பண்பைத் தன் தாயிடம் தெரிவிக்க வேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத்தே ததும்பி நின்றது. மதிவாணனை மனம் நிறைந்து விரும்பும் அந்த மங்கை, எப்படி தன்னைக் கண்டு தன் காதலன் என ஏமாந்து விட்டதை அவன் தன் தாயிடம் தெரிவிக்க விரும்பினான்.

ஆனால், தாயிடம், ''மதிவாணனைச் சந்தித்தேன்'' என்ற முதல் வார்த்தையைக் கூறியபோதே அவள் ரசிக்கவில்லை. அவள் மௌனமாயிருந்தாள். சேர நாட்டினின்று வந்திருந்த செய்தியைத் தன் மகனிடம் எடுத்துக் கொடுத்தாள். இராசசிம்மன் அந்த ஓலையை எடுத்துப் படிக்கலானான்.

சேர நாட்டு மன்னர் அவனுடைய தாய் மாமன். பாண்டிய நாட்டிற்கு வரும் ஆபத்து அவர் செவிகளுக்கு எட்டியிருந்தது. உதவியாகப் பெரும் படைகளை அளித்து உதவ அவர் சித்தமாக இருப்பதாக அந்த ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனுடன் தன் மகளையும் இராசசிம்மனுக்கு மணம் புரிவிக்க இசைந்திருப்பதையும் தெரிவித்திருந்தார்.

''தாயே! மாமாவுக்கு இப்போதாவது நம் நினைவு வந்தது, மிக மகிழ்ச்சியே. படைகள் கொடுத்து உதவுவதற்காக அவர் தன் மகளை மணந்து கொள்ளுமாறு கட்டளையிடுகிறாரோ?'' என்றான்.

வானவன் மாதேவி அவனை நிமிர்ந்து நோக்கினாள். அந்தப் பார்வையில் கடுமை கலந்திருந்தது. மகனுடைய மனத்தின் போக்கைக் குறை கூறும் தன்மை இருந்தது.

''இராசசிம்மா!'' என்றாள் தேவி. அந்தக் குரலில் அழுத்தம் இருந்தது. ''இன்னும் நீ குழந்தை இல்லை என்பதை நான் கூறவேண்டுமா? என் சகோதரன் மறந்து இருக்கலாம். ஆனால் இந்தச் சமயத்தில் அவனாக விடுக்கும் அழைப்பை ஏற்காமல் குறும்பாகப் பேசுவது சரியல்ல'' என்று சீறினாள்.

இராசசிம்மன் சிரித்தான். ''தாயே திருமணம்- உதவி இந்த இரண்டும் சம்பந்தப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை!' என்று கண்டிப்பாகக் கூறினான்.

'ஏன், நீ சமாதானமும் விரும்பவில்லை. சோழர்களுடன் மணவினைத் தொடர்பு கொண்டு சமாதானம் செய்து கொள்ளாவிடில். சேரர்களுடன் ஒன்று சேர்ந்து போரிடுவதுதான் ராஜதந்திரம்.''

''சேரர்கள் உதவி வேண்டாம். ஈழத்துப் படைகளின் உதவி போதும்.''

''இராசசிம்மா''-தாயின் குரல் கடுமையாக ஒலித்தது. ''நான் கூறும் ஒவ்வொன்றிற்கும் நீ மீறிப் பேசுகிறாய், மதிவாணன் தொடர்பு வேண்டாம் என்றேன். அவனைச் சந்தித்து இரகசியத்தைக் கூறி வந்திருக்கிறாய். அவன் மாமனை விடுதலை செய்துவிட்டாய். வேற்று நாட்டுப் படைகள் நம் மண்ணை மிதிக்க வேண்டாம் என்றேன். ஈழத்துக்குச் செய்தி அனுப்பி இருக்கிறாய்'' என்று கூவினாள்.

இராசசிம்மன் தாயின் ஆத்திரத்தைக் கண்டு பொறுமை இழந்தான். மதிவாணனைப் பற்றித் தாய் குறிப்பிடுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''தாயே! தாங்கள் கூறுவது ஒவ்வொன்றும் என் கருத்துக்கு மாறாக இருக்கிறது. மதிவாணனை என்னால் மறக்க முடியாது. அதற்கு மாறாக அவனுக்கு மகுடத்தைச்



சூட்டுவேன். வீரவாளை அளிப்பேன். என் சகோதரனை அந்த ஏழைப்பெண் காதலித்திருக்காவிட்டால், அவனுக்குச் சேர மகளை மணம் புரிவிக்க நானே ஏற்பாடுகள் செய்வேன். அண்ணன் இருக்கும்போது தம்பி மணப்பதா? முடியாது? தாயே முடியாது''- இவனும் கூவினான்.

வானவன் மாதேவி எழுந்தாள். சினத்தால் முகம் சிறுத்தது. சீற்றத்தால் உடல் சிலிர்த்தது.

''இராசசிம்மா, உன் போர்முறையும் போக்கும் எனக்குப் பிடிக்கவில்லை. உன் விருப்பப்படியே செய். பிறந்த மண்ணைக் காக்க உனக்கு எப்போதும் உதவக் காத்திருக்கிறேன், நான் வருகிறேன்'' என்று கூறிச் சென்று விட்டாள்.

இராசசிம்மன் தாய் சொல்லும் வேகத்தையும், செல்லும் வேகத்தையும் திசையையும் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக அடிபட்ட வேங்கைபோல், உலவினான், உறுமினான். குழப்பம் கூத்தாட மனம் பலவிதச் சிந்தனைகளில் ஆழ்ந்தது. பிறகு ஏதோ ஒருவித முடிவுக்கு வந்தவனாக ஓர் ஓலையில் மதிவாணனுக்கு ஏதோ எழுதி விரைந்து சென்று அவனிடம் கொடுக்குமாறு ஒரு வீரனுக்குக் கட்டளையிட்டான். பிறகு தாயிருக்குமிடம் விரைந்து சென்றான்.

''தாயே'' என்று அழைத்தவாறு இராசசிம்மன் உள்ளே நுழைந்தான். அவளறிவாள் தன் மகன் சினம் மாறி வருவான் என்று.

''தங்கள் விருப்பப்படியே நான் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன். ஆனால் அதற்கு முன்னர் ஒரு வேண்டுகோள், தாயே!'' என்றான்.

வானவன் மாதேவியின் முகத்தில் அகத்தின் மகிழ்வு தெரிந்தது. அவன் கேட்பது என்ன என்பதற்கு அறிகுறியாகப் புருவத்தை நிமிர்த்தினாள்.

''தாயே! சேர மகளை மணம் புரிந்து தாய் நாட்டைக் காக்க உறுதி பூண்டுவிட்டேன். ஆனால் அதற்கு முன்னர் மதிவாணனுக்கும் மணம் முடிக்க வேண்டும். அண்ணன் இருக்கும்போது தம்பி மணப்பது நியாயமா? அங்கே மதிவாணனுக்கும் அழகிய பெண் ஒருத்தி காத்திருக்கிறாள், மதிவாணனுக்கும் எனக்கும் ஒரே முகூர்த்தத்தில் திருமணத்தை முடித்து விடலாம்'' என்றான்.

மகனுடைய மாறாத மனத்தைக் கண்டு அரசி ஒரு கணம் துணுக்குற்றாள் என்றாலும் விட்டுத்தான் அவனைப் பிடிக்க வேண்டும் எனும் எண்ணத்தில் தலையை அசைத்தாள்.

## 11

மதிவாணனின் தாய் மாமன், மாரப்பனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது மலர்க்கொடி விரைந்து சென்று அங்கு நடப்பதை மதிவாணனிடம் கூறினாள். அவள் விழிகளில் கண்ணீர் ததும்பி நின்றது. பாண்டிய நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பணியில் தன் தந்தை ஈடுபட்டிருப்பது அவளுக்குப் பெருங்கலக்கத்தை ஏற்படுத்தியது. வாட்ட முற்றிருந்த மலர்க்கொடியின் முகத்தைக் கண்டு மதிவாணனும் கலங்கினான்.

''மலர்க்கொடி நீ ஏன் வருந்துகிறாய், உன் தந்தை சோழ நாட்டின் ஒற்றர். ஒற்றர் எனத் தெரிந்தும் அவரைத் தக்கபடி தண்டிக்காமல் நான் இருக்கிறேன். சிறையினின்று



விடுதலையடைந்த என் மாமன் நாட்டிற்குத் துரோகம் செய்கிறார். அவரை விடுதலை செய்யுமாறு மன்னரை வேண்டியவன் நான். அதனால் நான்தான் மிக வேதனையடைய வேண்டும்'' என்றான்.

''நீங்கள் வேதனைப்பட்டால் நான் மட்டும் அமைதியாக இருக்க முடியுமா?'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள். மலர்க்கொடி பிறகு தொடர்ந்து, ''என் தந்தை போக்கு எனக்குக் கூடப் பிடிக்கவில்லை. பாண்டிய நாட்டின் சுந்தரக் கிரீடம் இருக்குமிடத்தை அறிந்து அதைக் கவர்ந்து விடுவதே என் தந்தையின் நோக்கம். உங்கள் மாமனுடன் தோழமை பூண்டதே, அதற்குத்தான் அன்பே'' என்றாள் மலர்க்கொடி.

மதிவாணன் அமைதியாக இருந்தான். தாய் நாட்டைக் காக்கவேண்டும் எனும் நியாய உணர்ச்சி அவனுடலில் ஓடுகிறது. அவனை வளர்த்த தாய் மாமனின் முகம் எதிரே வந்து நிற்கிறது. தன் உயிரையே தன்னிடம் வைத்துவிட்ட மலர்க்கொடியின் தந்தையின் சதித் திட்டங்கள் அவன் எதிரே வந்து நடமாடுகின்றன. மதிவாணன் நெஞ்சில் குழப்பம் கொந்தளித்தது. அன்றாட வேலையை அமைதியுடன் செய்ய அவனால் முடியவில்லை. வீரம் ஒன்றையே துணைகொண்டு கவலை அறியாது வாழ்ந்து வந்த அவனுக்கு இந்த வேதனையெல்லாம் எதற்கு? அங்கே இராசசிம்மன் பட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துகிறான். இங்கே நாட்டுத் துரோகிகள் சதி செய்கிறார்கள். இவ்வளவையும் எப்படித் தீர்ப்பது எனும் கவலை அவனைச் சூழ்ந்து கொண்டது.

மலர்க்கொடி கேட்டாள்: 'ஏன் இப்படிக் கல்லாய்ச் சமைந்து விட்டீர்கள்? என்னால் உங்களுக்கு வேதனை...'' அவள் விழிகள் கண்ணீரை அருவியாய்ப் பெருக்கின. அவள் எழுந்து நின்றாள்.

''அன்பே, தங்களை ஒன்று கேட்கிறேன். உங்களுடைய வேதனையெல்லாம் மாறிவிடும். எப்போதும் போல் தாங்கள் அமைதியாய் இருக்கலாம். இந்த நாட்டின் மன்னராகலாம். தங்களுக்கு கிடைக்க இருக்கும் உயர்ந்த பதவிக்கு நான் இருப்பது இடையூறாக இருக்கும்; அதனால் அன்பே! என்னை மறந்து விடுங்கள்...'' என்று கூறினாள். அதைக் கூறிவிட்டு முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

மதிவாணன் குழப்பம் இன்னும் அதிகமாகியது. தாய் நாட்டுக்கு அடுத்தபடியாக அவன் மலர்க்கொடியிடமே தன் உயிரையே வைத்திருந்தான். மலர்க்கொடியின் கண்ணீர் அவனுக்குக் கலக்கத்தை அளித்தது.

''மலர்க்கொடி, என்ன கூறினாய்? உன்னை மறப்பதா? உன்னை மறந்து எனக்கு இந்த நாடு எதற்கு? என் உள்ளத்தை உன்னால் இன்னும் புரிந்துகொள்ள இயலவில்லையே. எனக்கு இந்த நாடு வேண்டாம். பரம்பரை அரசகுடியில் வந்த இராசசிம்மனுக்குப் பட்டமில்லாமல், நான் அதை அடைவேனா? ஒருநாளும் இல்லை. நான் நினைக்கிறேன். இந்த இடத்தில் இருந்தால்தானே இவ்வளவு வேதனைகளும்? நாம் எங்காவது கண்காணாத இடத்திற்குச் சென்று விடுவோம், மலர்க்கொடி. நீயும் கண்ணீர் சிந்த வேண்டாம். நானும் கலங்க மாட்டேன்..'' என்றான் மதிவாணன்.

''எங்காவது போய் விடுவதா? நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? ஒருநாளும் நான் அதற்கு ஒப்பமாட்டேன். விரோதிகள் தலைவாசலில் நிற்கும்போது, கோழைபோல் ஓடுவது சரியன்று, அத்தான்'' என்று வீரமாகப் பேசினாள் மலர்க்கொடி.



மதிவாணனும் தான் அவசரத்தில் ஏதேதோ கூறிவிட்டதை எண்ணி வெட்கி அதற்குச் சமாதானம் கூறுவதுபோல், ''கோழையாக நான் வாழ விரும்பமாட்டேன். புறமுதுகிட்டு ஓடும் நிலை என்றாவது ஏற்பட்டால், அன்றே நான் உயிரை விட்டுவிடுவேன். ஆனால், உனக்கு வருத்தம் தரும் நிலை ஏற்பட்டு விடக்கூடாதே என்ற கவலைதான் எனக்கிருக்கிறது. காதலா, கடமையா என்ற கேள்வி என்னை வாட்டுகிறது'' என்றான்.

''காதலா? கடமைக்கப்புறம்தான் காதல். அன்பே, தாய்நாட்டின் விடுதலைதான் உங்களுக்கு முதன்மையாயிருக்க வேண்டும். உங்களை முதலில் வீரராக நான் கண்டேன். தாங்கள் அரசகுமாரர் எனும் செய்தி கேட்டுப் பெருவகை அடைந்தேன். அந்தப் பெருமையெல்லாம் கடைசியில் வீணாகச் செய்யாதீர்கள் அத்தான். அதனால்தான் நான் என்னை மறந்துவிடுங்கள் என்று கூறினேன். எனக்காகத் தாய்த்திரு நாட்டை மறந்துவிடாதீர்கள்'' என்றாள்.

படிக்கட்டுக்களில் யாரோ ஏறிவரும் காலடி ஓசை கேட்டது. மலர்க்கொடி சட்டெனப் பேச்சை நிறுத்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள். மதிவாணன் ஏதோ கூற வாயெடுத்தான். அவனுடைய மாமன் எதிரே வந்து நின்றார்.

மதிவாணனிடம் எதையும் மறைக்க அவர் விரும்பவில்லை. தான் மலர்க்கொடியின் தந்தை மாரப்பனிடம் சென்று பேசியவற்றை அவர் ஒன்றுவிடாமல் தெரிவித்தார். மதிவாணன் ஏதும் கூறாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''மதிவாணா, அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மாரப்பன் வேண்டிய உதவிகளைச் செய்வதாக வாக்களித்திருக்கிறார்...'' என்று கூறினார்.

மதிவாணனுக்கு நகைப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. பிறகு குரலில் மெல்ல கடுமையை வரவழைத்துக்கொண்டு கேட்டான்: ''மாமா, அவரால் என்ன உதவிகள் செய்ய இயலும் என எண்ணுகிறீர்கள்!''

''உனக்குத் தெரியாதா? இந்த நாட்டிலே பரந்து பரவியிருக்கும் சோழ ஒற்றர்களின் தலைவர் அவர். இந்த நாட்டின்மீது படையெடுக்க வேண்டிய உளவுகளை அவர்தான் அவ்வப்போது சோழ நாட்டிற்குத் தெரிவித்து வருகிறார்.''

''ஓஹோ...''

''அவரை ஒற்றர் என எவராலும் கண்டுகொள்ள முடியாது. நீயும் அறியாமலிருக்க, அவர் எப்படி வேஷம் போட்டிருக்கிறார், பார்த்தாயா?''

''என்ன வேஷம்? அவர் வைத்துக் கொண்டிருக்கும் மீசை பொய்யா? அவர் பல்வரிசை பொய்யா?''

''வேடிக்கைப் பேச்சுக்கு இடமில்லை, மதிவாணா! அவருடைய மகள் மலர்க்கொடிக்கு உன்மீது ஆசை இல்லையா?''

''இருக்கலாம்.''

''அதை அறிந்தும் பருவம் வந்த பெண்ணை இளம் வாலிபனுடன் நெருங்கிப் பழகவிடுகிறாரே ஏன் என்று தெரியுமா?''

''காதலைத் தடுக்கச் சக்தி இல்லாதிருக்கலாம்!''

''அதுதான் இல்லை; தன் மகள் மூலம் உன்னிடமிருந்து உளவறியத்தான். தன் நாட்டிற்காக அவர் மகளைக்கூடத் தியாகம் செய்ய முற்படுகிறார்'' என்றார் தாய்மாமன்.



மதிவாணன் குரலில் இப்போது கடுமை நிறைந்திருந்தது.

''அவர் தன் நாட்டிற்குத் தியாகம் செய்ய விரும்புகிறார். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நீங்கள் பிறந்த மண் அன்றோ இந்தப் பாண்டியநாடு! பாண்டிய நாட்டை அடிமைப்படுத்த எதிரியின் உளவாளியுடன் கூடிப் பேசுகிறீர்.''

''மதிவாணா...''

''எதிரியின் ஒற்றருடன் சேர்ந்து உங்கள் தாய் நாட்டிற்குத் தீராத பழியைச் சேர்க்க விரும்புகிறீர்கள்...?''

''மதிவாணா! அப்படிச் சொல்லாதே. என் தாய்நாட்டை நான் அடிமைப்படுத்த விரும்பவில்லை. உனக்கு நியாயமாகச் சேரவேண்டிய அரசுரிமையைப் பெறுவதற்குத்தான் நான் மாரப்பன் மூலமாகச் சோழர் உதவியை நாடுகிறேன்.''

''சண்டையிட்ட இரண்டு பூனைகள் குரங்கிடம் நியாயம் பெறப்போன கதைதான். சோழர்களின் ஆசைக்கு நீங்கள் நெய் வார்க்கிறீர்கள். இந்த மண்ணில் காலடி எடுத்து வைக்க அவர்களைவிட்டால் பிறகு என்றென்றும் அவர்களை ஓட்ட முடியாது.''

''மதிவாணா, நீ மகா வீரனாக இருக்கலாம், ஆனால் வயதில் இளைஞன். உனக்கு அனுபவம் போதாது. உன் உரிமையைப் பராந்தக சோழர் மதிக்கிறார். நீ உதவி செய்தால் அவர் உனக்கு உதவி செய்வார். உன்னைப் பாண்டிய மன்னராக ஏற்பார்.''

''நான் அவருக்கு என்ன உதவி செய்ய முடியும்?''

''கோட்டையின் இரகசிய வழியைக் கூறவேண்டும். அவர் படையெடுத்து வரும்போது அவருக்கு உதவ வேண்டும்...''

''ஓகோ! அவரை அரியணையில் அமர்த்த வேண்டும். சுந்தர முடியைச் சூட்ட வேண்டும். வீரவாளைக் காணிக்கையாக்க வேண்டும், இல்லையா?''

''ஆம். மதிவாணா.''

''நான் மகுடத்தைக் கண்டதில்லை. வாளைப் பார்த்ததில்லை.''

''எனக்குத் தெரியும் அவை இருக்குமிடம். நிலவறையில் தங்கப் பேழையில் இருக்கிறது.''

''அவருக்கு மகுடத்தை அணிவித்து விட்டால் எனக்கு என்ன பயன்?''

''அப்படிக் கேள். மதுரையில் அவர் பட்டம் சூடிக் கொள்வார். பிறகு தன் இரண்டாவது மகள் அநுபமாவை உனக்கு மணம் செய்துவைப்பார். உனக்கே பாண்டிய நாட்டை உரிமையாக்கிவிட்டுப் போய்விடுவார். நீ, பாண்டிய மன்னன். சோழநாட்டு மருமகப்பிள்ளை. உன் உயர்வு ஒன்றையே மூச்சாகக் கொண்டிருக்கும் என் ஆசையை நீ நிறைவேற்ற மாட்டாயா?''-தாய் மாமன் குரலில் குழைவு இருந்தது.

மாமாவுக்கு நான் அரசராக வேண்டும் என்பதுதான் ஆசை. அதைத்தான் இராசசிம்மன் அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறாரே. அப்படி இருக்கும்போது சோழர் கருணை நமக்கு ஏன் என மதிவாணன் எண்ணினான். இராசசிம்மன் வற்புறுத்தலையும், வாக்குறுதியையும் மாமனிடம் கூறிவிடலாமா என ஒருகணம் எண்ணினான். மாமன் கூறியதைவிடச், சோழ ஒற்றனாகப் பாண்டிய நாட்டில் இருக்கும் மாரப்பனை ஒற்றர் என அறிந்தும், தான் சும்மா விட்டு வைத்திருப்பதிலுள்ள அபாயத்தை எண்ணினான்.



தான் பாண்டிய நாட்டில் இருப்பதால்தானே இவ்வளவு தொல்லைகளும்? வேறு எங்காவது கண்காணாது சென்றுவிட்டால் நல்லது என் எண்ணினான். குழப்பமான நிலை அவனைச் சூழ்ந்துகொண்டது! அந்தக் குழப்பத்திலும் கடமை அவன் எதிரே வந்து கம்பீரமாக நின்றது. கடமை அதுதான். சோழ ஒற்றரான மாரப்பனை உடனே சிறையில் அடைப்பது. தன் மாமனிடமும் கூறாமல் 'விர்'ரென எழுந்து சென்றான்.

சிறிது நேரத்தில் மலர்க்கொடியின் வீட்டைப் பாண்டிய வீரர்கள் சூழ்ந்து கொண்டனர்.

## 12

'வீர நாராயணன்' என்றும் 'குஞ்சரமல்லன்' என்றும் விருதுகள் தாங்கிய பரகேசரி பராந்தக சோழதேவர் தன் எதிரே கடல் போன்று பரந்து நின்ற படைகளை ஒருமுறை கண்ணுற்றார். அவர் அருகே பழுவேட்டரையர் நின்று கொண்டிருந்தார். தூசிப்படை எனப்படும் காலாட்படையின் முப்பிரிவுகளாகப் பிரியும் பாதை அங்குதான் இருந்தது. கொடும்பாளூர் வேளிர் தலைமையில் ஒரு பகுதியும், பழுவேட்டரையர் தலைமையில் ஒரு பிரிவும் அங்கு பிரிந்து இடுக்கிபோல் வளைக்க மதுரையை நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். நாகைப் பட்டினத்திலிருந்து படைகள் நிறைந்த மரக்கலங்களில் ஏறித் தொண்டித் துறையில் இறங்கி மதுரையை நோக்கி ஒரு பகுதியும், இராமேசுவரம் துறையில் ஒரு பகுதியும் இறங்குவதென்பதும் மற்றொரு திட்டம்.

அப்படைகளைப் பராந்தகர் தானே நேரிடையே நடத்திச் செல்லத் திட்டமிட்டிருந்தார். பாய்வேய்ந்த பராந்தகர் என்ற புகழ் பெற அவருக்கு ஆசை. பராந்தகர் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் படைகள் புறப்பட்டுவிடும்.

அப்போது, ஒற்றன் ஒருவன் சேதிகொண்டு வந்தான். அவன் கொண்டுவந்த ஓலையைப் படித்தவுடன், பராந்தகன் முகத்தில் கடுமை நிறைந்தது. ஈழத்துமன்னன் பாண்டியர்க்கு உதவிப் படைகளை அனுப்புகிறான் எனும் செய்தி பராந்தகருக்கு ஆத்திரத்தை விளைவித்தது. அருகே இருந்த பழுவேட்டரையரிடம் ஒற்றன் கொண்டுவந்த ஓலையை நீட்டினார் சோழமன்னர். பழுவேட்டரையர் அதை வாங்கிப் படித்துப் பெருஞ்சிரிப்புடன், "ஈழ மன்னனுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா..." என்றார்.

பராந்தகர் ஒன்றும் பேசவில்லை. அவர் சிந்தனையிலாழ்ந்தார். போர்முறையை மாற்ற வேண்டும் எனும் எண்ணம் ஒரே கணத்தில் உருவாகி விட்டது.

அவர் மெல்லிய குரலில் பழுவேட்டரையரை நோக்கி, "பழுவேட்டரையரே! நல்ல சமயத்துக்கு வந்தது செய்தி. இராமேசுவரம் கடல் துறையில் ஈழத்துப் படைகள் இறங்கியவுடனேயே, அவற்றை நாம் நிர்மூலமாக்க வேண்டும். முதலில் செல்லும் கலங்களில் நீங்கள் படைகளுடன் செல்லுங்கள். இராமேசுவரம் கரையில் இறங்கி மறைந்து காத்திருங்கள். அவர்கள் இறங்கி முன்னேறத் தொடங்கியதும் வளைத்துக் கொள்ளுங்கள். நான் வடபகுதியில் முன்னேறி வருகிறேன்" என்றார்.

பராந்தகரின் திட்டம் பழுவேட்டரையரை வியப்புறச் செய்தது. அதன்படியே சோழர்ப் படைகள் கலங்களில் ஏற



விரைந்தன. புலிக்கொடி பொறித்த சோழர் போர்க் கலங்கள் பாய் விரித்துப் புறப்பட்டன. வீரர்களின் வெற்றிவேல், வீரவேல் கோஷம் அலைகடலின் ஒலியையும் வென்றது.

மதுரையில் பாண்டியர்ப் படைகளின் பேரொலியும் அதற்குச் சளைக்கவில்லை. பாண்டிய வீரர்களின் நிமிர்ந்த தோள்களும் பளபளக்கும் வாள்களும் யுத்த தேவதைக்கு விருந்தளிக்கத் துடித்துக் கொண்டிருந்தன. இராசசிம்மன் யார் வரவையோ எதிர்பார்த்திருப்பதுபோல் காத்திருந்தான். படைகளின் அணிவகுப்பை அறிவிக்கும் பறைகள் ஓசை, கொம்பின்ஒலி அவன் நெஞ்சில் உற்சாகத்தை ஊட்டவில்லை; மதிவாணன் வந்தால் அவனிடம் பொறுப்பை ஒப்படைத்து விடலாம். ஒருவேளை நம்மைவிடச் சிறப்பாக நாட்டை ஆளும் சக்தி அவனுக்கு இருக்கலாம். நம்மைவிடப் போர் முறைகள் அறிந்திருக்கலாம். நம்மைவிடப் பகைவர்களை எதிர்த்துப் போரிடும் வலிமை பெற்றிருக்கலாம்; மதுரை வந்து அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினேன். மதிவாணன் வரவில்லை. ஒருவேளை அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையேல் நான் சொல்வது உறுதி என்று கூறுவேன். பாண்டியர்களின் பரம்பரை மகுடத்தை எடுத்து அவனிடம் அளித்தபிறகு கூடவா, மதிவாணனுக்கு நம்பிக்கை ஏற்படாது? நியாயமான வாரிசுக்குப் பட்டத்தைச் சூட்டாமல் நாம் அனுபவிப்பது நியாயமன்றே. உடனே முதலமைச்சரை அழைப்போம். அவர் எதிரே மதிவாணனிடம் மகுடத்தை அளிப்போம்... இராசசிம்மன் தனக்குத்தானே பேசிக்கொண்டான்.

இராசசிம்மன் மனம் குழம்பியது. அந்த இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலவினான்.

"யாரங்கே?" என்று கைதட்டிப் பணியாளனை அழைத்தான். வந்தவனிடம் உடனே முதலமைச்சரை அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

முதல் அமைச்சர் வந்தார். குழப்பம் நிறைந்த முகமுடைய மன்னரைக் கண்டு அமைச்சர் திடுக்கிட்டார். அவருக்குத் தெரியும். இப்போது நேரிடும் படையெடுப்பினால் பாண்டிய நாட்டுக்குப் பெரும் ஆபத்து நேரவிருக்கிறது என்று... ஆனால் மன்னரின் உற்சாகம் நிறைந்த தோற்றமும், சுறுசுறுப்பும், அவருக்கு அவ்வப்போது ஆறுதலளித்து வந்த மதிவாணன் வந்து சென்றதையோ, அவன் பிறப்பின் பின்புறம் புதைந்திருக்கும் இரகசியத்தையோ அவர் அறியமாட்டார். போர் தலைவாயிலில் நெருங்கி வந்திருக்கும் இந்தச் சமயத்திலே மன்னர் முகத்திலே சோர்வு என்றால் முதலமைச்சர் திடுக்கிடாமலிருப்பாரா? முதலமைச்சரைக் கண்டவுடன் தன் சோர்வு நிறைந்த முகத்தை மாற்ற விரும்பியவனாய், ''அமைச்சரே, பரம்பரை வாளையும், மகுடத்தையும் நிலவறையினின்று கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

அமைச்சர் திடுக்கிட்டார். வாளும் மகுடமுமா? எதற்கு? ''ஆபத்து நெருங்கி நிற்கும் இந்த நேரத்தில், பரம்பரை மகுடத்தை வெளியில் எடுப்பது உசிதமன்று, மன்னவா'' என்றார் அமைச்சர்.

இராசசிம்மன் மெல்ல நகைத்து, ''ஆபத்து மதுரை மாநகருக்கே வந்துவிட்டது என அஞ்சுகிறீர்களா, அமைச்சரே?'' என்று கேட்டான்.

மன்னரின் கேள்வியைக் கேட்டுத் திடுக்கிட்டார் அமைச்சர். மன்னர் தன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டாரா? ''அரசே! மதுரையை ஆபத்து சூழ்ந்துவிடும் என்று நான் கூறவில்லை. தங்கள் வலிமை எதிரே ஆபத்து பொடிப் பொடியாகி விடும். ஆனால் சோழர்களுக்கு இந்த நாட்டைவிட, அற்புத மகுடத்தின் மீதுதான் ஆசை. அதை



அபகரிப்பதிலேயே அவர்கள் கருத்து நிற்கும். அவர்களுடைய ஒற்றர்கள் நாடெங்கிலும் பரவியிருக்கிறார்கள். வெகு எளிதில் மகுடத்தை அபகரித்துச் சென்றுவிட்டால், தீராத அபகீர்த்தி சூழ்ந்து விடுமே என்றுதான் கூறினேன்'' என்றார்.

இராசசிம்மன், கோபக்குரலில், ''ஒற்றர்கள் நிறைந்திருந்தால், அவர்களை ஒழிக்க என்ன திட்டம் தீட்டினீர்கள்?'' என்று கர்ஜித்தான் மன்னன்.

'நம் ஒற்றர் படைகளும் இப்போது தீவிரமாகச் செயல்புரிகின்றனர். வட எல்லையில் சோழர்களுடைய ஒற்றர்களுக்கு நமது வீரர்கள் சிலர் உளவு கூறுவதாக செய்தி கிடைத்திருக்கிறது.''

''வட எல்லையிலா?''

''ஆம் அரசே! நமது படைப்பலம், நமது இரகசிய வழிகள், அனைத்தும் சோழர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக் கின்றன.''

''இருக்காது; வட எல்லையைப் பற்றி இத்தகைய பழி கூறப்படுவதை நான் நம்பமாட்டேன்.''

''அரசே! கோபிக்கக்கூடாது; தாங்கள் சிறிது காலத்திற்கு முன்னர் விடுதலை செய்த பாதாளச் சிறைக் குற்றவாளி ஒருவன் நமக்கு எதிரான செயல் புரிகிறான்...''

''அவரா? மதிவாணனின் தாய் மாமனா? இருக்காது. ஒருகாலும் இருக்காது. அப்படிச் சதி செய்பவராயிருந்தால், மதிவாணனால், இந்நேரம் சிறை செய்யப்பட்டிருப்பார். அமைச்சரே உமக்கு மதிவாணனைத் தெரியுமா? இந்த நாட்டின் நியாயமான வாரிசைப் பற்றி உமக்குத் தெரிந்திருந்தால், நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள்.''

அமைச்சர் இதைக் கேட்டுத் திகைத்தார். நியாயமான வாரிசா? மதிவாணனா? அவன் தாய் மாமனா? ஒன்றும் புரியவில்லை அவருக்கு. திகைத்து நிற்கும் முதலமைச்சரை நோக்கி இராசசிம்மன் கூறினான். ''அமைச்சரே! இந்த நாட்டின் பெரியவரான தங்களுக்குத் தெரியாமலேயே பல காரியங்கள் நடந்திருக்கின்றன. இரகசியம் அம்பலமாகும்போது, வேதனையாகத்தான் இருக்கிறது. நம்ப முடியாதபடிதான் இருக்கிறது. அமைச்சரே என் தந்தைக்கு மற்றொரு குமாரன் உண்டு என்பதையாவது தாங்கள் அறிவீர்களா?''

''தெரியாது'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் அமைச்சர்.

''தெரிந்திருக்க நியாயமில்லைதான். ஆனால் உங்களிடமும் மறைக்கப்பட்டிருப்பதற்காக நான் மிக வருந்துகிறேன். ஆனால் என் தந்தை பொதிகை மலைச் சாரலுக்குச் சென்றதும், அங்கே அழகிய பெண் ஒருத்தியின் மையலில் சிக்கியதையுமாவது தாங்கள் அறிவீர்களா?''

''ஏதோ காற்றுப் போக்கில் கேள்விப்பட்டிருக்கிறேன். அது மிகப் பழைய கதை. உங்கள் தந்தையின் காலத்தில் நடைபெற்ற அந்தச் சம்பவத்தை இப்பொழுது கிளறுவானேன்?''

''அந்தச் சம்பவத்தின் ஒரு பாதியை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். மறுபாதியில்தான் முக்கியம் நிறைந்திருக்கிறது. அவர் காந்தர்வ மணம் புரிந்துகொண்ட பெண், அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். அவன்தான் என் சகோதரன். அவனுக்குத்தானே நியாயமாக இந்த ஆட்சி உரிமை சேரவேண்டும்...''

அமைச்சர் மௌனமாக நின்று கொண்டிருந்தார். இராசசிம்மன் தொடர்ந்து, ''அமைச்சரே அந்தச் சகோதரன்தான் மதிவாணன். அவன்தான் வடஎல்லைக் காவல் பொறுப்பை ஏற்றிருக்கிறான். இந்த நாட்டின் பொறுப்பை ஏற்க விரைவில் வருவான்...'' என்றான்.



அமைச்சர் மெல்ல நகைத்தார். இவ்வளவு பெரிய இரகசியத்தைக் கேட்டு, அவர் பரபரப்படையாதிருப்பது அறிந்து இராசசிம்மனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''வியப்படைகிறீரா, அமைச்சரே! உண்மையில்லாத கற்பனைக் கதை என்று சொல்கிறீர்களோ? இந்தச் சம்பவத்தை அரசியாரே என்னிடம் கூறினார். அதனால்தான் தங்களை அழைத்துவருமாறு கூறினேன். மகுடத்தையும், வாளையும் மதிவாணனிடம் அளித்து விடலாமல்லவா?'' இராசசிம்மனின் குரலில் குழைவு இருந்தது.

அமைச்சர் சிறினார், ''அரசே! யாருடைய சொத்தை எடுத்து யாருக்குக் கொடுப்பது? சாம்ராஜ்யத்தை அடைய நான்தான் வாரிசு என்று ஆயிரம்பேர் உரிமை கொண்டாடுவர். அவர்களுக்கெல்லாம் அஞ்சி நாட்டை ஒப்படைத்து விடமுடியுமா? மதிவாணன் உங்கள் சகோதரன் என்பதற்கு ஆதாரம் எங்கே இருக்கிறது? யாரோ கூறிய கற்பனைக் கதையை உங்கள் தாயார் உண்மையென ஏன் நம்பியிருக்கக்கூடாது?''

''அமைச்சரே! தாங்கள் கூறுவது நன்றன்று. அரசமாதேவியார் பொய் கூறமாட்டார்கள். அதிலும் தன் வயிற்றுலுதித்த திருமகனுக்கு உரிமை கிடைக்காது போகச் செய்யமாட்டார்கள். அதனுடன் உருவ ஒற்றுமை இருக்கிறது...''

''நான் நம்பமாட்டேன். உருவ ஒற்றுமை எப்போதாவது ஏற்பட்டு விடுவதுண்டு. அந்த ஒரு காரணத்துக்காக நாட்டிலே குழப்பம் ஏற்படுத்த முயலுகிறார்கள். அப்படியே அரச

உரிமைக்காக மற்றொருவர் போட்டியிடுகிறார் என்றே வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் விட்டுக் கொடுக்காமல் உரிமைக்காக எழும் புரட்சிக்காரனை நசுக்கிவிட வேண்டுமேயல்லாமல், அவன் கோரிக்கைக்கு இணங்கி விடுவது சரியா?''

''சரிதான்; நான் தர்மத்தைக் கடைபிடிக்க விரும்புகிறேன். எனக்கு நாடு வேண்டுமென்றால், தஞ்சையைப் பிடித்து முடிசூடிக் கொள்வேன்...''

''அரசே! தங்கள் கருத்தை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். உங்கள் இஷ்டப்படி இந்த நாட்டை மாற்றிக் கொடுக்க உங்களுக்கு உரிமை கிடையாது. அது மட்டுமல்லாமல் வட எல்லையில் இருப்பவர்கள் அனைவரும் சோழர்களால் விலைக்கு வாங்கப்பட்டவர்கள். இந்த நாட்டைப் பிடிக்க சோழ மன்னன் செய்திருக்கும் தந்திரம் இது என்றுகூடச் சொல்லலாம். நாட்டுத் துரோகிகளிடம் ஏமாந்துவிடாதீர்கள் அரசே! அப்படி நீங்கள் வற்புறுத்தினாலும் நான் ஒருபோதும் ஒப்பமாட்டேன். தங்கள் எண்ணத்தை எதிர்த்துப் போராடுவேன்'' என்று அமைச்சர் முழங்கினார்.

அப்போது மதிவாணன் அங்கு வந்தான். பரபரப்பு இன்றி அமைதியுடன்தான் வந்தான்.

''உங்கள் நாட்டுப் பற்றை எல்லோரும் மெச்சுவர். ஆனால், தாங்கள் எண்ணுவதுபோல் வட எல்லையில் இருப்பவர் அனைவரையும் ஒற்றர்கள் என எண்ணி விடாதீர்கள். என் பிறப்பின் இரகசியத்தைக் கற்பனைக் கதை என்றும் கூறி விடாதீர்கள். அதற்குப் பராந்தக பாண்டியரின் இந்த மோதிரமே அத்தாட்சி'' என்று கூறியவாறு மதிவாணன் அங்கு நுழைந்தான். அவன் கரங்களில் முத்திரை மோதிரமும் இருந்தது.



இராசசிம்மனும், முதல் அமைச்சரும் எதிர்பாராத அந்த நிகழ்ச்சியால் திடுக்கிட்டனர் என்பது அவர்கள் முகங்களினின்று தெரிந்தது.

அந்த இடத்தில் அந்தச் சமயத்தில் மதிவாணன் நுழைந்தவுடன், இராசசிம்மனுக்கும், அமைச்சருக்கும் வியப்புத் தாங்கவில்லை. இராசசிம்மனுடைய குழப்பம் இன்னும் அதிகமாகியது. அமைச்சர் கூறியவற்றை எல்லாம் மதிவாணன் கேட்டிருந்திருப்பானோ?

முழுமையும் கேட்கவில்லையெனினும் ஓரளவிற்காக வாவது அவன் செவிகளில் விழத்தான் செய்தன. அவன் அங்குக் கூற வேண்டியவற்றைவிட்டு அமைச்சருடன் வாதிட முயன்றான். இராசசிம்மனுக்கு ஆச்சர்யத்திற்குமேல் ஆச்சர்யம் ஏற்பட்டது.

''அமைச்சரே! தாங்கள் கூறியதுபோல் கற்பனைக் கதையை எவரும் சிருஷ்டிக்கவில்லை. அரசியார் கூறியதும் பொய் அன்று. இதோ பாருங்கள்! அமரரான பராந்தக பாண்டியரின் அடையாளச் சின்னம். இதைப் பார்த்த பிறகாவது, தாங்கள் என்னையும் அரச குமாரனென்று நம்புங்கள்'' என்றுகூறி அடையாளச் சின்னத்தை நீட்டினான் மதிவாணன்.

சங்கிலியில் கோத்து அணியவேண்டிய பதக்கம் அது. மீன் சின்னம் அதிலே திகழ்ந்தது. இராசசிம்மன் அதை வாங்கிப் பார்த்தான். அமைச்சர் அதைப் பார்த்தார்.

உண்மைதான். மன்னரின் சின்னம்தான். இது எப்படி மதிவாணனிடம் கிடைத்தது? அமைச்சர் எண்ணினார்.

மதிவாணன் தன்னிடம் இதுவரையில் இருந்த அடையாளச் சின்னத்தைப் பற்றிக் கூறவே இல்லையே!

எல்லாவற்றையும் அறிந்துகொண்டு, ஒன்றும் தெரியாதவன் போல் நடித்தானா? இராசசிம்மனுக்குக் குழம்பியது.

உண்மையில் மதிவாணனுக்கு அந்த அடையாளத்தைப் பற்றி இதற்கு முன்பு ஏதும் தெரியாது. மலர்க்கொடியின் தந்தையை இன்னும் சிறைப்படுத்தாமல் விட்டுவைப்பது பெரும் தவறு என்றுணர்ந்து வீரர்களுடன் அவர் வீட்டைச் சூழ்ந்து கொண்டானன்றோ? மலர்க்கொடி வெளியே ஏற்பட்ட சந்தடியறிந்து, பரபரப்புடன் அங்கு வந்தாள்.

''உன் தந்தை எங்கே?'' மதிவாணன் அதட்டலான குரலில் கேட்டான்.

மலர்க்கொடியின் உடல் சிலிர்த்தது. அன்பொழுகப் பேசும் அதே நாவில் அதிகாரம் தொனிப்பது கண்டு அவளே வியந்தாள். தன் சுழலும் விழிகளால் அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''கேட்டது காதில் விழவில்லையா? உன் தந்தை சோழநாட்டு உளவாளி என்பதை அறிந்து அவரைச் சிறை செய்ய வந்திருக்கிறேன்'' என்று முழங்கினான் மதிவாணன்.

அந்த அதிகாரக் குரல் எதிரே, மலர்க்கொடியின் மெல்லிய சிரிப்பொலி கேலி செய்வது போலிருந்தது.

''ஓகோ! இப்போதுதான் விழித்துக் கொண்டீர்களோ?'' என்று கேட்காமல் கேட்டாள் மலர்க்கொடி.

''மலர்க்கொடி!'' என்று கர்ஜித்தான் மதிவாணன். ''கேலிப் பேச்சுக்கு இப்போது இடமில்லை. உன் தந்தை எங்கே'' என்று கூறிவிட்டு, வீரர்களை நோக்கி, ''ஏன் நிற்கிறீர்கள் உள்ளே சென்று அவரைச் சிறைப்படுத்துங்கள்'' என்றான்.



மலர்க்கொடியின் முகம் மாறியது. அவள் நகர்ந்து வழிவிடுவதுபோல் நின்றாள். உள்ளே சென்று தேடித் திரும்பிய வீரர்கள் கையை விரித்தார்கள்.

மலர்க்கொடி மீண்டும் நகைத்தாள். ''என் தந்தை இந்த எல்லையை விட்டுப் போய் நாலு நாழிகை ஆகிறது'' என்றாள்.

மதிவாணன் உதட்டைக் கடித்துக் கொண்டான். வீரர்களைப் போகுமாறு சைகை காட்டிவிட்டு அந்தத் திண்ணையில் அமர்ந்துகொண்டான்.

''நேற்றிரவு என் தந்தை எங்கோ வெளியே சென்றார். இன்னும் அவர் திரும்பவில்லை. திரும்ப மாட்டார் என்பது தெரியும், என்னையும் வந்துவிடுமாறு அழைத்தார். நான் மறுத்துவிட்டேன்'' என்றாள் மலர்க்கொடி சோகக் குரலில்.

''திடீரென ஏன் அவர் புறப்பட்டுவிட்டார்?'' என்று கேட்டான் மதிவாணன்.

''தங்கள் மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது, பல உண்மைகளை அறிந்தார். அதைச் சோழ மன்னரிடம் கூறுவதற்கு விரைந்திருப்பார்.''

''நீ ஏன் அவருடன் செல்லவில்லை?'' மலர்க்கொடி இதற்கு மறுமொழி கூறவில்லை. விம்மினாள். மழைக்கால மேகம் போன்ற அவள் கண்கள் அவனை, ஏக்கத்துடன் நோக்கின. இந்தக் கேள்வியைக் கேட்பது மதிவாணன்தானா? என்று கேட்டது போலிருந்தது.

''நான் இங்கிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையெனில் கட்டளை இடுங்கள். நான் போய் விடுகிறேன். துரோகி மகளாகப் பிறந்ததற்குத் தண்டனை அனுபவிக்க வேண்டாமா?'' மலர்க்கொடி இதைக் கூறும்போது கண்ணீர்ப் பெருக்கினாள்.

மதிவாணன் இதை எதிர்பார்க்கவில்லை. உளவாளியைப் பிடிக்காது விட்டுவிட்டோமே எனும் ஏமாற்றத்தில் அவன் மலர்க்கொடியை நோக்கி அவ்வாறு கேட்டுவிட்டான். அவன் மனம் இளகியது.

''மலர்க்கொடி! உன் நெஞ்சம் புண்படும்படியான கேள்வியை நான் கேட்டிருந்தால் அது தவறு என உணருகிறேன். கடமையினின்று நான் தவறிவிட்டேனே என நினைக்கும்போது ஆத்திரம் பொங்கியது...'' என்று மலர்க்கொடியின் கரங்களைப் பிடித்தவாறு கூறினான்.

''ஆம்; நீங்கள் மாற்றானின் ஒற்றரைச் சிறை பிடிக்காது விட்டு விட்டீர்கள். தந்தையாயிருந்தால் என்ன? இந்த நாட்டிலிருந்து துரோகம் செய்பவரைச் சிறைசெய்ய நான் உதவித்தானிருக்க வேண்டும்... என் தந்தையைத் தடுத்து நிறுத்த என்னால் முடியவில்லை'' மலர்க்கொடியின் குரலில் சோகம் நிறைந்திருந்தது.

''நீ என்ன செய்வாய், மலர்க்கொடி? உன் வரையில் நீ செய்தது நியாயமே. சோழ நாட்டவள் நீ. பாண்டிய நாட்டிற்கு எந்த விதத்தில் கடமைப்பட்டிருக்கிறாய், சதிகாரரைத் தடுத்து நிறுத்த'' என்று மதிவாணனன் சமாதானப்படுத்த முயன்றான்.

''கடமைப்பட்டிருக்கிறேன். மாபெரும் கடமை எனக்கு. ஒருவேளை நீங்கள் என்னை மறந்துவிடலாம். ஆனால் நான் மறக்க முடியுமா? பாண்டிய மகுடம் இருக்குமிடத்தை உங்கள் மாமன் கூறிவிட்டார். அதைக் கேட்டுத்தான் என் தந்தை சோழ மன்னரிடம் ஓடியிருக்கிறார். இவ்வளவு பெரிய துரோகியின் மகளாய் நானிருப்பதற்கு வெட்கப்படுகிறேன். என்னைச் சிறையிலடையுங்கள். மன்னர் முன்பு என்னைக் கொண்டு நிறுத்துங்கள், சதிகாரரின் மகள் என்று-'' மலர்க்கொடியின் குரலில் வீரம் பொங்கினாலும் துக்கம் தொனித்தது.



மதிவாணன் மலர்க்கொடியின் கண்ணீரைத் துடைத்து, மலர்க்கரத்தின் மெல் விரலைப் பிடித்து கருங்கூந்தலை கோதி, ''சிறையிலடைக்கிறேன்; மன்னர் முன்பு கொண்டு நிறுத்துகிறேன். நான் வரும்வரை இங்கேயே இரு'' என்று கூறிவிட்டுக் காவல் கூடத்திற்கு விரைந்து சென்றான். அவனுக்கு இப்போது தன் மாமன்மீது தாங்கொணா ஆத்திரம் பொங்கியது. அதை வெளிக்குக் காட்டாமல் தான் எண்ணிய காரியமொன்று நிறைவேற வேண்டுமென்பதற்காக முகத்தில் மலர்ச்சியைத் தோற்றுவித்துக் கொண்டான்.

மதிவாணன் மாமன் காவல் கூடத்தில் காத்திருந்தார்.

''மதிவாணா வா; முடிவு செய்துவிட்டாயா? மதுரை சென்று அரசுரிமையைக் கேட்கலாமா?'' என்று கூறி வரவேற்றார் மாமன்.

உள்ளக் குமுறலை அடக்கிக் கொண்ட மதிவாணன், ''மாமா, நான் ஒன்று உங்களைக் கேட்கிறேன். என் தாய்தான் மன்னரைக் காந்தர்வ விவாகம் செய்து கொண்டாள் என்று எப்படிக் கூறமுடியும்? நாளைய தினம் மக்கள் இந்தப் பிரச்னையை எழுப்பினால் என்ன செய்வது?'' என்றான்.

அவன் குரலில் ஏற்பட்ட நயமுணர்ந்த அவர் கடகடவென்று நகைத்து, ''நல்ல கேள்வி கேட்டாய் மதிவாணா. நீ சிறந்த புத்திசாலி. உன் தாயுடன் பாண்டிய மன்னர் தங்கியிருந்தபோது ஒருநாள் அருவியாடும்போது தன் முத்திரை மோதிரத்தை அவள் கரங்களில் அணிவித்தார்.

அந்த மோதிரத்தை நான் மிகவும் கவனத்துடன் எடுத்து வைத்திருக்கிறேன்... பாதாளச் சிறையில் வாழும்போதுகூட நான் மிக பத்திரமாக வைத்திருந்தேன். ஒருமுறை தலைமுண்டாசில் மறைத்தேன். ஒருமுறைக் கடைவாயில்

போட்டு மூடிக்கொண்டு வந்த அன்றே உன்னிடம் கொடுக்க நினைத்தேன், மறந்தேன். இந்தா இதை அணிந்துகொள்'' என்று கூறி மோதிரத்தை மதிவாணனிடம் அளித்தார்.

அதை வாங்கி விரலில் அணிந்து கொண்ட மதிவாணன் மாமனை நோக்கி, ''மாமா, என் உயர்வு கருதித் தாங்கள் உயிர்விடத் துணிகிறீர்கள். ஆனால் பெரும் தவறு ஒன்றை மட்டும் செய்துவிட்டீர்கள். நம் மகுடம் இருக்குமிடத்தை மலர்க்கொடியின் தந்தையிடம் கூறிவிட்டீர்களே, அது நியாயமா?'' என்றான்.

''கூறினால் என்ன? அவர் நமக்கு உதவுவதாக வாக்களித்தார்.''

''அவர் உதவியா? சோழர்கள் உதவியா?''

''ஆம்; மகுடத்தை நாம் அளித்தால், நமக்கு மண்ணின் உரிமையைத் தருகிறாராம்...''

''ஓகோ!''

''அதனால்தான் அவருக்கு வாக்களித்தேன்...''

''நீங்கள் யார் வாக்களிப்பதற்கு?''

''என்ன மதிவாணா, திடீரென இப்படிக் கேட்கிறாய்?''

''ஆம். கேட்பதற்கு மறுமொழி கூறுங்கள். கொற்கைப் பாண்டியனும், நெடுஞ்செழியனும், கடுங்கோனும் கட்டி வளர்த்த இந்த மகத்தான மண்ணை, மாற்றானுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளிக்க நீங்கள் யார்?''

''மதிவாணா...?''

''அரச பரம்பரையில் வந்தீர்களா? இராச உரிமை பெற்றீர்களா? அல்லது மன்னரின் தந்தையா நீங்கள்...?''



''மதிவாணா! உன் தந்தையாயில்லாவிடினும், உன் தந்தைக்கு மேலாக உன்னைக் காப்பாற்றினேனே...''

''இருக்கலாம், மதிவாணனைக் காப்பாற்றியதால், மதுரை உமக்குச் சொந்தமா? அரசர்களுக்கு எத்தனையோ பேர் ஆசைக் காதலிகளாயிருப்பர்; அவர்கள் பெற்ற மகனுக்கெல்லாம் நாட்டுரிமை அளிக்க வேண்டுமென்றால், புனிதமான அரியணை என் கதியாவது?''

''மதிவாணா, என்ன சொல்கிறாய்?''

''ஆம்; சொல்கிறேன். உங்களை விடுதலை செய்தது தவறு என்று கூறுகிறேன். நாட்டுத் துரோகம் செய்த குற்றத்திற்காக உங்களைத் தண்டிக்க வேண்டும் என்று கூறுகிறேன்'' என்று சீறிய மதிவாணன், ''யாரங்கே?'' என்று கைத்தட்டி அழைத்தான்.

தடதடவென வீரர்கள் படியேறி வந்தனர். மதிவாணன் சைகையறிந்து, அங்கே திகைத்து நின்றிருந்த அவன் மாமனைச் சிறைப்பிடித்து அழைத்துச் சென்றனர்.

அதன்பிறகு மதிவாணன் மிக வேகமாக மலர்க்கொடியின் இருப்பிடம் அடைந்தான். மலர்க்கொடி காத்திருந்தாள்.

''மலர்க்கொடி, உன்னைச் சிறைப்பிடிக்கச் சொன்னாயே, மன்னர் முன் நிறுத்துமாறு கட்டளையிட்டாயே, இதோ வந்துவிட்டேன், புறப்படு'' என்றான், குரலில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல். மலர்க்கொடி ஒரு கணம் திகைத்தாள். பிறகு அவன் முகத்தில் மெல்லத் தவழும் குறும்புத்தனத்துடன் கூடிய மென்னகையைக் கண்டு கொண்டாள்.

''ஆம், இன்று முதல் உனக்கு விடுதலை என்பதே கிடையாது. என் உள்ளச் சிறையில் உன்னை அடைத்துவிட்டேன். வா, புறப்படுவோம். அவசரமாக மதுரை செல்ல வேண்டும். மன்னரையும் காணவேண்டும்.''

நிகைப்பும், வெட்கமும் சேர்ந்ததால், மலர்க்கொடியின் முகம் சிவக்காமல் என்ன செய்யும்?

மதுரை மாநகரைக் காணும்போது, மலர்க்கொடிக்கும் வியப்பு தாங்கவில்லை. தஞ்சையை அவள் கண்டிருக்கிறாள். மதுரை, தஞ்சையை மிஞ்சுகிறதே! பரபரப்பும், மக்கள் நடமாட்டமும், கடைவீதியும், திரு ஆலயமும், திருவிழாக் கோலமும், மாளிகைவனப்பும், மக்களின் சிரிப்பும், அவளைப் பெரிதும் கவர்ந்தன.

பொற்கொல்லர் ஒருவர் மதிவாணனுக்கு இளம் வயது முதல் அறிமுகமானவர். அவர் இல்லத்தில் மலர்க்கொடியைத் தங்கச் செய்துவிட்டு, அப்பொற்கொல்லரைத் தனியே அழைத்துச் சிறிதுநேரம் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு, மதிவாணன் நேரே இராசசிம்மனைக் காணச் சென்றான்.

அவன் சென்றபோதுதான், மன்னரும் அமைச்சரும் பேசிக் கொண்டிருந்ததை நின்று சற்றுக் கேட்டான். தன்னைப் பற்றிக்கூற, வட எல்லையிலிருப்பவர்களின் தூய்மையை எடுத்துக்கூற அடையாள மோதிரத்துடன் உள்ளே நுழைந்தான். ஆவேசமாகப் பேசினான்.

''அண்ணா, உங்களைத் துளிகூடச் சந்தேகிக்கவில்லை. மந்திரியாருடன் அது பற்றித்தான் நான் தர்க்கம் செய்துகொண்டிருக்க, தங்கள் வரவை எதிர்பார்த்திருந்தேன்; நீங்கள் மகுடத்தைக் காணவேண்டாமா? வாளைப் பார்க்க வேண்டாமா? மந்திரியாரின் கரங்களால் உங்கள் திருமுடியில் மகுடத்தைச் சூட்டி நான் பார்க்க வேண்டாமா?'' என்று இராசசிம்மன் உணர்ச்சி பொங்கப் பேசினான்.



மதிவாணன் உதட்டைக் கடித்துக் கொண்டான். ''ஓ! அப்படியே செய்வோம். மகுடத்தைக் கொண்டு வரச்சொல்லுங்கள். வீரவாளை நான் பார்க்கட்டும். நல்ல நாளை நிச்சயம் செய்ய அரண்மனை ஜோசியரை வரவழையுங்கள்'' என்றான்.

இராசசிம்மனுக்குக் கூட வியப்பாகத்தான் இருந்தது. அமைச்சரின் உடல் நடுங்கியது. பயத்தால் அன்று; ஆத்திரத்தால், அமைச்சர் ஏதோ கூற வாயெடுத்தார்.

இராசசிம்மன் அவரை முந்திக்கொண்டு, ''அமைச்சரே, இனியும் ஏதாவது பேசிக் குழப்பாதீர்கள். கொண்டுவாருங்கள், மகுடத்தை. கூப்பிடுங்கள் ஜோதிடரை'' என முழங்கினான்.

அமைச்சர் சென்றார். சற்றுநேரத்தில் தங்கத் தட்டில் மகுடத்துடனும், வாளுடனும் வந்தார். அவர் கரங்கள் நடுங்கின. மதிவாணன் பாய்ந்து, அதைத் தட்டிலிருந்து எடுத்தான். இராசசிம்மனின் தலையில் சூட்டினான்.

சற்றுத் தொலைவில் நின்று மகுடத்தின் அழகைப் பார்த்தான். ஒளிவீசும் எழிலைப் பார்த்தான். அதிக வேலைப்பாடு இல்லாவிடினும், கம்பீரமாக விளங்கும் மகுடத்தின் நேர்த்தியைப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிந்தது. நெஞ்சு தழுதழுத்தது. இராசசிம்மனின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு, ''அரசே! இதோ இன்னும் சிறிது நேரத்தில் வருகிறேன். வந்து உங்களுடன் பேசுவதற்குப் பல முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன'' என்று கூறிவிட்டு, மன்னரின் மறுமொழியை எதிர்பாராமல், விரைந்து அவ்விடம் விட்டகன்றான்.

''இது என்ன, மதிவாணன் சித்தம் கலங்கிவிட்டதா?'' என்று அமைச்சர் வியந்தார்.

இராசசிம்மன் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்தான்.

## 13

காற்று 'விர் விர், என்று சுழன்றடித்தது. அந்தக் காற்றுப் பெரும் மாறுதலைச் செய்ய வல்ல வலிமையுடன் சுழன்றடித்தது. ஈழத்துப் படைகளை ஏற்றி வந்த கலங்கள் இராமேசுவரத்தில் நங்கூரம் பாய்ச்சின. திமுதிமுவென ஈழத்துவீரர் எக்காளமிட்டு இறங்கினர். ஹாஹா என்று கர்ஜனையுடன் இறங்கினர். வாளையும் வேலையும் நாலா பக்கமும் சுழற்றிக்கொண்டு இறங்கினர். ஒரு கணம் அவர்களது எண்ணிக்கையைப் பார்ப்பவர்கள், பாண்டியன் பிழைத்தான் என எண்ணுவார்கள். மின்னும் வாளைப் பார்த்தவர்கள் சின்னா பின்னமாகப் போகும் சோழர்கள் கதி என்னவாகும் என்று எண்ணிக் கலங்குவார்கள். அவர்கள் அட்டகாசம் கண்டவர்கள், அழிந்தனர் சோழர்கள் என ஆரவாரிப்பார்கள்.

ஆனால் காற்றடித்தது. பெரும் காற்றடித்தது. சூறாவளிபோன்று காற்றடித்தது. அண்டத்தையே பாயாய்ச் சுருட்டிவிடுமோ என்று அஞ்சும் அளவுக்குக் காற்றடித்தது. கடல் அலைகள் தென்னை உயரத்துடன் போட்டியிட்டன. மணல் மாரியோ, எனும்படியாக எங்கும் மணலை வீசியது காற்று. 'ஹு' என்ற ஒலி 'ஹோ' என்ற வீரர்களின் ஒலியை அமிழ்த்தி விட்டது.



ஈழத்து வீரர்களின் கோலாகலம் குலைந்தது. வீர முழக்கம் வெலவெலத்தது. காற்றும் தூசியும் அடங்குமுன் மறைந்திருந்த சோழர்ப் படைகள் துள்ளிப் பாய்ந்தன. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நாலாபுறமும் சூழ்ந்தனர். சரமாரியாக அம்புகளைப் பொழிந்தனர். வேலாயுதங்கள் பறந்தன. களிறின் மீதேறி கலங்க வைத்தனர். பாய்ந்தோடும் பரிமீதேறி திகிரிபோல் வாளைச் சுழற்றி, ஈழத்தவர்கள் தலைகளை வாழை சீவுவது போல் சீவிச் சாய்த்தனர். குருதி ஆற்றில் குளித்தனர். நரம்பு மாலையை அணிந்து நர்த்தனமாடினர். சதையும், எலும்பும் சிதறிவிழச் செய்தனர். மிஞ்சிய ஈழத்து வீரர்கள் ஓடும் இடம் தெரியாமல், மதுரையை நோக்கி ஓடி வந்தனர்.

இராமேசுவரம் போரின் செய்தி மதுரையை எட்டும் முன்னரே மதிவாணன் இராசசிம்மனை வந்து சந்தித்தான். வடக்கிலிருந்து செய்தி வந்து கொண்டிருந்தது. சோழர்ப் படைகள் நெருங்கி வரும் சேதி கேட்ட மதிவாணன் துடித்தான். உடனே பெரும் படைகளுடன் புறப்பட அனுமதி கேட்டான்.

இராசசிம்மன் சித்தம் கலங்கியதோ-கட்டளையிடும் சக்தியை இழந்தானோ என்னவோ பொருளற்ற சிரிப்புடன் மதிவாணனைப் பார்த்து, ''நான் என்ன அனுமதி கொடுப்பது மன்னவா!'' என்று பேச்சைத் தொடங்கினான். மதிவாணனுக்கு ஆத்திரமாக வந்தது. இராசசிம்மனின் அடுத்த சொல் அவனது ஆத்திரத்தை உச்ச நிலைக்கு உயர்த்தியது.

''மதிவாணா! மகுடாபிஷேக நாளைக் குறிப்பிட வில்லையே! சோதிடர் நாள் பார்த்துவிட்டாரா-ஆமாம் உங்கள் அருமைக் காதலி-என் அண்ணி எங்கே?'' என்று கேட்டான்.

மதிவாணன் சீறியெழுந்தான். ''அரசே! உங்கள் பேச்சு எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. எனது வார்த்தைக்கு

என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். ஆனால் தலைவாயிலில் எதிரிகளின் படைகள் வந்திருக்கும் சமயத்தில் மகுடாபிஷேகத்தைப் பற்றிப் பேசுகிறீர்களே? இந்தக் கணமே நான் புறப்படுகிறேன். பதினாயிரம் படைகளுடன் செல்ல எனக்கு அனுமதியளியுங்கள். வெற்றி வாகை சூடி வந்து, மகுடாபிஷேகம் செய்து கொள்கிறேன்'' என்றான்.

இராசசிம்மன் தலையசைத்தான். ''கூடாது. நான் சொல்கிறேன். நீங்கள் இங்கே இருங்கள். என் வாள் திறமையை எப்போது காட்டுவது? ஈழத்துப் படைகளும், சேரர் படைகளும் நீங்களும், பங்கு போட்டுக்கொண்டு என் திறமையை அழிக்கப் பார்க்கிறீர்களா? முடியாது. நானே செல்வேன். முன்பு கொடும்பாளூரான் பட்ட பாட்டை நீங்கள் அறியமாட்டீர்கள்'' என்றுகூறி இராசசிம்மன் புறப்பட்டான். போர்வீரர்கள் பதினாயிரம் பேரை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். மதிவாணன் செய்தவறியாது திகைத்து நின்றான்.

மதிவாணன் சோர்ந்த முகத்துடன் செய்வதறியாது மலர்க்கொடி தங்கியிருந்த பொற்கொல்லர் இல்லம் சென்றபோது அங்கே அவள் திகைத்து நிற்க, அற்புதம் ஒன்று காத்திருந்தது.

வீட்டின் நடுக்கூடத்தே, துணியால் மூடப்பட்டு, ஒருபொருள் விளங்கியது. மலர்க்கொடி தன் மதிமுகம் காட்டி மதிவாணனை அழைத்துச் சென்று மூடியைத் திறந்தாள்.

''ஆ! இதென்ன! அரண்மனையினின்று, அரசர் மகுடத்தைக் களவாடித் தந்தவர் எவர்?'' என்று மதிவாணன் கூவினான்.



''வெற்றிதான்-என் திறமைக்கு வெற்றிதான்!'' என்று பொற்கொல்லர் கூறியவாறு, அங்கு வந்தபோதுதான் மதிவாணனுக்கு உண்மை விளங்கியது.

''என்ன இது, மகுடமா? அதற்குள் தயாராகி விட்டதா? தலைஞர் பரம்பரையினரல்லரோ, நீங்கள்!'' என்று பொற்கொல்லரைப் பாராட்டினான் மதிவாணன். மகுடத்தைக் கையிலெடுத்துப் பார்த்தான். திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவன் மனம் நிம்மதியடைந்தது. அரசர் சில நாட்களுக்கு முன்னர் காட்டிய மகுடத்திற்கும், இதற்கும் எள்ளளவும் வித்தியாசமில்லை.

''எதற்குக் கிரீடம் செய்யுமாறு கூறினீர்கள்?'' எனக் கேட்டாள், மலர்க்கொடி.

''அணிவதற்கு'' என்றான் மதிவாணன் நகைத்தவாறு.

''அதுதெரியும்; யார் அணிவதற்கு?''

''நான்தான். உன் தந்தைக்கு நானும் வேண்டும்; இந்த மகுடமும் வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இந்த மகுடத்தை அணிந்துகொண்டு, உன் தந்தையின் முன்போய் நிற்பேன். சோழர்ப்படைகளுடன் வரப்போகும் அவருக்குத் துணிவிருந்தால் என்னைப் பிடித்து, மகுடத்தையும் அபகரிக்கலாம்'' என்றான்.

மதிவாணன் எண்ணியது போல்தான் நடந்தது. மறுநாள் பொழுது சாய்ந்து இருள் கப்பிக்கொண்டது. பின்நிலாக் காலமானதால், இருளின் ஆட்சி எங்கும் நிறைந்திருந்தது. மதுரை மாநகரே சோகம் பிடித்ததுபோல் காட்சியளித்தது. பின்னால்வரும் இடருக்குச் சூசகமாய்ப் பல அறிகுறிகள் தென்பட்டன. அபசகுணங்கள் தோன்றின.

வடக்கே இருந்து படைவீரர்கள் சிதறி ஓடி வந்தனர். சோழர்களின் கடல்போன்ற படைகளின் முன்னால் பாண்டியர்ப் படைகளால் நிற்கவே முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. முக்காலுக்கு மேல் போர்க்களத்திலேயே உயிரிழந்தனர். எஞ்சியவர்கள் புறமுதுகிட்டோடி வந்தனர்.

அப்படி ஓடி வந்தவர்களை வாவென்று கூப்பிட ஆளில்லை. ஒரு பக்கத்திலிருந்து மட்டும் தோல்விச் செய்தி என்றால், மக்கள் மனத்தில் இரக்கமிருக்கும். ஈழத்துப் படைகளில் எஞ்சியவரும் குற்றுயிரும் குலையுயிருமாய் ஓடிவரும்போது!

மதிவாணனுக்குச் செய்தி எட்டியது. அவன் உள்ளம் துடித்தது. மதுரை மாநகரைக் காக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சருடன் கலந்தாலோசித்தான். மன்னரின் கதி என்னவாயிற்று எனும் பரபரப்பு அவனுள்ளத்தே இருந்தது. மன்னருக்கு எதிர்பாராதது ஏதாவது நேர்ந்துவிட்டால்...

ஆனால், இராசசிம்மனுக்கு அப்படியொன்றும் நேரவில்லை. நள்ளிரவு தாண்டி மூன்றாம் சாமத்தில், இராசசிம்மன் உடலில் பலத்த காயங்களுடன் தன்னந் தனியனாய் அரண்மனை வந்தடைந்தான். மதுரை மாநகரத்து மக்கள், அச்சத்தால் கதவுகளைக் கூடத் திறவாமல் உள்ளே மூடிக் கிடந்தனர்.

''அரசே வாருங்கள், வாருங்கள். உங்கள் வருகையை நான் எதிர்பார்த்திருந்தேன். நீங்கள் இங்கே இளைப்பாறுங்கள். இதோ நான் போருக்குப் புறப்பட ஆயத்தமாகி விட்டேன்'' என்றான் மதிவாணன்.

இராசசிம்மன் அவனைக் கையமர்த்தி, ''அண்ணா இனி ஏது செய்தும் பலனில்லை. தெற்கிருந்து வந்த ஈழத்துப்



படைகள் நிர்மூலமாகி விட்டனவாம். வடக்கே சென்ற படைகளை வெள்ளூரிலே நிர்மூலமாக்கி விட்டனர், சோழர்கள். என் தோல்வியை நான் ஒப்புக்கொள்கிறேன். இனி மதுரையைக் காப்பாற்ற யாராலும் முடியாது. நான்கு திசைகளின்றும் படைகள் நெருங்குகின்றன. பராந்தக மன்னன் பசியுடன் வருகிறான். வருகிற பௌர்ணமியன்று மதுரையில் மகுடாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறானாம். மதுரைக்குள் நுழைவான். அரியணையில் அமர்வான். ஆனால் நமது பரம்பரை மகுடத்தை மட்டும் பராந்தகன் அணியவிடக் கூடாது. அதற்கு இப்போதே வழிசெய்ய வேண்டும்'' என்று மூச்சுவாங்கப் பேசினான். இராசசிம்மன் சோர்ந்து காணப்பட்டான். தோல்வி வேறு பலத்தைக் குறைத்து விட்டது.

''அரசே கவலைப்படாதீர்கள். அவர்கள் ஒருக்காலும் நம் மகுடத்தை அடைய முடியாது. அதற்கான வழி வகைகளைச் செய்துவிட்டேன்'' என்று மதிவாணன் கூறினான்.

''எனக்குத் தெரியும். பாண்டிய மகுடம் சோழரிடம் சிக்காது என்பது எனக்குத் தெரியும். அதைக் காப்பாற்றும் முன்னர், உங்கள் முடியை ஒரு கண நேரமாவது அது அலங்கரிக்க வேண்டும், அண்ணா!'' என்று இராசசிம்மன் கூறினான்.

மதிவாணன் திடுக்கிட்டு, ''வேண்டாம்! வேண்டாம். அந்த மகுடத்தை நான் அணியமாட்டேன். அந்தப் புனித மகுடத்திற்குக் களங்கம் உண்டாக்க மாட்டேன்...'' என்று கூறினான்.

''அண்ணா! உங்கள் பிடிவாதத்தைவிட மாட்டீர்களா? குற்றுயிராய்க் கிடக்கும் என் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்.

உங்கள் தலையில் கம்பீரமாகத் திகழ்வதைப் பார்த்துவிட்டு, அந்த மகுடத்தை எடுத்துக்கொண்டு ஈழ நாடு செல்கிறேன். அங்கே வாழ்வேன். மீண்டும் படை திரட்டி வருவேன். அதுவரை நீங்கள் சேரநாடு சென்று என் தாய்க்கு ஆறுதலாக இருங்கள்'' என்று இராசசிம்மன் கேட்டுக் கொண்டான்.

''அரசே! என்ன கூறினீர்கள்? ஈழநாடு செல்லப் போகிறீர்களா? கூடவே கூடாது. தாங்கள் இந்த நிலையில் ஈழத்திற்குப் போகக்கூடாது. நம் மகுடம், வேறு நாட்டிற்குச் செல்வதா? நான் சம்மதிக்க மாட்டேன்''-மதிவாணன் குரலில் பரபரப்பும் அதேபோது, கண்டிப்பும் கெஞ்சலும் நிறைந்தன.

''அண்ணா! ஏன் இப்படி நான் கூறுவதற்கெல்லாம் மாறுதலாகவே பேசுகிறீர்கள். என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா?''

''பிடிக்கிறது, மிக மிகப் பிடிக்கிறது. எங்கேயோ இருந்த என்னை அழைத்துவந்து, இந்த நாட்டின் வாரிசு என்று கூறிய கபடமற்ற உள்ளம் நிறைந்த உங்களை மிகவும் பிடிக்கிறது. மதிப்பும் மரியாதையும் அதிகமாகின்றன. அதற்காகத்தான் கூறினேன். தாங்கள் ஈழநாடு செல்லக்கூடாது என்று.''

''பிறகு எப்படித்தான் செய்கிறது? மகுடத்தைக் காப்பாற்றுவது எவ்விதம்?''

''நான் வழி சொல்கிறேன்.'' என்று கூறிய மதிவாணன் மூடியிருந்த துணியைத் திறந்தான். இரண்டு மகுடங்கள் பளிச்சென ஒளிவீசித் திகழ்ந்தன.

இராசசிம்மன் இரு மகுடங்களையும் மாறி மாறிப் பார்த்தான்; திகைத்தான். என்னவென்றே அவனுக்குப் புரியவில்லை. இராசசிம்மன் திகைப்பும், முகமாறுதலும் மதிவாணனுக்குப் புரிந்தது.



''அரசே! இதில் எது உண்மை மகுடம் என்று தங்களுக்கும் தெரியவில்லை அல்லவா? சோழர்களுக்கும் தெரியாது, திணறட்டும். தாங்கள் உடனே உண்மை மகுடத்தை அணிந்துகொண்டு, சேரநாடு செல்லுங்கள். ஈழத்தில் தஞ்சமடைவதைவிடத் தாயிடம் செல்வது மேலல்லவா?'' என்றான்.

''அண்ணா, இதென்ன பேச்சு? நீங்கள் இங்கிருக்க நான் மட்டும் சேரநாடு செல்வதா? என் உயிர் மட்டும் வெல்லமா? முடியாது, முடியாது.''

''அப்படியானால், நானும் இங்குதான் இருப்பேன்'' என்றான் இராசசிம்மன்.

''கூடாது. அரசே கூடாது. நீங்கள் இங்கிருப்பின் விளைவுகள் மோசமாகும். அதனுடன் உண்மை மகுடம் மாற்றாரிடம் சிக்கிவிட்டால்...'' மதிவாணன் முடிக்க வில்லை. அதற்குள் வீரனொருவன் விரைந்தோடிச் செய்தி கொண்டுவந்தான். சோழர்ப் படைகள் மதுரையை நெருங்கிக் கொண்டிருப்பதைத் தெரிவித்தான். மதிவாணன் யோசித்தான். இனி வீண் விவாதத்திற்கு நேரமில்லை; கண்டிப்புத்தான் காரியத்தை நிறைவேற்றும்.

''தம்பி!'' என்று குரல் கொடுத்தான் மதிவாணன். அக் குரலொலி கேட்டு இராசசிம்மனே அயர்ந்துவிட்டான்.

''அழகான சொல்! இந்தச் சொல்லுக்காகத்தான் ஏங்கினேன். அது கிடைத்துவிட்டது.

''அண்ணா!-இல்லை. இல்லை- அரசே!'' இராசசிம்மன் பேசினான்.

''தம்பி! நான் அரசன்தான். உரிமையால் அன்று- வயதில் மூத்தவன் என்பதால், நான் கட்டளையிடும் காலம்

வந்துவிட்டது. என்னை உண்மையில் அண்ணன் என எண்ணுவீர்களேயாகில், நான் கூறுவதுபோல் கேட்க வேண்டும். சேரநாட்டிற்கு நீ போயாக வேண்டும். பரம்பரை பாண்டிய மகுடத்தோடு போகவேண்டும். அங்குப் படை திரட்ட முயலவேண்டும். நான் ஈழம் செல்வேன். இதோ இந்தப் போலி முடியுடனும் வாளுடனும் செல்வேன். பாண்டிய மன்னன் ஈழம் சென்றுவிட்டான் என அவர்கள் எண்ணுவர். அவர்கள் கவனம் ஈழத்தின் பக்கம்தான் திரும்பும். போலிமகுடத்தை நிஜமகுடம் என எண்ணி அதைப் பெறச் சோழர்கள், காலத்தைச் செலவிடுவர். அதற்குள் சேரநாட்டில் முழுமூச்சுடன் படை திரட்டவேண்டும். ஈழத்தினின்று நான் படையுடன் வருவேன். இருமுனை தாக்குதலால் சோழர்களுக்குத் தக்கபாடம் கற்பிப்போம். என் சொல்லைத் தட்டாதீர்கள்!'' என்றான் மதிவாணன்.

இராசசிம்மன் சிறிது நேரம் சொல்வதறியாது நின்றான். பிறகு ''அண்ணா!'' எனக்கூறி மதிவாணனை அணைத்துக் கொண்டான்... ''உங்கள் தியாகத்தை என் தாய் உணர்ந்தால் உங்களை என்றென்றும் புகழ்வாள்'' என்று நா தழுதழுக்கக் கூறினார்.

''அதுவே போதும்'' என்றான் மதிவாணன்.



## 14

மலர்க்கொடி நடு முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தாள். பின் நிலவின் இலேசான கதிர் அவள் முகத்தில் மெல்ல தழுவ அவன் அவள் உறக்கத்துக்குத் துணை நின்றான்.

அவள் முக அழகை கணநேரம் ரசித்தான், மதிவாணன். அவளை எழுப்பித்தானே ஆகவேண்டும்!

''மலர்க்கொடி!'' என்று ஒரு குரல் கொடுத்தான். மலர்க்கொடி திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள். மதுரை நகரம் படும் அமளி துமளியில் மதிவாணனைக் காணாமல் அவள் உள்ளம் பதை பதைத்தது. உணவு கொள்ளாமல், வேதனையுற்றிருந்தவள், அதே சோர்வில் அப்பொழுதுதான் கண்ணயர்ந்தாள். அவள் எதிரே அவள் அன்புக்கினியவன் நிற்கிறான்.

''அன்பே!'' என்று கூறியவாறு அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''புறப்படு, மலர்க்கொடி, சென்றுகொண்டே பேசுவோம்'' என்று அவசரப்படுத்தினான் மதிவாணன்.

''எங்கே?'' என்று மலர்க்கொடி கேட்கவில்லை. ஆனால், அவன் முடியை அலங்கரித்த மகுடத்தைக் கண்டுவிட்டாள். அவள் சோர்வு பறந்துவிட்டது. அவள் அன்பு நிறைந்தவன் அரசராகி விட்டான்.

அவள் உடல் சிலிர்த்தது. அரண்மனைக்கு அழைக்கிறான் போலும்! மலர்க்கொடி ஒன்றும் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள். மலர்க்கொடியைக் குதிரையின்மீது ஏற்றி உட்காரவைத்துக்கொண்டு குதிரையைத் தட்டிவிட்டான் மதிவாணன்.

ஒரு திசையில் மதிவாணன் குதிரையில் பறந்தான். மறுதிசையில் இராசசிம்மன் சேரநாடு நோக்கி விரைந்தான். சோழர்ப்படைகள் மதுரையை அடையும்போது எதிர்க்க ஆளில்லை. எதிர்பார்த்தும் எவருமில்லை. மன்னர் தப்பி ஓடிவிட்டார் எனும் செய்தி கிடைத்தது. சோழ வீரர்கள் மதிவாணனை மன்னரென எண்ணிப் பின்தொடர்ந்தனர்.

பாண்டியர்களின் பரம்பரை மகுடம் கிடைக்காத ஆத்திரத்தில், பராந்தக சோழ தேவர் புலிபோல் உறுமினார். அரண்மனை முழுவதும் தேடச் சொன்னார். ஆனால் அவருக்குக் கிடைத்த செய்திகளோ, மகுடத்தை அணிந்துகொண்டு குதிரை மீதேறி மன்னர் ஈழம் நோக்கிச் சென்றுவிட்டார் என்பதே. தொடர்ந்து சென்று மகுடத்தை மீட்டு வர வீரர்களை அனுப்பினார் பராந்தகர். படைவீரர்கள் வரும் முன்பே மதிவாணன் கடற்கரையை அடைந்து விட்டான்.

பூரண மதி வானத்தே பவனி வரும் வேளையிலே, கடற்கரையருகே குதிரையொன்று வந்து நின்றது. அதன் மீதிருந்து மதிவாணன் குதித்தான். அவனை அணைத்தவாறு அசுவத்தில் அமர்ந்து வந்த மலர்க்கொடியை மெல்ல இடையைப் ப்டித்து இறக்கினான். மதிவாணனின் முடியில் மகுடம்-பாண்டியர் மகுடம் கம்பீரமாகத் திகழ்ந்தது.

''கடைசயில் பாண்டியர் மகுடத்துடனேயே புறப்பட்டு விட்டீர்களா?'' என்றாள் மலர்க்கொடி.

மதிவாணன் நகைத்தவாறு, ''ஆமாம்! பாண்டிய நாட்டு மன்னராக நான் மகுடத்துடன் ஈழநாடு செல்கிறேன். அங்கே நாம் பாண்டிய மன்னராகவும், அரசியாகவும் வாழ்வோம்'' என்றான்.



ஆயத்தமாக இருந்த படகில், மதிவாணன் மலர்க்கொடியுடன் ஏறி அமர்ந்தான். வெண் மதியில் தண் கிரணங்களால் ஒளி வீசித் திகழும் மகுடத்துடன் மதிவாணன் அந்தப் பாய்மரப் படகில் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

படகு ஆழ் கடலில் நடுவே கம்பீரமாகச் சென்று, ஈழத்தின் வடகோடியின் கரையை அடைந்தது. கரையிலுள்ள மாளிகையில் தங்கியிருந்த ஈழத்து மன்னரிடம் மதிவாணன் பாண்டியரின் மகுடத்தையும், வாளையும் தந்தான் அது 'போலி' என்பதை ஈழத்து மன்னன் எப்படி அறிவான்?

''மலர்க்கொடி, நம் பணி முடிந்துவிட்டது. இனி எவரும் நம்மைக் கட்டுப்படுத்தாத இடத்திற்குச் செல்வோம். சாவகமோ, புட்பகமோ அதையும் தாண்டியோ செல்வோம்!'' என்று அதே பாய்மரப் படகில் ஏறினான் மதிவாணன்.

மலர்க்கொடியின் முகம் மதி கண்டு மலர்ந்த மலராகியது. அவர்கள் ஏறியிருந்த படகு ஆழ்கடலில் காற்று வீசும் திசையில் சென்று கொண்டே இருந்தது.

★





# பகைவனின் காதலி

## அணிந்துரை

கௌதம நீலாம்பரன்

எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே - அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையிலாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே - இதை
வந்தனை கூறி மனதிலிருத்தியென்
வாயுற வாழ்த்தே னோ-இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

என்று பாடினான் மகாகவி பாரதி. இப்படி அவன் பாட உதவியது, நம் முந்தையர் வாழ்ந்து முடிந்த சரித்திரங்களை அறிந்து வைத்திருந்தமைதான்.

முன்னோர் வாழ்ந்து காட்டிய உயர்ந்த நெறிகளையும், அவர்கள் கொண்டிருந்த சிறந்த பண்பினையும் நினைப்பூட்டி, நம்மை நல்வழிப் படுத்துவன, நாட்டின் பழைய சரித்திரங்களே.

சரித்திரங்களை அறியாமல், பண்டைய பெருமைகளை உணராமல், ஒருநாடு நாகரிகம் பெற்று உயர்ந்துவிட இயலாது.

இதனால்தான், 'சரித்திரம் தேர்ச்சிகொள்' என்று கட்டளையிட்டான் மகாகவிபாரதி.

உலக நாடுகள் பலவும் இன்று இந்திய தேசத்தை இதன் கலாசார மேன்மைகளைப் போற்றுகின்றன என்றால், அதற்குக் காரணம், நம் பாரம்பரியச் சிறப்புகளை, சரித்திரகாலச் சாதனைகளை மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் பலரும் கொண்டாடி எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கும் பல அரிய வரலாற்று நூல்கள்தான்.

வேதச்சிறப்புகளை எழுதிவைத்த 'மாக்ஸ்முல்லர்',

வரலாற்றுச் சிறப்புகளை எழுதிவைத்த 'வின்ஸென்ட்' ஸ்மித்

இனங்கள்-குலங்கள் பற்றிய சிறப்புகளை எழுதிவைத்த 'தர்ஸ்டன்,'

மொழிச் சிறப்பை எழுதிவைத்த 'கால்டுவெல்'... இப்படி எத்தனையோ பேரைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

சீன அறிஞன் 'யுவான்சுவாங்', இத்தாலிய வழிப் போக்கன் 'மார்க்கோபோலோ', இஸ்லாமிய வித்தகன் 'இபின் பதூதா' என எண்ணற்ற அறிஞர் பெருமக்கள் நம் தேசத்தின் மகத்துவங்களை உலக அரங்கிற்கு வெளிச்சமிட்டுக் காட்டிச் சென்றுள்ளனர்.

நமது வழிபாட்டு நிலையங்களோ வானுயர்ந்து நிற்கும் ஆலயங்கள், ஏராளமான கல்வெட்டுகளோடு அரிய பல செய்திகளைச் சொல்லும் வரலாற்றுப் பேழைகளாகவும் திகழ்கின்றன.



இந்த வரலாறுகளையெல்லாம் நாம் அப்படியே அறிந்துகொண்டுவிட இயலாது. அதற்கு ஆய்வு மனப் பான்மை-ஆராய்ச்சித் திறன் வேண்டும்; பல்வேறு வரலாற்று நூல்களை ஐயம் திரிபறக் கற்றல் வேண்டும்; ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்த்து உண்மைகளை அறிதல் வேண்டும்.

இது எல்லோருக்கும் ஆகக்கூடிய காரியமல்ல.

ஒரு செயல் கடினம் என்றால், அதைவிட்டுததி, ஒதுங்கிச் செல்வது மனித இயல்பு. ஆனாலும் கசப்பாக இருக்கிறதே என்று ஒரு குழந்தை மருந்தை அருந்த மறுத்தால், நாம் விட்டுவிடுவோமா? வலிந்து புகட்டியேனும் அதன் நன்மையை அடையச் செய்வதில்லையா?

இந்தப் பணியைத்தான் சரித்திர நவீனங்கள் செய்கின்றன. ஒரு ஆறுதலான விஷயம் என்னவெனில், கசப்பு மருந்தை அப்படியே வலிந்து புகட்டாமல், 'சுகர் கோட்டட் பில்ஸ்' என்பார்களே, அப்படி இனிப்புத் தடவிய மாத்திரைகளாக்கி-காதல் கனிரசம் கலந்த அத்தியாயங்களாக்கி, வீரம், விவேகம், ராஜதந்திர உத்திகள் எல்லாம் கலந்து, படிக்கச் சுவையும் விறுவிறுப்பும் குறையாத வகையில், வரலாற்று நவீனங்கள் வார்த்தெடுக்கப் படுகின்றன.

சரித்திரக் கதைகள் எப்போதுமே காவிய அந்தஸ்தைப் பெற்று மிளர்பவை. தமிழ்மக்கள் என்றுமே சரித்திரக் கதைகளை இலக்கிய பீடத்தில் ஏற்றி வைத்துத்தான் கொண்டாடுகின்றனர். சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி,

மணிமேகலை போன்ற நூல்களை நாம் காவியங்களாகவும் இலக்கியங்களாகவும்தான் போற்றுகிறோம். அதே சமயம் அவை சரித்திரக் கதைகள் என்பதையும் மறுப்பதில்லைதானே?

இந்த இலக்கிய மரபு நெடுங்காலம் மங்கி மறைந்திருந்தது என்பதும், மறுபடி இதை நவீன அச்சுக்கலை- பத்திரிகைத் துறை வடிவம் கண்டதும் மறுமலர்ச்சி அடைய வைத்தவர் பேராசிரியர் கல்கி என்பதும் தமிழ் கூறு நல்லுலகம் என்றும் மறவாமல், தலைமீது வைத்துக் கொண்டாடும் உண்மைகள்.

அமரர் கல்கியின் கான்முளைகளாய், வாழையடி வாழையெனப் பல எழுத்தாளர்கள் தொடர்ந்து தோன்றி, அவர் துவக்கிவைத்த சரித்திரக் கதை மரபை மங்கி மறையவிடாமல் செழிக்கச் செய்து வருகின்றனர்.

விக்கிரமன்,
சாண்டில்யன்,
நா.பார்த்தசாரதி,
அகிலன்,
ஜெகசிற்பியன்,
கோவி.மணிசேகரன்,
கி.ரா.கோபாலன்

மீ.ப.சோமு.. என இந்தப் பெயர்ப்பட்டியல் நீளும். இதில் நான் யாரையும் முதலாவது, அடுத்தது என்று வரிசைப்படுத்த விரும்பவில்லை. இவர்கள் ஒவ்வொருவருமே தனித்தனி முத்திரைப் பதித்துத், தங்களுக்கென வாசக நெஞ்சங்களில் தனியிடம் பெற்றுத் திகழ்பவர்கள். கலைஞர் மு.கருணாநிதி, வே.கபிலன், எஸ்.எஸ். தென்னரசு போன்றோரையும் இந்த வரிசையில் அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். இன்னும் சில பெயர்கள் விடுபட்டுமிருக்கலாம். அண்மைக் காலங்களில் என்னைப் போன்ற சிலரும் சரித்திர நாவல்கள் எழுதி வருவதை அனைவரும் அறிவர். **இந்திரா சௌந்தர்ராஜன், ஸ்ரீவேணுகோபாலன், எஸ்.பாலசுப்பிரமணியன்,** பிரபஞ்சன், மதுரா போன்றோரும் சிறப்பான சரித்திரக் கதைகளை எழுதி வருகின்றனர். இருப்பினும் 'சரித்திரக் கதைகளா...அவை ஒன்றும் பெரிய விஷயமல்ல, சரித்திரக் கதைகளில் சமூகப் பிரச்னை கிடையாது. அதையெல்லாம் இலக்கியத்தோடு சேர்க்கக் கூடாது' என்று சொல்வோரும் உண்டு.



இப்படித் தங்களால் முடியாத காரியத்தை இவர்கள் செய்கிறார்களே என்கிற அசூயையில் வீண் விமர்சனப் பிதற்றல்களை அள்ளி இறைக்கும் பணியைச் செய்து வருகிற ஆசாமிகள், கல்கி அவர்களையே கூட, 'அவர் என்ன.. அலெக்சாண்டர் டூமாஸ் என்னும் பிரெஞ்சு நாவலாசிரியனின் பாதிப்பால்தானே சரித்திரக் கதைகள் எழுத ஆரம்பித்தார்... சர் வால்டர் ஸ்காட்டைவிட இவர் என்ன பெரிதாக எழுதிவிட்டார்? என்று கூறிக் கொச்சைப் படுத்துவதுண்டு. இது போன்ற வீண் விமரிசனங்களைக் காலம் நிச்சயம் புறம் தள்ளும். அது, சாதனைகளை மட்டுமே பதிவு செய்துவைக்கும்.

விக்கிரமன் விரிந்த ஆகாயம் போன்ற இதயம் பெற்றுத் திகழ்பவர். எந்த எழுத்தாளனையும் என்றும் குறைத்து மதிப்பிடுபவரல்லர் இவர். எவரையும் புறம் தள்ளி ஒதுக்கிவிட்டுத் தான் முன் வரிசையில் இடம் பிடிக்க வேண்டுமென்ற எண்ணமோ, பேச்சோ இவரிடம் என்றும் நான் கண்டதில்லை. ஐந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தால், பத்து எழுத்தாளன் பெயரையாவது உச்சரித்து விடுவார். எப்போதும் ஓரணியில் எழுத்தாளர்கள் திரண்டு நிற்கவேண்டும்; அது பல சாதனைகளைச் செய்துகாட்ட வழிவகுக்கும் என்கிற எண்ணமே இவரிடம் எப்போதும் பிரதிபலிப்பதை நான் கண்டிருக்கிறேன்.

சுமார் அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாகப் பத்திரிகைப் பணியாற்றியவர்கள் என்று தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமன், 'கலைமகள்' ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் போன்றோரைக் குறிப்பிடுவதுண்டு. அந்தப் பெருமைக்கு மற்றுமோர் உதாரணமாக நம்மிடையே இன்று வாழ்ந்து வரும பெருமகன் விக்கிரமன். 'அமுதசுரபி'க்காக இவர் ஆற்றிவரும் அரும் பணிகள் தமிழுலகம் தலைமீது வைத்துக் கொண்டாடத் தக்கவை. இதே அமுதசுரபி' இதழில் விக்கிரமனால் அடையாளம் காட்டப்பட்டவர்தான் சரித்திர நவீனங்களில் மாபெரும் சாதனை படைத்த சாண்டில்யன் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தானும் வாழ்வில் உயர்ந்து, எழுத்தில் சாதனை படைக்க வேண்டும்; அதேபோல் பிற எழுத்தாளர்களும் எழுதிச் சாதித்து, வாழ்வில் உயரவேண்டும் என்ற



பரந்தமனக் கொள்கைக்குச் சொந்தக்காரரான விக்கிரமன், தான் எழுதியுள்ள இந்த நூலுக்கு முன்னுரை எழுதும் பொறுப்பை எனக்கு வழங்கியதும் அவரின் பண்புச் சிறப்பைத்தான் வெளிப்படுத்துகிறது.

'பகைவனின் காதலி' கதைக்கான களம், பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், தமிழ் மண்ணில் நிகழ்ந்த சில முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. ஒரு சிறப்பம்சம் என்னவெனில் மூவேந்தர் என நாம் போற்றும் சேர-சோழ-பாண்டிய மன்னர்களை மூவருமே இக்கதையில் பங்கேற்கின்றனர். மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் சில தவறான போக்கைக் கண்டிக்கும் முகமாகப் படையெடுத்து மதுரையைக் கைப்பற்றுகிறான். விக்கிரம பாண்டியன் சோழர்களின் பக்கம் இருக்க, வீரபாண்டியன் சேர மன்னனின் ஆதரவுடன் சோழ சைன்யத்தை எதிர்க்கிறான். ஆனால் தோல்வியில் முடிகிறது. பாண்டியனின் பட்டத்தரசியைச் சிறைப் பிடித்துச் சென்று சோழநாட்டில் பணிப்பெண்ணாக்கி அவமதிப்பதாகப் பாண்டியன் சந்தேகிக்கிறான். மனத்தில் வீண் பகை வளர்க்கிறான். அதே சமயம் அவனுடைய புதல்வன், சோழ மன்னனின் வளர்ப்பு மகளான சிந்தாமணியைக் காதலிக்கிறான். சோழ மன்னரோ அப்பெண்ணை விக்கிரம பாண்டியனுக்கு மணம் செய்து வைக்க எண்ணுகிறார்மலை நாட்டுச் சேரன் பாண்டியனுக்குச் சோழ வேந்தனின் வல்லமையை எடுத்துரைத்து, நட்பு நாடுமாறு அறிவுறுத்தி, நேரிலும் அழைத்து வருகிறான். அங்கே பாண்டிமாதேவி அவமானப் படுத்தப்படவில்லை என்னும் உண்மையும்

தெரிய வருகிறது. சோழ மன்னரும் வந்தவர்களைப் பண்புடன் வரவேற்று, நிலைமையின் சிக்கலை நீக்கி, அன்பின் அடித்தளம் அமைக்கிறார்.

முழுக்க முழுக்க வரலாற்று உண்மைகள் இவை, இந்தப் பின்னணியில், மிக விறுவிறுப்பான நடையில் சம்பவங்களை உருவாக்கிச் சரித்திரம் படைத்திருக்கிறார் விக்கிரமன்.

இது சிறு நவீனம்தான் என்றாலும், முத்தமிழ் நாட்டின் முக்கியமான வரலாற்று நிகழ்வு ஒன்றினை விவரிக்கும் முத்தான நவீனம் என்பதை எண்ணுகையில் மகிழ்வு பன்மடங்காகிறது.

இந்த நவீனத்தை வாசித்து முடிக்கும்போது, நீங்களும் இதே நெஞ்சார்ந்த பெருமிதம் கொள்வீர்கள் என்பது என் உறுதியான நம்பிக்கை.

## 2. பகைவனின் காதலி

காளி கோயிலின் பாழடைந்த முகமண்டபத்திலிருந்த மணியை அவள் ஓசைப்படுத்தினாள்.

விரிசல் காணாத அந்த வெண்கல மணியின் கணீரென்ற நாதம் காட்டுப் பகுதிகளில் பரவியதும் அருகேயிருந்த மரத்தில் வந்து இளைப்பாற அமர்ந்திருந்த பறவைகள் ஜிவ்வென்று சிறகடித்துப் பறந்து சென்றன.

இலைத் துளிர்களை மெல்ல மேய்ந்து கொண்டிருந்த மான்குட்டியொன்று ஒரு தடவை அவளை நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தன் பணியைத் தொடர்ந்தது.

கருவறையிலிருந்த காளியம்மன் முகத்தில் மட்டும் படும்படியான ஒளி, நெடிய குத்து விளக்கினின்று சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

எப்போதாவது வரும் பக்தர்கள் தரிசனத்துக்காக மூடப்பட்டிருந்த கருவறைக் கதவுகளின் சிறு இடுக்குகளின் வழியே காளிதேவியின் விழிகள் மின்னிக் கொண்டிருந்தன. தேவியின் கழுத்தில் செவ்வரளி மாலையொன்று, சில நாள்களுக்கு முன்பு அணிவித்திருக்க வேண்டும். வாடிய நிலையில் காட்சிதந்தது. தேவி தன் கரிய திருமேனிக்கு மேலும் சக்திஅளிப்பதுபோல் அரக்கு நிறத்தில் பச்சைக்கரை போட்ட ஆடை காட்சியளித்தது.

காளியின் திருமுகத்தை ஒரு தடவையும் கோயிலுக்கு வரும் ஒற்றையடிப் பாதையை ஒரு தடவையும் ஆவலுடன் பார்த்தவாறிருந்த சிந்தாமணியை அந்தக் குரல் திடுக்கிடச் செய்தது.

''யாரது?''

திடுக்கிட்டுத் திரும்பினாள். அவள் உடல் சிலிர்த்தது. அந்தக் காட்டுப் பகுதியிலுள்ள காளி கோயிலுக்கு வாரம் ஒருநாள் வரும்போது ஏற்பட்டிராத பயம் சிந்தாமணியிடம் தோன்றியது.

திரிதிரியாகச் சுருட்டப்பட்டுக் கோபுரம் போல் உயர்த்திக் கட்டப்பட்ட சடைகள் தோள்வரை தொங்கின. நெற்றியில் வட்டமான குங்குமப்பொட்டு, முகத்தை மறைத்த அடர்ந்த தாடி மீசை, நீண்ட காவி அங்கி.

அவளால் அந்த முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. இதுவரை ஏற்பட்டிராத ஒருவித நடுக்கம்.

'யாரது இந்த வேளையில் இந்தக் காட்டுப் பகுதியில்?'' என்று குரல் கொடுத்தவாறு அந்த உருவம் அந்த மணி மண்டபத்துக்கருகே வந்தது.

குரலில்தான் கடுமை இருந்தது. ஆனால் அவர் பயங்கர உள்ளங் கொண்டவரில்லை என்பதை உணர்ந்து கொண்ட படைத்தலைவர் மகளான சிந்தாமணி பயத்தால் வறண்டிருந்த தொண்டையச் கனைத்துக்கொண்டு, ''நீங்கள் யார்?'' என்றாள். குரலில் கனமில்லாவிடினும் குரல் வெளியே சிறிதாவது வந்ததே, அதுவே போதும்!

சிரிப்பொலி, வாய் திறவாமல் அந்த உருவத்திடமிருந்து வந்தது.

''பெண்ணே! என்னை யார் என்று இதுவரை கேட்டவர்களில்லை. நடுக்காட்டிலுள்ள காளி கோயிலுக்கு இந்த உச்சிவேளையில், தனியே வந்திருக்கும் நீதான் முதலில் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று சடைமுடியார்



கூறும்போது குரலில் பயங்கரமோ பயமுறுத்தலோ இல்லாததைக் கவனித்தாள் சிந்தாமணி.

''என் பெயர் சிந்தாமணி'' என்றாள். அவள் விழி இப்போது ஒற்றையடி வழியைப் பார்த்தவாறிருந்தது.

''சிந்தாமணி என்றால் போதாது'' என்றது சடைமுடி. சிந்தாமணிக்கு எரிச்சலும், ஆத்திரமும், ஏமாற்றத்தால் ஒருவிதக் கோபமும் பொங்கியது.

''உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சிந்தாமணி என்றால் சிந்தாமணிதான். நீங்கள் யார் என்று சொல்லாவிட்டால் போகிறது; இந்தக் கோயில் பூசாரிதானே? இதுவரை ஒரு முறைகூட நான் உங்களைப் பார்த்ததில்லை. கோயிலைத் திறந்து கற்பூரங்காட்டி குங்குமம் கொடுக்க நினைக்காமல் கோயிலுக்கு வரும் பக்தர்களை யார்-எந்த ஊர்-பெயர் என்று கேட்பது சரியா?'' என்று சிந்தாமணி சினந்தாள்.

சடைமுடிப் பூசாரி பெரிதாக நகைத்தார். பிறகு ''பெண்ணே! நீ சொல்லாவிட்டால் நான் சொல்கிறேன். நீ சோழ நாட்டைச் சேர்ந்தவள்; அண்ணன் பல்லவராயன் மகள்தானே?'' என்று அவர் கூறியவுடன் சிந்தாமணி திகைத்தாள் என்பதைவிடத் திடுக்கிட்டாள் என்று சொல்வதே தகும்.

இந்தக் காட்டுப் பகுதியில், ஒரு பூசாரிக்குத் தன் தந்தையைத் தெரிந்திருக்கிறதே என்று விழிகளில் ஆவல் ததும்பக் கேட்டாள்.

சடைமுடிப் பூசாரி தலையை அசைத்தார்.

''பெண்ணே! உன் பெயர் என்னவென்று சொன்னாய்..உம்... சிந்தாமணி! சிந்தாமணி, உன் தந்தை

அண்ணன் பல்லவராயனை எனக்குத் தெரியாதா? அவர் முதன் முதலில் மதுரையின்மீது படையெடுத்து வந்தார்.''

''முதன் முதலில் என் தந்தை படையெடுத்து வந்தாரா?'' என்று சிந்தாமணி, நடந்த கதையை அறிவதற்குக் கேட்டாள்.

''ஆமாம், அது நடந்து இருபது, இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இருக்கும். நான் இந்தக் காளி கோயில் பூசையை ஏற்ற புதிது. இந்தக் காளிகோயில் இப்போதுள்ளதுபோல் இடிந்திருக்கவில்லை. மதுரையிலிருந்து மிக அருகேயுள்ள காட்டுப் பகுதிக்குள் பூசையும் படையலுமாய் இந்தக் கோயில் வளப்பத்துடன் விளங்கியது. என் தந்தையிடமிருந்து நான் கோயில் பூசையை ஏற்ற புதிது'' என்று கூறிக்கொண்டுபோன பூசாரியைத் தடுத்து, ''நான் உங்கள் கதையைக் கேட்கவில்லை. என் தந்தையைப் பற்றிச் சொல்லுங்கள். நடந்த கதையைக் கேட்க ஆவலாக இருக்கிறது. இராசாதிராச சோழ சக்கரவர்த்தியின் அன்புக்குப் பாத்திரமானவர் என் தந்தை'' என்றாள்.

பூசாரி விழிகளை உருட்டி சிந்தாமணியை நோக்கி ''பெண்ணே! நான் மதுரையில் நடந்த அனைத்தையும் அறிவேன். மதுரைக் கதையைச் சொல்லும்போது என் கதையும் வரத்தான் செய்யும். கேட்கப்பொறுமை இல்லையா?'' என்று குரலில் கடுமை மெல்லியதாக நிலவக் கேட்டார்.

ஆமாம் என்பதுபோல் சிந்தாமணி தலையை அசைத்தாள்.

''நான் கதை கேட்க வரவில்லை''.

''தெரியும், நீ வீரபாண்டியன் மகனைச் சந்திக்க வந்திருக்கிறாய். அதுவும் தெரியும். நீ அவனைச் சந்திக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும்.



பூசாரி இப்படிக் கூறியவுடன் சிந்தாமணி திடுக்கிட்டு, அவர் முகத்தைப் பரிதாபத்துடன் நோக்கி, ''ஏன் சந்திக்க முடியாது? உடனே சொல்லுங்கள்'' என்றாள்.

''வீரபாண்டியன் உங்கள் சோழநாட்டின் பகைவன். அவன் மகனும் பகைவன்தானே. பகைவனைக் காதலிக்கலாமா?'' பூசாரி சொல்லிச் சிரித்தார்.

சிந்தாமணி முகத்தைத் திருப்பிக்கொண்டு, ''அது என் சொந்தவிஷயம். பூசாரி அவர்களே! நான் உச்சிவேளையில் தன்னந்தனியாய் வந்திருப்பதால் என் சொந்த விஷயத்தில் தலையிட்டுப் பேசலாம் என்று முடிவு செய்து விட்டீர்களா?'' என்று கூறினாள்.

பூசாரி அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காகக் கையை அவள் முகத்தருகே கொண்டு சென்றவர், ஏதோ நினைத்தவராகக் கரத்தை இழுத்துக்கொண்டு விட்டார்.

சிந்தாமணி வேகமாக அவர் பக்கம் திரும்பி, ''என் தந்தை மதுரைக்கு வந்த நிகழ்ச்சியைச் சொல்ல முடியுமென்றால் சொல்லுங்கள். இல்லாவிடில்...'' என்று சொல்லும்போது அவளால் கோபத்தை முகத்தில் வரவழைத்துக்கொள்ள முடியவில்லை.

''இல்லாவிடில் நீ என்ன செய்வாய் என்பது எனக்குத் தெரியும்?''

''என்ன செய்வேனாம்?''

''கோபித்துக்கொண்டு போய்விடுவாய்!''

''உங்கள்மேல் எனக்கென்ன கோபம்? ஒருமுறைகூட இந்தக் கோயிலில் தங்களை இதுவரை பார்த்ததில்லை. நான் உங்கள்மீது ஏன் கோபிக்க வேண்டும்?''

''கோபம் என் மீதல்ல. வீரபாண்டியன் மகன்மீது. வாக்குக் கொடுத்தபடி இதுவரையில் வரவில்லையே என்று அவன்மீது கோபித்துக்கொண்டு மதுரைக்குச் சென்று விடுவாய்.''

''ஆமாம். உச்சிவேளைக்குக் காளிகோயில் அருகே வரக்கூடாது என்று சொல்வார்கள். நான் உச்சி வேளைக்குத்தான் அவரைச் சந்திப்பது வழக்கம். அப்போது இங்கு யாரும் வரமாட்டார்கள். இரண்டு நாழிகை நேரம் போவதே தெரியாது.''

''எனக்குத் தெரியும்...''

''உங்களுக்குத் தெரியுமா? அப்படியென்றால் மறைவாக நீங்கள் இருந்து எங்களைக் கவனித்தீர்களா? பெரியவர்கள் இவ்வாறு செய்யலாமா? இளஞ் சிட்டுக்களான நாங்கள் எப்படியெல்லாமோ மனம்விட்டுப் பேசிக்கொண்டு இருந்திருப்போம்... சுயநினைவே சில கணம் மறந்திருப்போம்... அதையெல்லாம்...''. என்று வெட்கத்துடன் முகத்தை விரல்களால் மூடிக்கொண்டு அரை விழியால் பூசாரியின் முகபாவத்தை நோக்கினாள்.

''சிந்தாமணி! உங்களுடைய பாதுகாவலுக்காக நான் சிலசமயம் இருப்பது வழக்கம். உங்கள் பக்கம்கூட நான் திரும்பியதில்லை. மோகவெறியில் நீங்கள் சற்றுச் சூழ்நிலையை மறந்துவிடுவீர்கள். உங்கள் உயிர் எவ்வளவு மகத்தானது என்பதை மறந்து விடுவீர்கள். சோழ வீரர்கள் பார்த்திருந்தால் என்ன கதியாகியிருக்கும்?'' என்று பூசாரி கூறும்போது அவர் குரலில் கவலை தோய்ந்திருந்தது.

''சோழ வீரர்கள் என்னை ஒன்றும் செய்துவிட மாட்டார்கள். அண்ணன் பல்லவராயனுடைய மகள் நான்.



சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரின் அபிமான புத்திரி'' என்று பெருமையுடன் கூறினாள் சிந்தாமணி.

''தெரியும் பெண்ணே! தெரியும். அண்ணன் பல்லவராயன் என்று சாதாரணமாகக் கூறிவிட்டாயே! வேதவனமுடையான் அம்மையப்பன் அண்ணன் பல்லவராயன் என்று கம்பீரமாகச் சொல். எனக்கு உன் தந்தையைத் தெரியும். இராஜாதிராஜா சோழரைத் தெரியும். அவர் பெருந்தன்மையுடன் நாட்டைவிட்டுக் கொடுத்ததால், அதன்பின் சோழ அரியணை ஏறிய குலோத்துங்க சோழரையும் தெரியும். குலோத்துங்க சோழரின் வலக் கரமாக விளங்கிய உன் தந்தையிடம் சோழ அரசர் எவ்வளவு மரியாதை வைத்திருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். உனது தந்தை, வீரபாண்டியனிடம் எவ்வாறு அபிமானத்துடன் இருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். தந்தை மதிப்பும் மரியாதையும் கொண்ட வீரமன்னன் வீரபாண்டியன் மகனிடம் அவர் மகள் காதல் கொண்டிருப்பது எவ்வளவு பொருத்தம்!'' என்றார் பூசாரி.

சிந்தாமணி, பரபரப்புடன், ''பூசாரியாரே! பழைய கதையைச் சொல்லுங்கள். நான் கேட்டு மனத்தில் பெருமையை அழுத்திக்கொண்டு செல்கிறேன்'' என்று கூறி மண்டபத்தின் ஓர் ஓரமாக உட்கார்ந்தாள்.

''சிந்தாமணி! எழுந்திரு. இன்று நீ ஒருகணங்கூட இங்கே தங்கியிருக்கக்கூடாது. ஒருவேளை உன் உயிருக்கே ஆபத்து வரலாம்...'' என்றார் பூசாரி.

சிந்தாமணி சிரித்தாள். ''மதுரையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் சோழ நாட்டுப்படை வீரர்களைப் பற்றித்தானே சொல்கிறீர்கள். அவர்கள் என்னை ஏதும் செய்துவிடமாட்டார்கள். நீங்கள் பயப்படலாம்;

அவருக்கு- என்காதல் தெய்வத்திற்கு-ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடலாமென்று. ஒருநாளும் அவர்மீது சோழ வீரர்கள் மூச்சைக்கூட நான் படவிடமாட்டேன். என் கட்டளைக்குச் சோழ வீரர்களிடம் மதிப்பிருக்கிறது.''

''இருக்கலாம். ஆனால் பாண்டிய வீரர்களிட மில்லையே! பகைவனின் மகளை அவர்கள் சும்மா விட்டுவிட மாட்டார்களே! வீரபாண்டியனின் வீரர்கள் தங்கள் சொந்த நாட்டை அடைவதில் ஒரே முனைப்பாக இருக்கிறார்கள். அவர்கள் இலட்சியத்தைத் தடுக்கும் எவரையும் அவர்கள் அழிந்து விடுவார்கள்.''

''அவர்கள் இலட்சியத்தை நான் தடைசெய்கிறேனா?''

''ஆம்; நீ சோழ அரசரின் அபிமான மகள்.''

''அதனால், பாண்டியர்க்கு நான் விரோதி இல்லை.''

''போர்க்களத்தில் பாச, பந்த உணர்ச்சிக்கு இடமேயில்லை பெண்ணே! இப்போது வீரபாண்டியன் சேகரித்துள்ள படைவீரர்கள் தங்கள் நாட்டிற்காகச் சர்வ பரித்தியாகமும் செய்யத் சித்தமாயிருக்கிறார்கள்.''

''அதனால்.''

''தங்கள் இலட்சியத்திற்குத் தடையாயிருப்பவர்களை உறவின் முறை என்றும் பார்க்க மாட்டார்கள். வீர பாண்டியன் மகளைக் காதலிக்கும் உன் காதலைக்கூட நம்ப மாட்டார்கள். உன் தலையைச் சீவி, காளிதேவிக்குக் காணிக்கை ஆக்கிவிடுவார்கள்.''

பூசாரி இவ்வாறு கூறியதைக் கேட்டுச் சிந்தாமணி மௌனமாயிருந்தாள். தன் தலை போய்விடுமே என்றுகூட அவள் அஞ்சவில்லை. தான் எவ்வாறு வீரபாண்டியனின்



இலட்சியத்திற்குத் தடையாயிருக்க முடியும் என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை.

''நான் என்ன இடையூறு செய்தேன்? பாண்டியர்களிடம் நானும் அபிமானம் மிக்கவள் என்று நான் எப்படி எடுத்துக் காட்டுவது?'' சிந்தாமணியின் குரல் தழுதழுத்தது.

''எனக்குத் தெரியாது. வீரபாண்டியனின் வீரர்கள் சாமானியப் பட்டவர்களல்லர். அவர்கள் பாண்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிதறியிருக்கிறார்கள். மதுரையைச் சோழர்களிடமிருந்து மீட்கவேண்டும் என்பதையே உயிர் மூச்சாகக்கொண்ட வீரர்கள் இப்போது ஒன்று சேர்ந்து விட்டார்கள். அவர்கள் பழைய கதைகளை மறப்பதில்லை. தங்கள் அரசருக்கு ஏற்பட்ட அவமானத்தையும் அவர்கள் மறப்பதில்லை...''

''போரில் தோற்றோடுவது அவமானமா?''

''பெண்ணே! உனக்கு அரசியல் அறிவு போதாது. இது ஒரு மானப் பிரச்னை. போர்க்களத்தில் வெற்றி தோல்வி இயல்பு. ஆனால், தோற்றுப்போன மன்னரின் பெண்டுபிள்ளைகள் என்ன பாவம் செய்தார்கள்? வீரபாண்டியனின் முடியைச் சோழன் கைப்பற்றினான். அது யுத்த தர்மம். வீரபாண்டியன் மனைவி பாண்டிய அரசியைச் சிறைப்பிடித்து, பணியாள்களோடு பணியாள்களாக ஆக்கிய கொடுமையைப் பாண்டிய வீரர்கள் மறந்துவிட மாட்டார்கள்..., பெண்ணே, சிந்தாமணி! உன்னை இப்போது பாண்டிய வீரர்கள் பார்த்துவிட்டால் பழிக்குப் பழி வாங்கி விடுவார்கள்...''

பூசாரி குரலில் ஆவேசமிருந்தது. சிந்தாமணி தலைகுனிந்தாள். அவள் விழிகளில் நீர் ததும்பியது.

''நான் போய்வருகிறேன் பூசாரி! அவரைப் பார்த்தால் சொல்லுங்கள். நான் காத்திருந்தேன் என்று'' எனக்கூறி, சிந்தாமணி காளிகோயிலை விட்டுக் கண்ணீருடன் புறப்பட்டாள்.

பூசாரியின் 'ஹஹ்ஹா' என்ற பயங்கர நகைப்பு காடெங்கும் பரவி எதிரொலித்தது.

## 2

மதுரை பாண்டியர்கள் மாளிகையில் குலோத்துங்க சோழதேவர் அமர்ந்திருந்தார். வயது ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதற்கு அடையாளமாக ஓரிரு நரை கூடி வந்ததே தவிர, அவருடைய சுறுசுறுப்பும், எந்த ஒரு செயலையும் துரிதமாக முடிக்கும் ஆற்றலும் குறையவில்லை. அவருடைய விழி நோக்கின் சக்திக்கு எதிரே எவரும் தலைகுனிந்து விடுவர்.

அதுவரையில், அங்கு அரசருடன் வீற்றிருந்த அமைச்சர் அநபாயர் சில முக்கிய விஷயங்களைக் குறித்து அரசருடன் கலந்தாலோசித்துவிட்டு, கங்கைகொண்ட சோழபுரத்திற்கு விடைபெற்றுப் புறப்பட்டார்.

அவர் சென்றபிறகு, அரசர் அந்தப்புரத்திலிருந்து சிந்தாமணியை அழைத்துவரச் செய்தார். குலோத்துங்க சோழருக்குப் பெண் குழந்தை இல்லாத குறையைச் சிந்தாமணி தீர்த்து வைத்தாள். சிறு வயதிலிருந்தே, அரச மாளிகையிலேயே அவள் வளர்ந்து வந்தாள்.



அவளுடைய தந்தை சோழ நாட்டின் பிரதம தளபதி அண்ணன் பல்லவராயர். பல போர்க் களங்களில் முன்நின்று போரிட்டுச் சோழ நாட்டிற்கு வெற்றியைக் குவித்துத் தந்திருக்கிறார் ஈழ நாட்டினின்று வந்த படையெடுப்பை முறியடிப்பதில் பல்லவராயன் திறமையைக் குலோத்துங்கன் புகழ்ந்து பாராட்டிப் பல பரிசுகளை வழங்கினார். சிந்தாமணியின் குறுகுறு நடையும், குமிழ்ச் சிரிப்பும், ஒளி பொருந்திய முகமும், பேச்சிலே மழலையும், 'அப்பா அப்பா' என்று கொஞ்சும் குரலில் அழைத்தவாறு மிகவும் உரிமையுடன் அரசரின் மடியில் ஏறி அமர்வதும், கழுத்தை வளைத்துக் கட்டித் தொங்குவதும், கன்னத்தில் முத்தம் ஈவதும், மீசையைப் பிடித்திழுப்பதும், மார்புமணி ஆரங்களை இதழ்களிலிட்டுச் சுவைப்பதும், உயிரையே கொட்டி வைத்தாற்போல் அவள் ஆடி மகிழ்வதும் தன் சொந்த மகளைவிட அவளிடம் குலோத்துங்கனுக்கு அதிகப் பாசம் ஏற்படச் செய்தன.

சிந்தாமணிக்கு மாளிகையில் சர்வ சுதந்திரமுண்டு. அரண்மனையில் எந்த அதிகாரியையும் அணுகிப் பேசக் கட்டுப்பாடில்லை. குலோத்துங்கன் பவனி செல்லும்போது உடன் சிவிகையிலோ, யானைமீது அம்பாரியிலோ செல்லும் உரிமையும் உண்டு.

பாண்டிய நாட்டில் தாயாதிகள் இவருடைய பட்டத்துக்குச் சச்சரவு ஏற்பட்ட காலத்திலிருந்து, மதுரை நகருக்குக் குலோத்துங்க சோழர் அவ்வப்போது விஜயம் செய்யத் தொடங்கினார்.

மன்னன் அழைக்கிறார் என்றவுடன் சிந்தாமணி துள்ளும் நடையுடன் விரைந்தோடி வந்தாள். சிந்தாமணியை அவர் சந்தித்து, ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. கங்கை

கொண்ட சோழபுரத்தைவிட மதுரைநகர் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. சிந்தாமணி தன் தந்தையைப் போல் அரசியல் விவகாரங்கள், தந்திரங்களில் ஈடுபாடுடையவளாய் இருப்பதைக் குறிப்பாக அறிந்து கொண்டார் அரசர். அதனால் மதுரையிலேயே தன்தோழிகள் துணையுடன் அவள் தங்கியிருக்க அனுமதித்தார். அதைத் தவிர அவருக்கு மற்றும் ஓர் எண்ணமும் இல்லாமலில்லை. மதுரையை அப்போது ஆண்டுகொண்டிருந்த விக்கிரம பாண்டியனுக்குச் சிந்தாமணியை மணம் முடித்தால் பாண்டிய சோழப் பிணக்குகள் ஏற்படாதென்ற எண்ணமும் அவருக்கிருந்தது. விக்கிரம பாண்டியனுக்குச் சிந்தாமணியை அடைய வேண்டுமென்ற அவா உண்டென்பதையும் அவர் அறிந்திருந்தார்.

வீரபாண்டியன் வீரர்களைச் சேகரித்து மீண்டும் படைகளுடன் மதுரையைத் தாக்கிக் காப்பாற்ற ஆயத்தம் செய்வதாகச் செய்தி வந்தவுடன், குலோத்துங்க சோழதேவரே மதுரையை வந்தடைந்துவிட்டார்.

அரசர் வருகை விக்கிரம பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது.

''நல்லதொரு காரியத்திற்காகத்தான், நான் வந்திருக்கிறேன் விக்கிரமா! உன் திருமணத்தை நானே முன்னின்று நடத்தத் திட்டமிட்டிருக்கிறேன். அதனால் மதுரையில் சில நாள்கள் தங்கியிருக்க எண்ணியுள்ளேன்'' என்றார்.

விக்கிரமனுக்குப் புரியவில்லை. என்றாலும் சோழ சக்கரவர்த்தி ஏதோ ஒரு முக்கியமான திட்டத்துடன் தான் வந்திருப்பார். தனக்கு ஏதோ பெரும் நன்மை செய்யப் போகிறார் என்ற இன்ப எண்ணத்தில் திளைத்தான்.



சிந்தாமணியை அவர் அழைத்தது அதற்காகத்தான் சிந்தாமணி அழகெனும் ஓவியம் உயிர்பெற்று வருவதுபோல் குலுங்கி அசைந்து துள்ளி நடந்து வருவதைக் கண்டவுடன் குலோத்துங்கனுக்கு ஒரே பூரிப்பாகிவிட்டது.

அவளைப் பிரிந்து ஆறுமாதங்கள்தாம் ஆகியிருக்கும். அதற்குள் சிந்தாமணியிடம் இவ்வளவு வளர்ச்சியா?

சிந்தாமணி புன்முறுவல் பூத்தவாறு குலோத்துங்கன் எதிரே வந்து பணிவுடன் நின்றாள்.

''அப்பா'' என்று ஓடிவந்து அவருடைய கழுத்தில் தன் கரங்களை ஆரமாக ஆக்கித் தொங்கித் தவழும் சிந்தாமணி அன்று பணிவுடன் நின்றாள்.

முகத்தில் இளங்காலைச் செவ்வானம்போல் செம்மை படர்ந்திருந்தது. சூல்கொண்ட கருமுகில் போன்ற விழிகளின் இமைகள் பட்டாம்பூச்சியைப்போல் படபடத்தன.

''சிந்தாமணி! நலமாக இருக்கிறாயா?'' என்று குலோத்துங்கன் கேட்டு அவளைத்தன் அருகே அழைத்தார். சிந்தாமணி அங்கேயே நின்றாள்.

பிஞ்சுப் பருவத்தில் அரசர் மடியின் மீதேறி அமர்ந்து மார்பில் தன் இளங்கரங்களால் குறும்பு செய்யும் அந்தச் சிந்தாமணியா, இவ்வளவு மாறிவிட்டாள்!

குலோத்துங்கன் மெல்லத் தனக்குள் நகைத்துக் கொண்டார். நாணம் அவள் மேனி முழுவதும் கொடிபோல் படர்ந்து விட்டிருந்தது.

மேனியில் புதுவிதப் பளபளப்பு ஏற்பட்டிருக்கிறது. உடைந்து விடுமோ என்று அஞ்சத்தக்க இடை துவள்கிறது. மார்பின் கனம் தாங்காமல் அவள் சற்று முன்சாய்ந்து

நடக்கிறாள். பாதங்கள் பூமியில் அழுந்துகின்றன. கரங்களைக் கட்டிக்கொண்டு மெல்லத் தலைகுனிந்து நிற்கிறாள்.

''இப்படி உட்கார் சிந்தாமணி! உன்னிடம் பெரும்மாறுதலைக் காண்கிறேன். உன் ஓட்டமெங்கே? துள்ளல் எங்கே? குறும்புப் பார்வை எங்கே? குழையும் பேச்செங்கே?'' என்று குலோத்துங்கன் கேட்கிறார்.

''உன் காதலனுடன் பேசிப் பழகும்போது அவனுக்கே அதைச் சொந்தமாக்கி விட்டாயோ! உன் தந்தையின் இடத்தைக் காதலன் பற்றிவிட்டானோ?-அரசர் கேட்கவும், சிந்தாமணி முகத்தை மூடிக்கொண்டு 'கல கல'வென்று நகைக்கிறாள். 'காதலன்...' அவள் ஒருமுறை சொல்லிப் பார்க்கிறாள். அவள் உடல் சிலிர்க்கிறது. வீரபாண்டியன் மகனுடன் அவளுக்குக் காதல் மலர்ந்தது சமீபத்தில்தான். அதற்குள் அரசர் அதை எப்படி அறிந்துவிட்டார்? சோழ சக்கரவர்த்திக்குக் கண்ணும் காதும் நாடு முழுவதும் வியாபித்திருக்கின்றனவா? அவள் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தாள். தன் காதலைப்பற்றி அப்போதே சொல்லிவிடுவோமா-அல்லது பொறுத்திருந்து சொல்வோமா?

சக்கரவர்த்தி, சிந்தாமணியின் முக மாறுதலை நொடியில் அறிந்துகொண்டார். தான் எண்ணியபடியே நடந்துவிட்டது. சிந்தாமணி காதலிக்கிறாள். அவள் விக்கிரமனைக் காதலிக்கிறாள். சோழ-பாண்டிய பிணைப்புச் சங்கிலி உறுதிபடப் போகிறது. அரசர் நினைத்தார்.

''சிந்தாமணி! உன்னுடைய பழைய குறும்பும், குதூகலமும், துள்ளலும், துடிப்பும் என் எதிரே மறைந்து விட்டனவே! சொல்லு சிந்தாமணி! உன் தந்தை போன்ற என்னிடம் உன் மன இரகசியத்தைச் சொல்லாமல் வேறு



யாரிடம் சொல்லப் போகிறாய்?'' என்று அவளைத் தன் அருகே உட்கார வைத்துக் கூந்தலை மெல்ல வருடியவாறு கேட்டார்.

இருக்கையின் விளிம்பில் உட்கார்ந்தும் உட்காராமலும் நெளிந்து கொண்டிருந்த சிந்தாமணிக்குக் கூச்சம் அதிகமாகியது.

''குழந்தாய்! உன் தந்தை இருந்திருந்தால் உன்னைத் தக்கவரனுக்கு மணம்முடிக்க ஏற்பாடு செய்திருப்பார். இன்று அவரில்லை. ஆனால் அவரது மனம் அறிந்தவன்நான்; என் மகள் போலவே உன்னை வளர்த்து வருகிறேன். உன் விருப்பத்திற்கேற்ற மணாளனை மணம் முடிப்பது என் கடமை. சொல் மகளே! சொல்! உன் இதயங்கவர்ந்தவன் யார்?'' என்று பரிவுடன் பேசினார்.

சிந்தாமணி இருக்கையை விட்டு எழுந்து நின்று கொண்டாள். 'என் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகப் பரிவுடன் கூறுகிறாரே; சொல்லி விடுவோமா, வீரபாண்டியன் மகனைக் காதலிக்கும் செய்தியை, என்று எண்ணினாள்.

''அப்பப்பா! மகளே! உனக்கு நாணம் எனும் பெருங்குலதனம் திடீரென்று எங்கிருந்து வந்தது? தேவலோகத்து அரமடந்தையர் உன் மேனியில் நாணமெனும் வண்ணச் சாந்தைப் பூசிவிட்டார்களா? அந்தப் பார்வையில் உள்ள ஏதோ ஒரு மாறுதல், என்னிடமே வெளிப்படையாகக் கூறமுடியாத தயக்கம், இதழ்களின் துடிப்பு, இவற்றையெல்லாம் நீ எப்போது பெற்றுவிட்டாய் மகளே! எனக்குத் தெரியாமல் அவை உன்னிடம் எப்போது புகுந்தன?'' என்று குலோத்துங்கன் அவள் விழிகளை நேருக்கு நேர் பார்த்துக்கேட்டார்.

சிந்தாமணி கால் விரல்களால் தரையில் கோலமிடலானாள்.

குலோத்துங்கன் ''ஹாஹா'' என்று மிகப் பெரிதாக நகைத்து, ''சிந்தாமணி! விக்கிரம பாண்டியன் பெரும் பாக்கியசாலி. உன்னைப்போன்ற பொற்கொடியை அவன் மணப்பதற்கு முன் பிறவியில் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். சிந்தாமணி! என்னிடம் மட்டும் காதோடு காதாகச் சொல்லு; நீ அவனை முதன் முதலில் சந்தித்தது மதுரையிலா, கங்கை கொண்ட சோழபுரத்திலா?'' என்று கேட்டார்.

சிந்தாமணியின் முகம் ஒரு கணத்தில் மாறியது; நாணம் மறைந்தது, குழைவு குலைந்தது, விழிகளில் உணர்ச்சி மாறியது; இதழ்கள் துடித்தன.

'விக்கிரம பாண்டியனையா - நானா- காதலிக்கிறேனா- எங்கே முதலில் சந்தித்தேனா? ஐயா! அரசர் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டார் போலிருக்கிறதே! விக்கிரம பாண்டியனை நான் காதலிக்கவில்லை. நான் வீரபாண்டியன் மகன்மீது உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன். இதை எப்படிச் சொல்வது? வீரபாண்டியனை முறியடிக்க வந்திருக்கும் சக்கரவர்த்தியிடம் நான் என்னவென்று கூறுவது?'

'சிந்தாமணி! விக்கிரமன் உத்தம குணமுடையவன். அவன் தந்தை ஒரு சமயம் ஈழத்தவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு நமக்கு விரோதமாகப் புறப்பட்டான். நமது படைகளை இவர்கள் என்னவென்று நினைத்து விட்டார்கள்? பாவம். ஓட ஓட விரட்டினோம். அந்தப் பெருமை உன் தந்தையைத்தான் சேரும். நான் கங்காபுரியை விட்டு நகரவேயில்லை. உன் தந்தையின் போர்த்திறமைக்கு நிகர் அவரேதான்'' என்று சொல்லி வரும்போது, தந்தையைப் பற்றிக் காளி கோயில் பூசாரி கூறியதும் அவளுக்கு நினைவுக்கு வந்தது. சிந்தாமணி சலனமேதுமின்றி நின்று கொண்டிருந்தாள்.



குலோத்துங்கனுக்கு மேலும் உற்சாகம் பிறந்தது. ''விக்கிரமனின் தந்தை நமக்கு அடிபணிந்தார். சமாதானம் பேச, கங்கை கொண்ட சோழபுரத்திற்கே அவர் வந்துவிட்டார். தஞ்சமென்றடைந்தவரை ஆதரிப்பதுதான் தர்மம். அவரையும் அவர் மகனையும் என்னருகே சமமாக உட்காரவைத்து விருந்துண்ணச் செய்தேன். அந்த நிகழ்ச்சி உனக்கு நினைவில்லையா, சிந்தாமணி?''

அவள் அதை நினைத்துப் பார்த்தாள்.

மாளிகை விருந்து மண்டபத்தில் குலோத்துங்கன் அருகே விக்கிரமன் அமர்ந்திருந்தான். நுனி வாழை இலையில் பதார்த்தங்கள் பரிமாறப்பட்டன. மல்லிகை மெல்லரும்பைப் போன்ற அன்னம்-சோழ நாட்டுக் காவிரி விளைச்சலால் பூத்த மெல்லரும்புச் சோறு-இலையில் இடப்பட்டது.

''சிந்தாமணி'' என்றழைத்தார் சக்கவர்த்தி. பொதுவாக, வேற்று ஆடவர் முன்னிலையில் அந்தப்புரப் பெண்டிர் வருவதில்லை. ஆனால், சிந்தாமணிக்கு முழு உரிமைஉண்டு.

சித்திரத்தேர் குலுங்கி வருவதுபோல் சிந்தாமணி கையில் நெய்க் கிண்ணத்துடன் வந்தாள். விக்கிரமன் அந்த அழகுத் தேவதையை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''விக்கிரமா! இலையையும் கொஞ்சம் பார்த்துக் கொள். இன்று உன் விழிக்கு விருந்திட அழைக்கவில்லை'' என்று சக்கரவர்த்தி கூறியவுடன் அங்கிருந்தவர்கள் அனைவரும் பெரிதாக நகைத்தனர்.

விக்கிரமன் தலையைக் குனிந்து கொண்டான். ஏனோ சிந்தாமணி தலைகுனியவில்லை. தோல்வியுற்று, சரணாகதி யடைந்து வந்திருக்கும் அந்தப் பாண்டிய குமாரனைப் பார்த்தபோது அவளுக்கு எந்தவித உணர்ச்சியும் ஏற்பட வில்லை. பெண்களுக்கே உரிய இயற்கையான நாணத்துடன் அவள் துள்ளி உள்ளே ஓடிவிட்டாள்.

சிந்தாமணி அதை நினைத்துப் பார்த்தாள். அந்த நிகழ்ச்சி விக்கிரமனின் பார்வை, அங்கிருந்தவர்களின் சிரிப்பு, அவளுக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

பிறகு மதுரையில்தான் விக்கிரமனைச் சந்தித்தாள். விக்கிரமன் இப்போது பாண்டிய அரசன். சோழ சக்கவர்த்தி குலோத்துங்கனுக்கு அடங்கிய அரசன்.

விக்கிரமன் கண்களில் அவள் அதிகம் படுவதில்லை. அவளிடம் எந்த மாற்றமுமில்ல. மாற்றமெல்லாம் வேறோர் இடத்தில் சேர்ந்துவிட்டதே!

ஒருசமயம் சிந்தாமணியும் அவளுடைய தோழிகள் இருவரும் வைகையைக் கடந்து வடமேற்குத் திக்கிலுள்ள அருவிக் கரைக்கு உல்லாசமாகச் சென்றனர்.

அங்கேதான் அவள் வீரபாண்டியன் மகனைச் சந்தித்தாள்.

மக்கள் நடமாட்டமில்லாத கானகப் பகுதியிலிருந்த அந்தப் பாழடைந்த காளிகோயிலின் முன் மண்டபத்துள் அவளும் தோழிகளும் சென்றமர்ந்தனர். நடந்து வந்த களைப்பு, கால்கள் தள்ளாடின, நா வறண்டது. ஒரு வாய் தண்ணீர் குடித்தால் சுவர்க்க இன்பமே அடைந்து விடலாம்போலத் தோன்றியது. தோழிகள் இருவரும் தண்ணீர் கொண்டுவரச் சென்றனர்.



நாழிகை ஆகிக்கொண்டே இருந்தது. தோழிகளைக் காணவில்லை. சிந்தாமணிக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்தாள்; ஒருமுறை குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். கோயில் மணி அங்கிருப்பதைக் கண்டாள். மணியோசை எழுப்பினால் தோழிகள் விரைந்து வருவர் என்றெண்ணி, மணியோசை எழுப்ப முயன்றபோது அவள் கரத்தை மற்றொரு கரம் பற்றியது.

சிந்தாமணி திரும்பினாள். அவள் உடல் சிலிர்த்தது. உடலெங்கும் புதுவித உணர்ச்சி ஏற்பட்டது. விக்கிரம பாண்டியனைக் காணும்போது தோன்றாத உணர்ச்சி இப்போது ஏற்படக் காரணமென்ன? அவள் ஒரே ஒருமுறைதான் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

''உஸ்...மணியை இங்கே யாரும் அடிக்கக்கூடாது...'' என்றான் அந்த வீர இளைஞன்.

''கோயில் மணி, நாதத்தை எழுப்பத்தானே இருக்கிறது?'' என்று சிந்தாமணி கேட்டாள்.

''ஆமாம், இங்கே நிலை வேறு. மணியோசை எழுப்புவதற்கான நேரம், காலம், தேவை-வேறு...'' என்றான் இளைஞன்.

''அந்தி-சந்தி-உச்சி வேளைகளில் பூசை நடக்கும்போது எழுப்புவார்கள் என்பது தெரியும். பக்தர்கள் மனக்குறையைத் தெரிவிக்க வரும்போது, மணியோசை எழுப்பி மனக் குறையைத் தெரிவிப்பார்கள் என்றும் அறிவேன்'' என்றாள் சிந்தாமணி. அவன் விழிகளை, முகத்தை, அகன்ற மார்பை, வீரக்கழல் அணிந்த கரங்களை ஒரே கணக்கில் அளந்தெடுத்ததுபோல் கண்டுகொண்டு.

''மற்ற கோயில்களிலிருக்கலாம். இந்தக் கோயிலுக்குப் பூசை கிடையாது. இந்தக் காளிக்கு நைவேத்யம் கிடையாது. இந்தக் காளி கண்திறந்து, வீரபாண்டியன் மீண்டும் பாண்டிய அரியணை ஏற என்று அருள் புரிகிறாளோ அன்றுதான் இவளுக்குப் பூசை. அன்றுதான் நைவேத்யம்'' என்றான் இளைஞன்.

''மணி ஓசை?'' என்று கேட்டாள் சிந்தாமணி. மணியையும் மதயானை போன்ற வாலிபனின் வடிவையும் ஒருமுறை பார்த்தவாறு.

''மணி ஓசை எழுப்புவோம்-இங்கே வீரர்களைக் கூடுமாறு செய்ய.''

''வீரர்களா?''

''ஆமாம். பாண்டிய வீரர்கள். இந்த மதுரை அரியணையில் அமரக்கூடிய நியாயமான உரிமையாளரான வீரபாண்டியனின் ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த வீரர்கள்.''

''அவர்கள் எங்கே இருப்பார்கள்?''

''அவர்கள் இந்தக் கானகத்தில் எங்கு வேண்டுமானாலும் இருப்பார்கள்.''

''கானகத்திற்குள் ஏன் மறைந்து வாழ்கிறார்கள்?''

''புலி பதுங்குவது எதற்காக? தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கிறோம்.''

''ஏன்? இப்போது மதுரையை ஆள்வதும் ஒரு பாண்டிய மன்னன்தானே?''



''இவன், நாட்டைச் சோழருக்கு அடிமைப்படுத்திய கோழைப் பாண்டியன்.''

''நீங்கள்?''

''நான்-நான் சுதந்திரப் பாண்டிய நாட்டை மீண்டும் பெற உயிருள்ள மட்டும் போராடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் வீர பாண்டியனின் புதல்வன்.''

''சிந்தாமணி இந்த வார்த்தையைக் கேட்டவுடன், அந்த வாலிபனை நிமிர்ந்து நோக்கினாள். அவள்மீது தேவதரு மலர்கள் தூவப்பட்டன போன்ற உணர்ச்சியை அடைந்தாள். பொதிகையிலின்று சந்தனத் தென்றல் உடலெல்லாம் மென்மையாகப் படர்ந்தது போன்ற உணர்ச்சியை அடைந்தாள். பனித்துளிகளை அவள் மேனியெங்கும் தடவியதுபோன்ற நிலையை அடைந்தாள்.

''வீரபாண்டியன் மகனா தாங்கள்?''-அவள் வியப்புடன் விழிகள் விரியக் கேட்டாள்.

''ஆமாம். அந்தச் சுதந்தர மாவீரருடைய மகன். மற்றொரு சிங்கக்குட்டி. அதுசரி, நீ யார், நான் அறியலாமா? இந்தக் கானகத்திற்கு ஏன் வந்தாய்?'' என்று அவன் கேட்டான்.

ஒருகணம் சொல்லலாமா வேண்டாமா என்று சிந்தாமணி சிந்தித்தாள். ஏனோ மறைக்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது.

''நான்...நான்...பகைவனின் மகள்'' என்றாள். அதைச் சொல்லி முடிப்பதற்குள் ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டது போலவும் தீயைத் தீண்டியதைப் போலவும் உணர்ந்தாள்.

''குலோத்துங்க சோழ தேவரது அபிமானப் புதல்வியா? அடாடா... பகைவனிடம் வந்து வலியச் சிக்கிவிட்டாயே!'' என்று கூறியவாறு வீர வாலிபன் பெரிதாக நகைத்தான்.

## 3

''பகைவனிடம் வந்து வலியச் சிக்கிவிட்டாயே!'' என்று வீரபாண்டியன் மகன், வீர வாலிபன் கேட்டவுடன் ஒரு கணம் சிந்தாமணி துணுக்குற்றாலும், அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல் கலகலவென்று சிரித்தாள். தனது கூர்மையான பார்வையால் அவன் இதயத்தை ஆராய முயன்றாள்.

''ஏன், என்னை நீங்கள் கண்ணி வைத்துப் பிடிப்பதற்காக நீண்ட நாள்களாக முனைந்திருந்தீர்களோ?'' என்று சிந்தாமணிகேட்டாள்.

''ஆமாம்'' என்று அவன் சொல்வான் என்று சிந்தாமணி எதிர்பார்க்கவில்லை.

''ஆமாம்; சோழர் குலத்துப் பெண் யாராவது கிடைப்பார்களா என்று நாங்கள் தேடிக் கொண்டிருந்தோம். சமயம் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்'' என்றான் பாண்டிய குமாரன்.

இப்போது மீண்டும் பெரிதாக நகைத்த சிந்தாமணி ''இப்பொழுதுதான் தெரிகிறது பாண்டியர்கள் ஏன் தோல்வியைக் காண்கிறார்கள் என்று. சோழர்குல மங்கை காட்டிற்கு வலிய வந்து உங்களிடம் சிக்குவாள் என்று எதிர்பார்த்து இந்தக் கானகத்தில் காத்திருக்கிறீர்களா!'' என்று அவள் கேட்டது மெல்லிய முள் குத்தியது போன்ற உணர்வினை ஏற்படுத்தியது.



அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். அவள் விழிகளை உற்றுநோக்கினான். செழுமையான மேனியில் பூரித்துப் பொங்கி நிற்கும் அழகு மகுடங்களை இமையாது நோக்கினான். விழிகள் கூர்மையாகத் தன்னைத் தாக்க முற்படும் வேகத்தை உணர்ந்து நோக்கினான்.

''ஏன் மௌனமாகிவிட்டீர்கள்? என்னைச் சிறைப் படுத்தலாமே'' என்றாள் சிந்தாமணி.

பாண்டிய குமாரனுக்கு இப்போது சிரிப்பு வந்தது. அவன் இதழ்களில் இதுபோன்ற நகை மலர்ந்து நாள்கள் பலவாகிவிட்டன.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''-சிந்தாமணி கேட்டாள்.

''இந்த நிலையிலும், தைரியமாகப் பேசுகிறாயே, என்ன துணிவு இருக்க வேண்டும் உள்ளிடத்தில் என நினைத்தேன். சிரிப்பு வந்தது.''

''இதில் சிரிக்க என்ன இருக்கிறது?''

''ஆம்; இருக்கிறது. நான் சோழர்களின் பரமவிரோதி. எனது தந்தையைவிட மிகுதியாகப் பழிவாங்கும் மனப் பான்மை என் உள்ளத்தில் குமுறி நிற்கிறது. என் எதிரே சோழ நாட்டின் மிக முக்கிய மங்கை ஒருத்தி வந்து வசமாகச் சிக்கி விட்டாள் என்றால் நான் அடுத்து என்ன செய்வேன் என்று நினைத்தேன்; சிரிப்பு வந்தது!''

''மீண்டும் கேட்கிறேன். இதில் சிரிக்க என்ன இருக்கிறது? சீற்றமல்லவா கொள்ளவேண்டும்? பழிவாங்கும் எண்ணத்தை நிறைவேற்ற நீங்கள் உடனே சீறி எழ வேண்டியதுதானே?'' என்று சிந்தாமணி முகத்தில் எந்தவிதச் சலனமும் மாற்றமுமின்றிக் கூறவும், பாண்டிய குமாரன் தன் சிரிப்பை நிறுத்தி, சிந்தனைக்கு இடங்கொடுத்தான்.

சிந்தாமணியைப் பற்றி நொடியில் அவன் அறிந்து கொண்டான். பகைவரின் மகள் வேவு பார்க்க வரவில்லை என்பதை அவன் உணர்ந்தான்.

''நான் சோழனைப் போல் கோழையல்லன். நிரபராதி களான பெண்களிடம் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள மாட்டேன்!'' என்று அவன் மெல்லக் கூறினான்.

சோழர்களைக் கோழையென்று எவ்வாறு சொல்கிறீர்கள்? உங்களைப் போல அவர்கள் பயந்து காட்டிற்குள் ஒடவில்லையே...'' என்று சீறினாள் சிந்தாமணி.

''நாங்கள் தோற்றோடிக் காட்டுக்குள் மறைந்திருப்பது உண்மைதான். என்றாவது ஒருநாள் வெளிப்படுவோம். ஆனால், பெண்களை மரியாதைக் குறைவாகச் சோழர்களைப் போல் நடத்தமாட்டோம். சுத்தவீரன் அப்படிச் செய்ய மாட்டான். அதனால்தான் சோழர்களைக் கோழை என்றேன்'' என்று மிடுக்குக் குறையாமல் பேசினான் வீரபாண்டியன் மகன்.

''அப்படி என்ன செய்துவிட்டார்கள்-உங்கள் பேச்சில் நூறு தடவை சொல்லிவிட்டீர்களே?'' என்றாள் சிந்தாமணி சற்று மெல்லிய புன்னகை இதழ்களில் நெளிய.

''பெண்ணே! உன் பெயரைக்கூட நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், உன்னைப் பார்த்தவுடன் சற்று நின்று பேசவேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் உன்னுடன் பேசுகிறேன். பெண்களிடம் நெருங்கிப் பேசுவதில்லை என்று உறுதி பூண்டிருக்கிறேன்...'' என்றான் பாண்டிய குமாரன்.

''அரை நாழிகையாக நீங்கள் பேசிக்கொண்டிருக் கிறீர்கள். இன்னும் சிறிதுநேரம் கழிந்தால், என் தோழியும்



வந்துவிடுவாள். அவளுடனும் பேசும்படி நேரிடும். அப்போது தங்கள் உறுதி என்னாவது?''

சிந்தாமணியின் இந்தப் பேச்சைக் கேட்ட பாண்டிய குமாரன் முகம் சிவந்தது.

''பெண்ணே! மிகவும் சாமர்த்தியமாகப் பேசுகிறாய்'' என்றான்.

''என் பெயர் சிந்தாமணி! இனிப் 'பெண்ணே பெண்ணே!' என்றழைக்க வேண்டாம். என் சாமர்த்தியத்தை இதுவரை மெச்சியவர்கள் இருவரே. அவர்களுள் தாங்கள் ஒருவர். உம்! தாங்கள் உறுதியை மாற்றிக் கொண்டதன் காரணத்தை நான் அறியலாமா?'' என்று சிந்தாமணி கேட்டாள்.

'சிந்தாமணி'-பெயரை ஒருமுறை பாண்டியகுமாரன் மெல்லச் சொல்லிப் பார்த்துக்கொண்டான்.

''உனது சாமர்தியமான பேச்சை மெச்சும் மற்றொருவர் யாரென்று நான் அறியலாமா?'' என்று அவன் கேட்டான்.

''அவர் யாரென்று சொல்லட்டுமா? சொன்னால் கோபப்பட மாட்டீர்களே! சீற மாட்டீர்களே?'' என்று பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள். தொண்டையை மெல்லச் செருமிக் கொண்டாள்.

''புயல் பெருக வளம் பெருகப் பொய்யாத நான்மறையின்
செயல்வாய்ப்பத் திருமகளும் சயமகளும் சிறந்து வாழ
வெண்மதிபோற் குடைவிளங்க வேல்வேந்த ரடி வணங்க
செம்பொன் வீர சிங்காதனத்துப்
புவனமுழு துடையாளோடும் வீற்றிருந்தருளிய
கோப்பர கேசரி வன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்...''

என்று சிந்தாமணி குலோத்துங்க சோழரின் மெய்க் கீர்த்தியைச் சொல்லி முடிக்கு முன்பாக, பாண்டியகுமாரன் உரத்த குரலில், ''நிறுத்து! நிறுத்து... நான் மீதியைக் கூறுகிறேன்:

''விக்கிரம பாண்டியற்குக் கொடுத்து மீண்டதற் பின்
பரிபவத்தா
லெடுத்து வந்து நெட்டூரில் எதிர்ந்த வீரபாண்டியன்
முடித்தலைக் கொண்டமர் முடித்தவன் மடக் கொடியை
வேள மேற்றி...''

என்று கூறும்போது பாண்டிய குமாரன் குரலில் ஒருவிதப் படபடப்பு மிகுந்தது. சற்று நிறுத்தி, ''சிந்தாமணி! நான் இப்போது கூறியதற்குப் பொருள் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

சிந்தாமணி தலையை அசைத்தாள். ஏதோ கூற முற்படுவதற்கு முன்பு, ''சோழனைக் கோழை என்றேனே! இதற்காகத்தான். என் தந்தையை வஞ்சித்து, விக்கிரம பாண்டியனுக்கு மதுரை அரியணையைக் குலோத்துங்க சோழன் கொடுத்தான். என் தந்தை போரில் தோற்றார், சரி; போரில் வெற்றி தோல்வி இயல்பு. முடியைப் பறித்தார்-யுத்த தர்மம். மடக் கொடியை வேளமேற்றி-இதுதான் பேரரசர் என்று சொல்லிக் கொள்ளும் திரிபுவன மகா சக்கரவர்த்திக்கு அழகா?-மடக்கொடியை வேளமேற்றி என்று தன் புகழைப் பாடவும் செய்திருக்கிறாரே, வேளம் என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா?'' பாண்டிய குமாரன் ஆக்ரோஷமாகக் கேட்டான்.

சிந்தாமணி தலையைப் பக்கவாட்டில் அசைத்தாள். பாண்டியகுமாரன் முகம் மாறி இருப்பதையும் குரல் மாறி இருப்பதையும் கண்டாள்.



''போரில் சிறை பிடிக்கப்பட்ட அரசகுல மகளிரைச் சிறைவைக்கும் இடத்திற்கு வேளம் என்று பெயர். என் அருமைத் தாயைக் குலோத்துங்கன் போரில் பிடித்துச் சிறையிலிட்டான்.''

பாண்டிய குமாரன் உதடுகள் துடித்தன. உள்ளக் குமுறல் உடலில் பிரதிபலித்தது. சிந்தாமணி புரிந்துகொண்டாள்- பாண்டிய குமாரனின் தாய் கங்கைகொண்ட சோழபுரத்தில் தனிச் சிறையில் இருக்கிறாள். போரில் தோற்றதைவிடத் தாயை எதிரியிடம் சிக்கவிட்டது பெரிய அவமானமல்லவா? பாண்டிய குமரன் பொங்கிக் கொப்பளித்து எழுவதில் நியாயமிருக்கிறது. மீண்டும் அரசுரிமையை அடையப் படை வீரர்களைச் சேகரிப்பதிலும் நியாயமிருக்கிறது. பழிக்குப் பழி தீர்த்துக்கொள்ள இந்தச் சமயத்தில் என்னை என்ன செய்தாலும் அதில் மிகமிக நியாயமிருக்கிறது.

''பாண்டிய குமாரரே! நீங்கள் சீறி எழுவதில் நியாயமிருக்கிறது. இதோ எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் அளித்து உங்கள் வெஞ்சினத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள். நான் ஒரு யோசனை சொல்கிறேன், அதன்படி செய்வீர்களா? என்னை இப்போதே உங்கள் பாசறைக்குக் கவர்ந்து சென்றுவிடுங்கள். என் தோழி இப்போது வருவாள். என்னைக் காணாது அஞ்சி நடுங்கி, மதுரைக்கு ஓடோடுவாள். நீங்கள் செய்தி அனுப்புங்கள்-உங்கள் அருமைத் தாயாரை-பாண்டிய அரசியை வேளத்திலிருந்து விடுவித்தால்தான் என்னை விடுவிக்கமுடியும் என்று பணயம் வையுங்கள்...''

சிந்தாமணி சொல்வதற்குள் பாண்டிய குமாரன் பெரிதாகச் சிரித்து, ''நான் கோழையல்லன். வேல்களுடனும், வாள்களுடனும்தான் மோதுவேன், பெண்களுடன் அன்று'' என்றான்.

சிந்தாமணி அவன் விழிகளைச் சந்தித்து ஒருகணம் இமைக்காது நோக்கினாள்.

பாண்டிய குமாரனும் அவளது கூரியவிழிகளின் பார்வையின் சக்தியைத் தாங்காது மெல்லத் தலைகுனிந்தான்.

''என் வாழ்நாளிலேயே இதுதான் முதல்முறை தலைகுனிந்தது'' என்று மெல்ல நகைத்தவாறு கூறினான் பாண்டிய குமாரன்.

சிந்தாமணியின் உடல் சிலிர்த்தது. புதிய இயலாத இன்பவேதனை உடலெங்கும் பரவியது.

''மணியை அடிக்கலாமா?'' என்று கோயில் மணியைச் சுட்டிக் காட்டினாள்.

''ஹூஹூம்... கூடாது. என் வரையில் உனக்கு ஆபத்து நீங்கியதே தவிர, பாண்டிய வீரர்களிடமிருந்து அன்று, இங்கிருந்து எவ்வளவு விரைவில் நீ சென்றுவிட முடியுமோ அவ்வளவுக்கு நல்லது. நான் வருகிறேன்...'' என்று கூறிப் புறப்பட்ட பாண்டிய குமாரன் மறுமொழியும் எதிர்பாராமல் நொடியில் கானகத்தின் அடர்ந்த மரங்களுக்கிடையே சென்று மறைந்தான்.

அவன் செல்வதையே இமைக்காமல் நோக்கியவாறிருந்த சிந்தாமணி, தானும் அவன் சென்ற வழியே விரைந்து செல்லலாமா என்று ஒருகணம் எண்ணினாள். ஆனால், தோழியின் குரல் அப்போது கேட்கவே தன் சுய நிலையடைந்தாள்.

''ஏடீ! எவ்வளவு நேரமாக உன்னைத் தேடுவது?'' என்று பொய்க் கோபத்தை வரவழைத்துக் கொண்டாள்.

''ஒரு வாய்த் தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை. அலைந்து அலைந்து தாகமதிகமாகிவிட்டது. அதனால் தாமதம்'' என்றாள் தோழி.

''அலையாமலே எனக்குப் புதுத்தாகம் பிறந்துவிட்டது'' என்றாள் சிந்தாமணி. அவள் முகம் நாணத்தால் சிவந்தது.



333875
604398

## 4

சிந்தாமணி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

''தேவி! தங்களுக்கு மிக பயமாக இருந்ததா?'' என்று தோழி கேட்டாள்.

''பயமா? எனக்கா? எதற்காகப் பயப்பட வேண்டும்?''

''காடும், காளி கோயிலும், தனிமையும் தங்களுக்கு அச்சத்தை அளிக்கவில்லையா?''

''இல்லை; வன வனாந்திரங்களின் இயற்கைச் சூழலில் ஒன்றிப்போய் மெய் மறந்திருந்தேன்!''

''அங்கே விரோதிப் படைகளின் நடமாட்டம் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''ஒரு விரோதியைக் கூடக் காணவில்லையடி. எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்திருக்கிறது; மனத்துக்கு அமைதியை அள்ளித் தருகிறது. மதுரை மாளிகையைவிடக் காளி கோயில் எனக்குப் புதுத் தெம்பை அளிக்கிறது. அடிக்கடி வரவேண்டும் என்று தோன்றுகிறது.''

''அரசர் அனுமதிக்கமாட்டார் தேவி!''

''எந்த அரசரைச் சொல்கிறாய்?''

''விக்கிரம பாண்டியரைத்தான் சொல்கிறேன்.''

''அவர் யார் என்னை அனுமதிப்பதற்கும் அனுமதிக்காததற்கும்?'' சிந்தாமணி சீறினாள்.

தோழி சிரிப்பை மெல்ல அடக்கிக்கொண்டு, ''அவருக்குத் தங்களிடமில்லாத உரிமை வேறு யாருக்கு

இருக்கிறது தேவி? பாண்டிய நாட்டின் அரசியாகப் போகும் தங்களுடைய நலன்களைப் பேணிக்காப்பது அவரது கடமையல்லவா?'' என்றாள்.

''பாண்டிய நாட்டின் அரசியா? என்னடி உளறுகிறாய்?'' மெய்யாகவே அவள் வியப்புடன் தோழியை நோக்கிக் கேட்டாள்.

''ஆமாம், தேவி! விக்கிரம பாண்டியர் இதயத்தில் நீங்கள் குடிகொண்டுவிட்டீர்கள். தங்களை எப்படியாவது அடைய வேண்டுமென்று அவர் துடிக்கிறார். விக்கிரம பாண்டியவர், மதுரை மாமன்னர்; அவரது மனத்துக்கிசைந்த மணவாட்டி நீங்கள்; அரசியாக வேண்டியதுதானே... அதனால் உங்கள் நலனைப் பேணிக்காப்பது அவரது கடமைதானே?'' என்று தோழி ஆவலுடன் கூறினாள்.

மூண்டது கோபம் சிந்தாமணிக்கு. ''என்னடி பிதற்றுகிறாய்? மாமன்னர் விக்கிரம பாண்டியர் இதயத்தில் குடிகொண்டு விட்டேனா? ஏன் எனக்கென்று ஓர் இடமில்லையா? மாமன்னர் என்று இனி மற்றொரு முறை சொல்லாதே. திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரைத் தவிர எட்டுத் திக்குகளிலும் மாமன்னர் என்றழைக்கப்படும் யோக்கியதை உடையவர் வேறு ஒருவருமில்லை என்பதை நீ தெரிந்து வைத்துக் கொள். கங்கைகொண்ட சோழபுரத்தில் மிகப் பெரிய மாளிகையில் வசிப்பதற்கு எனக்கு இடமளித்திருக்கிறார், சோழ சக்கரவர்த்தி. விக்கிரம பாண்டியருக்கு அவர் அளித்த பிச்சை இந்த மதுரை. சோழ சக்கரவர்த்தியின் ஆளுகையின் கீழ்தான் விக்கிரம பாண்டியர் சிற்றரசர் போல் இருக்கிறார். நான் ஏன் அவர் இதயத்தில் இடம் பிடிக்க வேண்டும்?'' என்று சிந்தாமணி பேசுவதைக் கேட்டதோழி இரு கரங்களையும் கொட்டி, ''தேவி! இவ்வளவு சாமர்த்தியமாகப் பேசத் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தவர் யார்?'' என்று நகைத்தவாறு கேட்டாள்.



சிந்தாமணி மௌனமானாள். 'உனது சாமர்த்தியமான பேச்சை மெச்சும் மற்றொருவர் யார்?' என்று கேட்ட பாண்டிய குமாரனின் குரல் இப்போது மிக அருகே ஒலித்ததுபோல் உணர்ந்தாள். தன் திருநாட்டை மீட்டு, சுதந்தரமாக ஆளவேண்டும், என்ற துடிப்புடைய பாண்டிய குமாரனின் வீரத் திருவிழிப் பார்வை அவள் எதிரே வந்து நின்றது.

''தேவி! திடீரென்று மௌனமாகி விட்டீர்களே. கண்களை மூடிக்கொண்டு என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று தோழி கேட்டாள்.

சிந்தாமணி மெல்லச் சிரித்துக் கொண்டாள். ''அடி, அந்தக் காளி கோயில் எவ்வளவு அழகாக இருக்கிறது. பார்த்தாயா?'' என்று கேட்டாள்.

''ஓ! காளிகோயிலை நினைத்துக் கொண்டீர்களா? மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலை விடக் காளிகோயில் நன்றாக இருக்கிறதா?'' என்று தோழி கேட்டாள்.

''மக்கள் சந்தடி மிகுந்த அங்கயற்கண்ணி அம்மையின் கோயிலைவிட இயற்கைச் சூழலில் கம்பீரமான இந்தக் காளி கொலுவீற்றிருக்கும் கோயில் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்று சிந்தாமணி கூறி, மீண்டும் அந்தக் கானகச் சூழ்நிலையை மனக்கண்முன் கொண்டு நிறுத்திக் கொண்டாள்.

''தேவி, தேவி'' என்று இரண்டு முறை அழைத்தும் சிந்தாமணி இனிய நினைவினின்று விடுபடவில்லை.

அவளுக்கு ஒருவருடனும் பேசப் பிடிக்கவில்லை. உறக்கம் வரவில்லை, உணவு செல்லவில்லை. ஆயிரமாயிரம் காத தொலைவுக்கு அப்பாலிருக்கும் ஒன்றை உற்று நோக்குவதுபோல் விழிகள் குத்திட்டு நின்றன.

மறுநாளும் காளி கோயிலுக்குச் செல்ல விரும்பினாள் சிந்தாமணி. தன் உயிர்த் தோழியிடம் அன்று உண்மையைச் சொல்லவில்லை.

''காளி மிகவும் வரப்பிரசாதி; நான் தொடர்ந்து ஆறு நாள்கள் தேவியைச் சுற்றி வணங்குவதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் சிந்தாமணி.

''கோயிலைச் சுற்ற அங்கு இடமே இல்லையே தேவி'' என்றாள் தோழி.

''கோயிலைச் சுற்றி உள்ள முட்புதர்களை அகற்றுவோம்.''

''அதற்கு வேண்டிய பணியாள்களை அழைத்து வரட்டுமா?''

''ஓ! ஓ! வேண்டாம். வேண்டாம். விரதம் மேற் கொண்டிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது. உன்னிடமே சொல்வதற்குச் சற்றுத் தயங்கினேன். ஆனால், இதயத்திற்கு இதமான உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன்?'' என்று சிந்தாமணி கூறியது கேட்டு அவள்தோழி பெருமையடைந்தாள்.

மறுநாளும் சிந்தாமணி வைகையாற்றினைக் கடந்து, கால் நோக நடந்து காட்டு நடுவிலுள்ள காளி கோயிலை அடைந்தாள்.

வெயில் சிறிதே நுழைந்து ஒளி ஊட்டும் அந்தக் கானகத்தே, அமைதி ஆட்சிபுரியும் அந்த வேளையில்,



உயர்ந்து அடர்ந்து வளர்ந்த மரத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கும் கொடிகளின் ஒருவிதக் காட்டு மலர்களின் மணம் வீச, வண்டுகளின் ரீங்காரம் மட்டும் நிறைந்த அந்த இடத்தில் சிந்தாமணி வந்து நின்றாள்.

மனித சந்தடியையே காணவில்லை. கருவறைக்குள் காளிதேவி அவர்களைப் பார்த்தும் பாராதவள் போல் அமர்ந்திருந்தாள். புதிய மலர் மாலை காளிக்குச் சூட்டப் பட்டிருந்தது. அன்று யாரோ வந்து அணிவித்திருக்கிறார்கள்.

மான்குட்டியொன்று அப்பாவித்தனமாக விழித்து விட்டு ஓடியது. சிறு பாம்பொன்று சர்வ சுதந்தரத்துடன் கோயில் மேடைமீது ஏறி மறுபுறம் இறங்கி ஊர்ந்து சென்றது.

''ஐயோ, பாம்பு!'' என்று தோழி சிந்தாமணியின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். கோயில்மணி மேலே ஓய்வாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

'பாண்டிய குமாரனைக் காணவில்லை. மணி ஓசையை எழுப்பலாமா? கூடாது என்று அவர் சொல்லியிருக்கிறார். நாம் வருவோமென்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். வருவதாகக் கூறி நாம் அன்று பிரியவில்லையே' என்று நினைத்துக் கொண்டாள்.

குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். கர்ப்பக் கிருகக் கதவிடுக்கு வழியாகக் காளி தேவியைத் துதித்தாள்.

''தேவி! இதென்ன சோதனை? அமைதியாக இருந்த என் இதயத் தடாகத்தில் இப்படியொரு சலனம் ஏன் ஏற்பட்டது? இனம்புரியாத உணர்வு உடலில் ஏனோ பரவுகிறதே, ஏன்? நேற்று உன்னைத் துதித்தலிருந்துதான் என் மனத்தில் மாறுதல். உன் சோதனை என்னை என்ன பாடு படுத்தப்போகிறதோ?'' என்று காளியுடன் பேசுவதுபோல் முணுமுணுத்தாள்.

சிந்தாமணி ஏதோ தோத்திரம் கூறுகிறாள் என்று தோழியும் கண்களை மூடிக்கொண்டவளாய்த் தியானத்தில் ஆழ்ந்தாள். அவள் தஞ்சை மாநகரைச் சேர்ந்தவள்; சிறு வயதிலேயே சிந்தாமணிக்கு உறுதுணையாயிருக்கப் பாங்கியாகச் சேர்ந்து கங்கை கொண்ட சோழபுரம் வந்து விட்டாள். அரச போக வாழ்க்கையில் பெற்றோரையே மறந்திருந்த அவளுக்கு, இப்போதிப்போது ஊர் நினைவு ஏற்பட்டு மனத்தை வருத்தியது. சொந்த ஊருக்கு எப்போது செல்வோம், வயதான தன் பெற்றோரை எப்போது காண்போம் என்று ஏக்கம் ஏற்பட்டது. காளிதேவியிடம் அதைத்தான் பிரார்த்தித்தாள்: ''தேவி! என்னை என் பெற்றோரிடம் சேர்ப்பித்துவிடு...''

சிந்தாமணி என்ன வேண்டினாள்? இன்னும் அவள் எதும் வேண்டித் துதிக்கவில்லை. அவள் நினைவெல்லாம் பாண்டிய குமாரனிடம் இருந்தது. நேற்று அவள் அவனுடன் அமர்ந்து உரையாடிய இடத்தை ஒருமுறை பார்த்தாள். விடைபெற்றுக்கொண்டு, திடீரென்று மரங்களின் மறைவில் அவன் மறைந்து சென்ற இடத்தை ஒரு முறை பார்த்தாள். அவனைக் காணோம்.

ஒருவேளை, என்னுடன் தோழியும் இருப்பதனால் அவர் வரவில்லையோ? இருக்கும்; இருக்கும். அப்படித்தானிருக்கும்.

''மிகவும் தாகமாக இருக்கிறதில்லையா?'' என்று தோழியைப் பார்த்துக் கேட்டாள் சிந்தாமணி.

''நேற்று நான் வெகுதூரத்துக்கு வெகுதூரம் அலைந்தேன். தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால் முன் எச்சரிக்கையாக, சுரைக் குடுவையில் தண்ணீர்கொண்டு வந்திருக்கிறேன்'' என்றாள் தோழி.



தோழியின் மீது தாங்கவொண்ணாக் கோபம் பொங்கியது சிந்தாமணிக்கு. இவளை உடன் அழைத்து வந்தது மிகப் பெரிய பிழை என்று தன்னை நொந்து கொண்டாள். கோயிலின் முன் மேடையில் ஏக்கத்துடன் அமர்ந்து கொண்டாள்.

தோழியும் சற்றுநேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, ''தேவி! அதோ காய்த்து குலுங்கியிருக்கிற நெல்லி மரத்தினின்று நெல்லிக்காய் பறித்து வரட்டுமா?'' என்று கேட்டு, சற்றுத் தொலைவிலுள்ள நெல்லி மரம் நோக்கிச் சென்றாள். அவள் நகர்ந்த மறுநொடியே ஓர் அம்பு சிந்தாமணியின் அருகே பாய்ந்து வந்து பூமியில் தாக்கி வீழ்ந்தது.

சிந்தாமணி திடுக்கிட்டு எழுந்து ஒதுங்கி நின்றாள். பாண்டிய வீரர்களின் கை வரிசைதான் இது என்று முடிவு செய்துகொண்டாள். இன்னும் சிறிது நேரத்தில் மார்புக்கு நேரே குறிவைத்து எய்யப்படலாம் என்று அஞ்சியவளாக மண்டபத் தூண் அருகே மறைந்து நின்றாள்.

அம்பு தைத்த இடத்தில் அம்பின் மேல் பாகத்தில் சிறு ஓலைச் சுருள் சுற்றப்பட்டிருந்தது. சிந்தாமணி கூர்ந்து கவனித்தாள். ஓலைச் சுருளுக்காகவே அந்த அம்பு எய்யப்பட்டதுபோல் தோன்றியது.

பரபரப்புடன், அந்த ஓலைச் சுருளை எடுத்துப் பிரித்துப் படித்தாள்.

''அந்நியருக்கு இங்கு இடமில்லை. உன்னை அந்நியராகக் கருதவில்லை. வருவதானால் துணையின்றி வரலாம். - உன் பாண்டிய குமாரன்'' என்று ஓலையில் எழுதப்பட்டிருந்தது.

சிந்தாமணி ஓலையை மறைத்துக் கொண்டாள். அவர் எழுதியிருப்பது நியாயம்தான். நாம் எதிர்பார்த்ததுபோலவே நடந்திருக்கிறது. இன்று நாம் காத்திருப்பதில் பயனில்லை.

தோழியைக் கைதட்டி அழைத்தாள்.

''நாம் இப்போதே புறப்பட்டுவிடுவோம்'' என்றாள் சிந்தாமணி.

''பிரார்த்தனை முடிந்துவிட்டதா?'' என்று தோழி கேட்டாள்.

தலையை அசைத்த சிந்தாமணி, அங்கிருந்து உடனே புறப்பட்டாள். ''நாளைப் பொழுது எப்போது விடியப் போகிறது; உச்சிவேளை எப்போது வரப்போகிறது என்று அந்தக் கணம் முதல் காத்திருந்தாள்.

மறுநாள் சிந்தாமணி தன் தோழியின் துணையின்றியே பாண்டிய குமாரனைக் காணப்புறப்பட்டாள். தோழியிடம் தன் காதலைப் பற்றி எதுவும் இதுவரை சொல்லவில்லை. காதல் எவ்வளவு புனிதமானதோ அவ்வளவு அந்தரங்கமானது. அதிலும் சோழநாட்டுப் பகைவனைக் காதலிக்கும் தன் நிலையை ஒருகணம் எண்ணிப் பார்த்தாள்.

விக்கிரம பாண்டியனுக்கும், பாண்டிய குமாரனுக்கும் உள்ள ஒற்றுமைகளை நினைத்துப் பார்த்தாள். 'விக்கிரம பாண்டியன் பாண்டிய நாட்டு மன்னன். என் வளர்ப்புத் தந்தை குலோத்துங்க சோழரின் அபிமானம் பெற்றவன். கம்பீரமானவன். புஜபலத்தில் குறைந்தவனல்லன். அழகு என்று பார்க்கும் போது பாண்டிய குமாரனைவிட ஒருபடி மேல்தான். தான் அரசியாகும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் பாண்டிய குமாரன் காட்டிலே வசிக்கிறான். தந்தை வீரபாண்டியனை வெற்றியுறச் செய்ய இப்போதுதான் வீரர்களைச் சேர்க்கிறான். வெஞ்சினத்தை உள்ளத்திலே தேக்கி வைத்திருப்பதால்



முகத்தில் எப்போதுமே ஒரு குரூரம் தென்படுகிறது. விக்கிரம பாண்டியனை வென்று, பிறகு சோழர்கள் பிடியிலிருந்து பாண்டிய நாட்டை விடுதலை பெற வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் ஒருவேளை மதுரை அரியணையில் அமர பாண்டிய குமாரனுக்கு வாய்ப்பேற்பட்டால், நான் அரசியாகலாம்...''

சிந்தாமணி தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். அரசியாக வேண்டும்! ராஜகுமாரியாக வேண்டும்! இளவரசியாக வேண்டுமென்ற எண்ணத்துடனா கங்கை கொண்ட சோழபுரத்தில் வளைய வந்தோம். நம் குலமென்ன, பரம்பரையாக அரசகுலமா? என் தந்தை வேதவனமுடையான் அண்ணன் பல்லவராயன் என்றால் எதிரிகள் அஞ்சி நடுங்கினர். ஏன்? அவர் சக்கரவர்த்தி என்பதாலா? இல்லை. மாவீரர். மாபெரும் படைத்தலைவர், மாதண்ட நாயர், லட்சக்கணக்கான சோழ வீரர்களை அணிவகுக்க வைத்துச் சீறிப்பாய்ந்து, ஈழத்துப் படைகளை நிர்மூலமாக்கிய திறமை படைத்தவர். சொல்லப்போனால் நாம் ஒரு படைத்தலைவர் மகள். அரசிளங்குமரியாக நாம் எப்படி ஆசைப்படலாம்? சோழ சக்கரவர்த்திகள் நம்மை அன்புடன் வளர்க்கிறார் என்றால் நம் தந்தையிடம் அவருக்குள்ள மரியாதை. நாம் தாய் தந்தையற்ற அநாதை என்ற அனுதாபம். அதனால் பேரன்புடன் அரசகுமாரிபோல் வளர்க்கிறார். ஒன்றைப்போல் மற்றொன்று இருக்கும்போது, அதுவாகவே ஆகிவிடுவது இயலுமா? முடியுமா? கூடுமா? நியாயமா?

# 5

''எந்த ஒரு சக்தி என்னை இங்கே வரவழைக்கிறது என்று எனக்கே புரியவில்லை'' என்று பாண்டியகுமாரனின் பரந்த தோள்களில் முகத்தைப் புதைத்துக்கொண்டு ஒரு நாள் கேட்டாள் சிந்தாமணி.

எதிரேயுள்ள காளி கோயிலைச் சுட்டிக் காட்டினான் பாண்டியகுமாரன்.

தலையைச் சிறு குழந்தைபோல அசைத்தாள் சிந்தாமணி. அவனது பரந்த மார்பின்மீது விரல்களால் கோலமிட்டு, அவனது உணர்ச்சி வயப்பட்ட செழுமையான உதடுகளைத் தன் மெல்லிய விரல்களால் மீட்டி, ''சக்தி அங்கே இல்லை; இங்கேதானிருக்கிறது'' என்று கூறினாள்.

பாண்டிய குமாரன் மெல்ல நகைத்தான். அதில் விரக்தி இருந்தது.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். எல்லாம் நமது சக்தியினால்தான் இயங்குகிறதென்று. ஆனால் அதற்கு மேலே ஒரு சக்தி இருக்கிறது- அதுதான் எதிரேயுள்ள அந்தச் சக்தி'' என்றான்.

சிந்தாமணி அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

''என்ன பார்க்கிறாய் சிந்தாமணி?'' என்று பாண்டிய குமாரன், அவள் முதுகை மெல்ல வருடியவாறு கேட்டான். இன்னும் சற்று இறுக்கமாக அணைத்துக்கொள்ள வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. என்றாலும், சுய கட்டுப்பாடும், இதயத்தில் எப்போதும் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கும் 'போர்-போர்' என்ற உணர்ச்சிப்பிழம்பும் அணைபோட்டன.



''இன்று உங்கள் முகத்தில் ஒரு மாறுதலைக் காண்கிறேன்'' என்றாள் சிந்தாமணி.

''ஒரு மாறுதலுமில்லை. உன்னைப் போன்ற மதிமுகமா எனக்கு? முல்லைச் சிரிப்பா என்னிடம்? அல்லி விழியா என் விழிகள்? ஒரே மாதிரியாகத் தானிருக்கின்றன'' என்றான் பாண்டிய குமாரன். அவளது முன் நெற்றியில் படர்ந்திருக்கும் கூந்தலைக் கோதியவாறு.

''இல்லை, இல்லவே இல்லை. இரண்டு முழுப்பிறை நாள்களாகப் பார்க்கிறேன் தங்களை. இன்று சோர்வு தென்படுகிறது. விரக்தியான பேச்சின் சாயல் தொனிக்கிறது!''

''அப்படியா? ஒரு மாதகாலம் ஓடிவிட்டதா? உன்னை நான் சந்திக்கத் தொடங்கி? ஓ! அதனால்தான் என்னை எல்லாரும் ஒரு மாதிரியாகப் பேசுகிறார்கள்'' என்றான் பாண்டிய குமாரன்.

''தங்களை ஒரு விதமாகப் பேசத் துணிவுடையவர் யாரிருக்கிறார்கள்?'' கவலையுடன் கேட்டாள் சிந்தாமணி.

''எனக்கு நானே அதிகாரியல்லன். வெள்ளாற்றிற்கும் குமரிமுனைக்கும் இடையே பரந்து விரிந்திருக்கும் பாண்டிய நாட்டு மக்கள் எனது எசமானர்கள். அவர்களது அபிமானத்தைப் பெற்ற ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்கள் என்னை முழுவதுமாக ஆராய்ந்துணர்ந்து வருகிறார்கள். நான் மெத்தனமாக இருக்கிறேனாம்; சோர்வு குடிகொண்டு விட்டதாம்; குற்றம் சாட்டுகிறார்கள்.''

''அவர்கள் அப்படியொரு மாறுதலை எவ்வாறு உணர்ந்தார்கள்? வீரத் திருவிழிப் பார்வையும், உறுதியான நெஞ்சமும், கடமையை எப்போதும் எதிரொலிக்கும் இதயமுடைய தங்களிடம், சோர்வு குடிகொண்டு விட்டதென்று

எதைக்கொண்டு கூறுகிறார்கள்?'' சிந்தாமணி அவன் மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டு அண்ணாந்து அவன் முகத்தை நோக்கிக் கேட்டாள்.

அவன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு, தனது ஆள்காட்டி விரலால் அவளை நோக்கிச் சுட்டிக்காட்டி, ''உன்னைக் கொண்டுதான்'' என்றான்.

சிந்தாமணி பெருமூச்சுவிட்டாள். ''அப்பாடி, என் கவலை பாதி குறைந்தது'' என்றாள்.

''கவலை குறைந்ததா! என்ன சொல்கிறாய் சிந்தாமணி?''

''பாண்டிய தேவி மீது மிகுந்த காதல் கொண்டிருக்கும் நீங்கள், என்மீது சிறிதாவது இதயத்தில் இடம் வைத்திருப்பீர்களா என்று கவலை கொண்டிருந்தேன். அந்தக் கவலை நீங்கியது. உங்கள் இதயத்தில் எனக்கும் இடமிருக்கிறது என்பதை நான் உணருவதற்கு முன்பு அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்'' என்றாள்.

''அதனால்தான் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது'' என்று பாண்டிய குமாரன் கூறியவுடன், சிந்தாமணி சரேல் என்று அவன் மார்பிலிருந்து தன் முகத்தைத் தூக்கி, நிமிர்ந்து அமர்ந்து, கவலையுடன் அவனை நோக்கினாள்.

''ஆமாம், சிந்தாமணி! நான் உன்னைச் சந்திப்பது எங்கள் படை வீரர்களுக்குப் பிடிக்கவில்லை.''

''ஏனாம்? நான் பகைவன் மகள் என்பதை அறிந்து கொண்டார்களா? சிந்தாமணியின் கவலை இப்போது பயமாக மாறியது.

''இல்லை, இல்லை. நீ பகைவனின் மகள் என்பது அவர்களுக்குத் தெரியாது. நான் ஓர் அழகிய இளமங்கையை நாள் தவறாமல் சந்தித்துப் பேசிப்பொழுதை வீணாகக் கழிக்கிறேன் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.''



கடகடவென்று சிந்தாமணி இரு கைகளையும் கொட்டிச் சிரித்தாள்.

''ஆகா! மிக நன்றாக இருக்கிறது. தங்கள் தலைவரின் மகனுக்கும் அந்தரங்கம் என்பது ஒன்று இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாதா? மனவிருப்பங்கள் அவருக்கும் உண்டு என்பதை அவர்கள் அறியமாட்டார்களா? அவர்களும் அழகிய இளம் பெண்களைச் சந்தித்திருக்க மாட்டார்களா? வீரமும், காதலும் இரட்டைக் குழந்தைகள் என்பது அவர்களுக்கு ஏன் தெரியவில்லை? காதலுக்கு வீரமும், வீரத்துக்குக் காதலும் இந்த உலகம் உருவான காலத்திலிருந்து ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாக இருந்து வருவதை அவர்கள் அறிய மாட்டார்களா? ஓர் அரசகுமாரனைச் சந்தேகிக்க வேறு விஷயங்களே கிடைக்காதா? மன்னரின் மகன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவன் என்பதை அவர்களை எப்படி உணரவைப்பது?''-என்று மூச்சுவிடாமல் பேசினாள்.

பாண்டிய குமாரன் எழுந்து நின்றான். அவளது வேய்ந்தோளை மெல்லத் தன் வீரக்கரத்தால் அணைத்து, ''சிந்தாமணி! மிகவும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசிவிட்டாய். உனது கேள்விகள் நியாயமானவை. சோழ அரச குமாரன் ஒருவனைக் கேட்க வேண்டிய கேள்விகள். ஆனால், சிந்தாமணி! காதலைவிடக் கடமையொன்று என் தோளில் பெரிதாகச் சுமத்தப்பட்டிருக்கிறதே! போர்க்களத்திலே சோழர்களின் குடலைக் கிழித்து மாலையாக்கிப் பவனி வருவதையே எங்கள் வீரர்கள் விரும்புகிறார்கள். அழகிய இளம் பெண்ணின் தோளைத் தழுவி, காதல் மலரை அணிந்து, மோக அருவியில் நீராடி வருவதை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.'' பாண்டிய குமாரனின் விழிகளில் வீரக்கனல் ஒளிவீசியது.

அவன் முகத்தையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சிந்தாமணி, ''அப்படியென்றால், என்னை மறந்துவிட வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள், அப்படித்தானே?'' என்று அவள் கேட்கும்போது அவள் விழிகள் நீருண்ட மேகமாயின.

வீரபாண்டியன் மகனின் அணைப்பு இறுகியது.

''சிந்தாமணி! உன்னை நான், முன் எப்பொழுதும் அறிய மாட்டேன். இந்தக் காளி கோயிலின் முன்பு திடீரென்று சந்தித்தோம். உயிரை ஈவதற்கு ஒரு பகல் பழகினாலும் போதாதா? சிந்தாமணி! நீ பகைவனின் மகள் என்பதை நானறிவேன். பகைவன் மகளைத்தான் நான் காதலிக்கிறேன் என்பதையும் நான் அறிவேன். ஆனால் பாண்டிய வீரர்கள் அறிய மாட்டார்கள். அவர்கள் நோக்கமெல்லாம் பாண்டிய மகுடத்தை என் தந்தையின் முடியில் சூட்ட வேண்டும் என்பதே. என் தந்தைதான் நியாயமான உரிமையாளர். விக்கிரம பாண்டியன், சோழ அரசரிடம் சரணாகதி அடைந்து மதுரை அரியணையில் அமர்ந்துவிட்டான். ஆனாலும் சோழர்களின் கைப்பாவையாகத்தான் மதுரை அரியணையில் அமர்ந்து ஆட்சிபுரிகிறான். அடிமைத்தனமாக இருப்பதும் ஒன்றுதான்; சோழர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதும் ஒன்றுதான். அதனால் பாண்டியநாட்டு மக்களை அடிமைத் தளையிலிருந்து மீட்க நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம். என் தந்தை பாண்டியநாட்டு விடுதலைக்காக அனைத்துத் தியாகமும் செய்துவிட்டார். உண்மையான வீரர்கள் மலைப்பகுதியிலும் சேரநாட்டிலும் சிதறியிருந்தார்கள். அவர்களை ஒன்று சேர்ப்பதற்காக என் தந்தையும் நானும் அலைந்தோம். ஆபத்துதவிப் படை வீரர்களின் உற்சாகமும், உத்வேகமும் இல்லாவிடில் மீண்டும் சுதந்தரப் போராட்டத்தில் இறங்கியிருக்கமாட்டோம். என் தாய்



கங்கைகொண்ட சோழபுரம் சிறையிலிருக்கிறாள். இருவரையும் விடுதலை செய்யவேண்டும் என்பதை உன்னிடம் அடிக்கடி சொல்லி இருக்கிறேன். என் தந்தை என்னைத்தான் நம்பியிருக்கிறார். பாண்டிய வீரர்களும் என்னைத்தான் நம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையைக் குலைக்கும் வகையில் நான் நடந்து கொள்ளலாமா?'' பாண்டிய குமாரனின் குரலில் குழைவு இருந்தாலும் கடமை உணர்ச்சி மேலிட்டு நின்றது.

சிந்தாமணி மௌனமாக நின்றாள். அடுத்து பாண்டியகுமாரன் என்ன சொல்லப் போகிறான்? என்று அவள் விழிகள் எதிர்பார்த்தன. ஏக்கம் மிகுந்திருந்த விழிகளில் எதிர்பார்ப்பு இருந்தது. ஏமாற்றம் ஏற்படக்கூடாது என்ற கெஞ்சுதல் இருந்தது. அவள் விழிகளிலிருந்து மெல்ல நீர் கசிந்தது. விசும்பல் ஒலி மெல்ல எழுந்தது.

''பாண்டிய இளவரசரே!'' என்று மெல்லிய குரலில் அவள் பேசத் தொடங்கினாள். பாண்டிய குமாரன் அவள் கண்ணீரை மெல்லத் துடைத்தான். அடைபடாது பொங்கிவரும் நீரருவியை அவன் மார்பில் புதைத்து நனைத்து விம்மியவாறு, ''இன்று நான் யார் முகத்தில் விழித்தேன்?'' என்றாள்.

'நானும் யார் முகத்தில் விழித்தேன் என்று தெரியவில்லை. இரவு நடுநிசியிலும், பின் ஜாமத்திலும் உன் முகம்தான் என் எதிரே நிற்கும். அதிகாலையில் விழித்தெழும்போது அந்த அழகிய முகம் மறைந்து, என்னைத் தட்டி எழுப்பியவரின் முகம் எதிரே நிற்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முகம். இன்று யார் முகமோ தெரியவில்லை; நீ கண்ணீர் விடுவதைத் துடைத்து ஆறுதல் கூறுமாறு நேர்கிறது. உன் மனத்தைப் புண்படுத்தும்படியான வார்த்தைகளை நான் கூறும்படியாக நேர்ந்துவிட்டது. என்னை

மன்னித்துவிடு சிந்தாமணி! உன்னை மறந்தே விடுவேன் என்று பயந்து விட்டாயா? நமது காதல் நிறைவேறாத ஒன்று என்று அஞ்சிவிட்டாயா? நமது காதல் இந்தப் பூலோகத்தில் ஏற்பட்டதன்று. தேவலோகத்தில் நிச்சயிக்கப்பட்டதென நான் என்றோ முடிவு செய்துவிட்டேன்... ஆனால், நமது காதலுக்கு இப்போது ஒரு சோதனை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சோதனையில் வென்றுவிட்டால் உனக்கு நானும், எனக்கு நீயும் உறுதி...''

சிந்தாமணி நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் புதிய ஒளி ஏற்பட்டது. திடீரென்று பாண்டிய குமாரனை இறுக அணைத்துக்கொண்டு, ''பாண்டிய இளவரசே! நான் மிகவும் பாக்கியசாலி. தங்களை உரிமையுடன் மிக நெருங்கி அணைத்து நிற்கும் நான் முற்பிறவிப் புண்ணியம் செய்தவள். புண்ணியம் செய்தவளாக இல்லாவிட்டால் தங்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்குமா? என்னை நீங்கள் முழுவதுமாக ஏற்றுக் கொண்டுவிட்டீர்கள். தங்களைச் சந்திக்க வரும் அந்த நேரத்தில் நாம் கானகத்தின் பல பகுதிகளைச் சுற்றியதை நான் என்றுமே மறக்க முடியுமா? சலசலவென்று ஓடிவரும் அருவிக் கரையோரமாக நாம் கைகோத்துச் சென்ற இன்பச் சம்பவத்தை நான் எப்படி மறக்க முடியும்?''

நீரோடையின் சில்லென்ற குளிர் நீரில் பாதம் நனைய நடந்தபோது நான் கேட்டேன். ''இந்த நீரோடை எங்கிருந்து வருகிறது?'' என்று. நீங்கள் பெருமையுடன் சொன்னீர்கள், 'இந்த நீரோடை தோன்றும் இடத்திற்கே நான் சென்றிருக்கிறேன். மலை முகடுகளில் ஏறி நின்றிருக்கிறேன். சேர நாட்டிற்குச் செல்லும் குறுக்குப் பாதை இந்த ஓடை நெளிந்து வரும் வழிதான். நாம் ஒருநாள் போவோம்' என்றீர்கள். 'நான் எப்படி வரமுடியும்? தங்களுடனேயே



தங்கும் காலம்வரும்; அப்போது நீரோடை வழியே செல்வோம். மலை மீதேறிச் செல்வோம். மஞ்சு கொஞ்சும் மலைச் சிகரங்களின் மீதேறிச் செல்வோம். மேகங்களைக் கையால் பிடித்து அணைப்போம் என்று குதூகலத்துடன் கூறினேன். ஓரிடத்தில் பாறைமீது கால் வைத்து ஏறிச்சென்றேன். கால் வழுக்கியது; தடுமாறினேன். நீங்கள் என்னைச் சிறு குழந்தைபோல் இருகரங்களாலும் தூக்கிக் கொண்டீர்கள். வாளேந்திச் சுழற்றும் வீரக்கரம் என் மேனியில் வெள்ளைச் சாமரம் வீசியதுபோல் குளிர்ந்திருந்தது.

இத்தகு பேரன்பு பூண்ட என் தலைவா! என்னால் தங்களுக்கு அவப்பெயர் வரவேண்டாம். என்னால் காத்திருக்க முடியும். பாண்டிய மகுடத்தைத் தங்கள் தந்தை அணியும்வரை என்னால் காத்திருக்க முடியும். ஆனால் ஒரே ஒரு வரம் மட்டும் தரவேண்டும். வாரம் ஒரு முறையாவது தங்களைச் சந்திக்க அனுமதி தாருங்கள்'' என்று கூறி, பாண்டிய குமாரன் சிறிதும் எதிர்பாராத வகையில் தன் இதழ்களின் ஸ்பரிசத்தை அவன் மார்பிலே பதித்து, அணைப்பிலிருந்து விலகினாள்.

பாண்டிய குமாரன் உணர்ச்சி மிகுதியால் பேச முடியாது தழுதழுத்தான். ''அன்பே சிந்தாமணி'' என்ற குரல் மட்டுமே அவன் கண்டத்திலிருந்து எழுந்தது.

அப்போது ஏதோ ஒரு சங்கேத ஒலி கேட்கவே, கணத்தில் அங்கிருந்து துள்ளிச் சென்று கானகத்தில் மறைந்தான்.

சுவர்க்கத்தின் நுழைவாயில் வரை சென்ற உணர்ச்சியுடன் சிந்தாமணி அங்கிருந்து மெல்ல நடந்தாள். மதுரையை நோக்கி.

ஓரிரு நாள்கள் கழித்து மீண்டும் காளி கோயிலுக்கு வந்தபோதுதான், சடைமுடியணிந்த பூசாரியைச் சந்தித்தாள்.

அவரது எச்சரிக்கையும், பாண்டிய குமாரனைச் சந்திக்க முடியாத வேதனையும் உடன் சேர்ந்துகொண்டு, சோர்ந்து நடந்து மதுரையை அடைந்தாள். அன்றுதான் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து குலோத்துங்க சோழர் வந்திருந்தார். சிந்தாமணியைத் தன் அருகே அழைத்து, ''சிந்தாமணி! விக்கிரம பாண்டியனை உனக்கு மணம் பேசி முடிக்கப்போகிறேன். திருமணத்தைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கோலாகலமாக நடத்தப் போகிறேன்'' என்று கூறி அவளைக் கூர்ந்து நோக்கினார்.

சிந்தாமணி திடுக்கிட்டாள். ''நான் விக்கிரம பாண்டியனை மணக்க விரும்பவில்லை. என் மனமெல்லாம் வீரபாண்டியனின் மகனிடத்தில் ஐக்கியப்பட்டு விட்டது'' என்று சொல்லிவிடுவோமா என்று நினைத்தாள்.

பிறகு இன்னும் சில நாள்கள் கழித்து உண்மையைச் சொல்லிவிடுவோம் என்று முடிவுக்கு வந்தாள்.

குலோத்துங்கன், திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்கச் சென்றபோது, சிந்தாமணி காளி கோயிலருகே வீரபாண்டியனின் மகனைக் காணச்சென்றாள். வெகு நேரம் எதிர்பார்த்திருந்தாள். பாண்டிய குமாரன் வரவில்லை. ஆனால், பாண்டிய வீரர்கள் மரங்களின் மறைவிலிருந்து பாய்ந்து வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

## 6

இதுவரை பயம் என்பது என்னவென்றே அறியாது வளர்ந்து விட்டிருந்த சிந்தாமணியைப் பயம் சூழ்ந்து கொண்டது. ''பாண்டிய குமாரன் அடிக்கடி கூறியது பலித்து விட்டதா? நாம் வகையாகச் சிக்கிக்கொண்டு விட்டோமா?



''உம், நட'' என்று வீரனொருவன் குரலில் சிறிதும் மரியாதை இல்லாமல் பேசினான்.

சிந்தாமணி திரும்பிப் பார்த்தாள். சிறைப் பிடிக்கப்பட்ட விரோதி நாட்டவரை நடத்துவதைப்போல் நடத்துகிறார்கள். கூர்மையான வாளை உருவிக் கையில் வைத்து முதுகில் உராயுமாறு நீட்டியிருக்கிறார்கள். இருபுறமும் வீரர்கள்.

சிந்தாமணி ஒருகணம் விழிகளை மூடிக்கொண்டாள். அவளுடைய தாய் அவளுடைய சிறு வயதிலேயே இறந்து விட்டாள். ஈன்றாளுமாய் எந்தையுமாயிருந்து, அவளைப் பாசத்துடன் வளர்த்துக் கல்வி கற்றுத்தந்த அவளுடைய தந்தை, வீரத்தையும் கலந்து புகட்டியிருந்தார். பிறகு அவள் வளர்ந்தது கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில்தான். குலோத்துங்க சோழர் அவளுக்கு அச்சமென்பதே என்னவென்று தெரியாமல் வீராங்கனையாகவே வளர்த்து வந்தார்.

'தனியாகக் காட்டிற்கு வந்தது தவறு. பகைவர்கள் நடமாடும் இடத்திற்கு அவ்வப்போது வந்தது தவறு. பகைவனின் மகனைக் காதலித்தது மாபெரும் தவறு.'

'இல்லை; தவறில்லை. காதலுக்குப் பகைவனென்று பாகுபடுத்தத் தெரியுமா? பகைவரைக் காதலிக்கக் கூடாதென்றால் பாண்டிய குமாரனும் பகைவன் மகளைக் காதலிக்கிறாரே - அவர் மட்டும் அப்படிச் செய்யலாமா?'

துணிவு பிறந்தது. அவள் நின்றாள். சுற்றி வந்த வீரர்கள் நின்றனர். அவள் நடந்தாள், அவர்களும் நடந்தனர். அவள் சிரித்தாள், அவர்கள் முகம் கடுகடுத்தது.

'ஏன் சிரிக்கிறாய் பெண்ணே?'' என்று வீரனொருவன் கேட்டான்.

''என்னிஷ்டம்; நான் சிரிப்பேன். நீங்கள் யார் கேட்பதற்கு?'' சிந்தாமணி சீறினாள்.

''பயந்தாற்போல் நடித்தாய்; இப்போது பாயும் புலியாக உறுமுகிறாயே?''-ஒருவன் சிரித்துப் பேசினான்.

''ஒன்றும் பாயும் புலியாகவில்லை. இப்போது நடைபயிலும் பெண் புலியாகத்தானிருக்கிறேன். சரி; நான் கேட்டதற்கென்ன மறுமொழி?''-சிந்தாமணி குரலின் அழுத்தம் குறையவில்லை.

''என்ன கேட்டாய்?''-முதலில் பேசிய அதே வீரன்.

''மரியாதையாகப் பேச நீங்கள் கற்கவில்லையா?''-சிந்தாமணி திரும்பிப் பார்த்துப் பேசினாள்.

''பிறகு உன்னிடம் மரியாதையைக் கற்றுக் கொள்கிறேன். ஏன் சிரித்தாய்? அதைச் சொல்லவில்லையே?''

''நீங்கள் யார் கேட்பதற்கு?' என்று நான் கேட்டேனே, அதற்கு மறுமொழி சொல்லவில்லையே?''

''இந்தக் காட்டதிபதியின் வீரர்கள்.''

''ஏன், நாடு கிடைக்கவில்லையோ; காட்டதிபதிக்குக் கை கட்டி நிற்கிறீர்கள்?''

''பெண்ணே! பேச்சில் வாய் நீளுகிறது. இரண்டு மூன்று குற்றங்களுக்குச் சேர்த்துத் தண்டனை கிடைக்கும்.''

''தண்டனை! நீங்கள் யார் தண்டனை தருவதற்கு? காட்டதிபரின் சட்டம் விலங்குகளோடு நிற்கட்டும். நான் யார் தெரியுமா? என்னிடம் மரியாதையாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்.''-சிந்தாமணியின் குரலில் சீற்றம் மிகுந்திருந்தது.



'யார் என்று தெரிந்துதான் உன்னைச் சிறைப்படுத்தி அழைத்துச் செல்கிறோம்''-வீரனும் சளைக்கவில்லை.

''பிறகு நீங்கள் வருத்தப்படப் போகிறீர்கள். பண்புக்குப் பெயர் போன பாண்டிய நாட்டு வீரர்கள் என்று சொல்லிக் கொள்வதில் வெட்கமடையப் போகிறீர்கள்.''

''எங்கள் பண்பைக் காப்பாற்ற மரணப்போர் புரியும் நாங்கள், எதற்கும் அஞ்சமாட்டோம். எங்கள் நாட்டை வஞ்சித்துப் பெற்ற சோழர்களின் கடைசி ஆளையும் இந்த மண்ணிலிருந்து ஓட்டும்வரை நாங்கள் சளைக்கமாட்டோம். அதனால் யாருக்கு வேண்டியவராயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. உனக்குத் தண்டனை தரவேண்டிய வீரபாண்டியரின் முன்னால் உன்னைக்கொண்டு நிறுத்தும் வரை எங்கள் கடமையினின்று மாறமாட்டோம்'' மூச்சு விடாமல் பேசினான் பாண்டியவீரன்.

சிந்தாமணிக்கு இப்போது கோபம் வரவில்லை. சிரிப்புத்தான் வந்தது. வீரர்கள் அனைவரும் திரும்பிப் பார்த்தனர். சிந்தாமணி சிறிது நின்றாள்.

''உம்; நட. நின்று நேரத்தை வீணாக்கமுடியாது'' என்று கர்ஜித்தனர்.

''நேரம் வீணாகிக் கொண்டுதானிருக்கிறது. உங்கள் நாட்டவரே சோழர்களிடம் அடிபணிந்து நிற்கிறார்கள். உங்களிடையே ஒற்றுமையில்லை. சோழ ஆதிக்கத்தை விரும்பி ஏற்று மணி மகுடமணிந்து ஆட்சிபுரியும் நீங்கள், சோழர்கள்மீது அபாண்டமாகப் பழி சுமத்துவானேன்?''

''எங்களுக்குத் தெரியும். இழந்த பொருளை மீட்கப் போர் புரியும்போது முதல் எதிர்ப்பு சொந்தச் சகோதரர்களிடமிருந்துதான் கிளம்பும். அவர்கள் துரோகிகளாக

மாறுவார்கள். பிறகு நயவஞ்சகர்கள், நட்புடையவர்கள் போல் பேசி, தக்க தருணத்தை எதிர்பார்ப்பார்கள் காட்டிக் கொடுக்க. மூன்றாவது எதிரி நாட்டு ஒற்றர்கள். ஒன்றுமே தெரியாதவர்கள்போல் நடித்து, தக்க சமயத்தில் குழியில் தள்ளுவார்கள். நாங்கள் சோழர்களுடன் மட்டும்போர் புரியவில்லை; எங்கள் சொந்தக் சகோதரர்கள், பதவிக்கு ஆசைப்பட்டுச் சோழர்கள் காலடியில் மண்டியிட்டு அரியணையைப் பெற்று அடிமை அரசை நடத்துகிறார்களே அவர்களை எதிர்த்தும் போராடுகிறோம்''-வீரபாண்டியனின் படைகளில் உள்ள ஓர் எளிய வீரன் பேசும் பேச்சாக அவனுடைய முழக்கம் தெரியவில்லை.

''உங்கள் வீரபாண்டியர் மட்டும் குலோத்துங்க சோழரிடம் மதுரை அரியணைக்காக மண்டியிட வில்லையா?'' சிந்தாமணி குத்திக் காட்டினாள்.

''பெண்ணே! நீ எதை மனதில் நினைத்துக்கொண்டு சொல்கிறாய் என்பது புரிந்துவிட்டது. உன்னுடைய தந்தை பல்லவராயர் எங்கள் தலைவரை வென்றபிறகு நிகழ்ந்தவற்றைத்தானே கூறுகிறாய்? அப்போது நடந்த உண்மைச் சம்பவம் வெளி உலகிற்குத் தெரியாமல் போய்விட்டது. எங்கள் வீரபாண்டியரை வெல்ல சோழ தளபதியால் முடியவில்லை. மாதக் கணக்காகப் போர் நடைபெற்றது. பாண்டிய நாட்டின் பல ஊர்களில் பாண்டிய வீரர்களுடன் பல்லவராயர் எதிர்த்துப் போர் புரிய வேண்டியிருந்தது. வீரபாண்டியருக்கும் எதிர்பார்த்த உதவி கிட்டவில்லை. சம பலத்துடன் தோல்வியின் விளிம்பிற்குச் சென்று கொண்டிருந்த இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். உன் தந்தை பல்லவராயர் எங்கள் தலைவரிடம் நாட்டை ஒப்படைத்தார். இதில் எங்கள் தலைவர் மண்டியிட்டார் என்று எப்படிச் சொல்ல முடியும்? பாண்டிய



நாட்டை உரியவரிடம் கொடுத்தபிறகு குலோத்துங்கன் அமைதியாக இருக்க வேண்டியது போக எங்கள் ஆட்சியில் தலையிட்டதேன்?''-அப்பப்பா சகல விவரமும் தெரிந்த மாவீரன் அவன்!

சிந்தாமணியும் சளைக்கவில்லை. ''கொடுத்த வாக்கைமீறி ஈழத்து மன்னருடன் ஒட்டிக்கொண்டதுதான் சோழமன்னரின் நடவடிக்கைக்குக் காரணம்.''

''நாங்கள் யாருடனாவது நேசமாயிருப்போம், உறவு கொண்டாடுவோம். சோழர்கள் யார் அதைக் கேட்க? இங்குதான் மானப் பிரச்சினை வந்தது. சொந்தநாடு எனும் பாச உணர்வு இளைஞரிடையே எழுந்தது. பாண்டியநாட்டு இளைய தலைமுறைச் சோழர்களின் மேலாதிக்கத்தைச் சகிக்கவில்லை. எங்கள் மன்னரின் வீரமகன் பாண்டியகுமாரன் துடித்து எழுந்தான்.''-வீரன் ஆவேசத்துடன் பேசினான்.

சிந்தாமணி விழிகளை மெல்ல மூடிக்கொண்டாள். ஆகா! பாண்டிய நாட்டின விடுதலை உணர்வைத் தட்டி எழுப்பியவரை நாம் காதலிக்கிறோம். அதற்காக நாம் பெருமைப்படலாம். அதற்காக இந்த வீரர்கள் மரியாதைக் குறைவாக நடத்துவதையும் சகித்துக்கொள்ளலாம் என்று தனக்குத்தானே சமாதானம் கொண்டாள்.

''இன்னும் எவ்வளவு தூரம் செல்லவேண்டும்?'' சிந்தாமணி கேட்டாள்.

''எங்கள் இளவரசருடன் அருவியின் ஆரம்ப இடத்தைக் கண்டு களிக்க விரும்பினாயே? 'அந்த நீரோடை வழியே செல்வோம். மஞ்சு கொஞ்சும் மலைச் சிகரங்களின் மீதேறிச் செல்வோம். மேகங்களைக் கையால் பிடித்து அணைப்போம்! என்று நீ சொன்னாயே அந்த இடத்திற்கு...''

சிந்தாமணி திடுக்கிட்டாள். பாண்டிய குமாரனுடன் நாம் அந்தரங்கமாகப் பேசியவை இவர்களுக்கு எப்படித் தெரிகிறது?

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன் நடவடிக்கை ஒவ்வொன்றையும் நாங்கள் அறிந்து வைத்திருக்கிறோம். காளி கோயிலுக்குத் தோழியுடன் வந்தாய். எங்கள் நடவடிக்கைகளை ஆராய, பாண்டிய குமாரனைக் காதலித்ததுபோல் நடித்தாய். பாண்டிய குமாரன் உன் வசப்பட்டார். அவர் உனது கபட அழகில் மயங்கிவிட்டார். அவரைத் திருத்துவதற்கு முன்பு உன்னைத் திருத்த எண்ணினோம். உன் மோகச் சூழலில் பாண்டிய குமாரன் அமிழ்ந்துவிட்டால் அவரது இலட்சிய வேகம் குறைந்து விடும். காதல் வேண்டுமா? நாடு வேண்டுமா? என்று அவரே முடிவு செய்ய விட்டுவிடலாம். ஆனால் அவர் எங்கள் மாமன்னனின் ஒரே வாரிசு. இந்தப் பாண்டிய பூமி சந்ததியற்றுவிட நாங்கள் விட்டுவிட முடியாது. நாடு வேண்டாம். காதலிதான் முக்கியம் என்று அவர் முடிவெடுத்துவிட்டால்!

அதனால்தான் எப்படியோ அவரை மயக்கிவிட்ட உன்னைச் சிறைப்பிடித்துவிட முடிவு செய்தோம். உனக்குத் தண்டனையளிக்க மன்னர் வீரபாண்டியரிடம் உன்னைக் கொண்டு நிறுத்த முடிவு செய்தோம். இந்தச் செய்தியை உன்னிடம் பேசியிருக்கவே கூடாது. நானே என் கடமையிலிருந்து தவறிவிட்ட உணர்வு உள்ளே தாக்குகிறது'' என்று கூறி வீரன் வேகமாக நடக்கலானான்.

சிந்தாமணி நின்றாள். ''பாண்டிய வீரரே! காதலா கடமையா என்றால் உங்கள் இளவரசர் கடமையைத்தான் மேற்கொள்வார். உங்கள் இளவரசரின் மேனியழகில் மயங்கி அவர்மீது நான் காதல் கொள்ளவில்லை. உங்களுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி இன்னும் ஏற்படவில்லை. பெரும் போராட்டத்தில் இறங்கியிருக்கும் உங்கள் இளவரசரைத் திசை திருப்ப நான் அவரைக் காதலிக்கவில்லையென்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். எங்கள் காதல் தெய்வீகமானது. பாண்டியநாடு மீண்டும் பெரும் புகழ் பெறுவதற்கு, முதல் மங்களகீதமாக அமைந்தது. சோழ நாட்டின் ஒற்றர் படையினருள் ஒருத்தியாக நான் இயங்கியிருந்தால் நான் மிக எளிதில் உங்கள் இளவரசரைச் சோழர்களிடம் காட்டிக் கொடுத்திருப்பேன். என் தந்தை தொடங்கிய பணியை நான் நிறைவேற்ற வந்தேன். காளிகோயில் அருகே உங்கள் இளவரசரைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டும் என்று நான் நினைக்கவில்லை. நான் அரச குமாரியல்லள். ஆனால் சோழ மாமன்னன் குலோத்துங்க சோழ தேவர் தன் சொந்த மகளைவிட மிகவும் பாசத்துடனும், அரசகுமாரிக்குள்ள அந்தஸ்துடனும் என்னை வளர்க்கிறார். சாதாரணக் குடிமகள் போன்றும் என்னால் வாழமுடியும், அரச போகத்திலும் வாழமுடியும். அரசகுல வாழ்க்கையை நான் வெறுக்கிறேன். சுதந்தரப் பறவைபோல் வானில் பறந்து மகிழ எனக்கு ஆசை. பட்டுப் பட்டாடையும், ஆணிமுத்து, வைர நவரத்தின ஆபரணங்களும் அணியும் ஆசையே எனக்கில்லை. அதனால்தான் காட்டில்வாழும் உங்கள் இளவரசரை எனக்குப் பிடித்தது.

நீங்களறிய மாட்டீர்கள். மதுரை அரியணையில் பாண்டிய மகுடத்தை அணிந்திருக்கும் விக்கிரம பாண்டிய மன்னர் என்னை மணந்துகொள்ள விரும்புகிறார். சோழச் சக்கரவர்த்திகளும் அதற்கு விருப்பம் தெரிவிக்கிறார். மகுடஞ்சூட்டிய பாண்டிய மன்னர் என் கரம் பிடிக்கக் காத்திருக்கும்போது நாடோடியாகக் காட்டில் அலையும் உங்கள் இளவரசரை நான் ஏன் விரும்புகிறேன் தெரியுமா?

சோழச் சக்கவர்த்திகளிடம் என் விருப்பத்தைக்கூறி, உங்கள் இளவரசரை மணந்து வீரபாண்டியரைப் பாண்டிய நாட்டரசராக்கி, அவர் சுதந்திர மன்னராகப் பாண்டிய நாட்டை ஆளச்செய்ய வேண்டுமென்பதற்காகவே. இது தெரியாமல் என்னையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறீர்களோ?''

சிந்தாமணி உள்ளத்து உணர்வுகளைக் கொட்டி முடித்ததும் 'ஹஹ்ஹா' என்று பெரிதாக நகைத்த, வீரர்களுள் முதிய வயதுடைய ஒருவர், ''பெண்ணே! நன்றாகப் பேசுகிறாய். சோழர்களின் ராஜதந்திரம், போர்முறை எப்படியெல்லாம் சிறப்பாக இயங்குகிறது! நீ சொல்வதை நம்புமாறு சொல்கிறாயா? நாங்களும் போர்த் தந்திரங்களில் சளைத்தவர்களல்லர். குலோத்துங்கன் உன்னை அனுப்பி எங்கள் இரகசியங்களை அறியச் செய்திருக்கும் அவனுடைய சூழ்ச்சியை நாங்கள் அறியமாட்டோமா? நீ இங்கிருந்து திரும்பிப் போகவே முடியாது!'' என்று கடுமையாகக் கூறினார்.

''ஆகா; அதுதான் நான் விரும்புவதும், நான் இங்கேயே, காட்டின் நடுவே உங்களில் ஒருத்தியாக இருந்துவிடுவதையே விரும்புகிறேன். நானே விரும்பியிருந்தால் இப்படி நடக்குமா?'' என்று கூறி மெல்லச் சிரித்தாள் சிந்தாமணி.

'சிரிக்காதே! உன் சிரிப்பாலும் சாதுர்யமான பேச்சாலும் சுழலும் விழிகளாலும் மயக்கிவிட முடியுமென்று நினைக்காதே! என்றுமே நாங்கள் காட்டிலேயே வாழ்ந்து கொண்டிருப்போமென்று நினைக்காதே! மதுரையை இன்னும் சில நாட்களில் கைப்பற்றிவிடுவோம். மதுரை மாளிகையில் நாங்கள் வாழ்வோம். நீயும் வாழ்ந்துவிடலாமென மனப்பால் குடிக்காதே!'' என்றான் மற்றொரு வீரன்.



சிந்தாமணிக்கு ஆத்திரம் பொங்கியது. இதுவரை மரியாதை கொடுத்துவந்த சொற்கள் அவளிடமிருந்து மறைந்தன. ஒருமையிலேயே அவள் அழைத்தாள்.

''ஏய்! நீ யார் அதை முடிவு செய்ய? மதுரை மாளிகையில் உங்கள் இளவரசர் வாழப்போவது உறுதியென்றால் நானும் வாழப்போவது உறுதி. உங்கள் பார்வைக்கு நான் பகைவன் மகள். சோழ அரசருக்கு இன்னும் என் காதலைப் பற்றித் தெரியாது. தெரிந்தால் நான் அவர் பார்வையில் பகைவனின் காதலி. ஆனால், என் உயிர் உடல் அனைத்தையும் யாரிடம் அர்ப்பணித்திருக்கிறேனோ அவருக்கு நான் இதயத்தில் வீற்றிருப்பவள். இதயக் காதலி. அவர் சொல்லட்டும்; உங்கள் இளவரசர் சொல்லட்டும்.''

பாண்டிய வீரர்கள் அனைவரும் 'ஹோ ஹோ' என்று உறுமினர். அவள் மறுமொழி ஏதும் கூறவில்லை. இனி இவளுடன் பேசிக்கொண்டே செல்வதில் பலனில்லை என்று விரைவாக நடக்க ஆரம்பித்தனர்.

'இவர்களுக்குப் பெண் என்ற இரக்கமே இருக்கவில்லையே. பயங்கரக் குற்றம் செய்த குற்றவாளியை இழுத்துச் செல்வதுபோல் அழைத்துச் செல்கிறார்களே! நல்லவேளை, தொட்டு இழுத்துச் செல்லவில்லை. தொட்டிருந்தால் தெரியும்.

''ஏய், பெண்ணே! 'பாண்டிய மாளிகை'யில் வாழ மனக்கோட்டை கட்டுபவளே! விரைவாக நட...'' என்று வீரனொருவன் வாள் முனையால் அவள் முதுகில் மெல்லஸ்பரிசித்தான்.

சிந்தாமணி ஆவேசத்துடன் திரும்பினாள்.

''பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டேன். இனி ஒரு நொடிகூட அமைதியாயிருக்க மாட்டேன். பெண்ணை மதிக்கத் தெரியாத மனிதர்களே! தள்ளி நில்லுங்கள். இந்த இடத்திலிருந்து ஓர் அடி கூட எடுத்துவைக்கமாட்டேன். உங்கள் தலைவர் இங்கே வரட்டும். என்னை விசாரிக்கட்டும்'' என்றுகூறி நடுவழியிலேயே உட்கார்ந்து விட்டாள்.

வீரன் ஒருவன் பாய்ந்து அவளைப் பிடித்து எழுப்ப முயன்றபோது, சிந்தாமணி அவன்மீது பாய்ந்து நொடியில் அவன் கையிலிருந்த வாளைப் பறித்துச் சுழற்றி, 'என்னை இப்போது நெருங்குங்கள் பார்க்கலாம். நாட்டை ஆளத்தெரியாத நாடோடிகளே! தள்ளி நில்லுங்கள்'' என்று முழங்கினாள்.

ஒரு கணம் வீரர்கள் திகைத்தனர். சிந்தாமணி வாளைச் சுழற்றியவாறு பின்னோக்கி நகர்ந்தாள், திரும்பினாள், துள்ளி ஓடத் தொடங்கினாள்.

''ஏன் திகைத்து நிற்கிறீர்கள்? பகைவருள் பெண்ணென்றும், முதியவர் என்றும் பார்க்கக் கூடாது. அவளைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்று முதியவரான ஒருவர் குரல் கொடுத்தார்.

திடீரென அவள் மீது கயிறு வீசப்பட்டது. இமைக்கும் நேரத்தில் அவள் உடலைக் கயிறுகள் பின்னின. சிந்தாமணி அசைய முடியாமல் துவண்டாள். மரத்தோடு சேர்த்து அவள் கட்டப்பட்டாள்.

அதிர்ச்சியாலும் களைப்பாலும், பசியாலும் மயக்க மடைந்த நிலைக்குள்ளானாள் சிந்தாமணி.

எவ்வளவு நேரம் இருந்திருப்பாளோ, திடீரென்று முகத்தில் குளிர்ந்த நீர் தெளிக்கப்பட்டது. புதிய தெம்பு ஏற்பட்டது போன்ற உணர்வு. யாரோ பேசும் குரல்.



''மதுரைக்குச் செய்தி அனுப்புமாறு மன்னரின் உத்தரவு. உளவறிய வந்த தங்கள் மகள் எங்களிடம் சிக்கியிருக்கிறாள். கங்கை கொண்ட சோழபுரத்து வேளத்திலுள்ள பாண்டிமா தேவியை விடுவித்தால், இவளை விடுதலை செய்வோம் என்று செய்தி அனுப்புமாறு மன்னர் கட்டளையிட்டிருக்கிறர்.''

அரை விழிப் பார்வையில் அவள் எதிரே பாண்டிய வீரர்கள் நிற்பதையும், யாருடனோ பேசிக்கொண்டிருப்பதையும் உணர்ந்தாள் சிந்தாமணி.

''பாண்டிமா தேவியை விடுதலை செய்யவில்லை என்றால் அடுத்து என்ன செய்வீர்கள்?''- ஒரு குரல். கேட்ட குரல். சிந்தாமணியால் திரும்பிப் பார்க்க முடியவில்லை.

''பிறகு என்ன செய்வது என்று தெரியவில்லை. மன்னரைத்தான் கேட்கவேண்டும்.''- ஒரு வீரனின் குரல்.

''சோழர் மகளைச் சிறைப்படுத்திவிட்டதால் இலட்சிய வெற்றியை அடைந்துவிட முடியும் என்று நினைக்கிறீர்களா?''

''சோழ மன்னனின் அபிமான மகள் இவள். படைத்தளபதி பல்லவராயரின் மகள். இவளை இழக்கக் குலோத்துங்கன் விரும்பமாட்டான்.''

''இழக்க விரும்பமாட்டான். தனது முழுப்பலத்தையும் பயன்படுத்துவான். இந்தக் காட்டிற்கு இவள் வந்திருக்கிறாள் என்பதை அறிந்து ஏராளமான வீரர்களை அனுப்புவான். ஒவ்வொரு புதராகத் தேடி, காட்டு விலங்குகளை வேட்டையாடுவதைப்போல் வேட்டையாடுவான். மதுரை மீது நாம் திடீர்த் தாக்குதல் நடத்த எண்ணியிருக்கும் நேரத்தில், திட்டத்தை இப்படிப் பாழ்படுத்தி விடலாமா?'' ஒருவரும் பேசவில்லை. மௌனம் நிலவியது.

அந்தக் குரலுக்குரியவன் பாண்டிய குமாரன் என்பதைச் சிந்தாமணி அறிந்தவுடன் புத்துணர்ச்சி பிறந்தது. விழிகளை அகல விரித்தாள்.

''இளவரசரே! அடுத்து என்ன செய்யச் சொல்கிறீர்கள்? நீங்கள் செய்தது தவறு. பகைவனின் மகளைக் காதலிக்கலாமா? அதனால் நீங்களே முடிவு சொல்லுங்கள்'' என்றார் முதியவர்.

''இவளை விடுதலை செய்து காட்டின் எல்லையில் கொண்டுவிட்டு வந்துவிடுங்கள்.'' பாண்டிய குமாரனின் குரலில் கண்டிப்பிருந்தது. அவன் விழிகளைச் சிந்தாமணி சந்திக்க முயன்றாள். பாண்டிய குமாரன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

ஒரு வார்த்தைகூட அவனுடன் பேச முடியவில்லை. அவன் எதிர்த்திசையில் நடந்துகொண்டிருந்தான்.

காட்டின் எல்லையை நோக்கி, சிந்தாமணி பாண்டிய வீரர்கள் துணையுடன் சென்று கொண்டிருந்தாள்.

## 7

காட்டின் எல்லை வரை சிந்தாமணியைப் பின்தொடர்ந்தார்கள் வீரர்கள். பிறகு எப்போது, எப்படி அவர்கள் அவளைத் தனியே செல்லவிட்டு மறைந்தார்கள் என்பது அவளுக்குத் தெரியாது. சிறிது தொலைவுவரை காலடி ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சிந்தாமணி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள். அவள் மிகவும்



களைத்திருந்தாலும் ஓர் இனிய அனுபவம் அவள் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. பாண்டிய குமாரன் தன்னை நேசிப்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்பதைப் புரிந்துகொண்ட அந்த ஒன்றே போதும். அவள் எந்தவிதத் துன்பத்தையும் தாங்கிக்கொள்வாள் என்பதற்கு.

அவள் வேகமாக நடந்தாள். சிறிது தூரம் நடந்தால் வைகை ஆறு குறுக்கிடும். எதிர்க்கரை ஓரமாகச் சிறிது சலசலவென்று தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். மணல் ஆற்றில் காலைப் பதிய வைத்து நடப்பதில் ஓர் இன்பம் இருக்கவே செய்தது. கூடவே தோழியும் வந்துவிட்டால் நடைக் களைப்பே தெரியாது. இன்று அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டோம். அவ்வாறு வந்ததால்தான் பாண்டிய குமாரனின் உள்ளத்தை அறிய முடிந்தது. கடுமையான அனுபவம்தான். விடுதலை வேட்கை மிகவும் நிறைந்த பாண்டிய வீரர்களிடம் சிக்கியதை இப்போது நினைத்தாலும் சிலிர்க்கிறது. எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார்கள்! தனியே பெண்கள் அகப்பட்டுக்கொண்டால் படைவீரர்கள் சும்மா விட்டுவிடமாட்டார்கள். தாங்கள் அடக்கி வைத்திருக்கும் தாபத்தை வெறிகொண்டு தீர்த்துக் கொள்வார்கள், என்று சொல்வார்கள். அதைப் பொய் என்பதைப் பாண்டிய வீரர்கள் நிரூபித்து விட்டார்கள். அவர்கள் இலட்சியம் எல்லாம் பாண்டிய மண்ணை மீட்பதில் இருந்தது. இலட்சிய வேகம் மட்டும் அவர்களுக்கு இல்லாதிருந்தால் தன் நிலை என்னவாகி இருக்கும்? நினைக்கும்போதே அவள் உடல் நடுங்கியது. நல்ல சமயத்திற்கு அவர் வந்தார். வராமலிருந்தால்?

தங்கள் நாட்டு இளவரசர் மீது அவர்கள் வைத்திருக்கும் மதிப்பின் அளவை எடை போடவே முடியாது போலிருக்கிறது. மதுரையை மீட்கும் வரை இளவரசர் காதல்

வயப்பட்டுக் கவனத்தைச் சிதறவிடக் கூடாதென்பதில் அவர்கள் எவ்வளவு கண்டிப்பாக இருக்கிறார்கள்! என்னை அவர்கள் நம்பவே இல்லை.

நியாயம்தான். விடுதலைப் போரில் உற்றார் உறவினர் பாச பந்தமென்று பாகுபடுத்துதல் கூடாதுதான். நான் சோழ நாட்டைச் சேர்ந்தவள். பாண்டியர்களை அடிபணிய வைத்த பல்லவராயரின் மகள். என்னைப் பகைவன் மகளாகப் பாண்டியர்கள் பாவிப்பது நியாயம்தானே! நான் வலியக் காட்டிற்குள் வந்தது உளவறியத்தான் என்று அவர்கள் நினைப்பதில் தவறில்லையே! என்னை அவ்வளவு எளிதில் விடுதலை செய்து காட்டின் எல்லைவரை கொண்டு விட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குப் பாண்டிய குமாரனிடம் உள்ள மதிப்பும் மரியாதையுமாய்த் தானிருக்கமுடியும்.

சிந்தாமணி இவ்வாறு சிந்தித்தபடி நடந்தாள். அவள் ஏறிவந்த சிவிகை மறுகரையிலிருக்கும். சிவிகை சுமந்து வந்தவர்கள் காத்திருப்பார்கள். விரைவில் திரும்பி விடுவதாகச் சொல்லியிருந்தால் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார்கள். இன்னும் வரவில்லையே என்று கவலையுடனிருப்பார்கள்.

சிந்தாமணி மணலில் காலைப்பதிய வைத்து நடந்தாள். அஸ்தமனச் சூரியனின் சரியும் ரேகைகள் பொன்னொளியை வீசிக் கொண்டிருந்தன. பகல் முழுவதும் காய்ந்திருந்ததால் மணல் அடி சுட்டுக் கொண்டிருந்தது. கால் சுடாமல் நடப்பதற்கு ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தாள். மெல்லிய சரடுபோல் சலசலவென்று குறுக்கே ஓடிவந்த ஆற்று நீரில் காலை வைத்து அளைந்தவாறு நடந்தாள்.



அவள் மனம் சூன்யமாக இருந்தது. அடுத்து என்ன நடக்குமென்று அவளால் முடிவு செய்ய முடியவில்லை. பாண்டிய குமாரனைத்தான் மணக்கப்போகிறேன் என்று தீர்மானமாகக் குலோத்துங்க சக்கரவர்த்திகளிடம் சொல்லி விடவேண்டுமென்று உறுதியை வரவழைத்துக் கொள்ள முயன்றாள். ஒத்திகை செய்துகொண்டாள்.

அவள் தந்தையைவிட அவள் பாக்கியசாலி. அவர் படைத் தளபதியாக மட்டுமே இருந்தார். பெயரும் புகழுமிருந்தது. அவை மட்டும் அரச போகமாகி விடுமா? அவருக்குக் கிடைக்காதது அவளுக்குக் கிடைக்கப்போகிறது. குலோத்துங்க சோழ தேவர், விக்கிரம பாண்டியனுக்கு அவளை மணம் செய்விக்கப் போகிறார். விக்ரம பாண்டியனுக்கு நெடுநாள்களாக அவளை மணக்க ஆசையிருக்கிறது என்று அவளுக்குத் தெரியும் சோழ சக்கரவர்த்திகள் அவளுக்கு மணம் செய்வித்து அவளை அரச குமாரியாக்க ஆசைப்படுகிறார். அவள் மனமோ பாண்டிய குமாரனை நாடுகிறது. பாண்டிய நாட்டின் அரசிளங் குமரனாக அவன் நிச்சயம் விளங்கப்போகிறான். வீரபாண்டியனுக்குப் பிறகு பாண்டிய குமாரன் மதுரை மாமன்னர். எப்படியோ அவள் பாண்டிய நாட்டு அரசியாகத் திகழப் போகிறாள்.

'சிந்தாமணி! நீ பாக்கியசாலி. நீ பாண்டிய நாட்டரசியாகப் போகிறாய். உன் பெயர் வரலாற்றில் அழியாது விளங்கும். உன் கனவை நனவாக்கிக் கொள்ளலாம்'- நினைக்க இனிமையாக இருந்தது. மெல்லச் சிரித்துக் கொண்டாள். அவள் நடையில் வேகமிருந்தது. ஓரிடத்தில் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மெல்லப் புடவையைத் தூக்கிக் கொண்டாள். குளுமையான நீரில் சிறிது நேரம் நின்று கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. மேற்கே மிக வேகமாகக் கதிரவன் இறங்கிக் கொண்டிருந்தான்.

மாளிகையை அடைவதற்குள் பொழுது சாய்ந்து விடும். அதற்கு மேலும் தாமதமாகச் செல்லக்கூடாது. இப்பொழுதே அவனைத் தேட முற்பட்டிருக்கலாம்.

சிந்தாமணி வேகமாக நடந்தாள். சரமணலில் கால்புதைய நடந்தாள். புல்தரையில் நடந்தாள். கரை மேட்டிலே ஏறினாள். அங்கே சிவிகை சுமப்போர் நின்று கொண்டிருந்தனர். அருகே புரவிகள் மரவேரில் கட்டப் பட்டிருந்தன. அதைக்கண்டு துணுக்குற்ற சிந்தாமணி சுற்று முற்றும் பார்த்தாள். விக்கிரம பாண்டியனின் வீரர்கள் மரத்தடியில் சேர்ந்து உட்கார்ந்திருந்தனர்.

அவர்கள் எதற்காக அங்கு உட்கார்ந்திருக்கின்றனர் என்று அறிய அவளுக்கு ஆர்வம்தான். ஆனால் அவர்களைக் கவனிக்காமல் அவள் சிவிகையில் அமரும்போது, குதிரை வீரர்களில் ஒருவன் அவளை நெருங்கி மிகவும் பணிவான குரலில், ''மாளிகையில் குலோத்துங்க சோழர் காத்திருக்கிறார். தங்கள் வருகைக்காக'' என்றான்.

அவனைச் சுட்டெரித்து விடுபவள்போல் பார்த்த சிந்தாமணி கடுமையான குரலில், 'ஹூம்... அவர் பெயரைச் சொல்லுமளவுக்கு உங்களுக்குத் துணிவு பிறந்துவிட்டதா? இன்னும் தங்கள் விக்கிரம பாண்டியன், சோழ நாட்டிற்கு அடங்கியவர்தான் என்பது நினைவிருக்கட்டும்'' என்றாள்.

அவளுடைய குரலிலிருந்த கடுமையை உணர்ந்த விக்கிரம பாண்டியனின் வீரர்கள், ''அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. தங்களை உடனே கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டுள்ளார்கள். அதைச் சொல்லத்தான் நாங்கள் இங்கே காத்திருக்கிறோம்'' என்றனர்.

சிந்தாமணி திடுக்கிட்டாள். 'கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அழைத்து வரச்சொன்னாரா? என்னையா?



நான் காட்டிற்குள் சென்றிருப்பது அவருக்கு எப்படித் தெரியும்?'- அவள் புரிந்து கொள்ள முடியாமல் திகைத்தாள்.

''உம்; தாமதப்படுத்த நேரமில்லை'' என்று வீரனொருவன் துரிதப்படுத்தினான்.

அவனை விழுங்கி விடுபவள் போல் முறைத்த சிந்தாமணி ''சக்கரவர்த்தி எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டாள்.

''திருச்செந்தூரிலிருந்து நண்பகல் வந்தவர் தங்களைக் கூப்பிட்டனுப்பினார். தங்களைக் காணவில்லை...'' என்று கூறி வீரனொருவன் பாதியிலேயே பேச்சை நிறுத்தினான்.

''நான் இங்கு இருப்பேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எங்கள் அரசர் சொன்னார்.''

''உங்கள் அரசருக்கு எப்படித் தெரியும்?''

''அவருக்குத் தெரியாதது எதுமில்லை. வைகையைக் கடந்து காட்டிற்குத் தாங்கள் செல்வதைப் பல காலமாக அறிவார்.''

இதைக் கேட்ட சிந்தாமணி எதும் மறுமொழி கூறாமல் மௌனமானாள்.

வீரர்கள் துரிதப்படுத்தினர். சிந்தாமணி சிவிகையில் அமர்ந்தாள். சிவிகை சுமப்பவர்கள் ஓட்டமும் நடையுமாக மதுரையை நோக்கிச் சென்றனர். சிவிகையின் முன்பும் பின்புமாக விக்கிரம பாண்டியனின் வீரர்கள் சென்றனர். சிவிகை சுமப்போரின் ஹோ ஹோ' என்ற ஒலியும், குதிரைகளின் குளம்படிச் சப்தமும் மட்டும் எழும் அந்தப் பொழுதில் சிந்தாமணியின் சிந்தனை பாண்டிய குமாரனை நோக்கிப் பறந்தது.

'சக்கரவர்த்தி எதற்காகக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அழைக்கிறார்? தன் காதலை உணர்ந்து அதைத் தடுப்பதற்காக இருக்குமோ?''

'நான் வரும் வரையில் காத்திராமல் உடனே கங்காபுரிக்குப் புறப்பட்டதற்குக் காரணம் எதுவாக இருக்கும்?'

'பாண்டிய குமாரனை நான் சந்திப்பது சக்கவர்த்திக்குத் தெரிந்திருக்குமோ? மதுரையிலிருந்தால் அடிக்கடி சந்திப்பேன் என்பதை அறிந்து தடுப்பதற்காகக் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அழைக்கிறாரோ?''

சிந்தாமணி பலவாறு எண்ணினாள். மதுரை மாளிகைக்குச் சென்றவுடனே அவளைச் சந்திக்க விக்கிரம பாண்டியன் வந்தான்.

பொதுவாக அந்தப்புரத்திற்கு அவன் வருவதில்லை.

மரியாதைக்காகச் சிந்தாமணி எழுந்து நின்றாள். முகத்தை அவன் மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''பிரயாணம் இனிதே நடக்க எனது வாழ்த்துக்கள்'' என்று விக்கிரம பாண்டியன் பேச்சைத் தொடங்கினான். சிந்தாமணி மறுமொழி கூறவில்லை.

''மிகவும் களைப்பாக இருப்பாய். சிறிது உணவருந்தி விட்டுப் புறப்படலாம். தக்க துணையுடன் கங்காபுரிக்கு அனுப்பும்படி சக்கரவர்த்தியின் உத்தரவு.''

சிந்தாமணி திரும்பி ஒருமுறை விக்கிரமனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''உங்களைப் போல் உங்கள் வீரர்களுக்கும் சக்கரவர்த்தி என்றழைக்கக் கற்றுக் கொடுங்கள்'' என்றாள். அவள் விழிகளில் தெரிந்தது கோபமா, ஏளனமா என்பது புரியவில்லை.



புரியாமல் அவளை நோக்கினான் விக்கிரமன். ''வீரர்கள் வைகைக் கரையில் நீண்ட நேரமாகக் காத்திருந்தார்கள்'' என்று கூறினான்.

''மதுரைக்கு வர வழி எனக்குத் தெரியுமே. மதுரையை விட்டுப் பிரிய எனக்கு எப்போதுமே மனமில்லை.''

''மதுரையின் மீது உனக்குள்ள பற்றுக்கும் பாசத்திற்கும் மகிழ்ச்சி. ஆனால், அடிக்கடி காட்டிற்குள் செல்லுபவனுக்கு மதுரையைவிடக் கானகச் சூழ்நிலையே ஒருவேளை பிடித்துவிட்டால்...?''

''கானகமும் பிடிக்கும். மதுரையையும் பிடிக்கும். பாண்டிய நாட்டுக் கானகத்தின்மீது எனக்கு அலாதியான பிரியம்.''

''நாட்டைவிடக் காட்டின்மீது ஆசையா?''

''நாடாள வேண்டியவர்கள் காடாண்டு கொண்டிருக்கும் போது, என் ஆசையும் நாட்டைவிடக் காட்டின்மீது இருப்பதில் வியப்பில்லை.''

''அந்த ஆசை கானல் நீர்!''

''நீர் நினைப்பது தவறு.''

''நான் நினைக்கவில்லை. உங்கள் சக்கரவர்த்தி நினைக்கிறார்.''

''அவருக்குப் புரியவைப்பேன்.''

''ஒருவேளை அதற்குத்தான் அழைக்கிறாரோ என்னவோ?''

"என்னைப் பற்றிப் பல செய்திகளை அறிந்துகொள்ளும் நீங்கள், சக்கரவர்த்தி எதற்காக அழைக்கிறார் என்பதையும் அறிந்து கொண்டிருக்கலாமே?"

"அறிந்து கொள்ளாமலா இருப்பேன்? இந்த விக்கிரமனை இன்னும் மிகவும் சாதாரணமாக எடைபோட்டு வைத்திருக்கிறாய் நீ. மாற்றிக்கொள்ளும் காலம் வரும். இப்போது நீ செல்லும் பயணம் உனக்கு நற்பலனைத் தரட்டும்."

"வாழ்த்துக்கு நன்றி. கங்காபுரிக்குச் செல்லுபவள் அங்கேயே தங்கிவிட மாட்டேன். விரைவில் திரும்பி வருவேன்."

"விரைவில் நல்ல செய்தியுடன் வருவாய் என்று நானறிவேன். வரவேண்டும் என வாழ்த்துகிறேன். அதில் சுய ஆதாயமும் இருக்கிறது."

ஒருமுறை சுட்டெரித்து விடுபவள் போலப் பார்த்தாள். அதற்குமேல் விக்கிரமனிடம் பேசுவதற்கு அவளுக்கு விருப்பமில்லை. நன்றாக இருட்டி விட்டது. இரவில் பயணம் எளிதாக இருக்குமாதலால் கங்காபுரிக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

சிவிகையைப் பாண்டிய வீரர்கள் பின் தொடர்ந்து வந்தனர். அவ்வப்பொழுது திரையை விலக்கி, அவள் பார்ப்பது, யாரையோ எதிர்பார்ப்பது போல் தோன்றியது.

மூன்று நாள்கள் மனநிம்மதி இன்றிச் செல்ல வேண்டியிருக்கிறதே என்ற கவலை அவள் உள்ளத்தை அழுத்தியது.

இரண்டாவது நாள் அதிகாலையில், அவள் தங்கியிருந்த சத்திரத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு கிணற்றில் நீராடச்



சென்றபோது, ஓர் ஓலைச் சுருள் அவள் காலடியில் வந்து வீழ்ந்தது.

பாண்டிய குமாரனின் கையொப்பத்துடன் கூடிய அந்த ஓலையில் கண்டிருந்தவை அவளைக் குதூகலிக்க வைத்தன.

"கவலையின்றிப் பயணம் செய்க, என்றும் உன்னை மறக்கமாட்டேன், மதுரை மாநகர் மாளிகையை என்னுடன் அலங்கரிக்கப் போகிறவள் நீதான் என்பது நினைவிருக்கட்டும்.-பாண்டிய குமாரன்."

## 8

கங்கை கொண்ட சோழபுரத்தைவிட்டுச் சிந்தாமணி மதுரைக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகி விட்டது. குலோத்துங்க சோழ சக்கரவர்த்தி பலமுறை மதுரைக்கு வந்து சென்று விட்டாலும், அவள் கங்காபுரிக்கு வராமல் மதுரையிலேயே தங்கியிருந்து விட்டாள். இப்போது கங்காபுரியைப் பார்க்கும்போது, அவளுக்குப் பல வித்தியாசங்கள் தெரிந்தன. பல புதுவீடுகள் கட்டப்பட்டிருந்தன. போர்ப் பயமில்லாததால் மக்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவது அவர்களுடைய முகப்பொலிவிலிருந்து தெரிந்தது. பொன்னேரியிலிருந்து விளை நிலங்களுக்குச் சீராக நீர் பாய்ந்து கொண்டிருந்தது. உழவர்கள் சுறுசுறுப்பாக உழுது கொண்டிருந்தனர். பெண்கள் குனிந்து நாற்று நட்டுக் கொண்டிருந்தார்கள். சாலையின் இருபுறமும் புதிதாக வளர்ந்திருந்த புதிய மரங்கள் அடர்ந்து இனிய நிழல் தந்து கொண்டிருந்தன. புளியம் பூக்கள் தரையில் உதிர்ந்து சுற்றிலும் உள்ள பூமியைச் செம்மஞ்சள் நிறமாக்கி இருந்தன.

நகரத் தெருக்களில் வாணிபம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. கோட்டை வாயிலில் வீரர்கள் கம்பீரமாக நின்று கொண்டிருந்தனர்.

மாளிகைக்குப் புதுச் சுண்ணம் அடித்திருந்தார்கள். சோள நாட்டிலிருந்து வாங்கிய புதுக் குதிரை மீது புலிக் கொடி ஏந்திய வீரர்கள் தெருக்களில் பவனி வந்து கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து யாராவது குறுநில மன்னர்கள் சம்புவரையரோ, வாணகோவரையரோ, காடவரையரோ சக்கரவர்த்திகளைச் சந்திக்க வந்து கொண்டிருந்தனர்.

மாளிகை வாயிலில் கட்டியங்கூறும் முழக்கம் அவ்வப்போது கேட்ட வண்ணமிருந்தது. மாளிகை நந்தவனத்தில் புத்தம் புதுமலர்கள் பூத்துக் குலுங்கிச் சிரித்தவண்ணமிருந்தன.

இந்தப் புதுமைகள், மாற்றங்கள், கலகலப்புகள் ஏதும் அவள் மனத்தில் எந்தவிதக் கிளர்ச்சியையும் ஏற்படுத்த வில்லை. பாண்டிய குமரன் வீசிய ஓலைச் சுருளைப் பற்றியே அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். யார் அந்த ஓலையை வீசியிருப்பார்கள்? உடனே சென்று பார்க்க முடியாத நிலையில், அவள் குளிப்பதற்காக ஒற்றை ஆடையிலிருந்தாள். ஒருவேளை அவரே வந்திருக்கக் கூடுமோ? அவள் உடல் சிலிர்த்தது. ஓலையை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டாள். மற்றுமொரு முறை படித்துப் பார்த்து ஓலையைச் செவ்விதழில் அழுந்தப் பதித்து, புடவைச் சுருளில் வைத்தாள். நீராடி, வேற்றுடை அணிந்தபிறகு இடையில் மிகவும் கவனமாக வைத்துக்கொண்டாள்.

ஓரிரவும் கழிந்து மறுநாள் பொழுது புலரும் வேளையில் கங்கைகொண்ட சோழபுரத்திற்குள் வந்தபோதும் அந்த ஓலையை எடுத்துப் படித்தாள்.



'மதுரை மாநகர் மாளிகையை என்னுடன் அலங்கரிக்கப் போகிறவள் நீதான்...' என்ற வாசகங்கள் அவள் உடலில் புதிய துள்ளலை ஏற்படுத்தின. ஓலையைக் கச்சைக்குள் பத்திரமாக வைத்துக்கொண்டாள்.

அந்தப்புரத்தை அடைந்தவுடன் அவளுக்கு வேண்டியவர்கள், அரச குலப் பெண்டிர், தாதிகள், தோழிகள், பணிப் பெண்கள் என்று அவளைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் குதூகலமாகப் பேசினர், வாழ்த்துத் தெரிவித்தனர். சற்றுவயதில் மூத்தவள், அவள் கன்னத்தைத்தொட்டுத் திருஷ்டி கழித்தாள்.

''மதுரைக்குப் போய்விட்டால், என்னை மறந்து விடுவாய் அல்லவா?'' என்று ஒருத்தி கேட்டாள்.

''மதுரையினின்று தானே இப்போது வருகிறேன்?'' என்று சிந்தாமணி மெல்ல நகைத்தவாறு மறுமொழி கூறினாள்.

''மதுரை அரசியாகத் திரும்பச் செல்லப் போகிறாய்'' என்றாள் ஒருத்தி.

சிந்தாமணி ஒருகணம் திடுக்கிட்டாள். பாண்டிய குமாரன் எழுதிய ஓலையில் உள்ள செய்தி இவர்களுக்கு எப்படித் தெரியும்?

''அப்படியா? எனக்குத் தெரியாதே!'' என்று முகத்தில் எந்தவித மாறுதலுமின்றிப் பேசினாள்.

''பெரிய கள்ளி இவள். ஒன்றுமே தெரியாதாம்! நீ இப்போது எதற்காகக் கங்காபுரிக்கு வந்திருக்கிறாய் தெரியுமா?''

''தெரியாது. சக்கரவர்த்தி கட்டளையிட்டார்! வந்திருக்கிறேன். எனக்கென்று ஒரு தீர்மானம், முடிவு ஏதும் கிடையாது'' என்று கூறி அவர்கள் வாயை அடைத்தாள்.

ஆனால், சிறிது நேரத்தில் குலோத்துங்க சோழர், சிந்தாமணியைத் தன்னிருப்பிடத்திற்கு அழைத்தார். அங்கே அவர் கூறிய செய்தி சிந்தாமணியைத் திடுக்கிடச் செய்தது. தனக்கென்று ஒரு தீர்மானம், முடிவு கிடையாது என்று சற்று முன்னர் கூறியதற்கு நேர்மாறாக அவள் தன் இலட்சியத்தை, இதய ஆசையை, முடிவைத் தீர்மானமாகக் கூறினாள்.

குலோத்துங்க சோழ தேவர் சிந்தாமணியை வைத்த விழி மாறாமல் உற்று நோக்கியவாறிருந்தார். அந்தப் பார்வையிலிருந்து அவர் மனத்திலிருப்பவை எவற்றையும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் உதடுகள் மெல்ல முறுவல் பூக்கும் நிலையிலிருந்தன. சிந்தாமணி தன் கருத்தினைக் கூறியது கேட்டு அவர் சினமுற்றுள்ளாரா அல்லது அவள் கூறுவதை மிகக் கவனமாகக் கேட்டு, அவள் முடிவை ஏற்கிறாரா என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிந்தாமணி அவரையே சிறிதுநேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தவள், மன்னர் விழிச் சக்தியைச் சந்திக்க முடியாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

'ஹூம்' என்று ஹூங்காரம் மன்னரிடமிருந்து எழுந்தது. சிந்தாமணி தலையை நிமிரவில்லை.

''சிந்தாமணி! உன் முடிவு இறுதியானதுதானா?'' என்ற கடுமையான குரல் அவரிடமிருந்து வந்தது. இதுபோன்ற குரலில் அவர் அவளை அழைத்ததே கிடையாது. சிறுநடுக்கம் அவளிடம் ஏற்பட்டது.



கோபமாக அவர் எப்போது இருந்தாலும், சிந்தனையில் ஆழ்ந்து எதிரே வருபவர் யாராயிருந்தாலும், எரிந்து விழக் கூடிய தன்மையிலிருந்தாலும், சிந்தாமணியைக் கண்டு விட்டால் அவர் முகம் மலர்ந்துவிடும். கனல் கன்னலாகி விடும்.

ஆனால், இன்று அவர் 'சிந்தாமணி' என்று அழைத்த குரலிலேயே அவரது சீற்றம் புலப்பட்டது.

''சிந்தாமணி'' என்று மறுபடியும் குரல் கொடுத்தார் மன்னர். மெல்லத் தலை நிமிர்ந்தாள்.

''உன்னிடம் இப்போது பெரும் மாறுதலைக் காண்கிறேன். என் விருப்பத்துக்கு மாறாகத் தலையைக் கூட அசைக்காத நீ, உன்னிஷ்டப்படி முடிவு எடுத்திருக்கிறாய்?'' என்றார் மன்னர்.

''ஆம்'' என்று தலையை அசைத்தாள் சிந்தாமணி. பிறகு, ''என் முடிவு தங்களை எவ்விதத்திலும் பாதிக்காது'' என்றாள்.

''ஏன் - அதெப்படி நீ சொல்கிறாய்? என்னை மட்டுமா? சோழ நாட்டையே உன் முடிவு பாதிக்கும்.''

''பாதிக்கும் என்று நான் நம்பவில்லை. மேலும் திருமணம் செய்து கொள்ளப் போகிறவள் நான். சோழ நாட்டுப் பிரஜை ஒவ்வொருத்தருக்கும் தங்கள் திருமண விஷயமாகத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் உரிமை உண்டு. நானும்...'' என்று சிந்தாமணி கூறுவதற்குள் மன்னர் உரத்த குரலில், ''நீ சாதாரணப் பிரஜை அல்லள்'' என்றார்.

சிந்தாமணி மெல்லிய குரலில், ''மன்னிக்க வேண்டும் அரசே! நான் சாதாரண-மற்றவர்களைப் போன்ற சோழ நாட்டுக் குடிமகள்தான். அந்தப்புரத்திலுள்ள சேடிகள், பணிப் பெண்களைவிடச் சற்று அந்தஸ்தில் உயர்ந்தவள். காரணம்

என் தந்தை படைத்தளபதி. தங்கள் அபிமானத்துக்குப் பூரணமாக உரியவர். அந்தச் சலுகையினால்தான் தங்கள் சமூகத்திடம் நெருங்கவே முடிந்தது. என் தந்தை மீதுள்ள மதிப்பினால் என் மீது பரிபூரண நம்பிக்கையும் அன்பும் கொண்டீர்கள். ஒருவிதப் பாச உணர்வை நானும் வளர்த்துக் கொண்டேன். ஆனால் சலுகையை வளர்த்துக் கொள்ளவில்லை. உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியதே யில்லை. என்றுமே சோழ நாட்டுக் குடிமகள் என்ற எண்ணத்திலிருந்து மாறியதே கிடையாது. அதனால் என் மனத்திற்குகந்த மணாளனை நானே தேர்ந்தெடுத்துக் கொள்வதில் தவறில்லை. அந்த முடிவு சோழநாட்டைப் பாதிக்காது.''

சிந்தாமணி மெல்ல-ஆனால் அழுத்தந் திருத்தமாகப் பேசியதுகேட்டு மன்னர் வியப்புற்றார்.

அவள் சொல்வது அவருக்குப் புரிந்தது. ஆனால் அவரால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. விக்கிரம பாண்டியனுக்கு அவளை மணம் புரிவித்துவிட்டால் சோழ நாட்டிற்கு எந்தவிதத் தொல்லையும் நேராது என்று எண்ணினார். அவருக்கு மகளிருந்தால், அவர் விக்கிரம பாண்டியனுக்கு மணம் புரிவித்துப் புதிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பார். அவருக்குச் சொந்த மகளில்லை. சிந்தாமணியைத் தன் சொந்த மகளுக்கும் மேலாகக் கருதினார். ஆனால் அவள் அப்படி நினைக்க வில்லையே...

''வீரபாண்டியன் நமது பகைவன் என்பது தெரிந்தும் அவனுடைய மகனைக் காதலிக்கிறாய். அது மாபெரும் குற்றம் என்பது உனக்குத் தெரியாதா!'' குலோத்துங்கன் தன் குரலில் கடுமையைக் குறைத்துக் கொண்டார்.



''ஒரு சமயம் வீரபாண்டியர் சோழ நாட்டுக்கு விரோதி; மற்றொரு சமயம் விக்கிரமபாண்டியர் விரோதியாகி விடுவார். அவர்களை நண்பர்களாகவும் விரோதிகளாகவும் கருதுவது தங்களுடைய மன நிலையைப் பொருத்தது. ஆனால், காட்டில் வீரபாண்டியன் மகனை முதன் முதலில் சந்தித்தபோது ஏற்பட்ட காதல், பகைமை நட்பு இவற்றை மீறியது. விழிகளின் சந்திப்பில் எந்தவிதப் பேதமும் தெரியவில்லை. மேலும் என் தந்தை மீது அவர்கள் மிகவும் மதிப்பு வைத்திருக்கிறார்கள்' என்று சிந்தாமணி அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

சிந்தாமணி தன்னிடம் பயமின்றிப் பேசுவாள் என்பது மன்னர் அறிந்ததே. ஆனால், தன் செய்கை சரிதான் என்று சாதிக்கும் வலுவுடன் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

''உனது தந்தை வீரபாண்டியனுக்கு நல்லது செய்தார். ஆனால் அவன் நன்றியை மறந்தான்'' என்றார் மன்னர்.

''அதே சொல் விக்கிரமபாண்டியனுக்கும் பொருந்தும்'' நொடியில் மறுமொழி கூறினாள் சிந்தாமணி.

''இருக்கலாம்; ஆனால் விக்கிரம பாண்டியன் தன் நிலையை உணர்ந்துவிட்டான். சோழ நாட்டைப் பகைத்துக் கொண்டு மதுரையில் வாழமுடியாது என்பதைப் புரிந்து கொண்டு நம்முடன் சாமாதானம் செய்துகொண்டு சரணா கதியே அடைந்துவிட்டான். இனி விக்கிரம பாண்டியனை வெல்ல வீரபாண்டியனால் முடியாது. விக்கிரம பாண்டியன் சோழ நாட்டு மருமகப் பிள்ளையாகிவிட்டால் அவனுக்கு இரட்டிப்பு லாபம். நாம் அவன் நலனை என்றும் கவனிப்போம். சேர நாட்டினின்றும் எதிர்ப்பு வராது. வீரபாண்டியன் சேரநாட்டின் உதவிநாடிச் சென்றிருப்பதாக அறிகிறேன். பாவம், வீர பாண்டியனால் சேரனும்

தொல்லைக்குள்ளாகப் போகிறான்?'' என்று கூறி நிறுத்தியவர், சிறிதுநேரம் ஏதோ யோசித்தவாறிருந்து, திடீரென்று சற்றுக் கடுமயான குரலில், 'சிந்தாமணி! நீ நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வா. நாளைக் காலையில் உன் முடிவைச் சொல்லு'' என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

சிந்தாமணி அவர் செல்வதைப் பார்த்தவாறு நின்றிருந்தாள் அவள் மனம் குழம்பியிருந்தது.

## 9

இரவு வெகு நேரம் அவளுக்கு உறக்கம் வரவில்லை. விக்கிரம பாண்டியனுக்கு மணம் செய்விக்க மன்னர் முடிவு செய்துவிட்டார். அரசர் முடிவொன்றைச் செய்தால் அதை மாற்றவே மாட்டார் என்பது அவளுக்குத் தெரியும். சோழ நாட்டின் நலனுக்காக அவர் இந்தத் திருமணத்தை நடத்த முற்படுகிறார் என்பதும் அவளுக்குத் தெரியும். அதைத்தான் அவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

படுக்கையில் புரண்டு படுத்தாள். நடுநிசி, வெளி உலகமே சந்தடியற்றிருந்தது. பறவை இனங்கள் மெல்லிய குரலைக்கூட எழுப்பவில்லை. தான் செய்வது சரிதானா என்று அவள் தன்னைத்தானே ஒருமுறை கேட்டுக்கொண்டாள். அதற்கு விடையும் சாமாதானமும் அவளே சொல்லிக் கொண்டாள்.

''விக்கிரம பாண்டியனை மணந்து கொள்வதாகவே வைத்துக் கொள்வோம்; அவன் வருங்காலத்தில் சோழ



நாட்டிற்கு விரோதமாக மாற மாட்டான் என்பது என்ன உறுதி? ஆனால் பாண்டிய குமாரன் சோழ நாட்டிற்கு அடிமையாக மாட்டார்; ஆனால் விரோதியும் ஆகமாட்டார். நாம் மதுரை அரண்மனையிலிருந்து அவருக்கு யோசனை கூறுவோம். மதுரையும்-கங்காபுரியும் இணங்கி வாழத்திட்டங்கள் கூறுவோம்.''

அவள் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். இப்போதே மனக்கோட்டை கட்டுகிறாயா? வீரபாண்டியன் மதுரையைக் கைப்பற்றி, பிறகு பாண்டிய குமாரனை நீ மணந்து, அவருக்கு யோசனைகள் கூறி, அந்த யோசனையை அவர் கேட்டு...! அப்பப்பா...! இந்தக் காலத்துக்கு ஆகக் கூடியதா? ஆகும்...ஆகும்! எந்தக் காரணம் கொண்டும் மன்னரின் திட்டத்திற்குச் சம்மதத்தைத் தெரிவிக்கப் போவதில்லை.

அவள் படுத்திருந்த அறையின் திறந்த சாளரத்திற்கு அருகே நிழலாடியது. அடர்ந்த இருளிலும் யாரோ மெல்ல நடமாடுவது தெரிந்தது. சிந்தாமணி சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். தன் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

கங்கைகொண்ட சோழபுரத்துக் கோட்டைப் பாதுகாவல் மிகக் கடுமையானது. அதிலும் உட்கோட்டை எனப்படும் மாளிகை இருக்குமிடத்திற்குள் காவல்வீரர்களின் கண்காணிப்பு மிக அதிகம். அவர்களையும் மீறி யார் வந்திருப்பார்கள்?

''யாரது?'' குரல் கொடுத்தாள் சிந்தாமணி. அச்சம் என்பதை என்றுமே அறியாத சோழநாட்டு மங்கை அவள்; வீரரின் மகள் அவள்.

சாளரத்திற்குள் நுழைந்து, உள்ளே தொப்பென்று குதித்தது அந்த உருவம்.

''கூச்சலிடமாட்டாய் என்பதை நான் அறிவேன்'' என்று மெல்லிய குரலில் கூறியவுடனேயே சிந்தாமணி புரிந்து கொண்டாள்.

''ஆ! நீங்களா?'' என்று கூவ வாயெடுத்தவள் தானே அடக்கிக் கொண்டாலும், இதழ்களை இதழ்கள் அடக்கிவிட்டன.

பாண்டிய குமாரனின் அணைப்பில் கணநேரமே இருந்ததும் அவளையறியாமல்தான்.

பிறகு தன்னை விடுவித்துக்கொண்ட அவள், ''ஐயோ! இதென்ன இங்கே எப்படி வந்தீர்கள்? கோட்டைக் காவலர்களை ஏமாற்றியிருக்கலாம். ஆனால் மிகவிரைவில் அவர்கள் தங்களைக் கண்டுபிடித்துவிடுவார்கள்'' என்று கவலையுடன் கூறினாள்.

தன்னை மீண்டும் அணைக்க முயன்ற பாண்டிய குமாரனின் கரங்களை மெல்ல ஒதுக்கி, ''இது நியாயமா?'' என்றாள்.

''எதைச் சொல்கிறாய்? உன்னைத் தழுவியதையா? மீண்டும் தழுவத் துடிப்பதையா?''

''இல்லை. தங்கள் உயிரைப் பணயம் வைக்கிறீர்களே, அதைச் சொல்கிறேன்.''

''நான் மட்டுமா? என் தந்தையும் உயிரைப் பணயம் வைத்திருக்கிறார். மதுரையை மீட்காமல் நான் உன்னைத் தொடுவதில்லை என்றுகூட நினைத்திருந்தேன். ஆனால் சிந்தாமணி! உன்னை ஒருநாள்கூடப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. உன்னைச் சந்தேகித்ததுண்டு. பகைவனைக் காதலிப்பதுபோல் நடித்து என்னையும், என் தந்தையையும் சோழ வீரர்களிடம் காட்டிக் கொடுக்க நினைக்கும்



வேஷக்காரியோ நீ என்றும் நினைத்ததுண்டு. அதற்காகப் பல பரீட்சைகள் நடத்தினேன். அனைத்திலும் வென்று விட்டாய். உன்னை எனது பரம விரோதிக்கு மணம் செய்விக்க உனது தந்தை முடிவு செய்துவிட்டார் என்பதையும், அதற்கு நீ சம்மதிக்காமல், உன் முடிவை மாற்றிக் கொள்ளாமல் உறுதியாக நிற்கிறாய் என்பதையும் அறிந்துகொண்டேன். உன்னைக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு உடனே அழைத்திருக்கிறார் குலோத்துங்கன் என்பதையும் நான் அறிந்தேன். உன்னைப் பின்தொடர்ந்து வந்தேன்'' என்று கூறி அவள் கரங்களைத் தன் கரங்களில் சிறைப்பிடித்தான். சிந்தாமணி மீண்டும் வியப்புடன் குரல் எழுப்பினாள்.

''என்னைத் தொடர்ந்து வந்தீர்களா?''

''ஆமாம். கடைசியாக ஓர் ஓலையை எழுதி...'' அவன் முடிப்பதற்குள், மிக நாணமுற்றவளாக, ''இது நியாயமா? நான் குளிக்கும்போது ஓலையை வீசியிருக்கிறீர்கள். அப்படியென்றால்...'' என்று தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''ஆமாம், அப்படியேதான்; நீ நினைப்பதுபோல்தான்'' என்று கூறியவன், அவள் எதிர்பாராத விதமாக அவளைத் தன் மார்பில் சிறைப்படுத்தி, பலநாள் பசியுற்றவன் உணவைப் பரபரப்பாக உண்பதுபோல் அவள் மேனியெங்கும் ஸ்பரிசித்து, ''சிந்தாமணி! ஒரு முக்கியமான செய்தியைக் கூறவே வந்தேன். கட்டுக்காவல் மீறி வந்தேன். உங்கள் சோழநாட்டுக் காவலைச் சொல்லு! நாளையே இந்தக் கோட்டைக்குள் எங்கள் வீரர்களுடன் நுழைந்துவிட முடியும். எதிர்க்கும் வீரர்களை துவம்சம் செய்துவிட்டு உன்னைக் குதிரைமீது அமர்த்திக் கவர்ந்து சென்றுவிட முடியும். ஆனால் அப்படிச் செய்ய விரும்பவில்லை. உன்னிடம் ஒரு முக்கிய செய்தியைச் சொல்லிவிட்டுச் செல்ல வந்தேன். அந்தச் செய்தி

மிக இரகசியமானது. அந்தச் செய்தியை நான்கூட வெளியே சொல்லக்கூடாது. அந்த இரகசியத்தைச் சொல்பவர் யாராயிருந்தாலும் மரணதண்டனைதான். உனக்காக நான் மரண தண்டனை என்ன, அதைவிட மிகப்பெரிய தண்டனையையும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்!''

சிந்தாமணி தன் மெல்லிய பூ விரல்களால் அவனது இதழ்களைப் பொத்தி, ''வேண்டாம்.. வேண்டாம்...! இரகசியத்தைச் சொல்லாதீர்கள். நீங்கள் இங்கிருந்து போய்விடுங்கள். உங்களுக்கு மரண தண்டனையா? அதை வாயால் சொல்வதே என்னைச் சுட்டெரிக்கிறது. காதால் கேட்பது அம்புகள் பாய்வதுபோல் இருக்கிறது. இவ்வளவு நேரம் தாங்கள் இந்த அறையில் இருப்பதைக் காவலர்கள் அறிந்தால் உண்மையிலேயே நீங்கள் தப்ப முடியாது. சிக்கிய விரோதிக்கு மன்னர் என்ன தண்டனை தருவார் என்பதை நான் சொல்ல வேண்டுமா? போய் விடுங்கள். விரைந்துசென்று என்னை முறையாக மீட்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஒருவேளை விக்கிரமபாண்டியனுக்கு என்னைத் திருமணம் செய்து கொடுக்க முடிவாகித், திருமணநாளும் குறிக்கப் பட்டால், முகூர்த்தப் பந்தலிலிருந்து என்னை மீட்டுச் செல்லுங்கள்''-என்று மெல்லிய தழுதழுத்த குரலில் கூறினாள்.

வேறு இடமாக இருந்திருந்தால் பாண்டியகுமாரன் 'ஹோ ஹோ' என்று பலமாகச் சிரித்திருப்பான். இடம், சூழ்நிலை அறிந்து மெல்ல நகைத்து, ''சிந்தாமணி! உனக்கு ஒரு நல்ல செய்தி கூறவே வந்தேன். விக்கிரமன் திருமண நாள்வரை காத்திருக்க வேண்டாம். இந்த நேரம் எங்கள் படைகள் மலைமீதிருந்து இறங்கி வந்திருக்கும். வனங்களிலிருந்து புறப்பட்டு வந்திருக்கும். நான் அங்கே போய்ச் சேர்ந்தவுடன் மதுரையை முற்றுகையிடுவோம். விக்கிரம பாண்டியன்



படைகளையும், அவனுக்கு உறுதுணையாக இருக்கும் சோழர் படைகளையும், நிர்மூலமாக்கிவிடுவோம். பிறகு உன்னை மணப்பதில் எனக்குத் தடையேதுமில்லை. சிந்தாமணி! உன்னை எனக்குப் போர்க்களம் பரிசாக அளிப்பதைத்தான் நான் விரும்புவேன்; இரகசியமாகக் கவர்ந்து செல்வதை அல்ல, சிந்தாமணி! மறந்தும் எங்கள் திடீர்த் தாக்குதல் திட்டத்தை எவரிடமும் சொல்லிவிடாதே; வருகிறேன். அடுத்து மணவறையில் சந்திப்போம்!'' என்று கூறி அவளை இழுத்தணைத்து, இதழ்களிடம் இரகசியம் பேசி விடைபெற்றுக் கொண்டான்.

அவன் எந்தப்பக்கம் சென்றான், எப்படிச் சென்றான் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. குலோத்துங்க சோழ தேவரின் சமூகம் காண ஒற்றர் படைத்தலைவர் நின்றிருந்தார். அவர் கூறிய செய்தி மன்னரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''மலைக்காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான வீரபாண்டியனின் வீரர்கள் ஒன்று திரண்டு மதுரையை நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள்.''

## 10

குலோத்துங்க சோழ தேவர் கட்டளைப்படி சோழர் படைகள் மதுரையை நோக்கி விரைந்தன. சோழப் படைகளை எதிர்த்து முழக்கஞ் செய்து அணிவகுத்துச் சென்றதைவிட இப்போது படைகள் வீறுகொண்டு புறப்பட்டன. மூல பல சைன்யங்களைக்கூடப் புறப்படுமாறு அரசர் கட்டளை இட்டதாகக் கேள்வி.

'மதுரையைத் தாக்கப் படைகள் முழுமையையும் அனுப்பி விட்டாரே சக்கவர்த்தி. கங்காபுரிக்கு எதிரிப் பயம் இல்லை என்று நினைத்துவிட்டாரா? என்ற கேள்வி நகரில் எழுந்தது.

'உறையூரைத் தாண்டி, கங்காபுரிக்கு எந்த ஆபத்தும் நேராது என்ற உறுதியுடன் மன்னர் நினைத்திருக்கலாம்' என்ற மறுபேச்சும் எழாமலில்லை.

'அப்படியென்றால் கோட்டைக் கதவுகளை எல்லாம் மூடும்படி உத்தரவிடுவானேன்? மதிலின், பழுதுபட்ட இடங்களைச் செப்பனிடச் சொல்வானேன்?'

இந்தக் கேள்விக்கும் சமாதான மறுமொழி கிடைத்தது.

'அன்று இரவு கட்டுக்காவலைத் தாண்டி உள்கோட்டை மாளிகைக்குள் பகைவன் வந்திருக்கிறான். அதெப்படி நேர்ந்தது என்ற பெருங் கேள்வி மன்னரைச் சிந்திக்க வைத்தது. அதனால்தான் அவ்வளவு பலத்த காவல்' என்றும் சிலர் கூறினர்.

அதற்கு நமுட்டுச் சிரிப்பும் எழாமலில்லை.

'யாரோ பகைவன் வந்துவிட்டானோ? தெரிந்த பகைவன்தான். சக்கரவர்த்திக்கும் யாரென்று புரிந்துவிட்டது. இப்போது அவருக்கு யாரை நம்புவது என்றே தெரியவில்லை' என்ற பேச்சு அந்தரங்கமான செய்தியறிந்தவரால் கூறப்பட்டது.

அரசரும் அப்படித்தான் நினைத்தார். 'நம்பத்தான் முடியவில்லை. சிந்தாமணியா இப்படிச் செய்திருப்பாள்? சோழ நாட்டிடம் உயிருக்குயிரான பாசமும் பக்தியுங்கொண்ட பல்லவராயரின் அன்பு மகள் சிந்தாமணியா பகைவனை அந்தப்புரத்திற்கு வரவழைத்தாள்?'



'நான் வரவழைக்கவில்லை. அவராகத்தான் வந்தார்.' என்று அழுத்தந் திருத்தமாகப் பயமில்லாமல் சொல்கிறாளே என்று அரசர் நெற்றிப் பொட்டைச் சற்றுத் தேய்த்துக் கொண்டார். கை விரல்களை மடக்கிச் சொடுக்கிக் கொண்டார்.

'அவன் ஏன் வரவேண்டும்? உன்னை இதற்கு முன்பு சந்தித்த துணிவு இல்லாமலா வந்திருப்பான்?' என்ற கேள்விக்கும் உடனே மறுமொழி வந்தது.

'அவர் மரியாதை அளிக்கப்பட வேண்டியவர். அவரைப் பலதடவை சந்தித்திருக்கிறேன். என்னைச் சந்திப்பதற்கு அவருக்கு எந்தவிதத் துணிவும் தேவைஇல்லை. நானே மிகத் துணிவுடன் காடும் மலையுங் கடந்து அவரைச் சந்தித்திருக்கிறபோது அவருக்கு இந்த அரணும், கட்டுக் காவலும் ஒரு தூசு.''

சிந்தாமணி பயமின்றிப் பேசினாள். விளைவை எதிர்நோக்கியே பேசினாள்.

''உன் தோழிக்குத் தெரியுமா உன் காதல்?''

''தெரியும்.''

''அவன் இங்கே வந்து சென்றது தெரியுமா?''

''மறுபடியும் சொல்கிறேன்; 'அவன்' இல்லை-அவர். அவர் இளவரசர். நாடாள வேண்டியவர். நாடாளப் போகிறவர். அவர் வந்து சென்றது யாருக்கும் தெரியாது. எனக்கே கனவுபோல்தான் இருக்கிறது.''

''ஓ! இளவரசரா! வீர பாண்டியன் புதல்வனைச் சொல்கிறாயா? வீரபாண்டியன் நாடாள வேண்டியவன்தான். அவனுக்கு மதுரை அரியணையை உன் தந்தைதான் கொடுத்துப் பார்த்தாரே! அவன் துரோகி. ஆளக் கொடுத்து வைக்காதவன். அந்தப் பகைவனது மகனையா

காதலிக்கிறாய்? உன் தந்தை ஒரு நாளும் இதற்குச் சம்மதித்திருக்க மாட்டார். சிந்தாமணி! மனத்தை மாற்றிக்கொள். விக்கிரம பாண்டியனுக்கும் உனக்கும் திருமணத்திற்கு நாள் குறித்துவிட்டேன். மதுரையில்தான் திருமணம். மதுரை நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் வீரபாண்டியன் போருக்குப் புறப்பட்டுவிட்டான் என்ற செய்தி. பாவம்! உன் திருமண வைபவத்தன்று அவன் கை விலங்குகளைக் கழற்றி மலர் தூவி வாழ்த்த அழைத்து வருகிறேன்'' என்று மன்னர் மிகவும் பணிவாக, அமைதியாக ஆழ்கடல்போல் அலையின்றி, நீறு பூத்த நணல்போல் பேசினார்.

பேசியதுடன் செயலிலும் காட்டினார். மதுரையை நோக்கிச் சென்ற தேர்ப்படைகளுடன் சிந்தாமணியையும் அழைத்துச் சென்றார்.

சிந்தாமணிக்கு உள்ளத்தில் உறுதி இருந்தது. பாண்டிய குமாரன் வெற்றி வாகை சூடித் தன்னை மணக்கப் போகிறான் என்ற நம்பிக்கை இருந்தது. அதே போரைக் கண்டு பயமுமிருந்தது. சோழநாட்டுப் படைகளை வெல்வது அவ்வளவு எளிதன்று என்பது அவளுக்குத் தெரியும்.

'பாண்டிய குமாரனுக்கு மட்டும் தெரியாதா? விக்கிரம பாண்டியனின் படைகள், சோழ நாட்டுப் படைகள் இரண்டையும் எதிர்த்து வெல்லும் சக்தி தனக்கு இல்லாமலா போரில் இறங்கியிருக்கிறார்.'

சிந்தாமணி, பிரார்த்தனை செய்துகொண்டே சென்றாள். அவள் யார் அழிவுக்காகவும் பிரார்த்திக்கவில்லை. வீரபாண்டியன் வெல்லவேண்டுமென்றால் சோழர் படைகள் தோற்கவேண்டும். சோழர் படைகள் தோற்றோட அவள் பிரார்த்தனை செய்யமுடியுமா? அவளுடைய தந்தைக்குப்



பெருமை தேடித்தந்த சோழ நாடு தோல்வி அடைவதா? அவள் தந்தையால் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட சோழர் படைகள் தோல்வியைச் சந்திப்பதா? அதற்காகப் பிரார்த்தனை செய்ய முடியுமா? கூடாது. ஆனால், வீரபாண்டியன் தோற்றோடக் கடவுளைத் துதிக்க முடியுமா? அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். அவர் தோற்றால் அவளுக்கு வாழ்வேது? பிறகு என்னதான் பிரார்த்தனை செய்யமுடியும்?

''தாயே மீனாட்சி! என் மனம்போல் வாழ்வமையச் செய்வாயம்மா? வீரபாண்டியர் மீது சோழசக்கரவர்த்திக்கு வெறுப்பு ஏன்? அவரிடம் நல்லெண்ணம் ஏற்பட அருள் செய்யக்கூடாதா?'' என்று பிரார்த்தனை செய்தாள்.

''விக்கிரம பாண்டியனுக்கு நான் மாலையிடாமல் உன் விழிச் சக்தியால் தடுத்துவிட மாட்டாயா?'

அவளுடைய நியாயமான பிரார்த்தனை அது. மனத்துக்குள் பிரார்த்தனை. நேரே மதுரை மீனாட்சி ஆலயத்திற்குச் சென்று இதே பிரார்த்தனையை மனம் நெகிழ வேண்டினாள் சிந்தாமணி.

## 11

வீரபாண்டியன் சினத்துடன் புலிபோல் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். அவன் உள்ளத்தில் சினம் பெரும் எரிமலைபோல் குமுறிக் கொண்டிருந்தது.

பாடி வீட்டில் வீரர்கள், தலைவருடைய உத்தரவை எதிர்பார்த்து ஆயத்தமாக இருந்தனர். மறுநாள் பொழுது

புலரும்போது அவர்கள் நான்மாடக்கூடல் நகர்கோட்டையைத் தாக்குவது என்று முடிவு செய்திருந்தனர்.

அவர்களுடன் சேரநாட்டு வீரர்கள் பல்லாயிரவரும் சேர்ந்து கொள்வதென்றும் முடிவாகியிருந்தது. மதுரைப் படைகளுக்குச் சோழ நாட்டிலிருந்து உதவிவரும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நெட்டூரில் நடந்த போரில் தன் படைகளும், சேரநாட்டுப் படைகளும் பெருந்தோல்வி கண்டு ஓடியதை வீரபாண்டியன் மறக்கவில்லை. அதனால் சோழர் படைகளைத் தனித்து மடக்கிவிடத் திட்டமிட்டிருந்தான். சேரநாட்டுப் படைகள் சோழர் படைகளை வளைத்துவிட வேண்டும் என்பது அவன் முடிவு. சேர மன்னரும் இதற்குச் சம்மதித்து ஓலை எழுதியிருந்தார்.

வாடியிருந்த வீரபாண்டியன் சேரநாட்டுப் படைகள் புறப்பட்டுவிட்ட செய்தியை எதிர்பார்த்திருந்தபோது பாண்டிய குமாரனைப் பற்றிய செய்தி வந்தது. கங்காபுரிக்குப் பாண்டிய குமாரன் சென்றிருப்பதாக வீரபாண்டியனின் இளையகுமாரன் குலபதி கூறினான். குலபதி இதைஅறிந்து தந்தையிடம் தெரிவிப்பதற்காக இடைவிடாது குதிரையின் மீது பயணம் செய்து விரைந்து வந்ததால் அவனுக்கு மூச்சு இரைத்தது.

''பாண்டிய குமாரன் ஏன் கங்காபுரிக்குச் சென்றான்? என்ன ஆபத்தான காரியத்தைச் செய்திருக்கிறான்? குலோத்துங்கனும் இப்போது கங்காபுரியில்தான் இருக்கிறானாம். இவனுக்குக் கங்காபுரியில் என்ன வேலை?'' என்று வீரபாண்டியன் சீறினான்.

பாண்டிய குமாரனின் இளவல் குலபதி. இருவருக்கும் வயது வித்தியாசம் உண்டு. பாண்டியகுமாரனைப்போன்று



வீரதீர பராக்கிரமங்கள் நிறைந்தவன் அல்லன் என்றாலும், பாண்டிய நாட்டு வீர இரத்தம் அவன் உடலில் ஓடாமல் இல்லை.

கங்காபுரியில் தன் சகோதரனுக்கு என்ன வேலை என்பதைக் குலபதி அறிவான். சகோதரனின் காதல் விவகாரம் அவனுக்கு ஆரம்பத்திலிருந்து பிடிக்கவில்லை. இதுதான் சமயம் என்று தந்தையிடம் சற்று மிகையாகவே கூறிவிட்டான்.

வீரபாண்டியனின் சீற்றம் எல்லையைக் கடந்தது. ''முட்டாள்கள் எனக்குப் புதல்வர்களாக வாய்த்திருக்கிறார்கள். உங்களை நம்பி நான் இப்போரில் இறங்கவில்லை. ஆனால் உங்களுக்காகத்தான் இவ்வளவு கடும் போர் புரிகிறேன். மதுரை மகுடத்தைத் தலையில்நானா எப்போதும் கவிழ்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்? பாண்டிய குமாரன் மதுரை அரியணையில் அமரவேண்டும். பரம்பரை பரம்பரையாக நமக்கு உரிமையான இந்நாட்டை ஆள வேண்டும் என்பதற்காகத்தானே நான் சேர மன்னனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டேன்? மலைக்காடுகளில் எவ்வளவு நாள்கள் அலைந்திருக்கிறேன்'' என்று அவர் பாடி வீடே நடுங்குமாறு கர்ஜித்தார்.

வீரபாண்டியனின் பேரன்பு பெற்றுவிட்டவன் குலபதி. இளையமகன் மீது அவருக்கு மிகுந்த பிரியம். தந்தையின் கோபத்தை அவன் புரிந்துகொண்டான். வாழ்வா சாவா என்று நடைபெறும் போரின் மிக முக்கியமான கட்டத்தில் தன் சகோதரன் இழைத்துவிட்ட குற்றத்திற்காகத் தந்தை சீற்றமடைவது நியாயம்தான் என்பதை அவன் உணர்ந்திருந்தான். ஆனாலும் தந்தை முனைந்து போர் புரிவது தன் மகனுக்கு மகுடம் அளிக்க மட்டும்தானா? தந்தையின் கோபத்தைத் திசைமாற்ற விரும்பினான்.

''அப்பா'' என்று கொஞ்சும் மொழியில் அழைத்தான். அவர் திரும்பிப் பார்த்தார்.

''மதுரை அரியணையை என் சகோதரனுக்கு அளிக்கவா தாங்கள் போர் புரிகிறீர்கள்? நெட்டூர்ப் போர்க்களத்தைச் சற்று நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்'' என்றான் மெதுவாக.

''நெட்டூர் - ஆம்! அதற்கு என்ன இப்பொழுது? நெட்டூரில் நமது படைகள் தங்கள் பலம் முழுவதையும் செலுத்திப் போர் புரிந்தன...''

''அந்தப் போர் நமக்குத் தோல்வியை மட்டும் தரவில்லை.''

''தெரியுமடா! அந்த வடு இன்னும் மறையவில்லை. பாண்டிய நாட்டுப் பரம்பரை முடியைக் குலோத்துங்கன் அபகரித்துக்கொண்டான்.

''அப்பா! அது மட்டுமா? அருமை அன்னையையும் பிற அந்தப்புரப் பெண்டிரையும் குலோத்துங்கன் சிறைப்படுத்திக் கொண்டு சென்றதை மறந்துவிட்டீர்களா?''

குலபதி இவ்வாறு கூறியவுடன், வீரபாண்டியன் தன் மகன் அருகே நெருங்கி, ''குலபதி! என் கண்ணே! நான் அந்த மாபெரும் அவமானத்தை மறந்துவிட்டேன் என்று நினைத்துவிடாதே. பாண்டிய அரசி-பட்டத்து ராணி-உன் அருமைத் தாய் என் உயிருக்குயிரான செல்வியைக் கங்காபுரிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். மனைவியை இழந்து வாழும் நான் ஓர் அரசனா? இந்த அவமான உணர்ச்சிதான் என் குருதியில் கொப்பளித்து ஓடுகிறது. நாடி நரம்புகள் எப்போதும் துடித்துக் கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே அந்த அவமானத்தைத் தீர்க்கவே நான் போரிடுகிறேன். நீயே சொல்லு; தாய் சிறையில் வாடும்போது



உன் அண்ணன் பகைவன் மகளைக் காதலிக்கிறான்... நீயே சொல்லு, நியாயமா?'' வீரபாண்டியனின் சீற்றம் குறைந்துவிட்டது.

''தந்தையே! என் அருமைச் சகோதரன் பகைவனின் மகளைக் காதலிக்கிறான் என்பது தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியும்! தெரியும்! காளி கோயிலருகே முதல்நாளே நான் அவளைக் கண்டேன். அண்ணன் பல்லவராயனுடைய மகள் என்பதைத் தெரிந்து கொண்டவுடன் அவள் காளி கோயிலுக்கு வருவதைத் தடை செய்யவில்லை. அதனால் அவர்கள் காதல் வளர்ந்தது.''

''அண்ணன் பல்லவராயன் நமக்கு விரோதி!''

''ஆம்! ஒருவகையில் பரம விரோதி. ஆனால் என்னிடம் அவருக்கு மதிப்பு அதிகம். குலசேகர பாண்டியனை அரியணையிலிருந்து நீக்கி அதை எனக்கு அளித்த வீரத்தளபதி. ஆனால் விதி வேறுவிதமாக விளையாடியது! என் மதியை ஏதோ மறைத்தது. ஈழத்து அரசனின் இனிய சொற்களில் மயங்கி, அவனுடன் சேர்ந்துகொண்டு சோழனை எதிர்த்தேன். போர் நடந்தது. முடிவைத்தான் இப்போது அனுபவிக்கிறோம்.''

''அது என்ன நியாயம்? நாம் யாருடனும் சேரலாம். சோழருக்கு அதில் தலையிட என்ன உரிமை இருக்கிறது?'' குலபதி கோபத்துடன் கேட்டான்.

வீரபாண்டியன் புன்முறுவலுடன், ''எனக்குந்தான் விளங்கவில்லை. சோழர்களும், நாமும் எப்போதும் தீராத பகை கொண்டிருக்கிறோம். இருவரும் தமிழன்னையின் புதல்வர்கள். நீயே சொல்லு! பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் என்ன வேற்றுமை? நடை, உடை, பழக்கங்களில் என்ன வித்தியாசம்? ஆனால் போர், போர்...

எப்போதும் போர்! என் மகன் பல்லவராயன் மகளைக் காதலிக்கிறான் எனும்போது எனக்கு ஓர் ஆசை எழுந்தது. காதல் மலர்ந்து இருவரும் ஒன்றுபட்டு, திருமணம் நடந்தால் சோழ பாண்டிய வேற்றுமை குறையுமோ என்றும் எண்ணினேன்...'' என்றான்.

''நீங்கள் நினைப்பது போல்தான் குலோத்துங்கனும் நினைத்திருக்கிறார். பாண்டிய நாட்டுடன் நிரந்தரச் சமாதானத்தைப் பெறப் பல்லவராயன் மகளை மணம் செய்விக்க நினைக்கிறார்!'' என்று குலபதி கூறியவுடன் வீரபாண்டியன் பரபரப்புடன், ''அப்படியா? சமாதானத்திற்கு முயல்கிறானா குலோத்துங்கன்? நமது படைகளின் பலத்தை உணர்ந்து விட்டானா? சேரனுடைய உதவி வருகிறது என்றவுடன் பயந்து விட்டானா?'' என்று கேட்டான்.

குலபதி தலையை அசைத்தான். ''இல்லை, இல்லை. பாண்டிய குமாரனுக்கு மணம் செய்விக்க நினைக்கவில்லை. விக்கிரம பாண்டியனுக்கும், சிந்தாமணிக்கும் நாளை மறுநாள் திருமணம். மதுரை அலங்கரிக்கப்படுகிறது! பாவம் போர்க்களத்தின் பயங்கரத்தை எதிர்பாராமல் திருமணக் கோலாகலத்தில் மதுரை திளைத்திருக்கிறது!''

குலபதி சொல்லச் சொல்ல வீரபாண்டியன் முகம் சிவந்தது. மீசை துடித்தது. கடுஞ் சினத்தால் உடல் ஆடியது.

''திருமணமா? ஆகா! விக்கிரம பாண்டியா! உனக்குத் திருமணமா? பூமாலை விழப்போகிற உன் கழுத்தில் இந்த வாள் விழப்போகிறது, என்ன துணிவு உனக்கு? என் மகன் மணக்கவிருக்கும் சிந்தாமணியை நீ மணப்பதா? முடியாது. முடியவே முடியாது. போர்-போர் ஆம்! போரே முடிவு சொல்லும்'' என்று அவர் சீறி முழங்கிய குரல் பாடி வீட்டு வீரர்களைச் சிலிர்த்தெழச் செய்தது.



## 12

மதுரையிலுள்ள பாண்டியர் மாளிகை சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. குலோத்துங்க சோழ தேவர் கங்காபுரியிலிருந்து வந்துவிட்டார்.

விக்கிரம பாண்டியனுக்கும், சிந்தாமணிக்கும் மறுநாள் திருமணம். சிந்தாமணி மாளிகையிலிருந்து தப்பிச் சென்று விடுவாள் என்றே பலர் எண்ணினர். காட்டுக்காவல் பலமாக இடவேண்டும் என்று யோசனைகள் கூறப்பட்டன. ஆனால் சோழ மன்னர் மறுத்துவிட்டார். ''சிந்தாமணியைத் தன்னிச்சையாய் நடமாட விடுங்கள். அதனால் நமக்கு ஓர் அனுகூலம் உண்டு. பாண்டிய குமாரனை அவள் எப்படியும் சந்திப்பாள். அவளைச் சந்திக்கப் பாண்டிய குமாரனும் அங்கு வருவான். அப்போது உயிருடன் பாண்டிய குமாரனைச் சிறைப்படுத்தி விடலாம். அவரது யோசனை மற்றவர்களுக்குத் திருப்தியாக இருந்தது.

மனிதன் எண்ணப்படி ஏதும் நடப்பதில்லை. விக்கிரம பாண்டியன் மகிழ்ச்சியின் உச்சியில் உலாவிக் கொண்டிருந்தான், சிந்தாமணியை மணக்கப்போவதாக நினைத்துக்கொண்டு.

குலோத்துங்கனோ, பாண்டிய குமாரனை எப்படியும் சிறைப்படுத்திவிடலாம் எனத் திட்டமிட்டிருந்தார்.

வீரபாண்டியன், சேர மன்னன் படைகளின் வருகையை எதிர்பார்த்திருந்தான். சேரர் படைகள் வந்து சேர்ந்தவுடன் மதுரையைத் தாக்க நினைத்திருந்தான்.

பாண்டிய குமாரன் மனத்தில் இவை ஏதுமில்லை. சில நூறுபடை வீரர்களுடன், கங்காபுரியை நோக்கிச் செல்ல முடிவு செய்திருந்தான்.

சிந்தாமணி - அவள் மனத்தில் எந்தவிதத் திட்டமுமில்லை. இதயம் சூன்யமாகக் காட்சியளித்தது. பாண்டிய குமாரன் சிறைப்படாமல் இருந்தாலே போதும் என நினைத்திருந்தாள்.

நடந்தது வேறுவிதமாக இருந்தது. சேர மன்னன் வீரபாண்டியனைத் தேடி வந்தார். உதவிப் படைகளுடன் வரவில்லை. வில் கொடி பிடித்து வராமல் வெள்ளைக் கொடியுடன் வந்தார்.

''வீரபாண்டியா! நிலைமை மோசமாகும் முன்பு நாம் குலோத்துங்கனைச் சந்திப்போம்'' என்று வார்த்தைகளைக் குறைவாகக் கூறுவதிலேயே தன் உள்ளத்தில் நிலவியிருந்த பீதியை வெளியிட்டார்.

''குலோத்துங்கனைச் சந்திப்பதா? என்ன சொல்கிறீர்கள் சேர மன்னரே!''-வீரபாண்டியன் திடுக்கிட்டுக் கேட்டார்.

''நாம் மலையுடன் மோதுகிறோம். சூரிய ஒளியைச் சிமிழுக்குள் அடைக்கப் பார்க்கிறோம். நம்மைச் சூழ்ந்துள்ள அபாயத்தை நீ புரிந்து கொள்ளவில்லை. குலோத்துங்கன் இந்தத் தடவை நம்மை உயிருடன் திரும்ப விடப் போவதில்லை. லட்சம் படை வீரர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். நம்மைச் சூழ்கிறார்கள் பலர். திருவஞ்சைக் களத்தையும் நிர்மூலமாக்கப் போகிறார்களாம். சென்ற முறை பட்ட அடியே போதும். அத்துடன் நீயே சொல்லு, எனக்கும் சோழனுக்கும் என்ன விரோதம்?'' என்றார் மன்னர்.

''கோழையாகி விட்டீர்களா? பயந்து விட்டீர்களா? கடைசி வினாடியில் எப்படி மாறிவிட்டீர்கள்! ஐயோ, வேறு வழி சிந்திக்கக் கூடப் போவதில்லையே. பாண்டிய குமாரனையும் காணவில்லை...'' என்று வீரபாண்டியன் கலங்கினான்.



''வீரபாண்டியா! போரின் முடிவைப்பற்றி மகத்தான மனக்கோட்டைகள் கட்டலாம். ஆனால், போரின் முடிவு எனக்குத் தெரியும். வீணே பல்லாயிரம் உயிர்களைப் பலியிட வேண்டாம். நாம் குலோத்துங்கன் தங்கியிருக்குமிடம் செல்வோம்...'' சேர மன்னர் துரிதப்படுத்தினார்.

இளைய மகன் குலபதி ஓடோடி வந்தான். அவனைத் தொடர்ந்து படைகளின் பகுதித் தலைவர்கள் வந்தனர்.

''தந்தையே! நிலைமை கட்டு மீறிப்போய்விட்டது. நாமிருக்குமிடத்தைச் சோழர் படைகள் சூழ்ந்து கொள்ள விரைந்து வருகின்றன. போர்க் கலன்களை ஏற்றி வரும் வண்டிகளை மடக்கி விட்டனர். உணவுப் பண்டங்களை நாசப்படுத்திவிட்டனர். சேரர் படைகளும் வரவில்லையே; என்ன செய்வது?'' என்று புலம்பினான்.

வீரபாண்டியன்-என்றும் எதற்கும் கலங்காதவன், கலங்கி விட்டான்.

''என்ன செய்வது? எதிர்த்துப் போராடி வீர சொர்க்கமெய்துவோம்'' என்றது உட்குரல்.

''வீரசுவர்க்கமடைவதால், உன் மானப் பிரச்சனை தீர்ந்து விடுமா?''-மற்றொரு குரல்.

''சோழ வேளத்தில் வாடுகிறாளே அவள் கதி என்ன? வேலைக்காரியாகவே உயிர் விடுவாளா? சிறைப்படுத்தப் பட்ட உன் மகன் கதி என்ன? வீர சுவர்க்கம் என்ற பெயரால் கடமையைத் தட்டிக் கழித்துவிடப் போகிறாயா?''-குரலில் வித்தியாசம் இருந்தது.

''வீரர்கள்-தளபதிகள் என்ன சொல்கிறார்கள்?''

''வழி தெரியாது வேதனைப்படுகிறார்கள். என்ன செய்வது எனப் புரியாது தவிக்கிறார்கள். அவர்கள் மனத்திலே பயம். தோள்கள் நடுங்குகின்றன.''

வீரபாண்டியன் ஒருகணம் யோசித்தான். சேரமன்னன் கரத்தினைப் பிடித்து, "என்ன செய்யலாம் சேரமன்னரே?" என்று குரல் தழுதழுக்கக் கேட்டான். "வீரபாண்டியா! குலோத்துங்கனைச் சந்தித்துப் போர் நிறுத்தம் வேண்டுவோம். நிராயுதபாணிகளாகச் செல்வோம்"-சேர மன்னர் தெரிவித்தார்.

"அழியாத அவமானமல்லவா?"

வெற்றி அல்லது தோல்வி- போர்க்களத்தில் இரு முடிவுகள்தாம். சமாதானம் அல்லது வீர மரணம். இரண்டு முடிவுகள்தாம். நாம் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் போர் சேர நாட்டிற்கும் சோழ நாட்டிற்குமன்று. என்றாலும் உமக்காக நான் ஏதாவது செய்தாக வேண்டும். நான் எடுத்த முடிவு சமாதானம்தான்"-சேர மன்னர் உறுதியுடன் கூறினார்.

"உம், குலபதி! என்னுடன் வா. பாண்டிய குமாரனையும் அழைத்து வரக் கட்டளையிடுகிறேன். ஆனால்... ஆனால் சேர மன்னரே! உமக்காகக் குலோத்துங்கனிடம் வருகிறேன். அங்கே சபையிலே ஏதாவது அவமானம் நேருமானால், உடனே உயிர் துறந்து மானங் காப்பேன்" என்று அந்தச் சோக நிலையிலும் வீரம் பேசித் தன் மகனுடன் புறப்பட்டான்.

சேர மன்னனும் தன் மகனுடன் புறப்பட்டான். வெள்ளைக்கொடி, பிடித்த வீரன் ஒருவன் அவர்கள் முன்பு விரைந்து சென்றான்.

குலோத்துங்க சோழ தேவர் அந்த நேரத்தில் வீரபாண்டியனையும், அவரது மகனையும் அங்கே எதிர்பார்க்க வில்லை. சேர மன்னரும் வந்திருக்கும் செய்தி அவருக்கு அதிர்ச்சியை அளித்தது.



செய்தி கொண்டுவந்த பணியாளரிடம், "என்ன சொல்கிறாய்? வீரபாண்டியனுடன் சேரமன்னர் வந்திருக்கிறாரா? வெள்ளைக்கொடி பிடித்திருக்கிறாரா? நம்ப முடியவில்லையே" என்று வியப்புடன் கேட்டார்.

"வீரபாண்டியனுடன் அவருடைய மகனும் வந்திருக்கிறார்" என்று கூறினான் பணியாள்.

"என்ன பாண்டிய குமாரனா? அவனும் பணிந்து விட்டானா? என் திட்டம் மிக எளிதில் நிறைவேறிவிடும். போர்க்களத்தில் பல ஆயிரம் வீரர்களைப் பலியிடாமலேயே நம் திட்டம் நிறைவேறிவிடும்" என்று குலோத்துங்கன் மிக மகிழ்ச்சி கொண்டார்.

"வரச் சொல்லுங்கள்; தக்க மரியாதையுடன் அழைத்து வாருங்கள்" குலோத்துங்கன் உணர்ச்சிவசப்பட்டார்.

"என்ன இது வீரபாண்டியரே!" என்று உணர்ச்சிவசப் பெருக்கால் தழுதழுக்கப் பேசிய குலோத்துங்கன், "இவன் உங்கள் மகனா?" என்று காலடியில் வீழ்ந்த குலபதியைத் தூக்கி அணைத்துக் கொண்டார்.

"இவன் என் இளைய மகன். முதல் மகன் பாண்டிய குமாரனுக்குச் சொல்லியனுப்பி இருக்கிறேன். அவன் எளிதில் அடிபணியச் சம்மதிக்க மாட்டான்" என்றான் வீரபாண்டியன்.

குலோத்துங்கன் மெல்ல நகைத்தார். "கங்காபுரி மாளிகைக்குள் நுழைந்த அந்த வீர சிங்கமா? அந்தச் சிங்கத்தை உயிருடன் பிடித்துவரச் சோழ வீரர்கள் அலைந்து திரிகிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் இங்கே அழைத்து வரப்படுவான். பல்லவராயர் மகள் சிந்தாமணிக்கும் விக்கிரம பாண்டியனுக்கும் இன்னும் சிறிது நேரத்தில் திருமணம். திருமண நாளில் வந்திருக்கிறீர்கள். நமக்குள் வீணே போர்

எதற்கு? போரை நிரந்தரமாக நிறுத்த ஓர் முடிவு செய்திருக்கிறேன்'' என்று கூறிய குலோத்துங்கனின் அன்புச் சொற்களை, ஆதரவுச் சொற்களை வீரபாண்டியன் எதிர்பார்க்கவில்லை. சேரமன்னரும், வீரபாண்டியனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''வீரபாண்டியரே! என் சொற்கள் தங்களுக்கு வியப்பை அளிக்கின்றனவா? மிகத் தீவிரமான சிந்தனைக்குப் பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தேன். நமக்குள் வீண் போர் எதற்கு? உங்கள் உள் நாட்டு விவகாரத்தில் நான் ஏன் தலையிடுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். நான் தலையிட்டிருக்காவிடில் ஈழத்துக்கு நீங்கள் நிரந்தர அடிமையாகியிருப்பீர்கள். நீங்கள் மட்டுமென்ன? சோழ நாட்டிற்கும் அந்த அபாயம் ஏற்படும். சோழ-பாண்டியர்களுக்கு எந்தவித வெளிநாட்டு அபாயமும் நேரக் கூடாதென்றே உங்கள் நாட்டு ஆட்சிமுறையில் தலையிட்டேன். நடந்தது நடந்துபோன தீய கனவாகவே இருக்கட்டும்'' என்றார்.

அவர்களை வியப்புக் கடலில் ஆழ்த்தும் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது. விருந்தோம்பலுடன் மன்னர் இருவருக்கும் புத்தாடைகள் பரிசளிக்கப்பட்டன. குலபதியைத் தன் அருகிலேயே அமர்த்திக்கொண்ட குலோத்துங்கன் ''சேர மன்னரே! பாண்டிய நாட்டில் மூவேந்தர்களான நாம் சந்திப்பது வரலாற்றில் மகத்தான நிகழ்ச்சி. இந்த நாளை நான் அழியாத நாளாகக் கொண்டாட விரும்புகிறேன். பாண்டி நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இனி போரே இருக்கக் வடாது. விக்கிரம பாண்டியனுக்குச் சிந்தாமணியைத் திருமணம் செய்துகொடுத்து நட்புரிமையை வளர்த்துக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். ஆனால், அந்தக் கொடுப்பினையால் மட்டும் பாண்டிய நாட்டுடன் என்றுமே அமைதி நிலவாது. நமது வீரபாண்டியனுக்கும் பாண்டிய



நாட்டில் உரிமை உண்டு. பாண்டிய நாட்டை இருபகுதிகளாக்கி ஒரு பாதியை விக்கரம பாண்டியனுக்கும், மற்றொரு பாதியை வீரபாண்டியனுக்கும் அளிக்கிறேன். இதனால் என்றுமே பூசல்கள் நேராது அல்லவா?'' என்று கூறும்போது வீரபாண்டியனுக்குத் தான் காதால் கேட்பது மெய்தானா என்ற வியப்பு ஏற்பட்டது.

வியப்புடன் வேதனையும் ஏற்பட்டது- தன் மகன் பாண்டிய குமாரனைப் பற்றிய வேதனை அது. தன்னுடைய இந்தச் செயலை அவன் ஒருபோதும் ஏற்கமாட்டான். 'போர்-போர்'- போர் ஒன்றே அவனுடைய முடிவான எண்ணம். போரில் வென்று தன் தாயை விடுவித்துச் சிந்தாமணியையும் வெற்றிப் பரிசாக அடைய வேண்டும் என்றே நினைத்திருப்பான். அதற்கு நேர் மாறாக இங்கே நடக்கிறதே! விடிந்தால் விக்கிரம பாண்டியனுக்கும் சிந்தாமணிக்கும் திருமணமாம். சோழ மன்னர் முன் நின்று நடத்தி வைக்கப் போகிறாராம். என் மகனுக்கு ஏற்படவிருக்கும் அவமானம் எனக்கும் ஏற்படுவதல்லவா? வியப்பை வேதனை வென்றது- முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

''என்ன வீரபாண்டியரே! முகத்தில் சோகம் படர்கிறது? தங்களுக்கு ஏற்பட்ட தலை குனிவு என்று நினைக்கவே வேண்டாம். போரில் தங்கள் அரசியைச் சிறைப் பிடித்த செய்கையை இப்போது நினைத்து வருத்தப்படுகிறேன். ஆனால், கங்கை கொண்ட சோழபுரத்தில் பாண்டிய அரசிக்கு எந்தவிதக் கௌரவக் குறையும் ஏற்படவில்லை. பாண்டிய தேவியைத் தக்க மரியாதையுடன் அழைத்து வரச்செய்தி ருக்கிறேன். நாளை என் கரத்தால் தங்களுக்கு மகுடம் அணிவிக்கும்போது தேவி உடனிருக்க வேண்டாமா? மனக் கவலையை மாற்றுங்கள். வீரமும், மகிழ்ச்சியும் தங்கள் முகத்தில் பொங்கட்டும்'' என்று குலோத்துங்க சோழ தேவர் உற்சாகத்துடன் கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

"வாழ்க வீரபாண்டியர்! வாழ்க சேர மன்னர்!" என்று குலோத்துங்க சோழரே வாழ்த்தொலி எழுப்பினார்.

வாழ்த்தொலி முடியும் முன்பு ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தி அதிர்ச்சியைக் கொண்டுவந்தது. அழியாத் துயரைக் கொண்டுவந்தது.

குலோத்துங்க சோழரும் மற்றவர்களும் பதை பதைப்புடன் விரைந்தோடினர்.

அரண்மனை சபை மண்டபத்தின் முன்பு பாண்டிய குமாரன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவனை உயிருடன் பிடிக்க முடியாத சோழ வீரர்கள் இரத்த வெள்ளத்தில்தான் பிடித்தார்கள்.

மார்பிலே வாள் பாய்ந்திருக்க, பாண்டிய குமாரன் அன்றலர்ந்த மலர்போல் கிடந்தான்; சிந்தாமணி அவன் மார்பின்மீது வீழ்ந்து மயங்கிக் கிடந்தாள். சிந்தாமணியைச் சந்திக்க மிக இரகசியமாக வந்த பாண்டிய குமாரனைக் கண்டுவிட்ட சோழவீரர்கள் பலர் சூழ்ந்துகொண்டு தாக்கவே, போர் புரிந்து கடைசியில் வீர மரணமடைந்தான், பாண்டியகுமாரன்.

பாண்டிய குமாரனின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் நின்று அனைவரும் கண்ணீர் விட்டனர். குலோத்துங்கன் நெஞ்சடைக்கக் கூறினார்; "சிந்தாமணி! உன் உள்ளம் எனக்குப் புரிந்தும் நான் விக்கிரம பாண்டியனுக்கு உன்னை மணம் செய்விக்க முடிவு செய்தேன். உன் மனத்தை மாற்றிக் கொள்வாய் என்று எண்ணினேன். பாண்டிய நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் என்றும் நட்பு நிலவ, அமைதி நிலவத் திட்டம் ஒன்றும் வகுத்தேன். பாண்டிய நாட்டை இரண்டாகப் பிரித்தேன். ஒரு பாதியை வீரபாண்டியனுக் களித்தேன். விக்கிரம பாண்டியனையும் சமாதானப்படுத்த உன்னையும்



அவனுக்கு அளித்தேன். கடைசியில் இப்படி ஒரு துயர நிகழ்ச்சி நடந்துவிட்டது. வீரபாண்டியரே! உங்கள் துக்கம், என் துக்கம்."

சிந்தாமணி மெல்லத் திரும்பிக் குலோத்துங்க சோழரை நோக்கினாள். "தந்தைக்கும் மேலானவரே! சோழ சக்கரவர்த்தி அவர்களே! என்ன சொன்னீர்கள்? என்னை விக்கிரம பாண்டியனுக்கு அளித்தீர்களா? தங்களுடைய எந்தச் சொல்லையும், கட்டளையையும் மீற விரும்பாத நான் இந்த விஷயத்தில் மீறுவதற்கு மன்னித்து விடுங்கள். நான் ஒருநாளும் கோழையை மணக்கமாட்டேன். சோழ நாட்டினரின் அடிபணிந்து, அவர்கள் தயவில் பாண்டிய நாட்டை ஆள விரும்பிய விக்கிரம பாண்டியனைவிடச் சுதந்திர புருஷராகக் கடைசிவரையில் இருந்து வீர மரணம் எய்திய பாண்டிய குமாரன்தான் என் மணாளன். அவரே எனக்குக் கணவர். அவர் நினைவுடனே, அவர் சமாதி அருகே காலங்கழிப்பேன். பகைவனின் காதலியாக நான் இருந்தாலும், ஒரு வீரனின் காதலி என்பதில் பெருமைப்படுகிறேன். இந்த மண நாளில் நான் இந்த மணமாலையைப் பாண்டிய குமாரனுக்கு அணிவித்து பாண்டிய குமாரனின் மனைவியாகக் காலங் காலமாக வாழ்வேன்" என்றுகூறி, அங்கே தோய்ந்திருந்த இரத்தத்தினின்று ஒரு துளியைப் பாண்டியகுமாரன் விரலில் தோய்த்துத் தன் நெற்றியில் திலகமாக அணிந்து கொண்டாள்.

குலோத்துங்க சோழ தேவரும், வீரபாண்டியனும், சேர மன்னரும் மௌனமாகக் குனிந்த தலையுடன் உகுத்த கண்ணீர் அந்தக் குருதியுடன் சேர்ந்தது.





# ஒரு மகுடம்
# ஒரு வாள்
# இரு விழிகள்

## முகப்புரை

**அய்க்கண்**

தமிழ்நாட்டின் இலக்கியம், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை முதலானவற்றை மூவேந்தர்கள் பெரிதும் போற்றிவளர்த்து, உலகம் வியக்கும் சாதனைகளைச் செய்துள்ளனர். ஆனாலும் மூவேந்தர்களிடையே நிரந்தர ஒற்றுமை இருந்ததில்லை; தொடர்ந்து ஒருவரோடொருவர் போரிட்டதால் ஏற்பட்ட-பொருள்வளம், நிலவளம், மனிதவளம் முதலியவற்றின் அளப்பரிய இழப்புகளுக்கிடையேதான் இந்தச் சாதனைகளையும் செய்திருக்கிறார்கள். இவர்கள் போர்களிலே பொருளையும் காலத்தையும் வீணாக்காமல் இருந்திருந்தால், இன்னும் எத்தனையோ மகத்தான சாதனைகளை நிகழ்த்தியிருப்பார்களே என்பதை நினைத்துப் பார்த்தால் நம் நெஞ்சம் பெருமூச்சால் நிறைந்து கனக்கிறது.

வீரம் என்ற பெயரில் போரிலே ஏற்படும் அழிவுகளையும், இழப்புகளையும், நமக்குக் குறிப்பாகச் சுட்டிக் காட்டும் வரலாற்றுக் கதைகள், 'போர் இல்லாத சமுதாயம்' என்னும் குறிக்கோள் உலகத்தை (UTOPIA) நோக்கி நம் பார்வையைக் குவிக்கின்ற உந்துகருவியாகத் திகழ்வதை நாம் உணரலாம்.

சக்கரத்தின் சுழற்சிபோல, சேர சோழ பாண்டியர்களிடையே ஏற்ற இறக்கங்கள் மாறி மாறி வந்திருக்கின்றன. பராந்தகசோழன் காலம் தொடங்கி சோழ மன்னர்கள் உச்ச நிலையில் இருந்தபோது, சீர் குலைந்த பாண்டியநாடு, சுந்தரபாண்டியன் காலத்திலே தலைதூக்கி எழுந்து உயர்நிலையை நோக்கி வளரத் தொடங்கியது. சுந்தரபாண்டியன், மூன்றாம் இராசராச சோழனை வென்று அடிமைப்படுத்திய காலத்தைப் பின்புலமாகக் கொண்டு தோன்றிய கதையே, ''ஒரு மகுடம், ஒரு வாள், இரு விழிகள்.''

முதல் அத்தியாயத்தின் தொடக்கத்தில் சுந்தர பாண்டியன் படையெடுக்க ஆயத்தமாவதைக் காட்டுகின்ற ஆசிரியர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன், அந்த அத்தியாயத்திற்குள்ளேயே ஒரு சுவாரசியமான சஸ்பென்ஸ் வைத்திருப்பது, வரலாற்று நாவல்கள் எழுதுவதில் அவருடைய கைவந்த திறனுக்குக் கட்டியம் கூறுகிறது. படை வீரர்களைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதுபோல் காட்சியளித்த முதியவர் சோழநாட்டு ஒற்றர் என்று அறிகிறபோது நாம் அதிர்ச்சியடைகிறோம்.

இளவரசி சந்திரவதனாவின் ஓவியத்தைத் தீட்டியவன் யார் என்ற சஸ்பென்ஸ், விறுவிறுப்பாகத் தொடர்கிறது. அவளைத் திரைச் சீலையில் வரைந்தவன் போசள நாட்டு இளவரசன் என்ற செய்தி, இராசராசனுக்கு அதிர்ச்சியாக அமைகிறது. அதே சமயம், சந்திரவதனாவும் தன் மனச்சீலையில் இளவரசனை வரைந்துகொண்ட செய்தி, ஒரு சுவையான காதல் கதையாகத் தொடர்கிறது.

கோப்பெருஞ்சிங்கனின் ஆட்களிடமிருந்து சந்திரவதனா மீட்கப்பட்டு வந்ததை முன்னால் கூறிய ஆசிரியர், அவள் எப்படி மீட்கப்பட்டாள், அவளைக் காப்பாற்றியது யார் என்பதையெல்லாம், பின்னோக்கு உத்தி (FLASH BACK) யில், இளவரசியின் கூற்றாகத் தெரிவிப்பது ஓர் அருமையான கதையோட்டம்.



''இளவரசி, போசளநாட்டு இளவரசனை மணந்து கொள்ள நான் சம்மதிக்கமாட்டேன்'' என்று உறுதியாகத் தந்தை இராசராசன் கூறி, ''போருக்குத்தயார்'' என்று அறிவிக்கும்போது-'எங்கோ ஆந்தை பயங்கரமாக அலறியது' என அந்த அத்தியாயத்தை முடித்திருக்கும் நேர்த்தி, ஒரு பயங்கரமான நிகழ்ச்சிக்கு அச்சாரமாக ஒலிக்கிறது...

விக்கிரமன் அவர்களுடைய சரளமான தமிழ் நடைக்கு அருமையான தமிழ்ச்சொற்களின் இணைவு களும் பயன்பாடும் அணிசேர்க்கின்றன. சன்னலைக் குறிக்கும் 'காலதர்' என்ற அரிய தமிழ்ச் சொல்லாட்சி, அவரது தமிழிலக்கிய அறிவுத்திறனுக்கு ஒரு சோற்றுப் பதம், அதேபோல், 'இவள் பெண் அல்லள்' என்ற தொடரமைப்பும் அவரது இலக்கண அறிவைப் புலப் படுத்தும். 'காலையில் சிறிது வயிற்றுக்கும் ஈந்தபிறகு...' என்ற தொடரில்

செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் (திருக்குறள்-412)

என்ற இனிய குறளின் மணம் கமழ்கிறது.

நாவலின் தொடக்கத்திலேயே 'இளைஞன் கையை உயர்த்தி புருவம் உயர்த்தி, சொற்களை உயர்த்தி, குரலை உயர்த்தி முழங்கினான்.' என்று ஒலிக்கும் நடையழகு, நாவல் முழுவதும் விரவிக் கிடக்கக் கண்டு மகிழ்கிறோம்.

சந்திர வதனாவும் போசளநாட்டு இளவரசனும் 'கண்ணொடு கண்இணை நோக்கு ஒக்கி', ஒருவர் இதயம் மற்றவர் மாறிப்புக்கு இணைந்தபோது- ''இருவிழிகளாலும் அவரைப் பார்த்தேன்; இன்னும் நாலு, நாற்பது, நாலாயிரம் விழிகள் எனக்கு இருக்கக் கூடாதா என்று ஆசைப்பட்டேன்'' என்ற பேச்சு, அவளது 'நிலத்தினும் பெரிய, வானினும் உயர்ந்த, கடலின் ஆழமான' காதல் பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. ''இவர் மூன்றாம் ராசராசர்: வீரத்திலும் விவேகத்திலும் மூன்றாம் தரமாய்த்தான் இருப்பார்'' என்ற தொடர், மன்னனின் குணசித்திரத்தைத் துல்லியமாய்க் கோடிட்டுக் காட்டுகிறது.

போருக்குப் புறப்படும் படைவீரர்களைப் பார்த்து, சுந்தரபாண்டியன் சூளுரைத்து ஆற்றும் வீரவுரை, முதியவர்களைக்கூட, எழுச்சிபெறச் செய்யும் துடிப்புரையாக அமைந்துள்ளது, குறிப்பிடத்தக்கது. அவ்வளவு உணர்ச்சி குமுறும் மறவுரையாற்றும்போதும் சுந்தரபாண்டியன் அறிவுப் புலத்தை இழந்துவிடாமல் நிதானமாக இருப்பது, அவனது குணநலத்திற்கு மெருகூட்டுகிறது.

சோழர்களைப் பழிக்குப்பழி வாங்கும்போது, மறந்தும்கூடப் பெண்களுக்கு அவமானம் இழைத்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறான் சுந்தர பாண்டியன்.

''ஒருதடவை ஒரு பெண்ணுக்கு இழைத்த அநீதியால் பாண்டிய நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயர், காலா காலத்திற்கு நீங்காது இருக்கிறது'' என்று பாண்டியன் குறிப்பாக, பழைய சிலப்பதிகார நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுவது, நம் உள்ளத்திரையிலே,



'பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன்: அரசோடு ஒழிப்பேன் மதுரையும்...

(சிலப்பதிகாரம்-21-36-37)

என்று சீறிநின்ற கண்ணகியின் உருவத்தை நிழலாடச் செய்கிறது.

''யானோ அரசன்? யானே கள்வன்,
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்'

(சிலப்பதிகாரம்-20-75-77)

என்று நீதிக்கு உயிர்கொடுத்த பாண்டிய நெடுஞ்செழியனின் வரலாறு பிற்காலத் தமிழ்ச் சந்ததியினர்க்கு எத்தகைய படிப்பினையை இதயங்களில் பதிய வைத்துள்ளது என்பதைப் பார்த்து, நாம் நெகிழ்ந்து போகிறோம். அந்த ஒரு பெண் கண்ணகியின் பெயரைக் குறிப்பிடாமலே விக்கிரமன் பேச்சை உருவாக்கியிருக்கும் நயம், நவில் தோறும் நூல் நயமாகத் திகழ்கிறது.

சந்திரவதனாவின் காதலை அங்கீகரித்துச் செயற்படுத்தாமல், அவள் திருமணத்தை அரசியல் பகடைக் காயாக்கத் திட்டமிடும் தந்தையிடம், ''என் தோழி கல்யாணியின் தந்தையாக இருந்தால், இப்படிப் புரிந்து கொள்ளாமலிருந்திருப்பாரா?'' என்று வினா எழுப்பும் இளவரசியின் மனநிலை நம்மை வேதனைக்குள்ளாக்குகிறது. சாதாரணப் பெண்ணாக இல்லாமல், அரசகுமாரியாகப் பிறந்ததன் தீயூழை எத்துணை ஆதங்கத்தோடு வெளிப்படுத்துகிறாள் சந்திரவதனா?... அவளுடைய ஆற்றாமை,

'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழு தகவு இல்'
(சிலப்பதிகாரம்-25-103-104)

என்ற சேரன் செங்குட்டுவன் கூற்றுக்கு அரண்செய்கிறது.

நெடுங்கதைகள் படைக்கும்போது, படிப்போர்க்குச் சோர்வு ஏற்படாமலிருக்க, நடையிலே நகைச்சுவை இடம்பெறவேண்டியது இன்றியமையாதது. கருத்தாழம் நிறைந்த நகைச்சுவை மிளிரும் தொடர்களும், உரையாடல்களும் இந்த நாவலில் நிறைய இடம் பெற்றுள்ளன.

''யுகம் யுகமாக உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்'' என்று இளவரசியைப் பார்த்தபடி ஒவியன் மெய்ம்மறந்து பேசும்போது, சந்திரவதனா சிரித்தவாறு, ''யுக யுகாந்திரம் என்றால், நான் கிழவியாகி நீங்களும் கிழவராகிவிடுவீர்களே?'' என்ற உரையாடுதல், ரசிக்கத்தக்கது.

வரலாற்றுப் புதினப் படைப்பாளர்களுக்கு ஆதர்ஸமாக இலங்கும் 'கல்கி' அவர்களின் பாணியில், பல இடங்களில் உரையாடல்கள் நகைச்சுவையும் பொருட்சுவையும் அமைய ஒலிக்கின்றன.

ஓவியனைப் பார்த்த திகைப்புடன், ''ஆ! நீங்களா?'' என்று, தான் கேட்ட கேள்விக்கு அவன் மறுமொழி கூறாததால் சிணங்கொள்கிறாள் இளவரசி.

''அதற்கு நான் என்ன மறுமொழி சொல்வது?' ஆ! நான்தான்' என்றுதான் கூறவேண்டும்'' என்று சிரிக்கிறான் அவன்.



''ஆம்; நானேதான்; அதே ஓவியன்தான்; சொல்லாமல் போய்விட்ட அவனேதான் என்று சொல்வது தானே?'' என்று கூறி அவளும் மெல்லச் சிரிக்கிறாள்.

இதே போன்று, தன்னைக் கடத்திச் செல்லும் கோப்பெருஞ் சிங்கனுடைய உதவியாளனோடு இளவரசி சொல்லாடும் காட்சியிலும் அருமையான எள்ளல் உரையாடல்களைப் பார்க்கலாம்.

பழிக்குப் பழி வாங்கிச் சோழனைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எழுச்சியோடு படையெடுத்துவரும் சுந்தர பாண்டியனுக்கு, சோழனின் கோழைத்தனம் முற்றிலும் ஏமாற்றமளிக்கிறது. ஒரு கோழையைத் தோற்கடித்துப் பெறுகின்ற வெற்றியைப் பாண்டியன், வெற்றியாகக் கருதவில்லை.

சரணடைந்த சோழனின் மகள் சந்திரவதனா, சுந்தரபாண்டியனை ''அப்பா!'' என்று விளித்துக் கோரிக்கை விடுத்தது. அவனுடைய உள்ளத்தை நெகிழ்வித்துவிடுகிறது. ''என் உள்ளத்தில் வீரமும் உண்டு, ஈரமும் உண்டு'' என்று மனம் திருந்திய பாண்டியன், பாச உணர்வு முகிழ்க்க, சந்திரவதனாவின் துயரக் கண்ணீரைத் துடைக்க வழி செய்கிறான்...

இளவரசியின் அழகிய இருவிழிகளில் மிளிர்ந்த பாச உணர்வு, பாண்டியனின் உள்ளத்திற்குள் தியாக உணர்வு பொங்கச் செய்து, சோழநாட்டின் மகுடத்தையும் வாளையும் காப்பாற்றி விடுகிறது.

வரலாற்றுப் புதினப் பேரரசர் விக்கிரமனின் துறைபோகிய கை வண்ணத்தில், தமிழக வரலாற்றின் ஒரு நெகிழ்வான நிகழ்ச்சி, நம் நெஞ்சில் வலுவாகப் பதிவாகி மகிழ்விக்கிறது...

# ஒரு மகுடம்
# ஒரு வாள்
# இரு விழிகள்

## 1

மீனாட்சி அம்மன் திருக்கோயில் மணி ஓசையுடன், மதுரைக் கோட்டை வடக்கு வாசலின் மீதிருந்த முரசு ஒலியும் சேர்ந்து கூடல் நகரத்தில் பெரும் சிலிர்ப்பை ஏற்படுத்தின.

வீதிகளிலே பாண்டிய நாட்டு மக்கள் கூடி நின்று 'மதுரை மன்னர் வாழ்க' என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

மாறவர்மன் சுந்தர பாண்டிய மாமன்னன் போர்க்களத் தினின்று வெற்றியுடன் திரும்பி வர வாழ்த்தினர்.

கடல்போன்ற சேனை அணிவகுத்துக் கோட்டையின் வடக்கு வாசல் வழியே சென்றது.

வீர கோஷம் புரிந்துகொண்டு சென்றனர் படைவீரர்கள். தாரை-தப்பட்டை, கொம்பு முழங்க படை செல்லும் நேர்த்தியைக் காண்பவர்கள் புதிய வேகங்கொண்டனர்.

வீரர்கள் ஏந்தியிருந்த கேடயம் பளபளத்தது. அவர்களது மீசைதுடித்தது. உதடுகள் 'போர்-போர்' என்று முணுமுணுத்தன.

கரிகள் அசைந்து நடந்து செல்வதிலும் ஒரு வேகமிருந்தது. அவற்றின்மீது அமர்ந்திருந்த படைத்



தலைவர்களின் விழிகள் வழக்கத்தைவிட வீரத்தைக் கொப்பளித்தன.

மீன்கொடி ஏந்திய வீரர்களைச் சுமந்து வந்த பரிகளின் துள்ளல் நடையில் வீர உணர்ச்சி பிரதிபலித்தது.

படைகள் அணி அணியாகச் சென்று கொண்டிருந்தன. நெடுநேரம்வரை படைகளின் கடைசி அணியைக் காணமுடியவில்லை. கடல் அலை வருவதுபோல் வீரர்கள் வந்து கொண்டே இருந்தனர்.

தேரோடும் அகன்ற வீதியின் வழியே லட்சோபலட்சம் படை வீரர்கள் நாழிகைக் கணக்காகக் கம்பீரமாக அணிவகுத்து நடந்துசெல்வதைக் கண்டவாறு ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த முதியவர் ஒருவர் அருகிருந்த இளைஞனைக் கேட்டார்.

''தம்பி, நம் நாட்டிலும் இவ்வளவு படைவீரர்களா?''

இளைஞன் தன் அரும்பு மீசையை மெல்லத் தடவித் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''ஏன் இருக்கக் கூடாது?'' என்று கேட்டான்.

முதியவர் பெருமூச்சுவிட்டார்.

''என்ன பாட்டா, சோர்வுடன் பெருமூச்சு விடுகிறீர்கள்? நீண்ட நேரமாக இங்கே நின்று கொண்டிருக்கிறீர்களே, களைப்பாக இருக்கிறதோ?'' என்று கேட்டான் இளைஞன்.

''சோர்வு இல்லை, நான் காண்பது மெய்தானா? என்று பார்க்கிறேன்.''

''கனவு இல்லை, பாட்டா! நமது வீரர்களேதாம். வீட்டுக்கு ஒரு வீர இளைஞன் துடித்து எழுந்துவிட்டான். இளைஞர்களின் நெடுங்காலக் கனவு நனவாகப் போகிறது.

உங்கள் காலத்தில் பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானம் துடைக்கப்படப் போகிறது. சோழ நாட்டின் மீது பாய்வது எப்போது என்று துடித்துக் கொண்டிருந்த திண்தோள் வீரர்களின் தினவெடுத்த தோள்களுக்கு நல்ல தீனி கிடைக்கப் போகிறது. நமது மாமன்னர் சுந்தர பாண்டியர் கட்டளையிட்டு விட்டார். போர்-போர்-சோழ நாட்டோடு கடும்போர்! நீங்கள் இதோ காண்கிறீர்களே, இளங்காளைகள்-அவர்கள் நெடுங்காலமாகத் தொடுத்துக் கொண்டிருக்கும் மாலையை இன்னும் சில நாட்களில் பாண்டிய தேவிக்கு வெற்றி மாலையாக அணிவிக்கப் போகிறார்கள்.''

இளைஞன் கையை உயர்த்தி, புருவமுயர்த்தி, சொற்களை உயர்த்தி, குரலை உயர்த்தி, முழங்கினான்.

முதியவர் மெல்ல நகைத்தார். இளைஞன் அவரை எரித்து விடுபவன்போல் பார்த்தான்.

''என்ன பாட்டா ஏளனச் சிரிப்பு?''

''ஏளனச் சிரிப்பு இல்லையடா தம்பி! என் காலத்தில் காண்பேனா என்று ஏங்கியிருந்தேனே, அந்த ஏக்கம் கலைந்ததால் எழுந்த நம்பிக்கைச் சிரிப்பு. எங்கள் காலத்தில் பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானம் என்று சொன்னாயே-அது எங்கள் காலமன்று. எங்கள் முப்பாட்டனார் காலத்தில் ஏற்பட்ட அவமானம். சோழர்களால் அடிமைப்படுத்தப்பட்டு நசுக்கப்பட்டுக் கிடந்த பாண்டியநாடு அடிமை விலங்கை அறுத்து எறிய-விழித்தெழ இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அதை நினைத்துச் சிரித்தேன். சரி; நமது வீரர்கள் இப்பொழுது எங்கே செல்கிறார்கள்? தம்பி, எனக்குக் கொஞ்சம் விபரமாகச் சொல்லேன். வாள் ஏந்தி போர்ப்படைகளுடன் ஒருவனாகச்



செல்லத் துடிக்கிறது என் உள்ளம். ஆனால் எனது முதுமை என்னைத் தடுக்கிறது. இலட்சக்கணக்கான வீரர்கள் இப்பொழுது எங்கே செல்கிறார்கள்?''-முதியவர் ஆவலுடன் கேட்டார்.

இளைஞன் மெல்லத் தலையை அசைத்து, ''பாட்டா நான்கூட உங்களைப் போல் துடிக்கிறேன், அணிவகுப்பில் சேர்ந்து சோழர்களை ஹதா ஹதம் செய்ய. ஆனால் வீட்டிற்கு ஒரு பிள்ளை வந்தால் போதும் என்று கூறிவிட்டார்கள். எங்கள் வீட்டில் நாங்கள் நான்குபேர் இருக்கிறோம். அடிமை நாட்டில் வீணே தின்று தூங்கி வாழ்வதை விட, அவமானங்களைக் களைந்து எறியப் போருக்குச் செல்லக்கூடத் தடையா? பாருங்கள் பாட்டா! எனக்கு இரண்டு அண்ணன், ஒரு தம்பி. நாங்கள் நான்கு பேரும் படையில் சேர்ந்து போருக்குப் புறப்படப் போட்டிபோட்டோம். நாங்கள் நான்கு பேரும் பாண்டியர்த் தளபதியிடம் சென்று 'எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றோம். 'வீட்டிற்கு ஒருவர் போதும். உங்களுக்குள் முடிவு செய்துகொண்டு ஒருவர் வாருங்கள் போதும் என்றார்.

என் மூத்த சகோதரனுக்குத் திருமணம் செய்து சில நாள்களாகின்றன. என் தம்பி பன்னிரண்டு நிறையாதவன். என் இரண்டாவது அண்ணனும் நானும் போட்டி போட்டோம். திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்ததில் என் பெயர் வரவில்லை. என் சகோதரனுக்கு அடித்தது யோகம்! பாண்டிய வீரர்கள் எங்கே செல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அது பரம இரகசியம். ஆனால், சோழ நாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. அதோ பாருங்கள்! வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களைக் கொண்டு செல்லும் வண்டிகளை! ஆறு

மாதங்களுக்குப் போதுமான உணவு நம் வசம் இருக்கிறது'' என்று பெருமை பேசினான் இளைஞன்.

முதியவர் பரபரப்புடன் அங்குமிங்கும் சென்றார், படை எடுப்புக் குறித்த விபரங்களை அறிய. உடனே சோழ நாட்டிற்குச் செய்தியைச் சொல்லி அனுப்ப வேண்டுமே என்ற பரபரப்பு அவரிடமிருந்தது.

அவர், உறையூரைச் சேர்ந்தவர். பாண்டியர்கள் படை எடுத்துச் செல்வதைக் காண மிக மகிழ்ச்சியடைந்தவர்போல் அவர் நடித்தார். சோழ நாட்டின் மீது பாண்டியர்கள் படை எடுத்துச் செல்லும் செய்தியைச் சோழ நாட்டுத் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரத்திற்குச் சொல்லி அனுப்ப வேண்டும் என்ற துடிதுடிப்பு அவரிடமிருந்ததில் வியப்பில்லை. அவர் மதுரையில் சிறியகடை வைத்திருந்தார். சோழநாட்டின் விசுவாசி. அவ்வப்போது மதுரை நகர அரசுச் செய்திகளைச் சோழத் தலைநகருக்கு இரகசியமாக அனுப்பி வருவதைக் கடமையாகக் கொண்டிருந்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள ஒற்றர் படைத்தலைவரிடமிருந்து ஆண்டுதோறும் அவருக்கு அன்பளிப்பாக ஏதாவது கிடைக்கும். சமீப காலமாக எந்தவித உத்தரவும் தலைநகரிலிருந்து அவருக்கு வந்து சேரவில்லை. 'குலோத்துங்க சோழர் இறந்துவிட்டார்' என்ற செய்தியும் அவருடைய புதல்வன் இராசராசன் என்ற பெயருடன் அரியணை ஏறி அமர்ந்த செய்தியும் அவருக்குத் தாமதமாகவே கிடைத்தன. அவருக்கும் முதுமை காரணமாக தள்ளாமை மிகுந்தது. காது சரியாகக் கேட்கவில்லை. தன் மகளைக் கடையில் உட்கார வைத்துவிட்டுப் பெரும்பாலும் வீட்டிலேயே தங்கிவிடுவார்.



அன்று காலையில் அவருடைய மகள் ஓடி வந்து பாண்டிய வீரர்களின் அணிவகுப்பைப் பற்றிச் சொன்னாள்.

''அப்பா, அப்பா-மீன் கொடி பிடித்த பாண்டிய வீரர்கள் ராஜவீதி வழியே அணிவகுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். பாண்டிய அரசர் மீனாட்சி அம்மனைக் கும்பிடச் சென்றிருக்கிறாராம்.''

அவர் அந்தச் செய்தியைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ''சரி, நீ போய் உன் வேலையைப் பார். துருபிடித்த கேடயங்களை எடுத்துக்கொண்டு எங்கே செல்லப் போகிறார்கள்?'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டார்.

மீண்டும் மகள் ஓடிவந்து தூசியைக் கிளப்பிக்கொண்டு ஆயிரம், பதினாயிரமாகப் பாண்டிய நாட்டு இளைஞர்கள் செல்வதைக் கூறியபொழுதுதான், அவர் அந்தத் தெருமுனைக்கு வந்து சேர்ந்தார்.

இவ்வளவு காலம் அடிமைப்பட்டு, பலங்குன்றி இருந்த பாண்டியர்கள் துடித்து எழுந்து விட்டார்கள் என்பதை அறிந்தார்.

இதுவரையில் சோழர்களின் படைஎடுப்பை எதிர்த்துப் போர்க்களத்தில் படுதோல்வி கண்டதைத் தவிர, வெற்றி என்பதையே அறியாத பாண்டியர்கள், சோழ நாட்டின்மீது போர் புரியக் கிளர்ந்து எழுந்துவிட்டார்கள் என்பதை உணர்ந்தார்.

இதுவரை ஒருவரும் அணியாத பாண்டியரின் பரம்பரை மகுடத்தை அணிந்துகொண்ட மாறவர்மன் சுந்தர பாண்டியன், பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்டிருந்த களங்கத்தைப் போக்கப் போருக்குப் புறப்பட்டுவிட்டான் என்ற செய்தியை முதியவர் புரிந்துகொண்டார்.

## 2

மதுரைக் கோட்டையைவிட்டுப் புறப்பட்ட பாண்டிய வீரர்கள் ஒரே மூச்சாகச் சோழ நாட்டிற்குள் சென்று விடவில்லை. சுந்தரபாண்டியன் போர்த் தந்திரங்கள் அறிந்தவன். பாண்டியநாடு முழுவதும் சுற்றியலைந்து அநுபவம் பெற்றவன். ஒவ்வொரு ஊரிலும் இளைஞர்களிடம் பேசி அவர்கள் உள்ளத்தில் நாட்டுப்பற்றை வளர்த்தவன். மூன்று ஆண்டுகளாக இளைய வீரர்களை உருவாக்குவதில் நேரத்தைக் கழித்தவன்.

பாண்டியர் படையெடுப்பிற்கு ஆயத்தம் செய்யும் செய்தி சோழநாட்டை எட்டாது என்று, சுந்தரபாண்டியனுக்குத் தெரியும். பாண்டிய நாட்டுச் செய்திகளைச் சோழநாட்டிற்குச் சொல்லக்கூடிய சதிகாரர்கள் என்று சந்தேகப்பட்டவர்களை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் செய்து விட்டான். சில மாதங்களுக்கு முன்பு ஒவ்வொரு பட்டிதொட்டியாகச் சென்று, வீரமுள்ள இளைஞர்களைச் சேகரித்தான். அவர்களுக்கு வேல் எறியவும், வாள் வீசவும், சிலம்பு சுழற்றவும், குதிரை ஏறவும் கற்றுத்தர தக்கவர்களை நியமித்தான்.

''இதெல்லாம் வீண்-சோழர்களிடம் நாம் மோத முடியாது'' என்று குறை கூறியவர்களுக்கு, ''அமைதியாகக் காத்திருந்து பாருங்கள்'' என்று மறுமொழி கூறினான். ''இதுவரை அரசாண்ட நமது அரசர்கள் செய்யத் துணியாத காரியத்தை நீ எதற்காகச் செய்கிறாய்?'' என்று கேட்டவர்களுக்கு, ''என்னால் மானமிழந்து வாழமுடியாது. கடந்த காலத்தைச் சற்று எண்ணிப் பாருங்கள். பாண்டிய தேவியைக் குலோத்துங்க சோழன் சிறைபிடித்துச் சென்று அந்தப்புரத்தில் அடைத்தான். வேலைக்காரியைப்போல்



நடத்தினான். உங்கள் வீட்டுப் பெண்களைச் சிறைப்படுத்தி அடிமையாக நடத்தியிருந்தால், நீங்கள் கைகட்டியிருந்திருப்பீர்களா? உங்களுக்கு மானம் ரோஷம் ஏற்பட்டிருக்காதா? பெரியவர்களே! சுதந்திர தாகம் எனக்கு அதிகம். மான உணர்ச்சியை என் தாய் எனக்குப் பாலோடு சேர்த்தே ஊட்டியிருக்கிறார்கள். பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மை மிக இளவயதிலேயே என் இரத்தத்தில் கலந்தது. தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தேன். அந்த வேளை வந்துவிட்டது.

''சோழர்கள் பாண்டிய நாட்டிற்கு இழைத்த கொடுமைகளை மறந்துவிட்டீர்களா? அதற்குப் பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன். உங்களுக்கில்லாத மான உணர்வு இளையோர்களுக்கு இருக்கிறது. அவர்கள் துடிப்புடன் இருக்கிறார்கள். சோழநாட்டை நோக்கி எப்போது புறப்படுவோம் என்று என் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், கற்றறிந்த பெரியவர்களே, சற்று வாயை மூடிக்கொண்டு இருங்கள். இந்தச் சமயத்தில் பாண்டியநாடு தலை நிமிராவிட்டால் பிறகு கலகாலத்திற்கு எழுந்திருக்கவே முடியாது. பழிக்குப்பழி-இரத்தத்திற்கு இரத்தம்; சோழநாட்டை மண்ணோடு மண் ஆக்காவிட்டால் என் பெயர் சுந்தரனில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் சூளுரையைக் கேட்டவர்கள் நடு நடுங்கினர். சோழர்களுடன் மோதுகிறானே சுந்தரபாண்டியன் என்று அஞ்சினர். ஆனால் இளைஞர்கள் மன்னனின் உத்தரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

சுந்தரபாண்டியன் திட்டமிடாமல் படைவீரர்களைத் திரட்டவில்லை. மதுரைக் கருவூலத்தில் பணமில்லை. ஆனால் எவ்வளவு நாட்களுக்கு வேண்டுமானாலும் வயிறார உண்ண உணவைச் சேகரித்து வைத்துவிட்டான்.

''உணவுப் பண்டங்களை ஏன் சேகரிக்கிறார் அரசர்? சோழ நாட்டில் உணவுக்குப் பஞ்சமா? இங்கிருந்து ஏன் எடுத்துச் செல்லவேண்டும்?'' என்று கேட்பவர்களிடம் சொன்னான்:

''அன்பார்ந்த பாண்டியநாட்டு மக்களே, சோழநாட்டில் உணவுக்குப் பஞ்சமில்லை. ஆனால், நம் படை வீரர்களுக்கு அங்கே உணவு கிடைக்கும் என்று எதிர்பார்த்துச் செல்வதில் ஆபத்து இருக்கிறது. நமது வீரர்களுக்கு உணவு கிடைக்காமல் சோழ நாட்டவர்கள் தானியங்களைத் தீயிட்டு விடலாம், அல்லது அழித்து விடலாம். அப்பொழுது நமது வீரர்கள் உணவின்றிப் பசியால் வாடிக் கலகலத்துத் தாய்நாட்டிற்குத் திரும்பிவிட எண்ணுவர். சோழ நாட்டில் சென்று நமது வீரர்கள் சிக்கி அழிந்துவிடக்கூடாது அல்லவா? அதனால் நான் வேறு ஒரு திட்டத்துடன் செல்கிறேன். சோழ நாட்டிற்குள் நுழைந்தவுடன் முதலில் நாம் அங்குள்ள பயிர் நிலங்களை அழிக்கப் போகிறோம். களஞ்சியங்களைத் தீயிவிடப் போகிறோம். சோழ மக்கள் பசியால் சில ஆண்டுகளாவது தவிக்க வேண்டும். அந்தச் சமயத்தில் நமது வீரர்கள் நன்றாக உண்டு மகிழவேண்டும்'' என்று கூறிவிட்டு, பாண்டிய வீரர்களை நோக்கி:

''எனதருமை வீரர்களே! நாம் புறப்படும் யாத்திரை ஜீவ-மரணப் போர் யாத்திரை. நமது நோக்கம் சோழ மண்டலத்தை அடைவதற்கன்று; அழிப்பதற்கே! உங்களுக்கு ஊதியமாகக் கொடுக்க என்னிடம் பணமில்லை. சோழநாட்டு ஊர்களைப் பங்குபோட்டுக் கொள்ளுங்கள். தில்லை நடராசர் கூத்திடும் சிதம்பரம் நகரத்தை மட்டும் ஒன்றும் செய்துவிடாதீர்கள். அங்குதான் நான் பரம்பரைப் பாண்டிய மகுடத்தை அணிந்து மகுடாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறேன். எந்தப் புனிதமான பாண்டிய மகுடத்திற்காகவும், பாண்டிய வீர வாளுக்காகவும், சோழர்கள் போரிட்டார்களோ-



பாண்டியர் களின் பரம்பரை மகுடத்தை, ஈழம் என்றும் சேரநாடு என்றும் எடுத்துச் சென்று மறைத்து வைத்துப் பத்தாடப்பட்ட பாண்டிய மகுடத்தை-சோழநாட்டில் சூடிக்கொள்ளப் போகிறேன். அதனால் சிதம்பரத்து எல்லையில் சிறு துரும்புக்குக்கூட துன்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறையூரை அழியுங்கள்; தஞ்சாபுரியைத் தரைமட்டமாக்குங்கள். கங்கை கொண்ட சோழபுரத்தைக் கொளுத்துங்கள். விளைநிலங்களை அழித்துக் கழுதையைவிட்டு உழுது கள்ளியையும் முள் மரங்களையும் பயிரிடுங்கள். கிடைத்த செல்வத்தை எல்லாம் அபகரித்துக் கொள்ளுங்கள்...'' அவற்றில் ஆறில் ஒரு பங்கை அரசு கருவூலத்தில் செலுத்திவிட்டு மீதியை நீங்கள் பங்குபோட்டுக் கொள்ளுங்கள். - சுந்தர பாண்டியன் உரைகேட்டு, இளையோர் இரத்தம் சூடேறியது. இளம் படைவீரர்கள் 'வீரவேல், வெற்றிவேல்' என்று முழங்கினர். முதியவர் சிலர், ''இதென்ன சுந்தரனுக்கு வெறி பிடித்துவிட்டதா?' என்று வேதனையடைந்தனர்.

''ஒரே மூச்சில் நாம் முன்னேறிவிட வேண்டாம். வைகை ஆற்றங்கரையிலும், ஆனைமலைக் காட்டிலும், வெள்ளாற்றங் கரையிலும், காவிரியின் தென்கரையிலும் நன்றாக ஓய்வு எடுத்துக்கொண்டு, ஒருநாள் திடீரென்று ஆக்ரோஷத்துடன் பாய்வோம். நமது வீரர்கள் உறையூரையும், தஞ்சையையும், கங்காபுரியையும் ஒரே சமயத்தில் தாக்கட்டும். சோழர்களின் புகழ்வாய்ந்த அந்தத் தலைநகரங்கள் அழிந்து ஒழியட்டும். மாளிகைகளை இடித்துத் தள்ளுங்கள். செல்வந்தர் வீடுகளில் புகுந்து அகப்பட்டதை அள்ளுங்கள். சோழநாடு முழுவதும் நீங்கள் உல்லாசமாக உலவி நடை பயிலுங்கள்...''

சுந்தரபாண்டியன் இவ்வாறு கூறவும் வீரர்களுக்கு உற்சாகம் தாங்கவில்லை. அப்பொழுதே சோழ நாட்டைத்

துவம்சம் செய்துவிட்டதுபோல் நினைத்துக் கொண்டார்கள். குதித்துக் கும்மாளமிட்டார்கள்.

துடிப்புள்ள வீரன் ஒருவன் எழுந்து நின்று பாண்டிய மன்னர் கவனத்தைக் கவர்ந்து துணிவுடன், "மன்னர் அவர்களே! சோழநாட்டைப் பூண்டோடு அழித்துவிட்டால் பிறகு யாரை அடிமைப்படுத்துவது? பாழடைந்த நாட்டையா நாம் ஆளப் போகிறோம்? வெற்றிக்குப் பிறகு அந்த நாட்டில் ஏற்படும் பஞ்சத்தையும் நாம்தானே தீர்க்க வேண்டிவரும்? பழிக்குப் பழி வாங்குவது என்பது வீடு நிலம் இவைமீதுதானா? அல்லது ராஜ குடும்பத்தாரிடமா?" என்று கேட்டான்.

சுந்தரபாண்டியன் அந்த வீரனைத் திரும்பிப் பார்த்தான். அவன் அதிகப் பிரசங்கித்தனமாக ஏதோ கேட்டுவிட்டான். துடுக்குத்தனத்திற்குத் தண்டனை கிடைக்கப் போகிறது என்று மற்றவர்கள் அஞ்சினார்கள்.

மன்னன் அவனை அருகே அழைத்து "வீரத்துடன் விவேகமும் நிறைந்த வீர இளைஞனே! உன் உள்ளத்தே துள்ளி நிற்கும் மான உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். பழிக்குப் பழி வாங்குவது என்பதே தவறான கொள்கைதான். ஆனால், யுத்தம் என்று வந்துவிட்டால் தர்மநியாயம் சில சமயம் நம் கண்ணின்று மறைந்துவிடும். சோழர்களுக்குத் தகுந்த புத்தியைக் கற்பிக்க வேண்டுமானால் அவர்கள் செய்ததைப் போலவே செய்தாக வேண்டும். இதில் இரண்டுவிதக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், சோழர்களைப் போல் கீழ்த்தர புத்தி எனக்கு இல்லை. பெண்டிர்களைச் சிறை பிடிக்கக்கூடாது. நமது வீரர்களுக்கு நான் கண்டிப்பான உத்தரவு இடுகிறேன். ஒரிடத்திலும் பெண்களுக்குத் தீங்கிழைக்கக் கூடாது. அவர்கள் மானத்தை-கற்பை நாம் பெரிதும் மதிக்க வேண்டும். அவர்கள் கண்ணீர் சிந்த நாம் விடக்கூடாது. இதை மீறுபவர்கள் யாராயிருந்தாலும் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்றான்.



மன்னரது இந்தப் போக்கு வீரர்களுக்குப் பிடிபட வில்லை. மன்னர் என்ன சொல்கிறார்-சோழப் பெண்டிரின் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமாமே!

வீரர்களிடையே அமைதி நிலவுவதையும், ஒருவரை யொருவர் விழிகளாலே பார்த்துப் பேசிக்கொள்வதையும், அவர்கள் ஏதோ சொல்ல விரும்புவதையும் அறிந்த பாண்டிய மன்னன் சற்று மௌனமாக இருந்து, பிறகு திடீரென்று, "எனது அன்பார்ந்த இளஞ் சிங்கங்களே! நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. சோழர்களைப் பழிவாங்குவதில் என்னைவிட நீங்கள் அதிகம் வேகம் காட்டுகிறீர்கள். ஆனால் பெண்களை அவமானப்படுத்துவது நியாயமன்று. ஒரு தடவை பெண்ணிற்கு இழைத்த அநீதியால் பாண்டிய நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயர் காலா காலத்திற்கு நீங்காது நிற்கிறது. செய்யாதவர்களுக்குச் செய்துகாட்டுவேன்-சோழர்குலப் பெண்ணை மணந்து பெண்ணுக்கு மரியாதை தந்து சோழனைத் தலைகுனிய வைப்பேன். போரில் வெற்றி வாகை சூடி, சோழ அரசர் ராசராசன் அளிக்கும் நிதிக் குவியல்களை ஏற்பதோடு-அவனது மகளை-அழகிய மங்கையையும் ஏற்பேன். அடிமைப்படுத்தி அந்தப்புரத்தில் சேர்க்காமல் மணம் புரிந்து, அந்தப்புரத்து அழகிகளோடு அழகியாக்குவேன்" என்று முழங்கினான்.

சுந்தரபாண்டியன் இவ்வாறு கூறியதை வீரர்கள் கையொலி செய்து வரவேற்றனர் என்றாலும் முழுத் திருப்தி அவர்களுக்கு இல்லை. மேலும் அவர்களைப் பேசவிட்டால் கருத்து கூறுவது அதிகமாகிப் பிரச்சினை வளர்ந்து

விவாதமாகிக் கட்சி பிரிந்து கட்டுக் கோப்பு குலையும் நிலை ஏற்படலாம் என்பதை உணர்ந்த சுந்தரபாண்டியன் பேச்சின் போக்கை மாற்றி, அடுத்துப் படைகள் தங்கி இளைப்பாறும் இடத்தைக் குறிப்பிட்டு மீண்டும் உற்சாகமூட்டும் இசையும் கூத்தும் நிகழச் செய்து புறப்பட்டு விட்டான்.

பாண்டிய வீரர்களுக்கு உற்சாகமும், உத்வேகமும், நாட்டுப் பற்றும் ஏற்படுத்த இசையுடன் கலந்த நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இராசசிம்ம பாண்டியன் மதுரையில் சிறப்பாக ஆட்சிபுரிவது ஒரு காட்சியில் இசை முழங்க நடிக்கப்பட்டது.

சோழ அரசன் ஒருவன் இராசசிம்மனை எதிர்க்கத் துணிந்து தோற்றோடிய சம்பவம் அடுத்த காட்சியில் காணப்பட்டது. அடுத்த காட்சி இராசசிம்மனின் சிறப்பு, மதுரையில் மகிழ்ச்சிக் குதூகலம்.

பிறகு திடீரென போர் முழக்கம். தஞ்சையினின்று போர் முழக்கம். கடல்போன்ற படைகளுடன் சோழவேந்தன் பராந்தகன் மதுரையை நோக்கிப் படை எடுத்து வருகை.

திடீர்ப்படையெடுப்பைத் தடுத்து எதிர்த்துப் போரிட இயலாமல் திகைத்த இராசசிம்மன் இலங்கை மன்னன் காசிபன் உதவிகோருதல். இலங்கைப் படையுடன் சேர்ந்து இராசசிம்மன் சோழர் படையைக் கடுமையாக எதிர்த்தல். ஆனால், போரில் இராசசிம்மன் தோற்றோடுதல்.

ஆனால் இராசசிம்மன் உறுதி தளராமல் நம்பிக்கை இழக்காமல் மீண்டும் போரிடுதல். பலனற்ற நிலையில் பரம்பரையாக அணியப்பட்டு வந்த பாண்டிய மகுடத்தைப் பராந்தக சோழன் அபகரித்து அடைய விடாமல் அதை எடுத்துக்கொண்டு இலங்கை செல்லுதல்.



இலங்கையில் தனக்கு ஆதரவு இல்லாத நிலைகண்டு இலங்கையினின்று தன் பிறந்த நாடான சேர நாட்டிற்கு வந்து தங்குதல். இறுதியாக நோய்வாய்ப்பட்டு இறந்து போதல். இறக்கும் முன்பு தன் மகன் வீரபாண்டியனுக்கு அறிவுரை வழங்குதல். இழந்த பாண்டிய நாட்டை மீட்டு, பாண்டியர்க்கு ஏற்பட்ட அவமானம் நீக்கி மதுரையை அரசாளுமாறு மகனிடம் கூறுதல்.

வீரபாண்டியன் தந்தையின் உரைகேட்டு மதுரையில் மீண்டும் அரியணை ஏறுதல்.

இசை நாட்டிய நாடகத்தில் இராசசிம்மன் தோல்வியுற்று, சேர நாட்டில் தஞ்சம் புகுந்த இடமும், மகன் வீரபாண்டியனை அழைத்து உறுதி பெறுதலும் மிக உருக்கமாக நடித்து காட்டப்பட்டன.

ஆனால், மீண்டும் வீரபாண்டியன் மதுரையில் அரியணை ஏறிய காட்சியில் மகிழ்ச்சி கொண்டாட்டம் இல்லை.

நாடகம் பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள், சோழர்களை வென்று மீண்டும் அரியணை ஏறிய வீரபாண்டியன் வாழ்க என்று கோஷமிட்ட மறுகணம் போர்ப்பறை முழங்கும் ஓசை, 'ஹோ ஹோ' என்ற ஒலம்.

சோழர் படைகள் மீண்டும் கடல்போல் வந்து தாக்குவதும், வீரபாண்டியன் வீரத்துடன் போர்க்களத்தில் சண்டையிடுவதும் நடித்துக் காட்டப்பட்டன.

நாட்டிய நாடகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கும்போது இடி போன்ற ஓசை. சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன், வீரபாண்டியன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளி அவன் தலையைக் கொய்த நிகழ்ச்சி.

'பாண்டிய மன்னன் மாண்டாரே! பாண்டிய வளநாடு சோழரிடம் மீண்டும் அடிமைப்பட்டதே' என்ற ஓலக் குரலுடன் ஒரு பெண் தலைவிரிகோலமாகப் போர்க்களத்தே அமர்ந்து புலம்புவாள். பாண்டியர்களின் பழம் பெருமைகளையும், சோழர்களின் தாக்குதலையும் பாண்டிய நாடு வலிவிழந்து அடிமைப்பட்டிருப்பதையும் கூறிப் புலம்புவாள்.

திடீரென அந்தப் பெண் எழிலிலாக கலைந்த கூந்தலை சரி செய்து, அள்ளி முடித்துக்கொள்வாள். கீழே வீழ்ந்து கிடந்த வீரபாண்டியனின் உடலிலிருந்து பொங்கி வரும் குருதியை எடுத்துத் திலகமாக அணிந்து கரம் உயர்த்தி வீரமுழக்கம் செய்வாள்.

"பாண்டிய நாட்டு மக்களே! வீரபாண்டிய, மன்னனின் சடலத்தின் சாட்சியாக நான் சபதமிடுகிறேன். பாண்டியத் தாய் தலைப்பிள்ளையை இழந்து தவிக்கிறாள். சோழ அரக்கர்களின் யுத்த வெறியால் நாடிழந்து, நலமிழந்து, நடையிழந்து பொலிவிழந்து நிற்கிறாள்.

அவள் பெற்ற இளம் சிங்கங்களே! தாயின் அவலநிலையை நீங்கள் பார்த்துக்கொண்டு கோழைகளாய், வாழப் போகிறீர்களா? இல்லை, தாயின் துயர் துடைக்க, தாய் நாட்டின் மானங்காக்க வீறுகொண்டு எழப் போகிறீர்களா?

மண்ணுக்குப் பாரமாக வாழ்வதைவிட மரணத்தோடு உயிர்நீத்த மகான் என்ற பெயரோடு மாண்டொழியுங்கள்.

தாயை நிர்வாணமாக்கிய சோழர்களுக்கு அடிமையாக வாழப் போகிறீர்களா? அல்லது அடிமைத்தளையை உடைத்தெறிந்து பொங்கிப் புறப்படப் போகிறீர்களா?"

நாட்டியம் இத்துடன் முடிவடைந்துவிடும். இசை முழக்கம் திடீரென்று நின்றதும், "மாட்டோம்... மாட்டோம். அடிமைகளாக இருக்க மாட்டோம். இன்றே விலங்கை எடுத்தெறிவோம்... புறப்படுவோம்...புறப்படுவோம்" என்று குரல் கொப்பளிக்கத் துள்ளி எழுவார்கள்.



மீண்டும் ஒரு குரல் கேட்கும், "மகிழ்ச்சி மகனே! துடிப்புமிகுந்த பாண்டிய புதல்வர்களே! உங்கள் உடலில் வீரஉணர்வு இருக்கும்போது எனக்கு என்ன கவலை. இந்தப் புத்துணர்ச்சியைப் புதிய தெம்பை அப்படியே காப்பாற்றுங்கள். என் குரல் விரைவில் கேட்கும். அயர்வின்றிப் புறப்படுங்கள்."

இசை நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்த இதயப் பொலிவோடு வீரர்கள் ஓய்வெடுக்கச் செல்வார்கள். அவர்கள் நெஞ்சத்தில் பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தைத் தீர்க்க வேண்டும்; சோழர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வு மட்டுமே தங்கி நிற்கும்.

அன்றும், சுந்தரபாண்டியன் நாட்டிய நிகழ்ச்சியை வீரர்கள் காணச்செய்து விட்டுத் தன் இருப்பிடம் செல்லப் புறப்பட்டான்.

அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவனும், ஒற்றர் படைத் தலைவனுமான தனி நாயகன், மன்னருடன் தனியே பேசுவதற்காக அவரருகே சென்று வணங்கி நின்றான்.

"வாருங்கள், தனி நாயகரே! செய்தி ஏதாவது உண்டா? நமது குதிரைகளைப் பற்றித்தான் எனக்குக் கவலை. அவை நோய் ஏதுமில்லாமல் இருக்கின்றனவா? குதிரைக் குளம்புகளுக்கு லாடம் அடிக்கத் தக்கவர்கள் இருக்கிறார்களா? நம்முடன் வருகிறார்களா?" என்று பேச்சைத் தொடங்கினான்.

தனி நாயகன் அவன் கேட்டவற்றிற்குத் தக்க மறுமொழிகூறி, பிறகு தானறிந்த இராசராச சோழரின் மாளிகை அமைப்பு, படை வீரர்கள் எண்ணிக்கை, அவர்கள் தங்கியுள்ள

இடம் இவற்றைப் பற்றிச் சொல்லத் தொடங்கி, அந்தப்புரத்தைப் பற்றிப் பேச்சைத் திருப்பினான்.

சுந்தரபாண்டியன் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்:

''தனிநாயகம்! கங்கைகொண்ட சோழபுரத்து அந்தப்புரத்து விஷயங்கள் எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? எப்போதாவது அந்தப்புரத்திற்குள் செல்லும் வாய்ப்புத் தங்களுக்கு ஏற்பட்டதோ?''என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டு கேட்டான்.

மெல்லிய முறுவலுடன் தனி நாயகன், ''எல்லாம் சேகரித்த செய்திதான் அரசே! இராசராசனுக்கு ஒரு மகள் இருக்கிறாள்...'' என்று பேச்சைத் தொடங்கியவுடன் சுந்தரபாண்டியன் குறுக்கிட்டு, ''தெரியுமே! மிக அழகிய இளமங்கை. சந்திரவதனா என்று பெயர். அவளை நேரே நான் பார்த்திருக்கிறேன்...'' என்றவுடன் ஒற்றர் தலைவன் திடுக்கிட்டான்.

''சோழன் மகளைக் காணக்கூடிய வாய்ப்பு எப்படி ஏற்பட்டதென்று வியப்படைகிறீர்களா? சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சனம் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தத் திருநாளைக் காண எனக்கு ஆசை. நமது மதுரை சோமசுந்தரர் ஆலயத்திலும், நடராசப் பெருமானுக்குத் தில்லைப் பொன் அம்பலம் போன்ற திருச்சபை அமைக்க எனக்கு ஆசை. அதனால் தில்லையில் நடைபெறும் திருவிழாவிற்குச் சென்றேன்...''- மன்னன் பேச்சைத் தொடருவதற்கு முன்பு தனி நாயகம் பரபரப்புடன் குறுக்கிட்டு, ''என்ன... சோழ நாட்டிலுள்ள சிதம்பரத்திற்குச் சென்றிருந்தீர்களா? எங்களுக்குத் தெரியவில்லையே! அரசே! நான் இப்பொழுதே பதவி விலகிக்



கொள்கிறேன். மதுரையைவிட்டு, வடக்கே வெகு தொலைவில் சோழ நாட்டு நகரத்திற்குப் பாண்டிய மன்னன் சென்றிருப்பதை அறிந்து வைத்திராத திறமையற்ற பாண்டிய நாட்டு ஒற்றர்கள் - அவர்களுக்கு ஒரு தலைவர்-மன்னிக்க வேண்டும் அரசே - இந்த யுத்த நெருக்கடி வேளையில் நான் பதவி விலகக் கூடாது. அதே சமயம் கடமையில் தவறிய நான் பதவியில் இருக்கவும் கூடாது. என்னை நானே சிறையிலிட்டுக் கொள்கிறேன்'' என்று பரபரப்புடன் கூறினான்.

ஒற்றர் படைத் தலைவன் கவலையும், வேதனையும் கலந்துபேச, பாண்டிய மன்னன் நகைத்தவாறு, ''தனி நாயகம், அவசரப்படாதீர்கள்! நான் சொல்வது முழுமையும் கேளுங்கள். பாண்டிய நாட்டு ஒற்றர் படைகளின் திறமை எந்த விதத்திலும் குறைவுபடவில்லை. நீங்களும் உங்கள் கடமையில் தவறவில்லை. ஒருவரும் அறியாமல், குறிப்பாகச் சோழ நாட்டில் என்னை அறிந்து கொள்ளாவண்ணம் மாறு வேடத்தில் சென்ற எனக்கு வெற்றி. பாண்டிய நாட்டு ஒற்றர்களும் நான் எங்கே சென்றிருக்கிறேன் என்று தெரிந்து கொள்ளாதது எனக்குச் சற்றுக் கவலையை அளித்தாலும் பெரும் வெற்றி, எனக்கு. சரி அதைப் பற்றிப் பிறகு பேசுவோம். சிதம்பரம் ஆனித் திருமஞ்சன விழாவின் பொழுதுதான் சோழமன்னன் இராசராசனின் மகளைக் கண்டேன். சந்திரவதனா...ஆ! பெயருக்கேற்ற சந்திரவதனம். களங்கம் உட்பட! முகத்திலே வளைந்த புருவமும், கருவண்டு விழிகளும்...ஆகா! சந்திரனிலுள்ள களங்கம் தோற்றது! அப்பொழுதே முடிவு செய்துவிட்டேன். அவளை அடையாது விடுவதில்லை என்று. சோழநாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் என் திட்டத்தை மிக வேகமாகச் செயலாற்றச் செய்தது அவளுடைய வடிவழகு'' என்று சொன்னான்.

பாண்டிய மன்னன் இவ்வாறு கூறவும், ஒற்றர் தலைவன் தனிநாயகம் மன்னனின் திறமையை வியந்து பேசச் சக்தியற்றவனாகச் சிறிது நேரம் நின்று, பிறகு, ''அரசே! நான் சோழ அந்தப்புரத்தைப் பற்றிச் சொல்ல வந்ததும் சோழன் மகளின் அழகை எடுத்துக் கூறத்தான். சோழன் மகளைச் சித்திரம் தீட்ட கங்கை கொண்ட சோழபுரத்திற்கு ஓவியர் ஒருவர் சென்றார்'' என்று கூறத் தொடங்கவும், சுந்தரபாண்டியன் சுவாரசியமான செய்திகேட்க நிமிர்ந்து உட்கார்ந்தான்.

## 3

மகள் சந்திரவதனாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் சோழ மன்னன் இராசராசன் பெருமூச்சுவிடுவான். மகிழ்ச்சி நிறைந்த அவன் முகம் போன்றே அகமும் அப்படியே தானிருக்கும் என்று எண்ணுபவர்கள் ஏமாற்ற மடைவார்கள். அவன் உள்ளத்தில் பெரும் போராட்டம். மற்றவர் நினைப்பது போல் அவன் மகிழ்ச்சியுடனில்லை. எப்போதும் ஒருவிதக் கவலை அவன் உள்ளத்தில் உலவிக் கொண்டிருந்தது.

அவனை நன்றாகப் புரிந்து கொண்டிருந்த பட்டத்தரசி புவனமுழுதுடையாள் மட்டுமே தன் கணவரின் உள்ளார்ந்த கவலையை அறிந்திருந்தாள்.

மகுடமும், மங்கையும் அரசனின் வேதனைக்குக் காரணமாயிருந்தன. குலோத்துங்க சோழ மன்னர் ஜீவிதமாக இருக்கும்பொழுது இராசராசனைத் தனது அடுத்த வாரிசு என்று உறுதிப்படுத்தி இளவரசனாகப் பட்டம் சூட்டிவிட்டார்.



குலோத்துங்கன் இறந்தபிறகு, இராசராசன் அரியணையில் அமர்ந்தான். முடிசூடும் விழா எதிர்பார்த்தபடி கோலாகலமாக அமையவில்லை.

இராசராசனின் மாமனார் மகத நாட்டரசர் வாண கோவரையர் பட்டமேற்பு விழாவுக்கு வரவில்லை. சேதிநாட்டுக் குறுநில மன்னரும், சேந்தமங்கலத்துக் காடவராயரும், விழா நாளன்று கங்கை கொண்ட சோழபுரத்திற்குத் தாமதமாகவே-முகூர்த்த நேரம் முடியும் சமயத்தில் கலந்து கொண்டனர். உற்சாகம் அவர்களிடம் புலப்படவில்லை.

அவர்கள் தனித்தனியே கூடிப் பேசிக்கொண்டதில் சில பயங்கரச் சதித்திட்டங்கள் முளைவிடுவதை இராசராசன் அறிந்தான். அவர்கள் ஒவ்வொருவரும் இராசராசன் மீது ஒவ்வொரு சொந்தக் காரணத்தைச் சுட்டிக் காட்டிக் குற்றம் சுமத்திக் கோபமுற்றனர்.

எல்லாரும் ஒருமுகமாய்ச் சுமத்திய குற்றம், மகுடாபிஷேக நாளை முன்பாகவே தங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்பது.

மற்றொன்று: கோப்பெருஞ்சிங்கன் சோழ மகளை மணம் புரிந்து கொள்ளவேண்டி ஓலை அனுப்பியதற்குச் சோழ அரசன் இதுவரை மறுமொழி கூறாமை.

''நான் மகுடாபிஷேக விழாவிற்கு வந்திருக்கவே மாட்டேன். நாளைக்குப் பெரியவர் சேதிராயர் ஏதாவது குறைகூறப் போகிறாரே என்றுதான் வந்தேன். வந்த இடத்திலும் வரவேற்பு சரியில்லை... இனி கங்காபுரி பக்கமே வரமாட்டேன்'' என்று கோபமாகக் கூறினான் கோப்பெருஞ் சிங்கன். அவன் முகத்தில் கடுமை ஏமாற்றத்தைப் புலப்படுத்தியது.

மற்றவர்கள் ஆமோதித்தனர். சேதிராயன் தலையசைத்து, ''நான் ஏன் கோபிக்கப் போகிறேன்? இராசராசன் மர்மனார் மகத நாட்டவரே வாராதபோது நாம் வந்தது தவறுதான். அதிலும், மலையமானுக்குக் காட்டப் பட்ட மரியாதைதான் நாளை நமக்கும்'' என்று கூறியது கேட்டுச் சற்று அமைதியடைந்தனர்.

''இது என்ன மாதம்?'' பெரியவர் சேதிராயர் கேட்டார்.

''ஆவணி'' என்றார் சம்புவரையர்.

''ஐப்பசி மாதம் அறுவடை முடிந்தவுடன் ஆயிரம் வண்டி நெல் கங்காபுரி மாளிகைக்கு அனுப்ப வேண்டும். இந்தத் தடவை நான் அனுப்பப் போவதில்லை. எதற்காக அனுப்புவது?'' சேதிராயர் கூறியதுகேட்டு அனைவருக்கும் துணிவு ஏற்பட்டது.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு ஒவ்வொருவராக, ''ஆம்; நாங்களும் அனுப்பப் போவதில்லை. நமக்கு இந்த இராசராசனால் என்ன பிரயோசனம்?'' என்று கேட்டனர்.

காடவராயர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு கேட்டார்: ''இராசராசன்...!அந்தப் புகழ்வாய்ந்த சிறந்த பெயரை இவனுக்கு யார் வைத்தது? நல்ல- மதிப்புவாய்ந்த- சிறந்த சக்கரவர்த்தியின் பெயரை- இராசராசன் என்ற பெயரை- யார் சூட்டினார்கள் இவனுக்கு? சிவபாத சேகரராய், வீரராய் விளங்கிய அருண்மொழிவர்மராக விளங்கிய அந்த இராசராசன் எங்கே? இவன் எங்கே?'' ஏளனம் குரலில் இருந்தது.

''இவரா? இவர் மூன்றாவது முறையாக இராசராசர் என்ற பெயருடையவர்! வீரத்திலும் விவேகத்திலும் மூன்றாம்



தரமாய்த்தானிருப்பார். தனக்குப் பிறகு போசள மன்னனுக்குச் சோழநாட்டை அடிமைப்படுத்தி விடுவார் என்று தோன்றுகிறது'' என்றார் சம்புவரையர்.

''எனக்கு என்னவோ கவலையாகத்தானிருக்கிறது. நாம் புகழ்ந்து பேசும் சோழ வளநாடு என்ற ஒருநாடு இன்னும் பத்தாண்டுகளில் இருக்காது என்று எங்கள் அரண்மனை சோதிடர் கூறியது நினைவிற்கு வரும்போது பயமா யிருக்கிறது'' என்றார் சேதிராயர்.

அனைவரும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர். ''இருக்கும், இருக்கும். அழிவுக்கு அடிகோலுவதுபோல் இப்பொழுதிலிருந்தே படை வீரர்களின் எண்ணிக்கையைச் சரிபாதி குறைத்துவிட்டார். அவருக்கு யோசனை கூற ஒரு மந்திரி. கேட்டால், சிக்கன நடவடிக்கையாம்! அந்தக் காலத்தில் குலோத்துங்கர் போருக்காக ஏராளமாகச் செலவிட்டு விட்டாராம். தேவைப்படும்போது இவர் நம்மிடமிருந்து உத வியைக் கோரிப் பெறுவாராம்!''

''ஓ! நான் ஒரு வீரனைக்கூடப் போர்க்களத்துக்கு அனுப்பமாட்டேன். என் மக்கள் உயிர் அவ்வளவு இலேசானதா?''

''ஆமாம்! நானும் கூடத்தான்!''-உறுமினார் சேதிராயர்.

''நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. இராசராசன், தன் மகளை உங்கள் மகனுக்குத்தான் மணம் புரிவிக்கப் போகிறாராமே?'' சேதிராயரைப் பார்த்துக் கேட்டார் சம்புவரையர்.

''ஓ! அப்படிச் செய்துவிடுவாரோ? சேதிராயரே, நான்தான் முறை மாப்பிள்ளை. பெண்கேட்டுத் தூது அனுப்பி வெகு காலமாகிறது. அரசரிடமிருந்து மறுமொழி இல்லை.

இந்த நிலையில், அவர் வேறு ஒருவருக்குத் தன் மகளை மணம் செய்து கொடுப்பதைப் பார்த்து விடுகிறேன்''- சீறினான் கோப்பெருஞ்சிங்கன்.

''அவர் கேட்பது நியாயம்தான். இராசராசன் மனத்திலிருப்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.''

''காலம் விரைவில் வரும். நம்மைத் தேடி இராசராசன் ஓடிவருவான். அப்பொழுது பாடம் கற்பிப்போம்.''

சிற்றரசர்கள் பேசிக் கொண்டிருந்தவை ஒரு வார்த்தை கூட விடாமல் இராசராசனுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் இராசராசன் கோபங் கொள்வதற்கு மாறாகக் கவலை கொண்டான்.

கோப்பெருஞ்சிங்கனின் போக்குதான் அவனுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியது. தன் மனக் கவலையை அவன் பட்டத்தரசியிடம் பங்கு போட்டுக்கொண்டான்.

''சந்திரவதனா இவ்வளவு அழகியாக ஏன் பிறந்தாள்? அவளுடைய அழகும் வயதுக்கு மீறிய வளர்ச்சியும்தான் எனக்குப் பெரும் கவலையை அளிக்கின்றன. கோப்பெருஞ்சிங்கன் பெண் கேட்டுத் தூது அனுப்பிப் பல நாட்கள் ஆகின்றன.''

அரசி புவனமுழுதுடையாள் இதழ்களில் குறுநகை பிறந்தது. கேட்டாள்:

''இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? புலிக்கொடி வேந்தரின் மகளை மணம்புரிய ஆசைப்படுவதில் தவறில்லையே.''

''ஆசை எல்லாக்குந்தான் ஏற்படும். ஆனால் அந்தஸ்து வேண்டாமா?''



''அதை அவர்களிடம் சொல்லி விடுவதுதானே? என் தந்தை அனுப்பிய செய்தியைப் பற்றி ஏதும் தாங்கள் சொல்லவில்லை''- என்ற அரசியின் குரலில் வேதனையை விடக் குற்றச்சாட்டு மிகுந்திருந்தது. அவள் மகதநாட்டுச் சிற்றரசன் வாணகோவரையரின் மகள். புவனமுழுதுடையாளை இராசராசனுக்கு மணம் புரிந்து கொடுத்து விட்டோமே என்று சோழ நாட்டுடன் விரோதம் வளர்த்துக் கொள்ளாமல் வாணகோவரையன் பொறுமையாக இருந்தார். என்றாலும் சந்திரவதனாவைத் தன் குடும்பத்துக்கு மருமகளாக்கிக் கொள்வதற்கு உற்ற மறுமொழி ஏதும் இராசராசன் தரவில்லை என்பதால் உறவு முறையை மெல்ல வெட்டிக்கொள்ள முடிவு செய்தார். பிறந்த வீட்டுப் பக்கம் போவதா, கணவரை ஆமோதிப்பதா? எந்தப் பக்கம் எப்படிப் பரிந்து பேசுவது என்று புவனமுழுதுடையாளுக்குத் தெரியவில்லை.

''அன்புக்குரியவளே! உனது சொல் எதையும் இதுவரை நான் தட்டியதில்லை. ஆனால், உன் பிறந்த வீட்டு மணத் தொடர்பு நம் மகள் விஷயத்தில் மட்டும் வேண்டாம். வாணக்கோவரையரின் போக்கைச் சில மாதங்களாக நான் கவனித்து வருகிறேன். சோழ நாடே தன் உதவியால்தான் பிழைத்து வருகிறது என்று அவர் கூறிக் கொள்கிறார். ஐந்து ஆண்டுகளாக நமது கருவூலத்தில் சேர்க்கப்படவேண்டிய திரைப் பணத்தை அவர் சேர்க்கவில்லை. சந்திரவதனாவிற்கு நல்ல மணாளன் கிடைப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உன் பிறந்த வீடான மகத நாட்டை மறந்துவிடு'' என்று அரசன் கூறும் பொருளில் கண்டிப்பு இருந்தாலும் குரலில் - சொல்லில் இல்லை.

அரசி புவனமுழுதுடையாளுக்கு மிக வருத்தமே. மகதநாட்டு மணமகன் வேண்டாம் என்று கண்டிப்பாகத்

தன்னிடம் கூறியதுபோல், கோப்பெருஞ்சிங்கனிடம் சொல்லிவிட மன்னர் ஏன் தயங்குகிறார்? அச்சமா?

அரசி இவ்வாறு 'பயமா?' என்று கேட்டுவிடுவாள் என்று இராசராசன் நினைக்கவில்லை.

தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். பயமா? நமக்குக் கோப்பெருஞ்சிங்கனிடம் அச்சமா?

''புவனமுழுதுடையாளே! கடந்த கால சோழ அரச குடும்பச் செய்திகள் உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். என்னை வளர்த்து ஆளாக்கிய அமரரான குலோத்துங்க சோழ தேவரின் பெருமதிப்பைப் பெற்றவர் கோப்பெருஞ்சிங்கன் வீரசேகரக் காடவராயர். சோழ நாட்டிற்காகச் சகல தியாகங்களையும் செய்த அவரது மகன் மணவாளப் பெருமாளுக்கு ஏனோ என்னிடம் அவ்வளவு மதிப்பில்லை. குலோத்துங்கன் தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுத்ததாலேயே சோழ நாட்டுக்குத் தானே உரியவன் என்று அன்றே பேசினான். இன்றும் பேசுகிறான். அது போகட்டும். உரிமை என்பது ஒருவர் அதை நினைத்துக் கொள்வதாலேயே பெற்றுவிடமுடியாது. அவனும் கருவூலத்தில் சேர வேண்டிய தனது பங்கைப் பல ஆண்டுகளாகத் தரவில்லை. இப்பொழுது சந்திரவதனாவை மணம் புரிந்து கொடு என்று கேட்கிறான். என்ன நியாயம்? இவன் வயது என்ன? பச்சிளம் செல்வி சந்திரவதனாவின் வயது என்ன? பொருத்தம் வேண்டாமா? அந்தப்புரத்தில் பொம்மையாக வைத்துக்கொள்ளவா அவளைக் கேட்கிறான்? நீயே சொல் தேவி. அவன் பெரும் வீரனாயிருக்கலாம். மணப்பேச்சு என்பது இவற்றிற்கு அப்பாற்றபட்டதல்லவா?'' இராசராசன் குரலில் உருக்கம் இருந்தது.



''சரி. உங்கள் முடிவை அவரிடம் தெரிவித்து விடுங்களேன். அதில் ஏன் தயக்கம்?'' அரசியின் குரலில் அழுத்தம் இருந்தது.

''சொல்லிவிடலாம்; நேரமாகாது. ஆனால் நாட்டின் நிலைமையை உத்தேசிக்க வேண்டியிருக்கிறது'' இராசராசன் குரலில் கவலை பிரதிபலித்தது.

''நாட்டிற்கு என்ன? நன்றாகத்தானே இருக்கிறது! சோழ நாட்டிற்கு எதிரிகள் என்று எவரும் இல்லை. அப்படி இருந்தாலும் நமது நாட்டின் எல்லையை நெருங்கவே அஞ்சுவார்களே. சொல்லப்போனால் ஒரே ஒரு பகைவர் - அவர்தான் பாண்டியர். பாண்டியர்கள் என்ற பரம்பரைப் பெருமையை அவர்கள் மறந்து விடுமாறு குலோத்துங்கர் செய்துவிட்டார். பிறகு யாரைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்கள்?''

இவ்வளவு தெளிவாக அரசியல் விவகாரங்களை அரசி அறிந்திருப்பாள் என்று இராசராசன் எதிர்பார்க்கவில்லை. சற்று மகிழ்ச்சியுடன், சோழநாட்டு வளப்பத்தின் மீது தேவி கண்ணும் கருத்துமாக இருப்பதைப் புகழ்ந்து பாராட்டிவிட்டு, ''ஆனால் தேவி, பாண்டிய நாட்டில் இப்பொழுது பட்டமேறியுள்ள சுந்தரன் நம்மை மதிப்பதாகத் தெரியவில்லை. வடமேற்கே போசளர்களின் படைபலம் நாளுக்குநாள் பெருகிவருகிறது. அதனால் கோப்பெருஞ் சிங்கனோடு மனத்தாங்கல் கொள்ள யோசிக்கிறேன்...'' என்றான்.

அரசி சிறிது சிந்தித்தாள். 'தெற்கே பாண்டியர்கள் விழிப்படையைத் தொடங்கிவிட்டார்கள். வடமேற்கு போசளர் புதிதாகப் பலம் பெறுகிறார்கள். சோழ நாட்டிற்கு வேண்டியவர்களான மகத நாட்டவர் சிறிது காலமாகவே

சுமுகமாக இல்லை. காடவராய் கோப்பெருஞ்சிங்கன், சோழன் மகளைக் கேட்டுப் பரீட்சை செய்கிறான். அரசருடைய கவலை நியாயமானதே!'' என்று எண்ணிய அவளுக்கு அடுத்து என்ன சொல்வதென்று தெரியவில்லை. அரசனின் முகத்தைக் கவலையுடன் நோக்கினாள். அவள் கவலையைப் போக்குவது போல் இராசராசன் பேசினான்:

''இரவெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். என் இளம் பருவ நண்பன் விஜயகண்ட கோபாலனுக்குச் சித்திரத்தோடு லிகிதம் எழுதி அனுப்பப் போகிறேன்...''

''சேதி ஓலையுடன் சித்திரமா?'' அரசி வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம்; சந்திரவதனாவின் அழகிய சித்திரம். விஜய கண்ட கோபாலனும் நமது சோழ பரம்பரையைச் சேர்ந்தவனே! சோழ மக்களின் ஒரு பிரிவினர் தெலுங்க நாட்டிற்குச் சென்று நாடாளத் தொடங்கினர். அவனுக்கு மகன் ஒருவன் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். சந்திரவதனாவின் வடிவ அழகை ஓவியத்தில் பார்த்தால் அவன் மகிழ்ந்து பெண்கேட்டுத் தூது அனுப்புவான்...''.

அரசன் சொல்லும்போது அரசிக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''இது என்ன, இங்கே தமிழ்நாட்டில் அரசகுமாரர்களே இல்லாமல் போய் விட்டார்களா? பாண்டிய நாட்டுடன் மணத்தொடர்பு கொள்ளலாமே?'' என்றாள்.

இராசராசன் ஏளனமாகச் சிரித்து, ''பாண்டியனுக்கா? நமது அடிமைக்கா? ஒருநாளும் இயலாது. விஜயகண்ட கோபாலனது உதவியும் பக்கத்துணையும் நமக்கு வேண்டும் என உள்ளுணர்வு கூறுகிறது. நமக்கு ஆபத்து ஏற்பட்டால்,



கோப்பெருஞ்சிங்கனோ, உன் தந்தை வாணகோவரையரோ, சம்புவரையரோ, சேதிராயரோ உதவ மாட்டார்கள் என்று தோன்றுகிறது. நெல்லூரிலிருந்து விஜயகண்ட கோபாலனின் உதவியைப்பெற வேண்டுமானால் அவனது மகனுக்குச் சந்திரவதனாவை மணம்புரிவிக்க வேண்டுவதுதான் ஒரே வழி'' என்று முடிவான முடிவு கூறிய இராசராசன் சந்திரவதனாவின் வடிவத்தை வரையத் தக்க ஓவியரை அழைத்து வரக் கட்டளை பிறப்பித்தான்.

## 4

சித்திரத்தில் தீட்டப்பட்ட சோழ அரசகுமாரி சந்திரவதனாவின் வடிவழகைத் தனிநாயகம் வர்ணிக்கும் போது சுந்தரபாண்டியன் அரசகுமாரியின் உருவத்தை மீண்டும் ஒருமுறை மனக்கண்ணில் கற்பனை செய்துகொண்டான்.

''உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுவதுதான் ஒற்றரின் திறமை'' என்று கூறிய பாண்டியன், ''தனிநாயகம், ஓவியம் எழுதும்போது நீங்கள் சித்திரக் கூடத்தில் கூடவே இருந்ததுபோல் வர்ணிக்கிறீர்களே?'' என்று கேட்டான்.

''ஆமாம் அரசே. சித்திரக் கூடத்தில்தான் இருந்தேன். சித்திரக் கூடத்திற்குள் நுழையக் கட்டுப்பாடு அதிகம். ஆனால் சோழநாட்டில் கையூட்டு பெறுவது இப்போது அதிகமாகி விட்டது. அரண்மனைக்குள்ளும் நுழைந்துவிடலாம். சித்திரக் கூடக் காவலனுக்குப் பரிசு ஒன்று தந்தேன்; என்னை அனுமதித்துவிட்டான். நான் சரியான கிராமத்தவன் போல் உடை அணிந்துகொண்டு ஓவியருக்கு எடுபிடிவேலை

செய்பவனாகச் சென்றேன். உணவுகொண்டு சென்றேன். வெற்றிலை மடித்துத் தந்தேன். வர்ணம் குழைத்துத் தந்தேன். தைலத்தைத் தடவி முதுகைப் பிடித்து விட்டேன்.''

''அப்படியென்றால், தினமும் நீங்கள் அரசகுமாரியைக் கண்டு மகிழ்ந்தீர்கள் அப்படித்தானே?'' என்று பாண்டியன் குறும்புத்தனம் மிளிரக் கேட்டான்.

தனிநாயகத்துக்கு மன்னன் கேட்பதன் உள் அர்த்தம் தெரியாதா?

''அரசே! நான் மிகக் கவனமாகப் பணியாற்றினேன். சித்திரக்காரரும் இளைஞர் அழகானவர். அவர் சித்திரம் வரையும் நேரத்தைவிட, இளவரசியின் அழகை ரசிக்கும் நேரம்தான் அதிகமாக இருந்ததாகத் தெரிந்தது. பதுமைபோல் அரசகுமாரி சற்று உயரமான ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். அந்த இருவிழிகளும் காந்தம்போல் இழுத்தன. அதனால்தானோ என்னவோ, ஓவியர் அவளை வைத்த விழி வாங்காது நோக்கியவாறிருந்தார்'' தனிநாயகம் சொல்லிக் கொண்டே போகும்போது, திடீரென்று பொறுமை இழந்த சுந்தரபாண்டியன், ''சரி, சரி, சித்திரம் வரைந்தானா இல்லையா அந்த ஓவியன்?'' என்று கேட்டான்.

''சித்திரம் முடிக்கப்பட்டது. அந்தச் சில நாட்களுக்குள்ளே, அரசகுமாரியும் ஓவியனும் கலகலப்பாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். என்னைச் சற்று வெளியே காத்திரு என்று சொல்லும் அளவுக்கு ஓவியனுக்குத் துணிவு வந்துவிட்டது. சித்திரத்தை இரவோடு இரவாக வண்ணந் தீட்டி முடித்துவிட்ட ஓவியர், மறுநாள் சோழ மன்னரிடம் அதைச் சேர்ப்பிக்கத் திட்டமிட்டிருந்தார். எனக்கு உறக்கம் வரவில்லை. ஊரே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.



சட்டத்தில் கட்டப்பட்ட சீலையில் வரையப்பட்டிருந்த சித்திரத்தைச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டேன்.''

தனிநாயகம் இவ்வாறு சொன்னவுடன், சுந்தர பாண்டியன் பரபரப்புடன், 'என்ன, சோழ அரசகுமாரியின் சித்திரத்தைக் கொண்டு வந்துவிட்டீரா? எங்கே? எங்கே? இவ்வளவு நேரமும் அதை என்னிடம் காட்டாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டீரே'' என்று சித்திரத்தைப் பார்க்க மிகுந்த ஆவலுடன் கரத்தை நீட்டினான்.

தனிநாயகம், சித்திரச் சுருளைப் பிரித்துச் சுந்தர பாண்டியனிடம் காட்டினான்.

சுந்தரபாண்டியன் இமை கொட்டாது சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ''ஆகா! சோழ மன்னன் மிகுந்த பாக்கியசாலி. இவ்வளவு அழகிய மகளைப் பெற்றிருக்கிறான். நேரே பார்ப்பதைப் போலவே சித்திரத்தில் இருக்கிறாள்'' என்று கூறி, சிறிதுநேரம் ஏதோ சிந்தித்துவிட்டு, ''தனிநாயகம்! ஓவியரின் வேலைக்காரனாக நடித்துச் சித்திரத்தைச் சுருட்டிக்கொண்டு வந்துவிட்டீரே-பிறகு கங்கை கொண்ட சோழபுரத்தில் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தீரா?'' என்று கேட்டான்.

''அரசே! கங்கைகொண்ட சோழபுரக் கோட்டை பாதுகாப்பு இல்லாமல் விளங்குகிறது. மதில் சுவர்கள் பல இடங்களில் பழுதுபட்டிருக்கின்றன. கோட்டை வாயில் மூடப்படுவதில்லை. தக்க காவலுமில்லை. ஆயுத சாலையில், ஆயுதங்கள் துருப்பிடித்துக் கிடக்கின்றன. பல யானைகள் இறந்துவிட்டன. கொள்ளிடத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் அருகிலுள்ள ஊர்கள் மண்மேடிட்டு விட்டன. நகரமே களையிழந்து கிடக்கிறது. சோழ மன்னன் தன் மகள்மீது மிகுந்த

பற்றும் பாசமும் கொண்டிருக்கின்றான். தன் மகளை யாருக்கு மணம் புரிந்து கொடுப்பது என்பதில் தீவிர யோசனையிலாழ்ந்து, இப்பொழுதுதான் ஒரு முடிவுக்கு வந்துள்ளான். போசள மன்னரின் மகனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதா? அல்லது நெல்லூரில் உள்ள விஜய கண்டகோபாலனுடைய புதல்வனுக்குக் கொடுப்பதா என்ற குழப்பத்தில் இருக்கிறான். ஆனால், தன் மகளின் சித்திரத்தை எழுதி நெல்லூருக்கு அனுப்புவதாகத்தான் இறுதியாக முடிவு செய்தான். சித்திரம் வரைந்தவர் ஓர் இளைஞர்; மறுநாள் காலையில் ஓவியத்தைத் தேடியிருப்பார். காணாமல் திகைத்திருப்பார். பாவம், சோழனுக்கு என்ன மறுமொழி கூறப்போகிறாரோ தெரியாது'' என்று தனிநாயகம் சொல்லி வரும்போதே சுந்தரபாண்டியன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

''நாளைக் காலை படைகள் உறையூரை நோக்கிப் புறப்படட்டும். உறையூர் நமது வீரர்களின் திறமையைப் புலப்படுத்தும் கொடியேற்ற நகரமாகத் திகழட்டும்'' என்று கட்டளையிட்டான்.

பாண்டியர்ப் படைகள் உறையூரை நோக்கி முழக்க மிட்டவாறு புறப்பட்டன.

இராசராசனுக்கு ஏற்பட்ட மனவேதனை சொல்லி முடியாது. எழுதப்பட்ட மகளுடைய சித்திரம் காணாமல் போய்விட்டதை அறிந்ததிலிருந்து அவன் குழம்பிப் போனான். சித்திரம் எழுதியவனைக் கூப்பிட்டுக் கண்டிக்க எண்ணினான். ஆனால் அந்த ஓவியனையும் காணவில்லை. சித்திரம் எழுதியது உண்மைதானா அல்லது அதிலும் போலித் தனமிருக்கிறதா? என்று கேட்கத் தன் மகளை அழைத்தான்.



''ஓவியர் மிக நல்லவரப்பா'' என்று சந்திரவதனா ஓவியருக்கு நற்சாட்சிப் பத்திரம் அளித்தாள்.

''நான் ஓவியனின் குணத்தைப்பற்றி விசாரிக்க உன்னை அழைக்கவில்லை. ஓவியன் உனது உருவத்தை வரைந்தது உண்மைதானா? வரைந்த சித்திரம் காணவில்லை என்றறிந்தவுடன் என்னிடம் சொல்லாமலேயே போய்விட்டானே, அதுதான் மரியாதையா? அவன் யார்? எந்த ஊர் என்றும் தெரியவில்லையே. ஊர்பேர் தெரியாமல் ஓவியக் கலையில் வல்லவன் என்றறிந்தவுடன் அவனிடம் பணியை ஒப்படைத்து விட்டேன்'' என்று இராசராசன் பேசினான்.

''சித்திரத்தைச் சீலையில் வரைந்தவுடன் தன் இதயத்திலும் வரைந்து சென்றுவிட்டாரப்பா'' என்று சந்திரவதனா முகத்தில் எந்தவிதச் சலனமுமின்றிக் கூறினாள்.

இராசராசனால் அவள் சொன்னதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

''அவன் இங்கிருந்து போய்விட்டான் என்பது உனக்குத் தெரியுமா? அவன் எந்த ஊரைச் சேர்ந்தவன்? அவன் வரைந்த சித்திரம் எங்கே?''

''அவர் வடமேற்கே உள்ள ஓர் ஊரைச் சேர்ந்தவராம். ஊர் பெயரைச் சொன்னார். மறந்து விட்டேன்''-சந்திரவதனா ஒரு குழந்தையைப் போல் பேசினாள்.

''அறிமுகமாகாதவரையும் ஊர் பெயர் தெரியாதவரையும் அரண்மனையில் சேர்க்கக் கூடாது என்று அப்பொழுதே சொன்னேன். பொன்னும் பொருளும் பெற்றுக்கொண்டு சித்திரம் எழுதாமல் சென்று விட்டானே! கண்ட கோபலனுக்கு சித்திரத்துடன் செய்தி அனுப்ப எண்ணினேன். இப்படிச் செய்து விட்டானோ?'' இராசராசன் புலம்பினான்.

''என் உருவத்தை வரைந்து வெளியூருக்கு அனுப்ப நினைத்தீர்களா? நமது மாளிகையிலேயே அதை வைக்கப் போகிறீர்கள் என்று அல்லவா நினைத்தேன்?'' என்று வியப்புடன் கேட்டாள் சந்திரவதனா.

இராசராசன் அவளை ஒருமுறை கோபத்துடன் உற்றுப் பார்த்தான். ஆனால், கோபிக்கத் தோன்றவில்லை. அவள் மீது அவனுக்கு அதிக அன்பு!

''மகளே! மாளிகையில் ஓவியத்தைத் தொங்க விடுவதற்கா இவ்வளவு அவசரமாக எழுதச் சொன்னேன்? தனியே அவன் எதிரே உன்னை உட்காரச் செய்தேன்? என் புத்தியில் ஏதோ கோளாறு! ஐயோ'' என்று வேதனையுடன் தன்னைத்தானே நொந்து கொண்டான்.

தந்தையின் மன வருத்தத்தையும் கோபத்தையும் உணராத சந்திரவதனா சிரித்தவாறு, ''அப்பா! நான் அந்தச் சித்திரக்காரர் எதிரே தனியே உட்காரவில்லை. அவருக்கு உதவியாக வேலையாள் ஒருவனும் இருந்தான்'' என்றாள்.

''வேலைக்காரனா? அப்படி யாரையும் நான் நியமிக்கவில்லையே?'' கவலையுடன் இராசராசன் கேட்டான்.

''ஆமாம் அப்பா. எப்பொழுதும் அவன் எங்களுடன் இருந்தான். எனக்குக்கூட எரிச்சலாகத் தானிருந்தது. அந்த ஓவியருடன் பேசமுடியாமல் இவன் வேறு எப்போதும் இருக்கிறானே என்று வேதனைப்பட்டேன்'' என்று ஒளிவு மறைவு இல்லாமல் சந்திரவதனா சொல்லும்போது இராசராசன் குறுக்கிட்டு, ''ஓவியருடன் நீ தனியே பேச நினைத்தாயா?'' என்று கேட்டான்.



''ஆமாம் அப்பா! ஓவியருடன் பேசவேண்டும் என்று எனக்கு ஆசையிருந்தது. நான் எவ்வளவு நேரம் பேசாமல் சிலைபோல் உட்கார்ந்திருப்பது? அத்துடன் அவர் என்னை விழி மூடாமல் பார்த்துக்கொண்டே இருக்கும்போது பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''அவரது முகத்தையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரது நாசி விசித்திரமாக இருந்தது. ஆனால் ரசிக்கும்படியாக இருந்தது. தாடியும் மீசையும் ஒட்ட வைத்தாற்போல் இருந்தன. மஞ்சள் நிற மேனி. அந்தக் கண்களிலிருந்து ஓர் ஒளி பாய்ந்து வருவது போல் தோன்றியது. அவரைக் கேட்டேன்; 'எவ்வளவு நேரம் இப்படியே சிலைபோல் உட்கார்ந்திருப்பது' என்று.

''எவ்வளவு நேரம் என்ன? எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் இப்படியே உட்கார்ந்திருக்கலாம். யுகம் யுகமாக உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்'' என்றார்.

''எனக்குச் சிரிப்பு வந்தது. 'ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டார். இல்லை; யுகயுகாந்தரம் என்றால் நான் கிழவியாகி நீங்களும் கிழவராகி விடுவீர்களே. அதை நினைத்துப் பார்த்துச் சிரித்தேன்'' என்றேன்.

''கிழவரானால் என்ன? சிரிக்க என்ன இருக்கிறது?'' என்று அவர் கேட்டார்.

''ஆமாம். உங்களது தலை நரைகொண்டு விடும். அழகிய கன்னங்கள் ஒட்டி விடும். நீங்கள் சிரிக்கும்போது பளிச்சிடும் பற்கள் காணாமல் போய்விடும். நிமிர்ந்து நிற்கும் நீங்கள் கூனிக் குறுகிவிடுவீர்கள்'' என்றேன்.

''ஆமாம், அப்படித்தான் மாறிவிடும். முதியவர்களுக்கு அழகே அவைதான். நீ மட்டும் எப்படி இருப்பாய்? உன் கருநாகக் கூந்தல் உரிக்கப்பட்ட பாம்பின் தோல் போலாகிவிடும். வளைந்த புருவங்களிலுள்ள உரோமங்கள் உதிர்ந்து இராமர் உடைத்த வில் போலாகிவிடும். என் பற்களை வர்ணித்தாயே நான் உன்னை வர்ணிக்க நினைத்தவற்றை எல்லாம் நீ வர்ணித்தாய். உனது எட்பூ நாசி, குண்டலங்கள் அணிந்த செவி, பவழங்கள் அடுக்கியவை போன்ற இதழ்கள், சங்குக் கழுத்து, தென்னையின் இளங்காய்கள் போன்ற தனங்கள், ஆகா! என் கரங்கள் உன்னை வரைய விடாமல் அவை தடுக்கின்றன. உன்னைச் சித்திரம் எழுதும் பணியை ஏன் ஏற்றோம் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த ஓவியச்சீலை செய்த பாக்கியத்தைக்கூட நான் செய்யவில்லை'' என்றார்.

''என்னை அவர் வர்ணித்தது கேட்டு நான் நாணமுற்றேன். அவரது வர்ணனைகளில் சில வார்த்தைகளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'ஓவியச்சீலை செய்த பாக்கியத்தைக்கூட நான் செய்யவில்லை' என்று அவர் கூறிய சொற்கள் எனக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்டேன்.

''அரசகுமாரி! உனது வட்ட முகத்தை என் விரல்கள் தூரிகையின் மூலம் வரையும்போதும், உன் கழுத்தை, தோளை, விழிகளை வரையும் போதும் அவை அந்தச் சீலையில் படிகின்றனவே என்ற பொறாமை ஏற்படும். அதனால் என் இதயத்தைச் சீலையாக்கிக் கொண்டேன். உன்னை நெடுநேரம் உற்றுப் பார்க்கும்போது என் இதயத்திரையில் உன் வடிவம் தீட்டப்படும். உன் அழகிய கூந்தல், வளைந்த புருவம், நாசி, இதழ்கள், கழுத்து, தோள்கள் தாங்கி நிற்கும் செங்கலசத் தனங்கள்; ஆ! சந்திரவதனா உனக்கு இந்தப் பெயரை இட்ட உன் தந்தை வாழ்க! ஆனால், அற்புத அழகியை அவர் அரண்மனையில் சிறைப்படுத்தி



வைத்திருக்கிறாரே! வானம்பாடி போல் உன்னைப் பறந்து திரியவிடாமல் கட்டுக் காவலிட்டுள்ளாரே! உனது அழகிய வடிவத்தை ஓவியமாக எழுதச் சொல்கிறாரே. அதைக் காணும் இளைஞர்களின் இதயம் துடிக்குமே..' அவர் இன்னும் இன்னும் வர்ணித்தார். அவற்றை இப்பொழுது எடுத்துச் சொல்ல எனக்குச் சக்தி இல்லை. அடிக்கடி அந்த வரிகளை நினைவுபடுத்திக்கொண்டும் அவை மறந்துவிட்டன...''

சந்திரவதனா இவ்வாறு கூறி வருவதைக் கேட்கக் கேட்க இராசராசன் உடல் நடுங்கியது. ஆனால் சிறிதும் கபடமில்லாமல் நடந்தது நடந்தவாறு அவள் கூறுவதை மேலும் கேட்டு, சில உண்மைகளை அறிய விரும்பி அவளைப் பேசத் தூண்டினான். ''உம்...அப்புறம்? என் அருமை மகளே! அந்தச் சித்திரக்காரன் என்ன சொன்னான்?''

''அவர் சொன்னது அனைத்தையும் சொல்ல இயலவில்லை அப்பா! சித்திரம் எழுதி முடித்தவுடன் நானே அந்தச் சித்திரத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். 'இது யார்? நானா?' என்று கேட்டேன்.

''ஆமாம்; நீயேதான். நீயே பார்த்து வியக்கிறாய் என்றால் இதை எழுதிய எனக்கு எப்படி இருக்கும்?'' என்று அவர் கேட்டார்.

''அவருக்கு எப்படி இருக்கும்? எனக்குப் புரியவில்லை. உங்களுக்கு எப்படி இருக்கும்?'' என்று திரும்பவும் அவரைக் கேட்டேன்.

''இந்தச் சித்திரத்தை நானே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது'' என்றார் அவர்.

''வைத்துக் கொள்ளுங்களேன்.''

''நான் என் நாட்டுக்குச் சென்றுவிட்டால், உன் தந்தை சித்திரம் எங்கே என்று கேட்கமாட்டாரா? சித்திரத்தை அவரிடம் ஒப்படைத்து நான் ஊதியம் பெற வேண்டாமா?''

''என் தந்தையிடம் நான் சொல்லிக் கொள்கிறேன். ஆமாம், நாடு என்று சொல்கிறீர்களே, உங்கள் நாடு எது? நீங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர் இல்லையா? வட மேற்கு எல்லாம் சோழநாடு பரவியிருக்கவில்லையா?'' என்று கேட்டேன்.

''அவர் சிரித்தார். 'சந்திரவதனா, நீ உலகத்தைப் புரிந்துகொள்ளாத பேதையாகவே இருக்கிறாய். சோழநாடு ஒரு காலத்தில் மிகப் பெரியநாடு. இப்போது அதைப்போல் பெரிய நாடுகள் நான்கு திக்குகளிலும் தோன்றிவிட்டன. எனது நாடு மலை சூழ்ந்தநாடு. உங்கள் நாட்டின்மீது எங்களுக்கு மிகுந்த அன்பு உண்டு. இந்தச் சித்திரத்தை நான் எடுத்துச் செல்ல முடியாது. வேறு ஒரு சித்திரத்தை எழுதிவிடுகிறேன்'' என்றார்.

''எனக்குக் கவலையாகிவிட்டது. மறுபடியும் சித்திரம் வரைவது என்றால் பதுமைபோல உட்கார்ந்திருக்க வேண்டும். 'ஐயோ என்னால் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது' என்றேன். அவர் சிரித்து, 'உன்னை அப்படியே வரைந்துவிட்டேன். நீ எதிரே உட்காரவேண்டாம். இதோ இங்கே உட்கார்ந்துவிட்டாய்' என்று தன் இதயத்தைச் சுட்டிக் காட்டினார். எனக்கு ஆச்சரியமாகிவிட்டது. நான் எப்பொழுது உட்கார்ந்தேன்? சித்திரம் எழுதியாகி விட்டதா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்! நீ என் இதயத்திலே அழுத்தமாக உட்கார்ந்து விட்டாய். வண்ண விசித்திரங்களால் உன்னைப் பூரணமாகத் தீட்ட முடியாது. அதனால் நான் உன்னையே சிறைபிடித்துத் தத்ரூபமாகத் தீட்டி விட்டேன். வேண்டும் என்றால் இதோ



பார்!'' என்றுகூறி என் கரத்தைப் பிடித்துத் தன் மார்பில் வைத்துக்கொண்டார்.''

சந்திரவதனா இவ்வாறு கூறிவிட்டு முகத்தை விரல்களால் மூடிக்கொண்டாள். அதற்குமேல் நடந்தவற்றைச் சொல்ல நா எழவில்லை. அச்சம், அவள் சொற்களுக்குத் தடை விதித்தது. இயற்கையாகவே பெண்களுடன் பிறந்த நாணம் அவளைத் தடுத்தது.

அவள் கரங்களை அவன் தன் இதயத்தில் அழுத்திக் கொண்டவுடன் அவள் நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

அந்த இரு விழிகளின் ஒளிவீச்சு அவனை நிலைகுலைய வைத்தது.

''சந்திரவதனா'' என்று மெல்லிய குரலில் அழைத்தான். அவனுடைய முகத்தைக் கனிவுடன் நோக்கிய அவளுடைய கன்னங்களை மெல்ல வருடி இரு கைகளாலும் தாமரை மலரை ஏந்துவதுபோல் எடுத்து, ''சந்திரவதனா, உன் சித்திரத்தை என் இதயத்தில் பார்த்தாயா?'' என்று செவிகளில் மட்டும் கேட்பதுபோல் முணுமுணுத்தான்.

சந்திரவதனாவின் உடல் மெல்ல நடுங்கியது. சிலிர்த்தது. ஓர் ஆண்மகனின் ஸ்பரிசம் அவள் மேனியில் பட்டது அதுவே முதல்முறை.

அவள் தன் சித்திரத்தைக் காண விரும்பாதது போல் விழிகளை மூடிக்கொண்டாள்.

''சந்திரவதனா''

''உம்...''

''மூடியுள்ள உனது விழிகள் எனக்கு மலராத தாமரை மொட்டினை நினைவுபடுத்துகின்றன. எஃகுக் கேடயத்தை அணிந்திருந்த எனது மார்பின் மீது சந்தனக் குவியலை அப்பியதுபோல் இப்பொழுது உணர்கிறேன். சந்திரவதனா, என்னுடன் வந்து விடுகிறாயா?''

அவன் இவ்வாறு கேட்டவுடன் அவள் விழிகளைத் திறந்தாள்.

அவள் ஏதோ சொல்ல நினைத்தாள். கங்கைகொண்ட சோழபுரத்தையும், பழையாறையையும், தில்லைச் சிதம்பரத்தையும் தவிர, அவள் வேறு ஊர்களைக் கண்டதில்லை. அவன் எங்கே அழைக்கிறான்?

''உங்களுடனா? ஐயோ! மாளிகையை விட்டு நான் எங்கும் வந்ததில்லை. உங்கள் ஊரில் இவ்வளவு பெரிய மாளிகை இருக்கிறதா?''

''ஓ! இதைப் போன்ற மாளிகை; சகல வசதிகள். இசை, நடனம், காலடியில் காத்துக் கிடக்கப் பணிப்பெண்கள்.''

''நான் அரசகுமாரி...''

''உம். அங்கும் நீ அரசகுமாரிக்கு மேலே அரசியாகவே வாழலாம். ஏன் நகைக்கிறாய்?''

''இல்லை, உங்களுக்கு அரண்மனை, அந்தப்புரம், பணிப்பெண்கள், ஆடம்பரம்! ஆ, அவ்வளவு வசதிகள் இருந்தும் ஏன் நீங்கள் சித்திரம் எழுதிப் பிழைக்க நாடுவிட்டு நாடு வரவேண்டும்? கற்பனையாகச் சொல்வதில் உங்களுக்குள்ள சாமர்த்தியத்தை நினைத்தேன், சிரித்தேன்!''



''பெண்களைப் பேதைகள் என்பது சரிதான். நான் பிழைப்புக்காகச் சித்திரம் வரையவில்லை. கலை உணர்வு எங்கள் இரத்தத்தோடு கலந்தது. உன் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டேன். உன்னை வண்ணச் சித்தரமாய் எழுதிப் பார்க்க ஆசை கொண்டேன். வாய்ப்புக் கிடைத்தது. என் இதயத்திலும் எழுதிக் கொண்டேன். ஆனால் உன்னைப் பிரியவே மனம் வரவில்லை. ஓவியனாக மாறிச் சோழ நாட்டிலேயே இருந்து விடலாமா என்று எண்ணினேன். தஞ்சைப் பெரிய கோயிலில் வரையப்பட்டிருப்பது போன்ற வண்ண ஓவியங்களை, கங்கைகொண்ட சோழர் கோயிலில் வரைய உன் தந்தையிடம் அனுமதி பெறலாமா என்று எண்ணினேன். ஆனால் கடமை எனக்காகக் காத்திருக்கிறது'' என்று அவளுடைய கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

சந்திரவதனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ''நீங்கள் உண்மையிலேயே ஓவியர் அல்லரா?'' என்று கேட்டாள்.

''நான் உண்மையிலேயே ஓவியன்தான். ஆனால் அது எனது பொழுதுபோக்குக் கலை. சோழநாட்டில் சுற்றி அலைந்து சிற்பச்சித்திரங்களைக் கண்டு ரசித்திருக்கிறேன். என் பணியே வேறு.''

''வேறு என்ன செய்கிறீர்கள்?''

''அதை நான் இப்பொழுது சொல்ல மாட்டேன்.''

''பிறகு எப்பொழுது சொல்வீர்கள்?''

''நீ என்னுடன் வந்தால் தெரிந்து கொள்வாய்.''

''உங்களுடனா? ஐயோ, எனக்குப் பயமாக இருக்கிறது. என் தோழி கல்யாணியை விட்டு நான் வரமாட்டேன். என் பிரியமான சுகரைவிட்டு வரமாட்டேன். மைதிலி என்று நான்

ஆசையுடன் அழைக்கும் மானை விட்டு வரமாட்டேன். உங்கள் ஊரில் சுகர் இருக்கிறாரா? மைதிலி இருக்கிறாளா? என்ன சிரிக்கிறீர்கள்?''

'இல்லை. ஒரு மான் என்ன? பல மான்கள் உண்டு! ஒரு கிளிக்குப் பதிலாகக் கிளிக் கூட்டத்தையே கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன். மானும் கிளியும் எதற்கு. நீயே இருக்கும் போது?'' என்றான் ஓவியன்.

சந்திரவதனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''நான் என் அம்மாவைக் கேட்கிறேன். அரசியின் சொல்லுக்கு அரசர் மறுப்புத் தரமாட்டார். என் தாயாரைச் சந்திக்கிறீர்களா?''

''வேண்டாம், வேண்டாம். நீ என்னுடன் வராவிட்டால் நான் மட்டும் உன் தாயிடம் வரவேண்டுமா?''

''நீங்கள் சொல்வது சரியில்லையே. இதோ இருக்கும் மாளிகைக்கு நான் அழைக்கிறேன். நீங்கள் எங்கோ வடமேற்கே அழைக்கிறீர்கள். என் தாய் தந்தையார் உத்தரவு இல்லாமல் நான் வரமாட்டேன்.''

''அப்படி என்றால் நான் என் ஊருக்கு உன்னை என் இதயத்தில் சுமந்து செல்கிறேன்.''

''பிறகு வரவே மாட்டீர்களா?''

''வருவேன். முறைப்படி பெண்கேட்டு வருவேன்.''

''என்னைப் பெண் கேட்டு வரத்தக்க அந்தஸ்து உங்களுக்கு உண்டா? ஒரு சித்திரக்காரருக்கு என்னை என் தந்தை மணம் புரிந்து கொடுக்கமாட்டார்.''

'நீ விரும்பினால் கூடவா?'



இதற்கு அவளால் மறுமொழி கூற முடியவில்லை.

'சந்திரவதனா! நீ நினைப்பதுபோல் நான் இல்லை. இதோ பார், என் முகத்தில் வளர்ந்துள்ள மீசையையும் தாடியையும்! இவைகூட உண்மை இல்லை. உன்னுடன் இருந்த சில நாட்களின் நினைவாக இதை வைத்துக்கொள்' என்று மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான்.

முகத்தை மறைத்திருந்த பொய்த் தாடி மீசைகள் அகற்றப்பட்டபின் அவனுடைய அழகிய முகத்தைக் கண்ட சந்திரவதனாவுக்கு ஏற்பட்டது வியப்பா, மகிழ்ச்சியா, அச்சமா-என்று அவளுக்கே புரியவில்லை. அவன் முகத்தையும் கையிலுள்ள மோதிரத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தபோது, அங்கே யாரோ வரும் அரவம் கேட்கவே ஓவியன் அங்கிருந்து விரைந்து சென்று விட்டான். தன் மகள் கூறியவற்றைக் கேட்டும் அவன் கொடுத்த அடையாள மோதிரத்தைக் கண்டும் இராசராசன் பெரும் அதிர்ச்சியடைந்தான். ''ஆ! ஓவியனாக வந்தது இவனா?'' என்று கூவினான்.

## 5

பாண்டியர் படைகள் மதுரையினின்று புறப்பட்டு விட்டன என்பதையும் உறையூர் மக்கள் தெரிந்து கொண்டனர். சோழ நாட்டின் எல்லையிலிருந்த வீரர்கள் பாண்டிய வீரர்களைத் தடுத்து நிறுத்தவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் கவலைப்படாமல் இருந்தனர். அவர்கள் பாண்டிய படைகளைப் பற்றித் தவறாக எடைபோட்டனர்.

"திடீரெனத் தென்னவன் வீரர்களுக்கு என்ன வந்துவிட்டது? சுறுசுறுப்பாக வாளைச் சுழற்றிக் கொண்டு வருகிறார்களோ?" என்று கூறிச் சிரித்தனர்.

"வாளைச் சுழற்றும் கலையை மறந்துவிடக்கூடாது என்பதற்காகப் புறப்பட்டிருக்கலாம்" என்றார் ஒருவர்.

"மறந்துவிடாமல் இருக்க வேண்டுமென்றால் தோட்டத்துப் புடலையை, பூசணியை வெட்டட்டுமே! அல்லது மாரியம்மனுக்குப் பூசை செய்ய ஆடு கோழி வெட்டலாம்" என்று நையாண்டி செய்தனர் சிலர். "எனக்கு ஒரு சந்தேகம்: பாண்டியர்கள் தங்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து விட்டதாகவே வைத்துக்கொள்வோம். சோழநாட்டவர்களுக்கு அடிமையாயிருக்கக்கூடாது என்றே அவர்கள் நினைத்துவிட்டுப் போகட்டும். மதுரையிலிருக்கும் சோழ வீரர்களை ஓட்டி விட்டால்போதுமே! பாவம், சிரமப்பட்டு நெடுமலை கடந்து வருவானேன்?" என்று விவேகமுள்ள ஒருவர் கேட்டுவைத்தார்.

அவர் கேட்டதில் பசை இருந்தது. மதுரையிலுள்ள சோழநாட்டு வீரர்களைச் சிறையிலிட்ட பிறகே, சுந்தரபாண்டியன் படையெடுப்பைப் பற்றிய செய்தியை வெளியிட்டான். மேலும், இதுவரையில் சோழ வீரர்களே மதுரையின் மீது படையெடுத்துச் சென்றதை உறையூர் மக்கள் அறிந்திருந்தனரே தவிர, பாண்டியர்கள் சோழநாட்டின்மீது படையெடுத்து வந்தது அவர்கள் கேள்விப்படாத ஒன்று.

பாண்டிய படைகள் மதுரையை விட்டுப் புறப்பட்டு விட்டன என்பதை அறிந்தவுடன் அதை ஏதோ வேடிக்கையான விஷயமாகவே அவர்கள் கருதினர். பாண்டியப் படை வீரர்கள் வருகையை விழாக் கொண்டாட்டம்போல் நினைத்து எல்லையில் அவர்களைப் பார்க்கக் காத்திருந்தனர் சிலர்.



பாண்டியர் படைகள் புறப்பட்ட மூன்றாவது நாள் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு அந்தச் செய்தி எட்டியது. இராசராசன் அதை ஓர் அவசரச் செய்தியாகவோ, முக்கியமானதாகவோ கருதவில்லை. புரட்சி மனப்பான்மை கொண்ட சில பாண்டிய வீரர்கள் கிளர்ந்தெழுந்து சோழ நாட்டை நோக்கி வரலாம் என எண்ணினான். சிலநாட்கள் கழிந்து வந்த செய்தி அவனைக் கவலைப்படச் செய்தது.

மந்திரி மண்டலத்தாரின் யோசனையைக் கேட்க அவர்களை அழைத்தபோது அவர்களும் பாண்டியர் படையெடுப்பை முக்கியமான செய்தியாகக் கருதாமல், "வரட்டும் பார்ப்போம்; எதற்கும் நமது நாட்டு எல்லையிலேயே அவர்களைத் தடுத்து விரட்டுவோம்" என்று யோசனை கூறினர்.

பாண்டிய வீரர்களை எதிர்க்கக் கங்கைகொண்ட சோழபுரத்திலின்று இருநூறு பேர்கள் அடங்கிய சிறு படையை அனுப்பி வைத்தான் இராசராசன்.

அரசாங்கம் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை யானாலும், இராசராசன் தன் பட்டத்தரசி புவனமுழுதுடையாளிடம் தெரிவித்துக் கருத்தைக் கேட்காமல் எந்த முடிவையும் எடுக்க மாட்டான்.

மதுரையிலின்று படைகள் புறப்பட்டுள்ள செய்தியைப் புவனமுழுதுடையாளிடம் தெரிவித்த இராசராசன் அதைப் பற்றிப் பேசிக் கலந்தாலோசிக்காமல் சித்திரகூடத்தில் நடைபெற்ற செய்தியைப் பற்றியே பேசினான். போசள நாட்டு இளவரசன் மாறுவேடத்தில் ஓவியனாக வந்ததைப் பற்றிப் பேசினான். தான் ஏமாற்றப்பட்டு விட்டதைப் பற்றிப் புலம்பினான். அவன் மனத்தைவிட்டு அந்தச் சம்பவம் மாறவில்லை.

சந்திரவதனா ஒன்று விடாமல் சித்திரக்கூட நிகழ்ச்சிகளைத் தெரிவித்திராவிடில் இராசராசன் அங்கு நடந்தவற்றை அறிந்திருக்கப் போவதில்லை. தன் மகளுடைய குழந்தை உள்ளத்தைக்-களங்கமற்ற மனத்தைப் பாராட்டத் தெரியாத இராசராசன் ஒருநாள் முழுவதும் யாருடனும் பேசாமல் இருந்தான்.

புவனமுழுதுடையாளுக்கும் அதிர்ச்சிதான். ஓர் ஓவியன் தன் மகளைத் தொடுவதா என்று சீற்றம் கொண்டவள், ஓவியனாக வந்தவன் போசள நாட்டு இளவரசன் வீரநரசிம்மன் என்பதை அறிந்தவுடன் அவளுக்கு வியப்பு தாங்கவில்லை. ''போசள நாட்டு இளவரசர் வந்தார் என்று நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?'' என்று அரசரை நோக்கிக் கேட்டாள்.

''இதில் துப்பறிய ஒன்றுமே இல்லை. சந்திரவதனாவின் விரல்களில் இந்த மோதிரம் இருந்தது'' என்று இராசராசன் கூறவும், அரசி அந்த மோதிரத்தை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து, ''போசள இளவரசரின் மோதிரம் என்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''போசள நாட்டு அடையாளச் சின்னம் இருக்கிறது. விலையுயர்ந்த இந்த மோதிரத்தைச் சாதாரண ஓவியர் எப்படி அணிவார்?'' என்று கூறவும் புவனமுழுதுடையாள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

''சந்திரவதனா அதிர்ஷ்டக்காரிதான், தில்லை நடராசப் பெருமானின் அருள் அவளுக்கு இருக்கிறது. ஓவியர் வேடத்தில் வராமல் போசள இளவரசன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டே பெண் கேட்டு வந்திருக்கலாம். அரசமரியாதை உபசரணைகளுடன் வரவேற்றிருப்போம். எனக்கே தெரியாமல் போய்விட்டதே! இரண்டு தடவை நான் ஓவியக்கூடம் சென்றேன். பாவம், சந்திரவதனா பொம்மைபோல் ஆடாமல் அசங்காமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். அவளைச் சித்திரமாக வரைந்த ஓவியன் இளம் வயதினன். தன் கலையிலே கண்ணுங் கருத்துமாக இருந்த ஓவியனைச் சந்தேகப்படத் துளிக்கூட இடம்இல்லை. தன் மகளுக்கும் பிடித்த மணமகன் அவர் என்றால் நாம் அவருக்கு மணம் புரிந்து கொடுத்து விடலாமே? வீணே மனத்தைக் குழப்பிக் கொள்ளவேண்டாம். இப்போதுள்ள பிரச்சினை, பாண்டியர் படைகளைத் தடுத்து நிறுத்துவதுதான். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. மதுரைப் படைகளை எதிர்க்கும் பொறுப்பைக் கோப்பெருஞ்சிங்கனிடம் ஒப்படைத்து விடலாமே? சோழ நாட்டின் மீது பற்றும் பாசமும் கொண்ட அவரைத் தவிர வேறு யார் அந்தப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? வாள்நிலை கண்ட வீரர் என்ற விருதும் பெற்ற அவரிடம் ஒப்படைப்பதுதான் முறை'' என்றாள்.



''இப்போது என் மனத்தை வாட்டுவது சந்திரவதனாவின் திருமணந்தான். போசள இளவரசர் அவளை விரும்புகிறார் என்பதால் நான் உடனே சம்மதிக்க முடியுமா? தெலுங்கு நாட்டுச் சோழர் கண்டகோபாலன்தான் நமக்கு உதவுவார் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது. அதனால் போசளத் தொடர்பு வேண்டாம் என்று நினைக்கிறேன். கோப்பெருஞ் சிங்கன் உதவுவான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அவன் பெண் கேட்டதை மறந்துவிட்டாயா? நான் அவனுக்கு மறுமொழி கொடுக்காததால் அவனுக்கு என்மீது கோபம். பாண்டியர் படைகளை எதிர்க்கத் தன் படைவீரர்களை அனுப்பவோ, படைகளுக்குத் தலைமை வகிக்கவோ அவன் முன்வரமாட்டான். எந்த விதத்தில் யோசித்தாலும்

சந்திரவதனாவின் கல்யாணப் பிரச்சினை முன் நிற்கிறது. எப்படி முடிவு செய்வது? பாண்டியர் படை எடுப்பை நான் பெரிதாக நினைக்கவில்லை. சந்திரவதனாவின் திருமணத்தைப் பற்றிய கவலைதான் பெரிதாகத் தோன்றுகிறது எனக்கு.''

இராசராசன் கூறியதை அரசி ஏற்கவில்லை. அவள் சற்றுக் கோபமாக, ''சந்திரவதனாவின் மனத்தை அறிந்து அதன்படி செய்வது ஒருபுறம் இருக்கட்டும். தாங்கள் சொல்வதுபோல் நெல்லூரில் உள்ள கண்டகோபாலன் புதல்வரின் அழகு, திறமை இவற்றைக் கண்டறிய வேண்டாமா? என் மகள் விரும்பாது போய்விட்டால் மகளுக்குப் பிடிக்காத மணமகனுக்குக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டேன். இப்பொழுதுள்ள நிலைமையில் மதுரையைக் குறித்து இன்னும் தீவிரமாக நாம் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்துவிட்டது. பாண்டியர்களைத் தலையெடுக்கவிடாமல் செய்து, நமது புதல்வனை மதுரையின் பிரதிநிதியாக நியமிப்பதுதான் சரி என்று தோன்றுகிறது. அதற்கான முயற்சியை முதலில் எடுக்கவேண்டும் என்பது என் எண்ணம்'' என்றாள்.

அரசியின் கோபத்தைப் புரிந்து கொள்ளமுடியாத இராசராசன், ''தேவி! ஓர் உண்மையை உனக்குச் சொல்ல வேண்டும். நேற்றுக் கருவூல அதிகாரி என்னைச் சந்தித்தார். கருவூலத்தில் கையிருப்பு மிகவும் குறைந்து விட்டதாம். களஞ்சியத்தில் தானியங்களின் இருப்பு-இன்னும் ஒரு மாத காலத்துக்குத்தான் வருமாம். சம்புவரையரிடமிருந்து மிகவும் ஒழுங்காகத் திரைப்பணம் முன்பு வந்து கொண்டிருந்தது. பரிவாரங்களுடன் மாலை மரியாதை செய்து வணங்கி, பொன்னும் பட்டாடையும் கொண்டு தரும் அவர் இந்த ஆண்டு வரவில்லை. அதுவே பெரிய கவலையாக எனக்கு



இருக்கிறது. பாண்டியர்கள் மீது பெரும்போர் தொடுக்கப் பொன்னும் பொருளும் வேண்டாமா?'' என்று கூறவும், அரசியின் கோபம் மேலும் அதிகமாகியது.

''கருவூலம் வற்றிவிட்டது என்பது இப்பொழுதான் உங்களுக்குத் தெரிந்ததா? கருவூலத்தில் சேராமல் குறைந்து வருகிறது என்ற செய்தியைத் தன அதிகாரி என் முன்பே தெரிவிக்கவில்லை? நமது நிதி நிலையைப் பாண்டியர்கள் புரிந்துகொண்டுதான் போருக்கு ஆயத்தம் செய்து விட்டார்களோ? அப்படி என்றால் நாம் மற்றவர்கள் தயவை நாட வேண்டிய வேளை வந்துவிட்டது. பொன்னுக்கும், படைஉதவிக்கும் குறுநில மன்னர்களை வற்புறுத்துங்கள்'' என்றாள்.

இராசராசன் ஏதும் பேசவில்லை. கண்ட கோபாலனிடமிருந்து மறுமொழிவரும் என்று எதிர்பார்த்திருந்தது அவன் உள்ளம். சந்திரவதனாவை, கண்ட கோபாலன் புதல்வனுக்கு மணம் புரிந்து தெலுங்குச் சோழர்களின் படைபலத்தைப் பெறுவது என்பது இராசராசன் திட்டம். ஆனால் அது நீண்டகாலத் திட்டம். உடனடியாகப் பாண்டியர் படையெடுப்பை எதிர்த்து நிற்க உதவுமா என்பது சந்தேகமே.

'மகத நாட்டரசருக்கு உதவிகேட்டு ஓலை அனுப்பலாம். அவரும் சந்திரவதனாவைத் தமது நாட்டுக்கு மருமகளாக்கிக் கொள்ள விரும்புகிறார். கோப்பெருஞ்சிங்கனிடமிருந்து நிச்சயம் உதவி வராது. சந்திரவதனாவை அவனுக்கு மணம் புரிந்து கொடுத்தால் உதவி பெறலாம். இளம் பெண்ணை முதிய வயதினருக்குக் கொடுப்பதா? அப்படிப்பட்ட உதவி வேண்டாம். உம்; எதற்கு மற்றவர் உதவி? நம் படைகளே போதும், பாண்டியர்களைத் தோற்கச் செய்ய. என் மகளைப்

பகடைக்காயாக உருட்ட நான் சம்மதிக்க மாட்டேன்' என்று மனத்துக்குள்ளேயே பேசிக்கொண்டே இராசராசன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன் போல் அரசியிடம் சொன்னான்:

''புவனமுழுதுடையாளே, பாண்டியர் படைகளை நான் ஒருவனே முறியடிப்பேன். கங்கை கொண்ட சோழபுரத் திலுள்ள படைகளே போதும். அதனால் படை உதவி தர மகத நாட்டிலிருந்து உனது தந்தையோ, கோப்பெருஞ்சிங்கனோ, போசள வீர நரசிம்மனோ-பணயமாகச் சந்திரவதனாவைக் கேட்டு என்னைப் பணிய வைத்துவிட முடியாது. இது உறுதி. நீயும் உன் முடிவை மாற்றிக்கொள்.''

புவனமுழுதுடையாள் உடனே மறுமொழி எதும் கூறவில்லை. அவள் சிந்தித்தாள். சிறிது நேரம் சென்றவுடன், அமைதியான குரலில், ''சக்கரவர்த்தி அவர்களே! நம்முடைய பலத்தை நம்பித்தான் நாம் இருக்க வேண்டும் என்பதை நான் முழு அளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். சோழச் சக்கரவர்த்திகளுக்கு இதுவரை ஒருவரும் நிபந்தனை விதித்ததில்லை. அதே சமயம் உங்கள் பெயருடைய சக்கரவர்த்தி உங்கள் பாட்டனாருக்குப் பாட்டனார்-தம் மகளுடைய காதல் நிறைவேற உதவவில்லையா? அதுபோல் சந்திரவதனாவின் விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை'' என்றாள்.

''சந்திரவதனாவின் காதலா? அவள் காதலிக்கும் நிலைக்கு வந்து விட்டாளோ?'' இராசராசன் சீறினான்.

''ஆமாம்; அவள் இன்னும் குழந்தை இல்லை. குழந்தையைப்போல் தங்களிடம் நடந்ததைச் சொல்லி விட்டாள். சொல்லாமல் இருந்திருந்தால், கபட எண்ணத்துடன் நடக்க முடிவு செய்திருந்தால், என்ன



ஆகியிருக்கும்?'' அரசி மெல்லப் பேசினாலும் அதில் அழுத்தம் இருந்தது.

''என்ன ஆகியிருக்கும்? நமக்குப் போசளருடன் மனக்கசப்பு ஏற்பட்டிருக்கும். வாள் முனையில் அவர்களைச் சந்தித்துச் சந்திரவதனாவை மீட்டிருப்பேன்'' இராசராசன் கடுமையாகப் பேசினான்.

''இப்போதும் அந்த நிலை ஏற்படாது என்று சொல்ல முடியுமா?'' அரசி சளைக்கவில்லை.

''கவலைப்படமாட்டேன். அந்த நிலையை எதிர்பார்த் திருக்கிறேன்'' என்று இராசராசனும் குளுரைப்பதுபோல் பேசினான்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மெல்லிய விம்மல் ஒலி கேட்டது. அரசனும் அரசியும் திரும்பிப் பார்த்தனர்.

அடுத்த அறையில் சந்திரவதனா முகத்தை மூடிக்கொண்டு விம்மி அழுது கொண்டிருந்தாள். அரசி தன் மகளை அணைத்தவாறு மெல்லத் தேற்றினாள்.

''அம்மா! என்னால் தங்களுக்குப் பெரும் தொல்லை. என்னை ஓவியமாக எழுத ஏனம்மா போசள இளவரசரை நியமித்தீர்கள்?'' என்று விகம்பலுக்கிடையே கேட்டாள்.

''எங்களுக்கு எப்படி அம்மா தெரியும், அவர் போசள நாட்டு இளவரசர் என்று? அவர் இளவரசராய் இல்லா திருந்தால் நீ அவரைக் காதலித்திருக்க மாட்டாய்?'' என்றாள் அரசி.

''அவருடைய அந்தஸ்தை அறியாமலேயே எனக்கு அவர்மீது விருப்பம் ஏற்பட்டு விட்டதம்மா. இப்பொழுது

நீங்கள் பேசிக்கொண்டபோதுதான் அவர் போசள இளவரசராக இல்லாமலிருந்தால்கூட நான் அவரைத்தான் விரும்பியிருப்பேன்.''

இராசராசனும் புவனமுழுதுடையாளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். குழந்தை என்று இதுவரை கருதி வந்த சந்திரவதனாவுக்குச் சிறகு முளைத்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டனர்.

## 6

சந்திரவதனாவுக்கு உறக்கம் வரவில்லை. காலையில் சிறிது வயிற்றுக்கு ஈந்தபிறகு, அவளுக்கு வேறு உணவு செல்லவில்லை. பணிப்பெண்கள் பலமுறை அவளுடைய இருப்பிடத்துக்கு வந்து வற்புறுத்தியும் பலன் இல்லை. அவளுடைய இணை பிரியாத தோழி கல்யாணி தனது சொந்த ஊருக்குச் சென்றிருந்ததால், சந்திரவதனாவின் மனஅலைகள் பெரிதாக எழுந்து தாக்கின. நெருக்கடி சமயங்களில் தோழியின் யோசனையைத்தான் கேட்பாள். நல்ல சமயத்தில் கல்யாணி விட்டு விட்டுப் போய்விட்டாளே? ஓவியர் அவளைச் சித்திரம் வரையும்போது அவள் இல்லை.

'ஏனடி கல்யாணி, நல்ல சமயம் பார்த்து ஊருக்குச் சென்றுவிட்டாய்? உனக்கு மணம் முடிக்க உன் பெற்றோர்கள் பேச்சுவார்த்தை நடத்துகிறார்களாம். நீ அதிர்ஷ்டசாலி. நீ சொல்வதை உன் அப்பா, அம்மா கேட்கிறார்கள். என் நிலையைப்பார். இதுவரை நான் ஏதாவது கேட்டிருக்கிறேனா?



அடி, கல்யாணி! நீ என்னுடன் இருந்திருந்தால் எனக்கு எவ்வளவு உதவியிருப்பாய்? அவரைப் பார்த்தவுடனே எனக்குப் பிடித்துவிட்டது. பிடித்தம், விருப்பம், அன்பு, காதல் ஆசை இவற்றைப் பற்றியெல்லாம் நீ விளங்கும்படியாக எப்போது சொல்வாய்? சிரிக்கச் சிரிக்கப் பேசுவாய். 'இங்கே யாரும் இல்லை. ஏன் மெதுவாகப் பேசுகிறாய்?' என்று, கேட்டால் 'இதையெல்லாம் யாராவது உரக்கப் பேசுவார்களா? சுவருக்கும் காதுஉண்டு' என்று சொல்வாய். இப்பொழுது நான் என் வேதனையை யாரிடம் சொல்வேன்? என் உடலில் ஏற்படும் புதுவித உணர்ச்சிகளை யாரிடம் சொல்வேன்? முதல் நாள் அந்த ஓவியரைச் சந்தித்தபோதே என் விழிகள் படபடத்தன. இரு விழிகளாலும் அவரைப் பார்த்தேன். இன்னும் நாலு, நாற்பது, நாலாயிரம் விழிகள் எனக்கு இருக்கக்கூடாதா என்று ஆசைப்பட்டேன். ஆனால் இறைவன் இரு விழிகளைத்தானே அளித்துள்ளான்? இதுவரை மாளிகையை விட்டுத் தனியே ஒரு ஆடவன் எதிரே நான் நின்றதில்லை. எப்போதும் நீ உடன் இருப்பாய். நீ சிலரைச் சுட்டிக்காட்டி, 'இவர்தான் கோப்பெருஞ் சிங்கன்; இவர்தான் உன் தாய்மாமன்; இவர்தான் சம்புவரையர் மகன்' என்று கூறுவாய். 'நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் இளவரசி. இவர்களுள் ஒருவரைத்தான் நீங்கள் மணக்கப் போகிறீர்கள்' என்று கூறுவாய். அப்பொழுது என் முகம் சிவக்கும். சிவந்த முகம் என்பதை நீ சொல்லித்தான் நான் அறிவேன். அதன் பெயர்தான் நாணமோ? எனக்கு ஒருவரையும் பிடிக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்வதற்காக நான் உன் கன்னத்தை மெல்லக் கிள்ளி, இவர்களை மணப்பதைவிடக் கால காலத்துக்கும் கன்னியாகக் காலம் கழிப்பதுதான் நல்லது.

பெண் என்றால் கல்யாணம் செய்துகொண்டுதான் ஆகவேண்டுமா?' என்று சொல்வேன். நினைவிருக்கிறதா?

''நீயும் குறும்புச் சிரிப்புடன், 'உம், பார்க்கத்தானே போகிறேன்; சோழ இளவரசி ஓர் இளவரசரைத்தான் மணந்தாக வேண்டும். என்னைப்போல் சோழ நாட்டுச் சாதாரண குடிமகனை மணக்க முடியுமா? போகும் இடத்தில் அரசியாகத் திகழவேண்டும். அரசியானால்தானே இந்தக் கல்யாணியை மறக்கலாம்?' என்று சொல்வாய். நான் உன் கையை அழுத்தமாகப் பற்றிக்கொண்டு, 'கல்யாணி! உன்னை நான் எப்படிப் பிரிய முடியும்? என் தந்தையிடம் கட்டாய உத்தரவு ஒன்றை உனக்கு இடச் சொல்லப் போகிறேன்; 'கல்யாணி என்றும் எப்பொழுதும் சோழ இளவரசியைப் பிரியக்கூடாது. பிரிந்தால் தண்டனை' என்று. அதைக் கேட்டு நீ சிரிப்பாய். 'அதெப்படி இளவரசி நியாயமாகும்? நீங்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பீர்கள். என் மாமன் மகன் எனக்காகக் காத்திருக்கிறார். அவர் உங்கள்மீது கோபமாக இருக்கிறார். உங்களுக்குக் கல்யாணம் ஆனால்தான் என்னை விடுவிப்பீர்களாம். அதனால் கோபத்தோடு கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறார்-உங்களுக்குத் திருமணம் விரைவில் நடைபெறவேண்டும் என்று வேண்டாத தெய்வமில்லை.

''அடி தோழி, நீ அன்று என்னுடன் இருந்திருந்தால், அந்த ஓவியரின் உள்ளத்தை உடனே அறிந்திருப்பாய். அவரோடு என்னை இணைத்திருப்பாய். அவர் என்னைத் தம் நாட்டுக்கு அழைத்தபோது அவருடன் செல்ல உதவி செய்திருப்பாய். தந்தை என் எண்ணத்தை, ஆசையை மதிக்க மாட்டார்போல் தோன்றுகிறது. நீ இருந்திருந்தால் என் பெற்றோர்களிடம் வற்புறுத்தியிருப்பாய். யாரோ வடக்கே, நெல்லூரிலுள்ள அரசரின் மகனாம். தெலுங்கு பேசுபவர். அவருக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறாராம். கல்யாணி, நீ இருந்திருந்தால் என் உள்ளத்தை என் தந்தையிடம் எடுத்துக் கூறியிருப்பாய். என்னைச் சித்திரம் வரைந்த அவர் போசள நாட்டு இளவரசராம். அவரிடம் உன்னைத்தூது அனுப்பியிருப்பேன். என்னைப் பெண் கேட்கத் தூது உடனே வருமாறு சொல்லி அனுப்பியிருப்பேன். இப்பொழுது நான் என்ன செய்வேன்? நிலைமை முற்றுவதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே. தில்லை அம்பலவாணனே! எனக்கு ஒரு வழிகாட்டு. என் மனத்துக்குப் பிடித்தவரை நான் மணப்பதற்கு அருள்செய்.''

சந்திரவதனா மனத்துக்குள் நினைத்தாள். வாய்விட்டுப் புலம்பினாள். காதல் பொழியும் விழிகளில் கண்ணீர் ததும்பியது. இளவரசி புலம்புவதைக் கேட்டுப் பணிப்பெண்கள் ஓடோடிச் சென்று அரசியிடம் தெரிவித்தார்கள்.

''உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? என் அருமை மகளே'' என்று புவனமுழுதுடையாள் தன் மகளை அணைத்துக் கொண்டாள். தன் தோளுடன் சேர்த்து மகளை அணைத்துக் கொண்ட அவள் மெய் சிலிர்த்தது. அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள், கரை மீறிப் பொங்கிப் பாய்ந்தன. ''அம்மா'' என்று கூவி வாய்விட்டு அழுதாள். சந்திரவதனாவின் விழிகளில் நீர் வடிந்து அவள் தாய் இதுவரை பார்த்ததில்லை.

''சந்திரவதனா, என் கண்ணே! காலையிலிருந்து அன்ன ஆகாரமின்றிப் பட்டினி கிடக்கிறாயாம். ஏதேதோ சொல்லிப் புலம்புகிறாயாம். உனக்குள்ளே நீ பேசிக் கொள்கிறாயாம்.

பயந்துவிட்டாயா? உன் மனத்திலிருப்பதை என்னிடம் சொல்லக் கூடாதா? இந்த நாட்டுக்கு ஏதோ நேர்ந்துவிட்டது. உன் தந்தை என் பேச்சைக் கேட்கவில்லை. பாண்டியர்கள் படைகளுடன் வருகிறார்களாம். சிற்றரசர்கள் பிணக்கு அதிகமாகிவிட்டது. திடீரென்று உன்னை ஓவியமாக வரைய முகமறியாத சித்திரக்காரரை ஏன் உன் தந்தை நியமிக்க வேண்டும்? என்றுமே அழாத நீ இன்று அழுகிறாய். ஒரே நாளில் உன் மேனி இளைத்துவிட்டது. உன் விருப்பத்தைச் சொல், நிறைவேற்றுகிறேன்'' என்று அன்புடன் பேசி, கூந்தலை வருடி, முதுகைத் தடவி, விழிகளைத் துடைத்துத் தன்னுடன் சேர்த்து ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள் அரசி புவனமுழுதுடையாள்.

விம்மல் எதிரொலிக்க, அதனால் மார்பு விம்மித் தணிய, ''அம்மா, கல்யாணியை நான் உடனே பார்க்க வேண்டும்'' என்று சந்திரவதனா கூறி முடிப்பதற்குள் பெரும்பாடு பட்டாள்.

அங்குள்ள வருத்தச் சூழ்நிலையை மாற்ற அரசி கலகலவென்று நகைத்து, ''இவ்வளவுதானே? உடனே கல்யாணியைக் கையுடன் அழைத்துவரச் சொல்கிறேன்'' என்று கூறி, மகளைத் தேற்றிச் சென்றாள்.

மாலைக் கதிரவன் வழக்கம்போல் கங்கைகொண்ட சோழபுரத்தின் மாளிகைகள், சிறுவீடுகள், ஏழை எளியவர் குடில்கள், கங்கைகொண்ட சோழீச்சரத்து விமானம் இவற்றின் மீது தவழச் செய்து மறுநாள் வருவதற்காக முப்பது நாழிகை நேரச் சிறு விடுமுறை பெற்று மேற்குத் திக்கின் மறைவில் நுழைந்தான்.

சந்திரவதனா மேன் மாடத்துக் காலதர் வழியே மாளிகை வாசலை நோக்கிக் கொண்டிருந்தாள். எந்த நொடியும் அவளது



தோழி கல்யாணி வந்துவிடுவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரவு பிறந்தது. பணிப்பெண்கள் மீண்டும் உணவுத் தட்டுடன் வந்தனர். சந்திரவதனாவுக்கு அப்பொழுது தேவை தோழிதான்.

கங்கை கொண்ட சோழீசர் கோயில் அர்த்தஜாம பூசைக்கான மணி ஓசை கேட்டது.

கல்யாணி வரவில்லை. சந்திரவதனா ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். மேல் மாடத்திலிருந்து மிக வேகமாக இறங்கினாள். அந்த இருளில் அவள் கல்யாணி சென்றிருக்கும் அடுத்த கிராமத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

சந்திரவதனா தனியே கோயிலுக்குக்கூடச் சென்றதில்லை. பணிப்பெண்களோ தோழியோ அரசியோ அவளுடன் செல்வது வழக்கம்.

இன்று அவள் தனியே செல்வதற்கு அஞ்சவில்லை. சோழர் குலப் பெண்களுக்குள்ள இயற்கையான தைரியம் உறுதி, இவை அவளிடம் மட்டும் இல்லாதிருக்குமா? துணிவுடன் காதல் வேகமும் சேர்ந்திருக்கின்றனவே! தன் தோழி கல்யாணி உடன் இருந்தால்தான் தன் எண்ணம் நிறைவேறும் என்று அவள் உறுதியுடன் நம்பியதால் இரவு, தனிமை இவற்றைப் பற்றி அவள் எண்ணவில்லை. மாளிகையிலிருந்து துணையுடன் செல்லவில்லையே என்பதை நினைக்கவில்லை.

மாளிகையை விட்டு வெளியேறும்போது மாளிகையின் முன் கூடத்தில் விளக்கு இல்லை. காவல்காரர்கள் தூங்கி வழிந்தார்கள் என்பதைவிட நன்றாக இழுத்துப் போர்த்திக்

கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார்கள். கவலை ஏதும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

சந்திரவதனாவுக்கு வழி தெரியும்; மாளிகையிலிருந்து நந்தவனம் வழியே வெளிவாசலுக்கு வந்தாள். மேல் தலைப்பை இழுத்துத் தலையை மூடிக்கொண்டாள். புதுப்பிக்கப்படாமலிருந்த பழைய அந்தப்புர மாளிகையைக் கடந்து சென்றாள். இன்னும் சிறிது தொலைவு நடந்தால் -

அப்பொழுதுதான் சந்திரவதனா நினைத்தாள்; மாளிகையினின்று புறப்பட்டுவிட்டோம். நாம் வீதிவழியே செல்லவேண்டும். கோயிலுக்குச் செல்லும் தெரு வழியே செல்ல வேண்டும். கோயில் வெகு தொலைவில் இருக்கிறது. யாராவது பார்த்து விடுவார்கள். அதனால் வேறு சிறு தெருவழியே செல்லலாம்.

மாளிகையைச் சுற்றிலும் மதிள் இருந்தது. மதிளை நெருங்கும்போது இருளின் கருமை இன்னும் அதிகரித்திருப்பது போல் தோன்றியது. மரங்கள் அடர்ந்திருந்த குறுகிய பாதைவழியே நடக்கும்போது, கீழே உதிர்ந்த சருகுகளின் மீது அடியெடுத்து வைத்துச் செல்லும்போது ஏற்பட்ட சரசரக்கும் ஓசை, மரக்கிளைகள் ஏற்படுத்திய ஓசை, சலசலப்பை உண்டாக்கிப் பறவை இனங்கள் ஏற்படுத்திய ஒலி, சில் வண்டுகள் இடும் ஒலி எல்லாம் சேர்ந்து அவள் உள்ளத்தில் அதிக அச்சத்தை ஏற்படுத்தின.

கல்யாணியின் ஊர் பெயர் தெரியும். ஆனால், அது எந்தப் பக்கம் இருக்கிறது என்று அவள் அறியாள். மிக அருகேயுள்ள சிறு கிராமந்தான்.



அவள் வீட்டில் இன்று அவளது திருமணம் குறித்துப் பேசுகிறார்கள். இப்பொழுது அங்கு நாம் சென்று தொல்லை தரலாமா? பிறகு ஏன் புறப்பட்டோம்?

சந்திரவதனா தயங்கினாள். அவளால் இனி ஓர் அடிகூட எடுத்து வைக்கமுடியாது என்று தோன்றியது. காற்று வேகமாக அடித்தது. திரும்பிப் போய் விடுவோம் என்ற முடிவுடன் அப்படியே நின்றாள்.

அருகேயுள்ள மரங்களின் மறைவிலிருந்து மெல்லிய வெளிச்சம் தெரிந்தது.

''இங்கு ஏது வெளிச்சம்? ஏதாவது வீடு இருக்கிறதா?'' சந்திரவதனா நினைத்துப் பார்ப்பதற்குள் மளமளவென்று சிலர் ஓடி வந்தார்கள். அவர்கள் கையில் தீவர்த்தி இருந்தது.

ஒருவன் தீவர்த்தியை உயர்த்திப் பிடித்தான்.

''ஓ! இளவரசி. கும்பிடப் போன தெய்வம் தேடியே வந்துவிட்டது. சோழ இளவரசி அவர்களே! மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது. தனியே வந்திருக்கிறீர்களா? அல்லது தங்களுடன் வந்தவர்களை விட்டுப் பின்தங்கி விட்டீர்களா?'' என்று ஒரு குரல் கேட்டது. அவளால் உடனே அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

சந்திரவதனா ஒரு கணம் திகைத்து நின்றாள். அவளுக்குப் பயம் தோன்றவில்லை.

'கும்பிடப் போன தெய்வம் தேடி வந்துவிட்டதாமே!' என்ன சொல்கிறார்கள்?

''நீங்கள் யார்? யார் தேடி வந்துவிட்டார்கள் என்று சொல்கிறீர்கள்?''-சந்திரவதனா கேட்டாள்.

''ஆகா, இளவரசிக்கு அச்சம் என்பதே இல்லை. சோழர் குலப்பெண் அல்லவா?'' என்று கூறிய அந்தக் குரலுக்கு உரியவர் யார் என்பது அவளுக்குப் புரியவில்லை.

''தேவி! எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? போர் மேகம் தெற்கு வானில் குமுறிக் கொண்டிருக்கும்போது தனியே செல்லலாமா?''

சந்திரவதனா திரும்பி நடக்க முயன்றாள்.

''நில்லுங்கள், எங்கே செல்கிறீர்கள்? இந்தப் பக்கம் மாளிகை. அந்தப் பக்கம் சென்றால்- கோட்டைக்கு வெளியே செல்லலாம்.'' தங்களுக்கு எங்கே செல்ல விருப்பமோ? தங்களுக்கு உதவக் காத்திருக்கிறோம்.

இந்த நேரத்தில் இவர்கள் ஏன் இங்கு வந்தனர்? சோழர் குலத்துக்கு மிகவும் வேண்டியவர்கள் போல் இவர்கள் பேசும் கேள்விக்கு என்னவென்று மறுமொழி கூறுவது?' அவள் சற்றுச் சிந்தித்தாள்.

''தேவி, என்ன யோசிக்கிறீர்கள்? எதற்காகப் புறப்பட்டீர்களோ அதைச் சொல்லலாமா வேண்டாமா என்று நினைக்கிறீர்களா? எங்கள் அரசரிடம் சென்று நாங்கள் தெரிவிக்க வேண்டாமா?''- சற்று மரியாதையாகவே பேசிய அந்தக் குரலுக்குடையவர் திடீரென்று, ''சோழ இளவரசி இந்த நேரத்தில் நீ தனியே புறப்படலாமா? பணிப்பெண் பரிவாரங்கள் எங்கே? உன் தோழி எங்கே? உன் தாய் அறிவாளா? இருளில் வரும் அளவுக்கு என்ன அவசரக் காரியமோ? சொல்லு, உன்னை அழைத்துச் செல்கிறேன்'' என்றான்.



சந்திரவதனா திடுக்கிட்டாள். இவ்வளவு நேரம் மரியாதைச் சொற்களுடன் பேசியவர் திடீரென்று ஏக வசனத்தில் ஆரம்பித்துவிட்டாரே? அதோ கை நீள்கிறதே.

''சந்திரவதனா, பேசமாட்டாய்? முகத்தில் அச்சம் கலந்திருக்கிறது. நீ எந்தக் காரியத்துக்குப் புறப்பட்டாயோ அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் வந்த காரியம் இவ்வளவு எளிதில் நிறைவேறிவிடும் என்று நான் நினைக்கவில்லை''என்று கூறிப் பெரிதாக நகைத்த அந்த உருவம், சந்திரவதனாவின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டது. தீவர்த்தியை ஏந்தியவர்களும், துணைக்கு வந்தவர்களும் சற்று ஒதுங்கி நின்றனர்.

தன் கையை மற்றோர் ஆடவன் பிடித்தவுடன் அவளுக்குக் கோபம் பொங்கியது. அரச குடும்பத்துக்கு மிக வேண்டிய ஒருவன் இப்படிச் செய்வது அவளுக்கு எரிச்சலை ஊட்டியது. 'சீ' என்ற வார்த்தையாக அது பாய்ந்தது.

கைப்பிடி மேலும் அழுத்தமாகியது. சந்திரவதனா கையை உதறி, ''யார் நீ விடு கையை'' என்றாள். அந்த நிலையிலும் அவள் மரியாதையை விடவில்லை.

''ஆகா; உன் கரம் நடுங்குவதிலிருந்தே ஒருவரும் அறியாது ஏதோ நீ செய்யத் துணிந்திருக்கிறாய் என்பதை நான் அறிகிறேன். சொல் இளவரசி, எங்கே புறப்பட்டாய்?'' என்று அந்தக் குரல் கேட்டபோது, சந்திரவதனாவிற்குப் பலவித உணர்ச்சிகள் உள்ளத்தில் எழுந்தன.

என்ன செய்யலாம் என்று சிந்திக்கத் தோன்றுவதற்குள் நிலைமை மோசமாகிவிடும் போல் தோன்றியது. அதனால் அவள் தன் முழு பலங்கொண்டு அவனிடமிருந்து விடுதலை

பெற முயன்றாள். குரல் கொடுத்து உதவிக்கு அழைக்கலாம். மாளிகைக்கு மிக அருகே இப்படியொரு பாழடைந்த வீடும், வனம்போல் புதர்களும், செடிகளும் நிறைந்த இடம் ஒன்று இருப்பது ஆபத்தானது என்பதை ஒருவரும் ஏன் இதுவரை உணரவில்லை என்று அவள் அந்தச் சமயம் எண்ணிப் பயன் என்ன?

''சோழ இளவரசிக்குத் துணிவுடன் பலமும் இருக்கிறது'' என்ற குரல் அவளுக்கு எரிச்சலை ஊட்டியது.

''சோழநாட்டில் இரவு வேளையில் ஒரு பெண் அச்சமின்றிச் செல்லலாம் என்ற நிலை இருந்தது போக மாளிகை அருகிலேயே இப்படி ஒரு வழிப்பறியா? யார் நீ? உன்னைப் போன்ற மோசக்காரர்கள் எதிரே சிறு துரும்புகூடப் பலம் பெற்று எழுந்துவிடும்.'' குரலில் கடுமை தானாகவே வந்தது.

''இளவரசி! என்னைப் பார்த்தா மோசக்காரன் என்கிறாய்? சோழநாட்டைக் காப்பாற்றியதற்காக உன் பாட்டனார் எங்கள் அரசருக்குப் பெரிய கௌரவம் செய்திருக்கிறார். அவர் உதவி இல்லாமல் சோழநாடு வாழமுடியாது. எங்கள் அரசர் இந்த நாட்டுக்குச் செய்திருக்கும் உதவி வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. கோப்பெருஞ் சிங்கன் அனுப்பிய, அவரது அந்தரங்க உதவியாளன் நான். என்னைப் பார்த்து மோசக்காரன் என்று சொல்லிவிட்டாய். என்னைச் சொல்வதும் என் தலைவரைச் சொல்வதும் ஒன்றுதான். உம்; எனது மோசக்காரக் குணத்தைக் காட்டுகிறேன்'' என்று சொல்லி அவளைத் தாவிப் பிடித்தான்.



''ஆமாம்; மற்றொரு முறை சொல்வேன். மோசக்காரன், குணக்கேடன் இன்னும் வார்த்தைகள் என்ன என்ன உண்டோ அத்தனையும் சொல்வேன். ஒரு பெண்ணை, இரவு வேளையில் இப்படி வழி மறிப்பவனுக்கு என்னவென்று பெயர் சொல்வதாம்?'' சந்திரவதனா சீறினாள்.

அவன் மீண்டும் சிரித்தான். ''இளவரசி, இரவு வேளையில் உனக்கு இந்தப் பாழடைந்த மாளிகையில் என்ன வேலை? மாளிகையிலிருந்து தப்பிஓட எண்ணினாய். முறைப்படி உன்னை எங்கள் அரசர்தான் அடையவேண்டும். உன் தந்தைக்குப் பலமுறை பெண் கேட்டுத் தூது அனுப்பினார், மறுமொழி இல்லை, அதற்கு மாறாக அரசரைப் பற்றி மிகக் கீழ்த்தரமாக உன் தந்தை பேசினாராம். பெண்ணே! சோழ அரச பதவி என்பது உங்களுக்கு நாங்கள் அளித்துள்ள பிச்சை. இப்பொழுது சோழ நாட்டுத் தென் எல்லையில் பாண்டியர்கள் நுழைந்து விட்டார்களே! இப்பொழுது மட்டும் எங்கள் உதவி வேண்டுமோ? சரியான புத்தி புகட்ட இதுதான் சமயம் என்று படை உதவி அளிக்க மறுத்துவிட்டோம். உன் தந்தை என்ன செய்தார் தெரியுமா? நெல்லூருக்குச் செய்தி கொண்டு செல்லும் தூதுவன் எங்கள் நாட்டின் வழியாகத்தானே செல்ல வேண்டும்? தூதுவனைச் சிறையிலடைத்து விட்டோம். உன் தாயும் நீயும் மிகத் தந்திரசாலிகள். போசள வீரநரசிம்மனை வரவழைத்தீர்கள். சோழ நாட்டுக்கே மிக அவமானம். இப்பொழுதே நீ எங்கே புறப்பட்டாய் என்பது எனக்குத் தெரியும். சோழ நாட்டுக்கு ஏற்படும் அவமானத்தில் எங்களுக்கும் பங்கு உண்டு. சோழ நாட்டிற்கு ஏற்படும் அவப்பெயரைத் தடுக்கவே வந்தேன். மாளிகையிலிருந்து நீ புறப்படும் முன்பே உன்னைச் சந்தித்துச் சேந்தமங்கலத்துக்கு உன்னை அழைத்துச் செல்லத்

திட்டமிட்டேன். விரைந்து வந்தேன். வரும் வழியிலேயே உன்னைச் சந்தித்துவிட்டேன். கும்பிடப்போன தெய்வம் தேடி வந்துவிட்டது என்று நான் கூறியது சரிதானே?''

சந்திரவதனா அதிர்ச்சி அடைந்தாள். கோப்பெருஞ் சிங்கனின் உதவியாளனிடமிருந்து தப்ப முடியாது. ஐயோ! என்ன காரியம் செய்துவிட்டோம்? மாளிகையில் இருந்திருந்தால் நம்மைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்ல வந்த கோப்பெருஞ்சிங்கனது வீரர்களை நமது வீரர்கள் எதிர்த்துப் போரிட்டுத் தடுத்திருப்பர். இப்பொழுது யார் தடுப்பார்கள்? என்ன செய்வேன்? ஐயோ! திருச்சிற்றம்பலம் உடைய பெருமானே! என்னைக் காப்பாற்று. உதவிக்கு யாராவது வாருங்கள் என்று கூவக்கூட எனக்குச் சக்தி இல்லையே''.

கோப்பெருஞ்சிங்கனின் உதவியாளர் கண்மூடித் திறக்கும் நேரத்தில் ஓர் ஆட்டுக் குட்டியைத் தூக்குவது போல் அவளை இரு கரங்களாலும் தூக்கிக்கொண்டு அந்த இருளில் விரைந்தான். அவனுடன் வந்த அவனுடைய பரிவாரங்களும் அவனைத் தொடர்ந்தனர். எதும் அங்கு நடக்காததுபோல் அந்த இடம் இருள் போர்வையுடன் அமைதியாக இருந்தது.

ஆனால், மாளிகையில் பரபரப்பு ஏற்பட்டது. சந்திரவதனாவைக் காணவில்லை என்ற கூக்குரல் எங்கும் எழுந்தது. அதிர்ச்சி நிறைந்த அந்தச் செய்தியையும் கபளீகரம் செய்யும்படியாக மற்றொரு செய்தி இராசராசனை வந்தடைந்தது.



''பாண்டியர் படைகள் உறையூரிலிருந்த சோழர்களின் பரம்பரை மாளிகையை அழித்துவிட்டன. காவல் படைகளில் ஒருவர்கூட உயிர் பிழைக்கவில்லை. தஞ்சையை நோக்கி வெறி வேகத்தோடு அவர்கள் முன்னேறுகிறார்கள்'' என்ற செய்தி கேட்டு இராசராசன் மிக அதிர்ச்சியடைந்தான்.

## 7

பாண்டியர் படைகள் தஞ்சைக் கோட்டையை முற்றுகை இடவேண்டிய கட்டாயம் இராது என்று சுந்தர பாண்டியன் எண்ணியிருந்தான். அதனால் எதிர்பார்த்ததைவிட அதிக மகிழ்ச்சியுடன் அவன் இருந்தான். பாண்டியர் படைகள், எதிர்ப்பே இராமல் மிக எளிதில் பெரிய நகரங்களுக்குள் நுழைய முடியும் என்று அவன் நினைக்கவில்லை.

படை வீரர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. விரும்பிய இடங்களில் நுழைந்து அட்டகாசம் செய்தனர். அதனால் அவர்கள் அடுத்த ஊர், அடுத்த ஊர் என்று முன்னேறினர். களைப்பே இல்லாது சென்றனர். முதியவர்கள் பெண்டிர் குழந்தைகள் போன்றவர்களுக்கு ஒரு தீங்கையும் செய்யவில்லை.

உறையூரினின்று புறப்பட்டுக் காவிரியைத் தாண்டி வல்லம் கோட்டையைத் தரைமட்டமாக்கி வெறியுடன் தஞ்சையை அணுகியபோது, பயங்கொண்ட கிராமப் பகுதியிலுள்ள மக்கள் தஞ்சைக் கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர். கோட்டைக் கதவுகள் மூடப்பட்டன. தஞ்சையில் தங்கியிருந்த சில சோழ வீரர்களும், முத்தரையர்களும் உதவிக்கு வந்த இளைஞர்களுமாக மதில் மேலிருந்து வேல்களை வீசினர். மாரிபோல் அம்பெய்தினர்.

சோழ வீரர்களின் எதிர்ப்பைத் தாங்க முடியாது பாண்டியர்களின் வேழப் படைகள் நிலை குலைந்து திரும்பி ஓடின. அதனால் பாண்டிய வீரர்கள் சிலர் உயிரிழந்தனர், யானைகளின் காலடியில் நசுக்குண்டு சிதைந்தனர்.

தங்கள் சகோதரர்கள் மாண்டது கண்டு மற்ற வீரர்கள் வீராவேசத்துடன் கோட்டையைத் தாக்கினர். கோட்டைக் கதவைப் பிளந்தனர். மடை திறந்த வெள்ளம்போல் புகுந்தனர். மக்கள் குழப்பமடைந்தனர். வீதிகளில் திசை தெரியாமல் ஓடினர்.

போரைக் கண்டறியாத தஞ்சை மக்கள் அந்தத் தாக்குதலைத் தாங்கமுடியாமல் ஓலமிட்டனர். வீட்டையும் வாசலையும் விட்டோடினர். எதிர்த்தவர்கள் உயிரிழந்தனர். மறைந்திருந்து தாக்கியவர்கள் உடல் சின்னாபின்னமாக்கப் பட்டது.

விஜயாலய சோழர் புதுமையாய்ச் சமைத்த தஞ்சாபுரிக் கோட்டை இராசேந்திர சோழர் காலத்தில் சிறப்பு இழந்தது. சோழ நாட்டின் தலைநகரைத் தஞ்சையினின்று கங்கை கொண்ட சோழபுரம் மாற்றிய இராசேந்திரன், கங்காபுரியின் வளர்ச்சியில் கவனம் செலுத்தினான். தஞ்சையின் பொலிவு, குன்றி வந்தது. மதில் சுவர்கள் செப்பனிடப்படவில்லை. அதனால் மிக எளிதில், பாண்டியர்களின் படைகள் மதிளைச் சிதைக்க முடிந்தது.

இரவு பகல் பாராமல் இரண்டு நாள்கள் தஞ்சை நகரத்தில் ஓரிடம் கூட விடாமல் பாண்டியர் படைகள் புகுந்து புறப்பட்டன.

பெருவுடையார் கோயிலை மட்டும் அழிக்காமல் விட்டனர். சுந்தரபாண்டியன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தை நிமிர்ந்து பார்த்தான். உயர்ந்த விமானம், பெரிய நந்தி, பெரிய லிங்கம்-ஆகா! சோழர்கள் கலை உணர்வு மிக்கவர்கள் என்பது உண்மைதான்! ஆனால் போர்வெறியை ஏன் கொண்டிருந்தார்கள்? பாண்டியர்கள் மீது அவர்களுக்கு ஏன் வெறுப்பு? மதுரையை எவ்வளவுமுறை தாக்கியிருக்கிறார்கள்? வீரபாண்டியரின் தலையைக் கொய்து பந்தாடிய நிகழ்ச்சியை அவனால் மறக்க முடியவில்லை. அவர்களுக்கு இது பிள்ளை விளையாட்டைப் போலாகிவிட்டது. பராந்தகன் காலம் முதல் சமீபத்தில் குலோத்துங்கன் காலம் வரை அவர்கள் விடாமல் குறிவைத்துத் தாக்கிய கொடுமையை எப்படி மறப்பது?



தஞ்சையினின்று தப்பினோம் பிழைத்தோம் என்று மக்கள் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி ஓடி வரத்தொடங்கினர். வாழ்நாளில் இத்தகைய சோதனைகளை அனுபவித்தறியாத மக்களின் ஓலம் இராசராசன் செவிக் கெட்டியபோது அவன் நிலை குலைந்தான். அவன் மாளிகையை விட்டுச் சபை மண்டபத்துக்கு வரவில்லை. அரசியார் புவனமுழுதுடையாள் அரசர் எதிரே எதும் பேசாமல் தலையைத் தொங்கவிட்டுக் கவலை மிகக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

''சந்திரவதனா பெரும் தலைக் குனிவை ஏற்படுத்தி விட்டாள்'' என்று அரசியை நோக்கி இராசராசன் குற்றம் சாட்டினான்.

அரசி கடுமையாக மறுத்தாள். அவளுடைய தொண்டையில் அடைந்திருந்த வார்த்தைகள் வெளிவரத் துடித்துக் கொண்டிருந்தன. ''எல்லாம் உங்களால் ஏற்பட்ட சங்கடங்கள்தாம். தலைக் குனிவு, தோல்வி, அவமானம்

எதாவது ஏற்பட்டால் அதற்கு நீங்கள்தாம் காரணம்'' என்று சொல்ல அவள் துடித்தாள். இதுவரை அரசரை எதிர்த்து ஒரு சொல்கூடப் பேசி அறியாதவள். மௌனமாக உள்ளத்துக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு துடித்தாள்.

''மாளிகையிலிருந்து சந்திரவதனா ஏன் ஒருவரும் அறியாமல் சென்றாள்? இளவரசி செய்யக்கூடிய காரியமா? அறிந்தவர்கள் ஏசுகிறார்களே?'' என்று சீறினான் இராசராசன்.

''நான்தான் நூறு முறை சொல்லி விட்டேனே. அவள் தன் தோழி கல்யாணியைத் தேடி அவள் வீட்டுக்குச் செல்லத்தான் புறப்பட்டாள்'' என்று சமாதனப்படுத்தினாள் அரசி.

''கல்யாணியின் வீட்டுக்கு இவள் ஏன் செல்லவேண்டும்? கூப்பிட்டனுப்பினால் ஓடி வரமாட்டாளா?'' இராசராசன் கேட்டான்.

''கல்யாணி அவள் உயிர்த்தோழி; அவளிடம் தன் மன வேதனையைக் கூறித் தீர்த்துக் கொள்ள.''

''காவலனை அனுப்பினால் அழைத்து வருகிறான்.''

''அவளால் பொறுக்க முடியவில்லை. இதையே சொல்கிறீர்களே தவிர, கோப்பெருஞ்சிங்கனின் ஆட்கள் நடுவழியிலேயே ஓர் கன்னிப் பெண்ணைத் தூக்கிச் செல்லலாமா?'' அரசியின் குரலில் கடுமை இருந்தது.

இராசராசன் மறுமொழிகூறவில்லை. கோப்பெருஞ்சிங்கன் இழைத்தது பெரும் தவறு என்பது அவனுக்குத் தெரியும். இருந்தாலும், சந்திரவதனா அந்த நேரத்தில் அந்த வழியே ஏன் சென்றாள் என்பதே இராசராசன் கேள்வி.



அரசியின் உள்ளத்தில் எழுந்த சினத்துக்கு எல்லை யில்லை. சோழநாட்டுக்குள் ஓவியர் வேடத்தில் அயல் நாட்டரசரும் சோழர்களுக்கு அடங்கியிருக்கும் சிற்றரசரின் பிரதிநிதியும் ஒரு பெண்ணைக் கவர்ந்து செல்ல வந்திருக் கிறார்கள் என்பதை எண்ணி வெட்கப்படாமல், மகளையே அரசர் குறை கூறுவது என்ன நியாயம்? என்று குமுறினாள் அரசி.

போசள இளவரசரைக் குறை கூற முடியாது. அவரால்தான் மகள் காப்பாற்றப்பட்டாள், என்றாலும் அந்த நேரத்தில் வீரநரசிம்மன் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு ஏன் வந்தார்?

மிகக் களைப்படைந்து படுத்த படுக்கையில் கிடந்த தன் மகளிடமே நடந்த சம்பவங்களைப் புவனமுழுதுடையாள் ஒன்றுவிடாமல் கேட்டறிந்தாள்.

ஒரு சமயம் நினைக்கும்போது அழுகை வந்தது. மற்றொரு சமயம் சந்திரவதனாவின் உள்ளத்தில் புத்துணர்வு ஏற்பட்டது.

கோப்பெருஞ்சிங்கனின் உதவியாளர் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு விரைந்தபோது அவள் தன் பலங்கொண்ட மட்டும் அவனிடமிருந்து விடுதலை பெற முயன்றாள். நகமும், பற்களும் உதவிக்கு வந்தும் பயன் இல்லை.

கத்த முடியாமல் வாயில் துணியடைக்கப் பட்டிருப்பதை உணர்ந்தாள். மூச்சுத் திணறியது. மயக்கம் அடையும் முன்பு 'அம்மா' என்று வாய்விட்டுக் கதறவேண்டும்போல் தோன்றியது.

''உங்களைத்தான் அம்மா நினைத்துக்கொண்டேன்'' என்று சந்திரவதனா கூறியபோது அரசியின் கண்களில் நீர் துளிர்த்தது.

''பிறகு என்ன நேர்ந்தது என் செல்வமே? அரசரின் மகளாகப் பிறக்காமல் சாதாரண குடிமக்களின் மகளாகப் பிறந்திருந்தால் இத்தகைய துன்பம் நேர்ந்திருக்காது'' என்று வேதனையுடன் சொன்னாள் அரசி.

''நான் மயக்கமடைந்து விட்டேன். பிறகு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. பொன்னேரிக் கரையிலுள்ள குடிசையில் நான் கிடந்தேன். விழித்துப் பார்த்தபோது தொலைவில் கங்கை கொண்ட சோழீசர் கோயில் விமானம் நிழல்போல் தெரிந்தது. களைப்பும், சோர்வும், வேதனையும் என்னை வாட்டின. என்னைப் பலவந்தமாகக் கவர்ந்து வந்த கோப்பெருஞ்சிங்கனுடைய உதவியாளர் தன்னுடைய ஊருக்குக் கொண்டு செல்லவில்லை என்பதையும், கோட்டைக்கு மிக அருகில் தாம் இருக்கிறோம் என்பதையும் உணர்ந்து கொண்டேன். மண் தரையில்தான் கிடந்தேன். என்றாலும் மனத்தில் ஒரு புதுத் தெம்பு ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றியது. மெல்ல எழுந்து குடிசைக்கு வெளியே வந்தேன்.

சோழகங்கம் ஏரிக்கு மிக அருகே அந்தக் குடிசை இருந்தது. அந்தக் குடிசைக்கு அருகே வேறு குடிசைகள் இல்லை. புதிதாக ஏற்பட்ட குடிசை என்று தோன்றியது.

சந்திரவதனா, வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். தொலைவில் ஒரு மரத்தருகே குதிரை ஒன்று கட்டப்பட்டிருப்பதும், அதன் அருகே மரத்தடியில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதும் தெரிந்தன.



'யாராயிருந்தால் என்ன?' சென்று பார்ப்போம் என்று இளவரசி வேகமாக நடந்தாள்.

மரத்தடியில் வீரநரசிம்மன் அமர்ந்திருந்தான். அதே ஓவியன் வடிவில் குறுந்தாடியுடன் அவன் அமர்ந்திருந்தான். ஒருதடவை கண்களைக் கசக்கிக் கொண்டாள். சந்திரவதனாவுக்கு ஏற்பட்டது அதிர்ச்சியா ஆச்சர்யமா என்று சொல்ல முடியாது.

''ஆ! நீங்களா?'' என்று அவள் அவன் அருகே சென்று கேட்டாள். அவன் சற்றுக் கண்ணை மூடிக்கொண்டு இளைப்பாறியவாறிருந்ததால் அவள் வருவதைக் கவனிக்கவில்லை. அருகே அவள் வந்து குரல் கொடுத்தவுடன்தான் திடுக்கிட்டு எழுந்தான்.

''அடாடா, நான் தூங்கிவிட்டேன்'' என்று கூறிய ஓவியன், இளவரசியைப் பார்த்து, ''இந்தக் குடிசைக்கு எப்படி வந்தோம் என்று வியப்படைந்தாயா?'' என்று கேட்டான்.

''நான் கேட்டதற்கு நீங்கள் மறுமொழி சொல்லவில்லை'' என்று பொய்க் கோபத்தை வரவழைத்துக் கொண்டாள் சந்திரவதனா.

''நீ என்ன கேட்டாய்? முக்கியமான செய்தி எதும் கேட்கவில்லையே? 'ஆ! நீங்களா?' என்று ஆச்சரியப்பட்டாய். அதற்கு என்ன மறுமொழி சொல்வது? 'ஆ! நான்தான்' என்றுதான் கூறவேண்டும்.'' மெல்ல அவன் சிரித்தான்.

''ஆம்; நானேதான்; ''அதே ஓவியன்தான். சொல்லாமல் போய்விட்ட அவனேதான்-என்று சொல்வதுதானே?'' என்று கூறி அவளும் மெல்ல நகைத்தாள்.

பிறகு அவளே தொடர்ந்தாள்: ''தங்களை எப்படி அழைப்பது என்று தெரியவில்லை. போசள நாட்டு இளவரசர் என்பதா? என்னை இதயத்தில் சித்திரம் தீட்டிய ஓவியரே என்று அழைப்பதா? ஓவியரே என்றே அழைக்கிறேன். நேற்று முதல் நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தால் எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது என்று எனக்குத் தெரியவில்லை. அதனால்தான் 'நீங்கள்தானா?' என்று கேட்டேன்.''

''நானேதான்; உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போனதுபோல், முன் அறிவிப்பு இன்றி வந்தேன். முன் அறிவிப்பு இன்றி வந்தது மிகவும் நல்லதாகப் போயிற்று. அந்த நேரத்தில் நான் வராமல் இருந்திருந்தாள், இந்த நேரம் நீ எங்கே இருந்திருப்பாயோ?'' அவன் கூறியவுடன் சந்திரவதனா பரபரப்புடன், ''சொல்லுங்கள்; சொல்லுங்கள்; என்ன நேர்ந்தது சொல்லுங்கள். என்னைக் காப்பாற்றியவர் தாங்கள்தானா?'' என்று கேட்டாள்.

''சோழ இளவரசியே! சோழ நாட்டில் வெளிப் பகைவர்களைவிட உட்பகைவர்களால்தான் ஆபத்து அதிகம் என்று நான் நினைக்கிறேன். சோழ நாடு வேறு, சிற்றரசரான கோப்பெருஞ்சிங்கள் வேறு என்று நான் நினைக்கவில்லை. கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்துத் தலைவனாக இருந்தாலும் சோழ நாட்டுக்கு உட்பட்டவனே. அவன் ஏன் இத்தகைய துரோகச் செயலில் ஈடுபட்டுவிட்டான்? குதிரைமீது உன்னை அமர்த்தி அவனுடைய ஆள் விரைந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். நீயென்று நான் முதலில் அறிந்து கொள்ளவில்லை. ஒரு பெண்ணை யாரோ கவர்ந்து செல்கிறார்கள் என்பதை நொடியில் தெரிந்து கொண்டேன். சோழ நாடு மெல்ல மெல்ல சீர் குலைந்து வருவது என்பதை



நான் அறிவேன். மாளிகைத் தோட்டத்திலிருந்து ஒரு பெண்ணைக் கவர்ந்து செல்லும் அளவுக்குப் பாதுகாப்பும் குறைந்துவிட்டது என்பதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது. துணிகொண்டு வாய் அடைக்கப்பட்டிருப்பதும் கைகள் கட்டப்பட்டிருப்பதும் தெரிந்தன. குதிரையைத் தொடர்ந்து இரு வீரர்கள் வருவதையும் பார்த்தேன். சோழ நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில், வேற்று நாட்டைச் சேர்ந்தவன் ஒருவன், கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து பெண்ணைக் கவர்ந்து செல்கிறான் என்று முதலில் நினைத்தேன். குதிரைகள் என்னைக் கடந்து சென்றுவிட்டன. நான் உடனே திரும்பி அந்தக் குதிரைகளைத் தொடர்ந்தேன். விரைந்து சென்று வழிமறித்தேன். மூன்று பேர்களை ஒருவனே எதிர்த்துத் தடுத்து நிறுத்த வேண்டியதாயிற்று. உன்னைக் கீழே போட்டுவிட்டு, செத்தோம் பிழைத்தோம் என்று அவர்கள் ஓடிவிட்டனர்.

அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரவதனா வியப்புடன், ''கோப்பெருஞ்சிங்கனுடைய ஆட்கள் என்று நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''அவர்களை நிறுத்தியவுடனேயே அந்தக் கூட்டத் தலைவர் கேட்டான் அதிகாரக் குரலில், 'நீ யார்?' என்று. நான் கேட்டேன்; 'முதலில் நீ யார் என்று சொல்லு. இரவு நேரத்தில் ஒரு பெண்ணைக் கவர்ந்து செல்லும் நீ கொள்ளைக்காரனாக இருந்தாலும் நான் அறிந்து கொள்ளவேண்டும்' என்றேன்.

''அவனுக்குக் கோபம் பொங்கியது போலும். என்னைக் கொள்ளைக்காரன் என்று இதுவரை ஒருவரும் சொன்னதில்லை. இப்படிக் கூறும் உன் நாவை அறுக்கிறேன் பார்' என்று சீறினான்.

''நான் மெல்லச் சிரித்தேன். இதுவரை நீ செய்துவந்த தொழிலை அறிந்து உன்னை அப்பெயரிட்டு ஒருவரும் அழைக்கவில்லையா?'' என்றேன்.

''ஏய்! வரம்பு மீறுகிறாய். நான் மாவீரன் கோப்பெருஞ்சிங்கனின் உதவியாளன்'' என்று அழுத்தமாகக் கூறினான்.

''நான் சற்றுக் குறும்புத்தனத்துடன் இரு கரங்கூப்பி, 'ஓ! கோப்பெருஞ்சிங்கனுடைய உதவியாளரா? அடடா! தெரியாமல் போய்விட்டதே. இரவு வேளையில் பெண்ணை ஏன் இப்படிக் கையையும் காலையும் கட்டித் தூக்கிச் செல்கிறாய்? பகல் வேளையில் இவளுடைய பெற்றோர்களிடம் சொல்லி அழைத்துச் சென்றிருக்கலாம். பெற்றோர் சம்மதித்திருக்காவிட்டால் அவர்களையும் சேர்த்து அழைத்துச் சென்றிருக்கலாமே?'' என்றேன்.

''உன் நையாண்டிப் பேச்சைப் பிறகு வைத்துக்கொள். இவள் சாதாரணப் பெண் அல்லள்; சோழ இளவரசி. இவளது பெற்றோர்களிடம் பல காலமாகதிருமணம் செய்து கொடுக்குமாறு எங்கள் தலைவர் வற்புறுத்துகிறார் அவர்கள் கோப்பெருஞ்சிங்கன் கோரிக்கைக்கு இணங்கவில்லை. அதனால்தான் இப்படி. சரி; இப்பொழுது தெரிகிறதா, எதற்காக இவளைத் தூக்கிச் செல்கிறேன் என்று? வழியைவிடு. நாளை மறுநாள் இவளைத் திருவண்ணாமலைக் கோயிலில் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்றான்.

''அப்பொழுதுதான் நான், குதிரையில் துவண்டு இருந்த உன்னைச் சரியாக நோக்கினேன். உன் இருவிழிகளும் மூடிக் கிடந்தன. என் வாள் துரிதமாக இயங்கியது; சுழன்றது. கோப்பெருஞ்சிங்கனுடைய ஆட்களின் உயிருக்கு ஆபத்து



F04398

உண்டாக்காமல் மிக இலேசாகப் புஜத்தில் வாள்முனையைப் பதித்தேன். அவர்கள் உன்னைவிட்டு [illegible] செத்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர்.

''நான் உன் கை கால் கட்டுக்களை அவிழ்த்து வாயில் அடைக்கப்பட்டிருந்த துணியை எடுத்து, மீண்டும் குதிரையில் அமர்த்திக் கொண்டு வந்தேன். இங்கே ஒரு குடிசை போட்டு வைத்திருந்தேன். உன்னைக் குடிசையில் படுக்க வைத்தேன். இரவெல்லாம் உன் அருகிலேயே இருந்தேன்.''

சந்திரவதனா ''ஐயோ!'' என்று கூவினாள். ''இரவெல்லாம் என் அருகேயே இருந்தீர்களா? சுய நினைவில்லாமல் நான் கிடந்தேனே! ஆகா! வெளியே தெரிந்தால் என்னைச் சந்தேகப்படுவார்களே'' என்றாள் வேதனையுடன்.

''கவலைப்படாதே இளவரசி! போசளர்கள் மரியாதை அறிந்தவர்கள். சோழர்களின் பெருமையை அறிந்தவர்கள். சோழ நாட்டினரிடம் பெண் வாங்கிப் பெண் கொடுக்க ஆவல்கொண்டவர்கள். திருமணம் ஆகும் முன்பு நான் தவறாக நடந்துகொள்ளமாட்டேன். சோழ இளவரசியின் மானப் பிரச்சனை- எனது சொந்த பிரச்சினை என்பதை மறக்க மாட்டேன். நான் உன் அருகே அமர்ந்திருந்தேன். மங்கிய ஒளியில் உன் அழகைக்கூட ரசிக்க முடியவில்லை. அழகை ரசிக்கும் நேரம் அல்ல அந்த வேளை. மயங்கிய நிலையில் நீ இருந்தாய். நீ கண் விழிக்கும் வரையில் உன் அருகே இருக்க வேண்டும் என்று எண்ணினேன். எந்த நேரமும் உன்னைத் தேடிச் சோழவீரர்கள் வருவார்கள் அல்லது கோப்பெருஞ் சிங்கனே மீண்டும் பலத்த வீரர்களுடன் வரலாம். அதனால் குடிசைக்கு வெளியே எதற்கும் சித்தமான நிலையில்

வாளுடன் நின்றேன். நீ மெல்லப் புரண்டு படுத்ததைக் கண்டேன். பொழுது புலரும் நேரத்தில் இந்த மரத்தடியில் வந்து அமர்ந்தேன். போதுமா நடந்த கதை? அடுத்து நடக்க வேண்டியதைச் சொல்லு. அதன்படியே செய்கிறேன்.''

சந்திரவதனா யோசித்தாள். ''என்னைத் தேடுவார்கள், நான் மாளிகைக்குச் சென்று விடுகிறேன்'' என்றாள்.

''அதுதான் நியாயம். நான் கொண்டு விடுகிறேன். அதில் பெரும் ஆபத்து உண்டு என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் உன்னைத் தனியே அனுப்புவது மரியாதை அன்று. உன்னை உன் தந்தையிடம் சேர்ப்பிக்காமல் செய்வதும் முறையன்று'' என்று கூறி, சோழ இளவரசியைக் குதிரையில் அமரவைத்துக் கொண்டு, மாளிகையை நோக்கி விரைந்தான்.

புவனமுழுதுடையாள், நடந்த செய்தி அனைத்தையும் மகள் சொல்லக் கேட்டறிந்து போசள அரச குமாரன் காப்பாற்றினான் என்பதிலே பெருமை அடைந்தாலும், ''இரவு வேளையில் அவர் கங்கைகொண்ட சோழபுரம் வரக் காரணம் என்ன? சித்திரம் வரைந்தபிறகு சொல்லிக் கொள்ளாமல் சென்றவர், தன் நாட்டுக்குச் செல்லவில்லையா? கங்காபுரியிலேயே தங்கியிருந்தாரா'' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டாள். சந்திரவதனாவுக்கு அவற்றிற்கு விடை கூறத் தெரியவில்லை.

''அவர் தந்தையைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தாரே, காரணம் சொல்லியிருக்க மாட்டாரா?'' என்று தாயை நோக்கிக் கேட்டாள்.

''அரசர் நடந்தவற்றைச் சரிவரச் சொல்லவிரும்பவில்லை. போசள அரசகுமாரன் தன் நாட்டுக்குத் திரும்பிச்



சென்றுவிட்டார். உன்னை மணந்துகொள்ள விரும்புவதாகப் போசள இளவரசர், உன் தந்தையிடம் தெரிவித்தாராம்'' என்றாள் அரசி.

அரசி கவலை நிறைந்த முகத்துடன் இருந்தாள். போசள நாட்டு அரசகுமாரன், சோழ மன்னரைச் சந்தித்தபோது சோழ மன்னர் திகைத்தார். போசள நாட்டினின்று, இளவரசன் சோழ நாட்டுத் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு எப்படி வந்தார்; ஏன் வந்தார் என்று கேட்டறியாமல் முதல்நாள் இரவு நடந்த சம்பவத்தைப் பற்றிக் கேள்விமேல் கேட்டார். இளவரசருக்குரிய மரியாதையை அளிக்கவும் அவருக்குத் தோன்றவில்லையா அல்லது அவமரியாதைப் படுத்த விரும்பினாரா என்றும் தெரியவில்லை.

ஓவியர் வடிவத்தில் இளவரசன் வந்ததைப் பற்றி அவர் கேட்டறிய முற்பட்டார். தம்மையும், தம் மகளையும் ஏமாற்றியதற்காகக் கோபப்பட்டார்.

''நான் ஏமாற்றினேன் என்று எப்படி நீங்கள் கருதலாம்?'' என்று போசள இளவரசன் கேட்டான். ''ஓர் இளவரசர் ஓவியராக இருக்கக்கூடாது என்று ஏதாவது நியதியா? உங்கள் மகளைச் சித்திரமாக வரைய விரும்பினீர்கள். செய்தி அறிந்து நான் அந்தப் பணியை நிறைவேற்ற வந்தேன். சோழ நாட்டு இளவரசியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவள் அழகை நேரே கண்டறிய வந்தேன். சித்திரக் கலையில் சிறந்த சோழர்கள், தங்கள் குலத்தில் ஒரு சித்திரப் பாவையைப் பெற்றிருக்கிறார்கள் என்று பெருமைப்படலாம்.

''உங்கள் மகள் என் இதயத்தில் அழியாத ஓவியமாகத் தீட்டப்பட்டாள். நான் தங்களைச் சந்திக்க வேண்டிவந்து கொண்டிருந்தேன். போசள இளவரசன் கௌரவம் பார்க்காமல்

நேரே பெண் கேட்க வருவது பழக்கமற்றதாக இருக்கலாம்; ஆனால் சோழ நாட்டில் இருக்கும் சூழ்நிலையை அறிந்த நான் தாமதம் இல்லாமல் தங்களைச் சந்தித்து என் விருப்பத்தைத் தெரிவிக்க விரும்பினேன்.''

சந்திரவதனா ஆவலுடன் கேட்டாள். ''அரசர் என்ன சொன்னார்?''

அரசி பெருமூச்சு விட்டாள். ''வழக்கம் போல்தான் சொன்னார். சோழ நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளச் சோழர்களுக்குத் தெரியும். இளவரசியை மணம் புரிந்து சோழ மகுடத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் அவசியம் எனக்கு இல்லை என்று கூறிவிட்டாரடி மகளே!''

சந்திரவதனா தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

## 8

கங்கைக் கரைவரையில் சென்று, கங்கைநீரைக் கொண்டுவந்த இராசேந்திர சோழனின் பரம்பரையில் வந்த இராசராசன் அடுத்து என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தவாறு இருந்தான். எப்பொழுதும் யோசனைகள் கூறும்



அரசி புவனமுழுதுடையாளும் இரண்டு நாட்களாக மௌனம் சாதித்தாள். கோபமும் சோகமும் கலந்த முகத் தோற்றத்தை யுடைய அரசியை நிமிர்ந்து பார்க்கக் கூசிக் குனிந்த தலையுடன் இருந்தான் இராசராசன்.

சந்திரவதனாவை அழைத்துச் சிறிது நேரம் பேசி அவளுடைய மனத்தை மெல்ல மாற்றுவோம் என்று எண்ணினான். அழைத்தும் சந்திரவதனா வரவில்லை. அவள் இருக்கும் இடம் தேடிச் சென்ற இராசராசன் மஞ்சத்தில் தலையணையில் முகத்தைப் புதைத்தவாறு அவள் படுத்திருப்பது கண்டு அவள் அருகே அமர்ந்தான்.

''கண்ணே, சந்திரவதனா!'' என்றுகூறி, அவள் தோளைத் தொட்டு மெல்ல எழுப்பினான்.

கண்ணீர்க் கோடுகளை மெல்லத் துடைத்துக்கொண்டு அவள் திரும்பினாள். தந்தையைக் கண்டவுடன் மரியாதை செலுத்தும் வகையில் எழுந்து உட்காருபவள், இன்று தந்தை வந்திருப்பதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கிய இராசராசன், ''அழுதிருக்கிறாயா மகளே?'' என்று கேட்டான். இது என்ன கேள்வி? அவளிடம் விம்மல் ஒலி மீண்டும் பிறந்தது.

விசும்பலுடன், ''இன்னும் அழுகிறேன்'' என்றாள். அதில் ஆத்திரமும் அலைபாய்ந்தது.

''நான் அல்லவோ மகளே அழவேண்டும்; நீ ஏன் அழுகிறாய்?''

'இவர் ஏன் அழவேண்டும்? என் நிலையைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிறார்கள். நான் அழுகிறேன். தந்தை என்

இப்படிக் கூறுகிறார்?' தந்தையின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

எதைப்பற்றியும் கவலைப்படாத இராசராசன் முகம் கவலையால் சிறுத்துக் கருத்திருந்தது.

''நீங்கள் ஏன் அழவேண்டும் தந்தையே? நான்தான் பெண்ணாகப் பிறந்ததற்காக அழவேண்டும். அரசமகளாகப் பிறக்காமல் சாதாரணப் பெண்ணாகப் பிறந்திருந்தால் நான் என் விருப்பப்படி நடந்து கொண்டிருப்பேன். அரசகுமாரியாகப் பிறந்ததற்காக அழுகிறேன்.'' அவள் குரல் தழுதழுத்தது.

இராசராசன் திடுக்கிட்டான். 'சாதாரணப் பெண்ணாகப் பிறந்திருந்தால், விருப்பப்படி நடந்து கொண்டிருப்பேன் என்று கூறுகிறாளே-என்ன துணிவு இவளுக்கு?''

''மகளே! என்ன சொல்கிறாய்? உன் விருப்பத்தை இன்னும் மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கிறாயா?''

சந்திரவதனாவின் துக்கம் சிறிது குறைந்தது. துணிவு துளிர்த்தது. அவள் குரல் மெல்ல முளைத்தது. பிறகு அதில் அழுத்தம் அதிகமாகியது.

''என் இதயத்தை எப்பொழுதோ தங்களிடம் புலப்படுத்திவிட்டேன். நீங்களும், தாயும் அதை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அறிந்திராதவர் போல் பேசுகிறீர்கள். தெளிவாகச் சொல்லட்டுமா? நான் போசள அரச குமாரரைத்தான் மணந்துகொள்வேன். அவர் என்னைச் சித்திரம் எழுதினார். இதயத்தில் அமர்த்தினார். கொடியவனிட மிருந்து காப்பாற்றினார். ஏரிக்கரையில் மிகவும் கவனமாகப் பாதுகாத்தார். அவருக்குத் தூதுவரை அனுப்பி மணம் முடிக்க



முயலாமல் அழுவதாகக் கூறுகிறீர்களே, நியாயமா? சோழச் சக்கவர்த்தி என்பதை மறந்துவிட்டு, சோழநாட்டு மக்களில் ஒருவர் என்ற நிலையில் பேசுங்கள். நினைத்துப் பாருங்கள். ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றியவரை மதித்துப் பாராட்டிப் பரிசு வழங்காமல், அவருக்கு மரியாதை செய்யாமல் எங்கோ இருக்கும். தெலுங்கு நாட்டு இளவரசரைப் பற்றிப் பேசுகிறீர்களே? அவருக்கு அனுப்பிய விதம் போய்ச் சேரவில்லை என்று புலம்புகிறீர்களே என் தோழி கல்யாணியின் தந்தையாக இருந்தால் இப்படிப் புரிந்துகொள்ளாமல் இருந்திருப்பாரா?''

இராசராசன் அதிர்ச்சியடைந்தான். 'யார் பேசுவது சந்திரவதனாவா? என் மகளா? இவ்வளவு பேச எப்படித் தெரிந்துகொண்டாள்? இருந்தாலும் தன் மகள் சொல்வதை ஆமோதிக்கக்கூடாது' என்று முடிவு செய்தான்.

''சந்திரவதனா, நீ விபரம் அறியாதவள். எது நல்லது, எது தீமையை அளிக்கும் என்பதை அறிந்து கொள்ளாதவள். எனக்குத் தெரியும் உன் வாழ்க்கைக்கு உதவக்கூடியது எது என்று. சோழநாட்டுப் பிரஜையின் மகளாக நீ இருந்துவிட்டால் கவலையே இல்லை. ஆனால் நீ என்னுடைய மகள். ஒரே மகள். உன்னை மணக்கப் போகிறவன் சோழ நாட்டின் மீது அன்புள்ளவனாக இருக்க வேண்டும். கோப்பெருஞ் சிங்கனுக்கு முன்பே மணமாகிவிட்டது. நீ அங்குச் சென்றால் அவனுடைய அந்தப்புரத்தில் ஒருத்தியாக இருக்கத்தான் நேரும். மேலும் அவன் என்ன எண்ணத்துடன் இருக்கிறான் தெரியுமா? அவனுடைய கபட எண்ணம் உனக்குத் தெரியுமா? அவன் சோழநாட்டின் அரசனாக வேண்டுமாம்! உன்னை மணந்து கொண்டால் தன் உரிமையை இன்னும் பலமாக நிலைநாட்டப் புரட்சி செய்வான். அதனால்...'' என்று அவர்

தொடர்வதற்குள் சந்திரவதனா குறுக்கிட்டு, ''கோப்பெருஞ் சிங்கனைப் பற்றி ஏன் இப்போது பேசுகிறீர்கள்? சோழர்குலத்துக்கு அவருடைய மூதாதையர் உதவிகள் பல செய்திருக்கலாம். ஆனால் அவர் என்னிடம் முறையற்றே நடந்துகொண்டார். ஒரு பெண் தனியே இருக்கும்போது கவர்ந்து சென்றுவிட வேண்டும் என்ற எண்ணமுடையவரை மனத்தில் எந்தப் பிறவியிலும் நினைக்க மாட்டேன். தாம் ஒரு குறுநிலத்தை ஆள்பவர் என்ற எண்ணம் அவருக்கு இருந்திருந்தால் சோழச் சக்கரவர்த்தியின் மகளிடம் இவ்வாறு தவறாக நடந்து கொள்ள முயன்றிருப்பாரா?'' என்றாள்.

மகளிடம் குற்றம் கண்டு பிடித்துவிட்ட குரலில் இராசராசன், ''நீ செய்தது மட்டும் முறையானதா? இருளில் மாளிகையைவிட்டு நீ எங்கே சென்றாய்?'' என்றான்.

''சோழநாட்டில் வழிப்பறி, கொள்ளை ஏதும் கிடையாது என்று நாட்டு மக்கள் கூறுவார்கள். இப்படி ஒரு சிற்றரசரே வழிமறித்துப் பெண்ணைக் கவர்ந்து செல்ல உதவுவார் என்று நம்பமுடியுமா? நான் என் தோழியைக் காணச் சென்றேன். அவளைச் சந்தித்து அவள் மூலம் போசள நாட்டு இளவரசருக்குத் தூதனுப்ப எண்ணினேன். ஆனால் என்னைக் கொடியவரிடமிருந்து காப்பாற்றியவர் யார் தெரியுமா? அவரை நீங்கள் பாராட்டவில்லை'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள் சந்திரவதனா. அதிலும் சீற்றம் இருந்தது.

''நன்றாகப் பாராட்டினேன். ஆனால் போசளரிடமும் வேறுவித நோக்கம் இருக்கிறது. வீரநரசிம்மன் உன்னை மணந்து, சோழ நாட்டின் மீதும் உரிமை கொண்டாட எண்ணுகிறான். போசள நாட்டை ஒருநாள் சோழநாட்டுடன்



சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணமுடைய நான், உன்னைக் காப்பாற்றியதற்காக அவனுக்கு உன்னை மணம் முடிக்க முடியுமா? மறந்துவிடு மகளே. சோழ நாட்டின் பெருமை ஒருநாளும் குறைந்துவிடக்கூடாது. விஜயகண்ட கோபாலனுடைய மகன் சோழர் பரம்பரையில் வந்தவன். நான் அனுப்பிய லிகிதம் அவன் கரத்தில் கிடைத்திருந்தால் இதற்குள் போதுமான படைகள் வந்து சேர்ந்திருக்கும். இப்பொழுதும் நான் ஒவ்வொரு கணமும் எதிர்பார்க்கிறேன். பாண்டியர் படைகளை நிர்மூலமாக்குவதற்கு அதிக நாட்களாகாது. மகளே! நீயும் மனத்தை மாற்றிக்கொள். உன் தாயிடமும் எடுத்துச் சொல், எழுந்திரு. சோகத்தை நீக்கு. துயரத்தைப் போக்கு'' என்று கூறி மகளின் கூந்தலை மெல்லக் கோதினான்.

சந்திரவதனா சீறி எழுந்தாள். ''முடியாது, தந்தையே! முடியாது, என்னால் போசள இளவரசரை மறக்கமுடியாது. அவருடைய உயர்ந்த குணத்தைப் பாருங்கள். அவர் நினைத்திருந்தால் அந்தக் குடிசையில் இருளில் தனிமையில் முறைதவறி என்னிடம் அவர் நடந்துகொண்டிருக்கலாம். அவர் நேர்மையானவர். என்னைத் தம்முடன் போசள நாட்டுக்குக் கொண்டு சென்றிருக்கலாம். அறநெறி தவறாதவர். அழகர். நாட்டாசை அவருக்கு இல்லை. அவர் கடைசியாகச் சொல்லிச் சென்றார்: 'சோழ இளவரசி! எதற்கும் அஞ்சாதே. ஊர் சென்று படைகளுடன் வருவேன். உன் தந்தையைக் காப்பாற்றுவேன்' என்று. அவரை நான் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருக்கிறேன். அவர் வருவார்'' என்று மகள் கூறியது கேட்டு, இராசராசனுக்குக் கோபம் பொங்கியது.

''மகளே! அவன் உதவியா? எனக்குத் தேவையில்லை, தன்னந்தனியாகவே நான் போராடுவேன். ஒருநாளும் உன் திருமணம் போசள இளவரசருடன் நடைபெறாது'' என்று சூளுரைத்தான்.

எங்கோ கூகையொன்று பயங்கரமாக அலறியது.

## 9

இராசராசன் மிகக் குழம்பியிருந்த நிலையில் பயங்கரச் செய்தி ஒன்று அரண்மனையை எட்டியது. அரண்மனையை எட்டு முன்பே மக்களிடையேயும் பரவிவிட்டது. அங்கும் இங்கும் ஓடலாயினர். அரண்மனையை நோக்கி ஓடிவந்து, உயிர் பிழைக்க என்ன செய்வது என்று அரசரையும் அதிகாரிகளையும் கேட்பதற்குப் பலர் முயன்றனர். அரண்மனை வாயிலில் மக்கள் ஓலம்.

பாண்டியர் படைகள் தஞ்சைக் கோட்டையைக் கைப்பற்றி மீன்கொடியைப் பறக்கவிட்ட செய்தியும், பழையாறை நகரில் சுந்தரபாண்டியன் நுழையும்போது எதிர்ப்பே இல்லாத செய்தியும், கங்கைகொண்ட சோழபுரத்தை எட்டியிருந்தன. இப்பொழுது பாண்டியர் படைகள் கங்கைகொண்ட சோழபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தி காட்டுத் தீயைப் போல் பரவியது.

இராசராசன் அமைச்சர் குழுவைக் கூட்டினான். அந்த இரவு வேளையில் கடைசி நொடியில் அமைச்சர்கள் எந்தவிதக் கருத்தும் தெரிவிக்காமல் திகைத்தனர். கோப்பெருஞ்சிங்கன்



படை உதவி செய்யவில்லை என்பதை அவர்கள் அறிந்ததும், பாண்டியர்களுடன் சமாதானம் செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்று கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சர்களுக்கு ஏதும் யோசனை கூறத் தோன்றவில்லை. பாண்டியர் படைகள் செய்துவரும் அட்டூழியங்களைப் பற்றி மட்டுமே அவர்கள் பேசினர். அதனால் ஏது பலனும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

அரச குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புகொண்ட மூத்த வயதினரான அமைச்சர் கூறினார்: ''சக்கரவர்த்தி அவர்கள் பாண்டியர்களை வெல்ல ஒரே ஒருவழிதான் இருக்கிறது. இளவரசியை மணக்கப் போசள இளவரசன் வீரநரசிம்மன் சித்தமாக இருக்கிறான் என்பதை அறிந்தேன். இப்போதே அவருக்குத் தகவல் அனுப்பினால் வீரநரசிம்மன் படைகளுடன் வருவான் உதவிக்கு. தாங்கள் சரி என்று கையசையுங்கள் போதும்.''

அந்த இக்கட்டான நிலையிலும் விரோதியின் நிழல் வாயிற்படியை நெருக்கிய நிலையிலும், இராசராசன் சீற்றத்துடன், ''என்ன சொன்னீர்கள்? போசளனுக்கு என் மகளா? ஒருகாலும் சம்மதிக்கமாட்டேன். மகளைத் திருமணம் செய்து கொடுப்பதன் மூலம் கிடைக்கும் உதவியைப் பெறுவதைவிட, நானே போர்க்களத்தில் போரிட்டு வீரமரணம் அல்லது வெற்றியை அடைவேன்'' என்றான்.

மந்திராலோசனை சபை நடக்கும் இடத்துக்கு அருகிலுள்ள அறையில் சந்திரவதனாவும், அரசியும் நின்று கேட்டுக் கொண்டிருந்தனர். தன் காதலைத் தந்தை ஏற்று நிறைவேற்றமாட்டார் என்பது சந்திரவதனாவுக்குத் தெரிந்து

விட்டது. தாயின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, ''அம்மா, என் காதல் இருக்கட்டும்; நாட்டின் நிலை என்னாவது? கங்காபுரியை இப்படியே அழிய விடப் போகிறீர்களா? எனக்கு அனுமதி தாருங்கள். நான் போசள இளவரசரைச் சந்தித்துப் பேசிப் படை உதவியுடன் வருகிறேன். அவர் சம்மதிக்காவிடில், பாண்டியர் படை நகரத்துக்குள் நுழையும் முன்பு இந்த உலகத்தைவிட்டே சென்று விடுகிறேன்'' என்று துயரமும் வேதனையும் கலந்து கூறினாள்.

அரசி மறுமொழி கூற முடியாமல் கண்கலங்கினாள். ''பொறுமகளே! விடியும் வரை காத்திரு. தந்தையை எப்படியாவது சம்மதிக்க வைத்துவிடுகிறேன்'' என்றாள்.

ஆனால், மறுநாள் பொழுது பயங்கரமான செய்தியுடன் விடிந்தது. ஊரே உறங்கியும் உறங்காமலும் இருந்த வைகறை வேளையில் நகரம் அல்லோல கல்லோலப்பட்டது. வீடுகள் பற்றி எரியத் தொடங்கின.

சுந்தரபாண்டியன் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வரவில்லை. தஞ்சைக்குப் பிறகு, திருக்குடந்தைக்கு வந்தான். தில்லைச் சிற்றம்பலத்து நடராசப் பெருமானை வணங்கி, அந்தத் திருநகரில் முடிசூட்டிக்கொண்டு பிறகு பாண்டிய நாட்டு எல்லையிலுள்ள பொன்னமராவதிக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ள எண்ணினான்.

கங்கைகொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றிப் புலிக் கொடியை இறக்கி, மீன் கொடியை ஏற்றி இராசராசனையும், அவனுடைய மனைவி மக்களையும் கொல்லாமல் சிறைபிடித்துக்கொண்டுவரப் படை வீரர்களுக்கு உத்தரவிட்டிருந்தான். குறிப்பாக, இளவரசி சந்திரவதனாவை எப்பாடு பட்டேனும் பொன்னமராவதிக்கு அழைத்து வருமாறு



கட்டளையிட்டிருந்தான். எள்ளளவு துன்பமும் அவளுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளக் கட்டளை யிட்டிருந்தான்.

பாண்டிய வீரர்கள் கங்காபுரியின் வீதிகளில் நுழைந்து தங்கள் பசியைத் தீர்த்துக் கொண்டிருந்தனர். உயிருக்கு அஞ்சிக் கங்காபுரியை விட்டு மக்கள் ஆயிரக்கணக்கில் ஓடி ஒளிந்தனர். மாளிகை காப்போர், அதிகாரிகள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள உடைமைகளையும் விட்டுவிட்டு ஓடினர்.

சோழ தளபதி இராசராசனிடம் ஓடோடி வந்து மண்டியிட்டு, ''சக்கரவர்த்தி அவர்களே, ஒரு கணங்கூடத் தாமதியாமல் இங்கிருந்து தப்பிவிடுங்கள். தங்களைச் சிறைப்பிடித்து மதுரைக்குக் கொண்டு வருமாறு பாண்டிய அரசர் கட்டளையிட்டிருக்கிறாராம். அதனால் தாங்கள் இரகசிய வழியின் மூலம் தப்பித்துவிடுவது நல்லது'' என்று பரபரப்புடன் கூறிவிட்டு, மறுமொழிக்கு எதிர்பாராமல் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினான். கங்கைகொண்ட சோழனாம் இராசேந்திரன், பாண்டியர்களை நடுநடுங்க வைத்த குலோத்துங்கன் இவர்கள் வழிவழி வந்த சோழர்கள் இப்போது ஓடி ஒளிய இடம் தேடுகிறார்கள்! இராசராசன் செய்வதறியாமல் திகைத்து நின்றான்.

புழுதி எழுந்து வானை எட்டியது. எரித் தீ நாக்குகள் விடும் புகைமண்டலம் எங்கும் கப்பியது. தப்பி ஓடும் மக்கள் இடும் ஓலம் அலை ஓசை போல் எழுந்தது. உடைமை இழந்தவர்களின் கதறல் பயங்கரமாக சூழ்ந்தது.

குனிந்த தலையுடன், உணவருந்தாமல் கவலையுடன் இருந்த அரசரைத் தேற்றி ஆறுதல் கூறி எழுந்து நிற்கச் செய்வதைத் தவிர, புவனமாதேவிக்கு எதும் தெரியவில்லை.

''ஒவ்வொரு கணமும் ஆபத்து நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இப்படியே நீங்கள் உட்கார்ந்திருப்பதால் என்ன பலன்? உங்களைச் சிறைப்பிடிக்க எதிரிகள் திட்ட மிட்டு விட்டனராம். என்னைச் சிறைப்படுத்தி மதுரை கொண்டு செல்ல என்றே ஒருபகுதிப் படையினருக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறதாம். பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மை யுடன் வரும் பாண்டிய மன்னர் எவ்விதக் கொடிய செயலையும் செய்யத் தயங்க மாட்டார். போர்க்களத்தில் ஒப்பாரியும் கவலையும் கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதா? கவலையைவிட்டு எழுந்திருங்கள். வெற்றி அல்லது வீரமரணம் இரண்டுமே இப்போது சாத்தியம் இல்லை எனத் தோன்றுகிறது.''

அரசி கூறவும், இராசராசன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''சாவும் இல்லை, வாழ்வும் இல்லையா?''-அரசன் கேட்டான்.

''ஆமாம், நாம் இறந்தால் நம் மகளின் கதி என்ன ஆவது? நாம் வாழ்ந்தால், அடிமைப்பட்டு வாழ்ந்தால், நம் மகள் நிலை என்ன ஆவது? மதுரைச் சிறையில் என்னுடன் அவளும் அடிமைப்பட்டு வாழ்வதா? உயிரை மாய்த்துக்கொண்டால் வருங்காலம் நம்மைத் தூற்றாதா?'' அரசியின் பேச்சு இராசராசனின் மௌனத்தைக் கலைத்தது.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். இராசராசன் ஓர் இரகசிய வழியின் மூலம் மனைவியுடனும், மகளுடனும் காஞ்சி சென்று அங்கிருந்து நெல்லூர் செல்ல முடிவு செய்து, இருள் நிறைந்த சுரங்கப் பாதையில் கையில் சிறு விளக்குடன் இறங்கினான்.



''நான் மாளிகையிலே இருந்து உயிரை மாய்த்துக் கொள்கிறேன்'' என்று கதறினாள் சந்திரவதனா.

இராசராசன் வேதனையுடன் சிரித்தான். ''மகளே! உயிரை விடுவது அப்படியொன்றும் கஷ்டமான காரியமன்று. ஆனால், உயிர் பிழைத்திருந்து எதிரிகளை வெல்வதில்தான் சோழர் குலத்தின் திறமை இருக்கிறது. இராஜதந்திரம் இங்கேதான் சரியாகப் பயன்படும். அதனால் நாம் இந்தச் சமயத்தில் எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்வதே சரி. என்னுடன் வா. சொன்னதைக் கேட்டு நல்ல பெண்ணாக வா...'' என்று கூறி மறுமொழிக்கு எதிர்பாராமல் அரசியையும் மகளையும் அழைத்துக்கொண்டு சுரங்கப்பாதைக்குள் நுழைந்தான். மறுமொழி பேசாமல் அரசியும், கண்ணீர் சிந்தியவாறு சந்திரவதனாவும், இரு பணிப்பெண்களும், மெய்க்காவலர் ஒருவருமாகத் தொடர்ந்து சென்றனர்.

சோழ மன்னன் தப்பி ஓடிவிட்டான் என்ற செய்தி நகர் எங்கும் பரவியது. மக்கள் சிலர் கண்ணீர் சிந்தினர். சிலர் அரசனின் கையாலாகாத்தனத்தைச் சாடினர். சிலர், பாண்டியர் களுக்கு அடிபணிந்து நாட்டைக் காப்பாற்றியிருக்கலாம் என்று நியாயம் பேசினர். கங்கைகொண்ட சோழபுரம் செய்வதறி யாமல் திகைத்தது.

## 10

பொன்னமராவதி அரண்மனையில் வெற்றித் திருமாலையிட, புலவர்கள் மெய்க்கீர்த்தி பாட, சோழ நாட்டை வென்ற எக்களிப்போடு சுந்தரபாண்டியன் அமர்ந்திருந்தான். அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து மக்கள் பேசினர்.

சோழ மன்னன் இராசராசன், தலைநகரை விட்டோடி விட்டான் என்ற செய்தி பழையாறையிலிருந்த சுந்தர பாண்டியனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கங்கைகொண்ட சோழபுரத்துக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கதைகதையாகச் சொன்னார்கள் பாண்டியனிடம்.

'மக்களுக்கு எந்தவிதத் தொல்லையும் இல்லையே?'' என்று கேட்டான் பாண்டியன்.

''நமது படைவீரர்கள் கோட்டைக்குள் நுழையுமுன்பே, பொதுமக்களில் பெரும்பாலோர் நகரைவிட்டு வெளியேறி விட்டனர். வெறிச்சோடியிருந்த நகரத்தைச் சுற்றிவந்த நமது படைகள் செல்வந்தர் வீடுகளைச் சூறையாடினர். சோழர் கருவூலத்தில் விலைமதிப்புள்ளவை ஏதும் இல்லை. தங்கள் காலடியில் காணிக்கையாகப் பொன்னாபரணங்கள் பொன்னமராவதி நோக்கி வந்து கொண்டிருக்கின்றன' என்ற செய்தியைக் கேள்விப்பட்ட பாண்டிய மன்னன் மகிழ்ச்சி யடையவில்லை.

''இவை எல்லாம் எனக்குப் பொருட்டல்ல. நான் வேண்டுவது சோழநாட்டு இளவரசியை; இந்தச் சித்திரத்தில் உள்ள சிங்காரியை; சிதம்பரத்தில் நான் கண்ட எழில் மகளை.



அப்பொழுதுதான் என் வெற்றி பூரணமானதாகும்'' என்று கூறிப் பலமாக நகைத்தான்.

''எங்கே அருமைநாயகம், அழைத்து வாருங்கள், அவருக்குத்தான் தெரியும் சோழர்களுடைய அருமை'' என்று கூறிய பாண்டியன், கோட்டையை நமது வீரர்கள் மிகக் கவனமாகச் சூழ்ந்து முற்றுகையிடும்போது சோழ அரசன் தன் குடும்பத்துடன் எவ்வாறு தங்கியிருப்பான்? போசள நாட்டுக்கோ, தெலுங்க சோழர்களிடமோ தப்பிச் சென்றிருப்பான். சோழ அரச குடும்பத்தை உயிருடன் சிறைபிடித்து வராத நீங்கள் பெற்ற வெற்றியும் ஒரு வெற்றியா?'' என்று சீறினான் பாண்டியன்.

''நமது வீரர்கள் நாலா திக்கும் சென்றிருக்கிறார்கள். எப்படியும் சிறைபிடித்து அழைத்து வந்து விடுவார்கள்'' என்று சமாதானம் கூறினர் பொறுப்பானவர்கள்.

மறுநாள் பொழுது விடியும்போது சுந்தரபாண்டியனுக்கு நல்ல செய்தி கிடைத்தது.

''சோழ இளவரசி சந்திரவதனாவும், இரு பணிப் பெண்களும் நமது வீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டனர்'' என்ற செய்தியைக் கொண்டு வந்த தூதுவனுக்குப் பரிசுகள் பல அளித்து மகிழ்ந்தான்.

''இளவரசியை மிகவும் மரியாதையுடன் மாளிகையில் இருக்கச் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்ட சுந்தரபாண்டியன், சந்திரவதனாவின் உள்ளத்தை அறிய, அநுபவம் மிக்க பெண்கள் சிலரை அனுப்பினான்.

சோழ இளவரசியிடம் அன்பாகவும், பண்பாகவும், அதட்டியும், கோபமாகவும், பயமுறுத்தியும் பேசிய

வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்த மாதர்கள், சுந்தர பாண்டியனிடம் வந்து சோழ இளவரசியின் மனத்தை மாற்ற இயலவில்லை என்பதைத் தெரிவித்தனர்.

''சோழ இளவரசியின் முடிவுதான் என்ன?'' சுந்தர பாண்டியன் கேட்டான்.

''அவள் போசள இளவரசனைத்தான் விரும்புகிறாள். அவனை அடையா விட்டால் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாகப் பயமுறுத்துகிறாள்'' என்றனர், இளவரசியின் மனத்தை மாற்ற முயன்ற மாதர்கள்.

சுந்தரபாண்டியன் ஒரு கணம் சிந்தித்தான். பிறகு அவர்களிடம் சொன்னான்; ''சரி, சோழ இளவரசியிடம் சொல்லுங்கள்; எப்படியும் அவள் பெற்றோர்களைத் தேடிப் பிடித்து விடுவோம். மதுரை மாளிகையில், அவர்கள் வாழ்நாள் எல்லாம் கடுமையான பணிகளைச் செய்யுமாறு செய்துவிடுவோம். இதுநாள் வரை பழிக்குப்பழி வாங்குவதில் இந்தக் கடுந்தண்டனையைக் கைக்கொள்ள வேண்டாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுது சோழ அரசியைப் பணிப்பெண்ணாக நடத்துவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். ஒருவேளை இளவரசி தன் உயிரை மாய்த்துக்கொள்வதாக முடிவெடுத்தாலும் அதற்காக அஞ்சமாட்டேன். சந்திரவதனாவின் தாய் மதுரைமாளிகையில் ஒரு பணிப்பெண்ணாக ஆயுள் முழுவதும் இருந்துதான் மடியவேண்டும். அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள மாட்டேன், போய்ச் சொல்லுங்கள்.''

சந்திரவதனா கலங்கவில்லை. போசளத்திலிருந்து வீரநரசிம்மன் படைகளுடன் காப்பாற்ற வருவான் என்று உறுதியுடன் நம்பினாள். ஆனால், தனது தாய்-சோழ



குலவிளக்கு-தனக்காகக் கணவரிடம் வாதாடிய அரசி-மதுரையில் பணிப்பெண்ணாகத் தண்டனை அநுபவிக்கப் போகிறாள் என்பதுதான் அவளைக் கலக்கியது.

சோழர்களின் குலதெய்வம் திருச்சிற்றம்பலம் நடராசப் பெருமானை மனத்தில் நினைத்துக் கொண்டாள். கங்கை கொண்ட சோழீச்சுவரரை நினைத்துக் கொண்டாள். 'இறைவா, என் தந்தையும் தாயும் பாண்டியர்களிடம் சிக்கிவிடக் கூடாது. அவர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி விட்டால் நான் நிச்சயம் பிழைத்துக் கொள்வேன். போசள அரசகுமாரன் காப்பாற்றி விடுவான். அதுவரை பொறுமையாக இருக்க அருள் புரிவாய் அம்பலவாணா' என்று வேண்டிக் கொண்டாள்.

நடக்க வேண்டியது நடந்தே தீரும். இராசராசன் பாண்டியர் படைகளிடம் அகப்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால், தன் மகள் பாண்டியர்களிடம் சிக்குண்டாள் என்பதையும், அவளைப் பலவந்தப்படுத்திச் சுந்தரபாண்டியன் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்பதையும் கேள்விப்பட்ட இராசராசன் திடுக்கிட்டான்.

கானகத்தில் மறைவான இடத்தில் நம்பிக்கை உடைய சிலருடன் தங்கிய இராசராசன் அடுத்துச் செய்வதறியாமல் திகைத்தான். புவனமுழுதுடையாள் அந்தச் சில நாட்களிலேயே துரும்பாக இளைத்துவிட்டாள்.

அரச பதவி பறிபோனதுடன், நாட்டை இழந்தவுடன் மகளையும் பறிகொடுத்து நிற்குமாறு நேர்ந்தது அவளைச் சித்தப்பிரமை கொள்ளும் நிலைக்குக் கொண்டுவிட்டது.

''சந்திரவதனாவைப் பாண்டிய வீரர்கள் கொண்டு சென்று விட்டனராம். ஐயோ, அவளை அலங்கோலப்படுத்தி

விட்டால் என்ன ஆவது? அவளைக் காப்பாற்ற என்ன வழி? நாம் படை இழந்தோம். கோப்பெருஞ்சிங்கன் உதவ வரமாட்டான். விசயகோபாலன் வரமாட்டான். போசள நாட்டினின்று உதவிவரும் என்று சந்திரவதனா பெரிதும் நம்பினாள், நடக்கவில்லை. இனி போசளர்கள் பாண்டியர்களிடம் போரிட்டு மகளை மீட்கவேண்டும். மீட்பார்களா? அவர்கள் நாட்டுக்கே நாம் சென்று விடுவோமா? அல்லது சேந்த மங்கலம் செல்வோமா?''-அரசி புவனமுழுதுடையாள் வாய்விட்டுப் புலம்பி அழுதாள்.

அரசி விடும் கண்ணீர் கண்டு இராசராசன் நிலைகுலைந்தான். சிறிது நேரம் விழிகளை மூடிக்கொண்டு சிந்தித்த அவன், ஒரு முடிவுக்கு வந்துவிட்டதுபோல் எழுந்து நின்றான்.

''புவனமுழுதுடையாளே! உன் கண்ணீர் என் நெஞ்சில் பாய்ந்து உருக்கிவிட்டது. மகளுடைய வாழ்வுதான் நமக்கு இப்போது முதன்மையானது. சோழ நாட்டையே எடுத்துக்கொண்டுவிட்ட பாண்டியன் சந்திரவதனாவையும் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? அவளை நம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்போம்'' என்றான்.

புவன முழுதுடையாள் ஆவேசத்துடன் திரும்பினாள். ''என்ன சொன்னீர்கள்? பாண்டியர்களிடம் மண்டியிடுவதா? இப்படியொரு கோழைச் சோழராகத் தாங்கள் மாறுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சோழநாட்டின் பரம்பரை மகுடத்தைப் பாண்டியர்கள் அபகரித்து விடக்கூடாது என்பதற்காகத்தான், கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தப்பி, மறைந்து சில காலம் வாழலாம் என்ற தங்கள் யோசனையை அப்பொழுது ஏற்றேன். இப்போது



பாண்டியர்களிடம் மடிப்பிச்சை கேட்கச் சொல்கிறீர்களே? இது என்ன நியாயம்? சோழ நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த இராசராசசோழ தேவர் வழிவழி வந்த தாங்களா இப்படிச் சொல்கிறீர்கள்?'' புவனமுழுதுடையாள் எரிமலை விசுவதுபோல் சொற்களை வீசினாள்.

அரசியின் சொல்லம்புக்காக இராசராசன் வருந்தவில்லை. 'விதி எப்படியெல்லாம் விளையாடுகிறது' என்ற வேதனையுடன், ''அரசி! உன் கோபம் புரிகிறது. அவமானப்பட்டுவிட்டோம்; அரசு இழந்துவிட்டோம். மகளையும் இழக்கக்கூடாது என்பது என் கருத்து. உன் கருத்தும் அதுவாகத்தான் இருக்கிறது. மகளைத் திரும்பப் பெறுவதற்காக நாம் பாண்டியரிடம் மண்டியிட வேண்டாம். சோழ நாட்டையே திரும்பப் பெறுவதற்காகப் பாண்டியரிடம் செல்வது தவறல்லவே. சமாதான தூது என்று நினைத்துக் கொள்வோம்.''

புவனமுழுதுடையாள் முகத்தில் ஒளி மெல்லப் படர்ந்தது. சோழ அரசர் சொல்வதைக் கேட்கவிரும்பினாள்.

''சமாதான தூதா...?''

''ஆமாம்; நாட்டை அவர்கள் பறித்தார்கள். மகளையும் சிறைப்படுத்தினார்கள். இரண்டையும் முழுமையாகப் பெறுவோம்.''

''எப்படி?''

''சுந்தரப் பாண்டியனுக்குச் சந்திரவதனாவை மணக்கும் ஆசை இருப்பதாக அறிந்தேன். போசள இளவரசன் வரைந்த ஓவியத்தை, பாண்டிய ஒற்றன் கவர்ந்து சென்று சுந்தர பாண்டியனிடம் அளித்ததாகவும், சந்திரவதனாவின் அழகில்

மனம் பரிகொடுத்த பாண்டியன் எப்படியாவது அவளை அடைவது என்று முடிவு செய்துள்ளதாகவும் கேள்விப் பட்டேன்.''

''அப்படியா?''

''இப்போது பாண்டியரிடம் நாம் நேரே சென்று, சந்திரவதனாவை மணம் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்து, சோழநாட்டைத் திரும்பப் பெறுவோம். சோழமகுடமும், நாமும் காப்பாற்றப்படுவோம் அல்லவா?''

''சோழமகுடம் காப்பாற்றப்பட வேண்டியதுதான். அதற்காக விரோதிக்கு நம் மகளை மணம் புரிந்து கொடுப்பதைவிட, மிகவும் நண்பராக உள்ள போசளருக்குத் திருமணம் செய்து கொடுத்து, பாண்டியனை முறியடித்துச் சோழ வாளின் பெருமையை ஏன் நிலை நாட்டக்கூடாது?'' சந்திரவதனாவின் விழிகளில் துக்கக் கண்ணீர் வருவதற்கு மாறாக ஆனந்தக் கண்ணீர் வருமாறு ஏன் செய்யக் கூடாது?''

இராசராசன் பெரிதாக நகைத்தான். ''தேவி! நான் எண்ணியபடி நடக்கவில்லை. விஜய கண்டகோபாலன் மகனுக்கு மணம் புரிவிக்க நினைத்தேன், ஈடேறவில்லை. இந்தநிலையில் விரோதியுடனே சமாதானம் செய்துகொண்டு சோழ மகுடத்தைக் காப்பாற்றுவதுதான் சரியென்று எனக்குத் தோன்றுகிறது. போசளன் ஏமாற்றுக்காரன். ஓவியனாக நடித்துச் சந்திரவதனாவின் மனத்தை மாற்றியவன். படைகளை அனுப்பி உதவி செய்யும் எண்ணம் அவனுக்கு இருந்தால் இந்த நேரத்தில் போசளர் உதவி கிட்டியிருக்கும். போசள இளவரசனுக்குச் சந்திரவதனாவும் வேண்டும், பிறகு சோழநாடும் வேண்டும். போசளரிடம் சோழநாடு செல்வதை



விட பாண்டியரிடம் செல்வதே மேல். சோழர் பாண்டியர் என்ற வேற்றுமை எதற்கு?''

இராசராசன் இவ்வாறு கூறிய பிறகு அவனுடன் வாதாட அரசி விரும்பவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். சுந்தரபாண்டியன் வீற்றிருக்கும் பொன்னமராவதி நகரை இருவரும் அடைந்தனர்.

## 11

சந்திரவதனா, உறங்காமல், உண்ணாமல் நீராடாமல், வேற்றுடை மாற்றாமல் சோகமே உருவாய் இருப்பதனால் சுந்தரபாண்டியன் கவலை மிகக் கொண்டான். அவளுடைய தாயை மதுரை மாளிகையில் வேலைக்காரியாக்குவேன் என்று பயமுறுத்தியும் அவள் மனம் மாறவில்லை. உண்ணா நோன்பிருந்து உயிரை மாய்த்துக் கொண்டால் அந்தப் பழிவேறு பாண்டியர்களைச் சேர வேண்டுமா? சுந்தர பாண்டியன் யோசித்தான்.

''நாம் நேரே சென்று சோழ மகளுடன் பேசி அவள் மனத்தை மாற்ற முயன்றால் என்ன?'' என்று அவனுக்குத் தோன்றியது.

சோழ இளவரசி சந்திரவதனா இருப்பிடம் அடைந்தான் சுந்தரபாண்டியன்.

பாண்டிய மன்னரை ஒரு கணம் உற்று நோக்கிய சந்திரவதனா, சுந்தரபாண்டியன் காலடியில் தடாலென

விழுந்து, ''அப்பா, என்னைக் காப்பாற்றுங்கள். என் தாய் தந்தையரைக் காப்பாற்றுங்கள். எங்கள் மூதாதையர் செய்த கொடுமைக்காக எங்கள் நாட்டு மக்களைப் பழிவாங்குவதில் தங்களுக்கு என்ன பலன்? என் மனத்தை முன்பே ஒருவருக்குப் பறிகொடுத்துவிட்டேன். அவர்தம் இதயத்தில் என்னைச் சிறைபிடித்து வைத்துள்ளார். நீங்களோ என்னைச் சிறைபிடித்து வைத்துள்ளீர்கள். உயிருள்ளவரை அவரை மறக்க முடியாது. இந்தப் பிறவியில் அவரைத் தவிர வேறு ஒருவரை நான் நினைக்கவே மாட்டேன். என் தந்தை என் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. தாங்களாவது என் தந்தையின் இடத்தில் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள். நான் தங்களிடம் சிறைப்பட்டிருப்பது அறிந்து என் காதலர் போசள இளவரசர் படைகளுடன் வருவார். வீணாக மற்றொரு போர் எனக்காக நடைபெற வேண்டாம். என்னைப் போசள நாட்டுக்கு அனுப்பிவையுங்கள். என் தாயை ஒன்றும் செய்யாதீர்கள். நாட்டைப் பிடித்து மக்களைக் கொடுமைப்படுத்தி, சுந்தர பாண்டியன் கொலைகாரன் என்று வருங்காலத்தவர் தங்களைத் தூற்றுவதைவிட 'சுந்திரபாண்டியன் பேருள்ளம் படைத்தவர். பகைவனுக்கு அருளும் நன்னெஞ்சம் உடையவர்' என்று வருங்காலம் வாழ்த்தும் அளவுக்குச் செயல் புரியுங்கள்'' என்று உணர்ச்சி மிகுதியால் வார்த்தைகளைச் சொல்ல முடியாமல் விம்மினாள்.

சுந்தரபாண்டியன் பெரிதாக நகைத்தான். ''போசளர்கள் வருவார்களா? வரட்டுமே! பரம்பரை பரப்பரையாக வீரம் மிகுந்த சோழர்களே தோற்றோடிய பிறகு, போசளர் தன் பங்கைப் பெற வேண்டாமா? வரட்டும். போசளர்களுக்குப் பாடம் கற்பிக்கிறேன். சோழர் மகளே! உனக்குச் சென்றகாலக் கதை தெரியாது போல் இருக்கிறது. சோழர்கள் இழைத்த



கொடுமை கொஞ்சமா? வருங்காலம் அதைப் பற்றிப் பேசுமானால், பாண்டியர்களின் கொடுமையைப் பற்றியும் பேசட்டும்'' என்று கூறியபோது, சந்திரவதனா எழுந்து கை கூப்பி, ''பழைய கதை பழைய கதையாகவே போகட்டும். நாம் புத்திலக்கியம் படைப்போம். சங்கத் தமிழ் வளர்த்த பாண்டியர் புதிய சரித்திரம் படைக்கட்டும். உங்களால் முடியும் அப்பா. என் தந்தைக்கு நிகரானவரே எனக்கு வாழ்வளியுங்கள்.''

சுந்தரபாண்டியன் மறு வார்த்தை பேசாமல் அந்த இடத்திலிருந்து விரைந்தான்.

சந்திரவதனாவின் இந்தக் குரல் சுந்தரபாண்டியனை மெய்சிலிர்க்க் வைத்தது.

பாண்டிய ஒற்றர்கள் விரைந்து வந்து சோழ மன்னன் தன் மனைவியுடன் மாறுவேடத்தில் வருவதாகத் தெரிவித்தனர். அவர்களுக்கு எந்தவிதத் துன்பமும் நேராமல் அழைத்து வருமாறு சுந்தரபாண்டியன் கட்டளையிட்டான்.

சுந்தரபாண்டியன் சிறிதும் எதிர்பாராத விதமாக இராசராசனும் புவனமுழுதுடையாளும் அவன் அடி பணிந்தனர்.

''சுந்தரபாண்டியரே நமக்குள் கால காலமாக இருக்கும் பகைமை தீரவும் இருவரும் சமாதானமாக இனி இருக்கக் கேட்டுக் கொள்ளவும் நான் வெகு தொலைவிலிருந்து வருகிறேன். என்னுடன் அரசியும் வந்திருக்கிறாள். பாண்டியர்களும் சோழர்களும் இனி எந்தவிதப் பூசலுமின்றிச் சமாதானமாக இருக்க வேண்டும். அதற்காக என் மகள் சந்திரவதானவைத் தங்களுக்கு மணம் புரிவிக்க

விரும்புகிறேன். அவளை ஏற்றுக்கொண்டு சோழநாட்டில் மீண்டும் புலிக்கொடி பறக்கவழி செய்யுங்கள். சோழ மன்னன் அடி பணிந்தான் என்ற அவப்பெயர் ஏற்படுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இவ்வளவு காலம் பாண்டியர்களைச் சோழர்கள் அடக்கி இருக்கவில்லையா? சோழ மகளைப் பாண்டியன் மணந்தான் என்ற பெருமை நின்று நிலவட்டும்'' என்று இராசராசன் கூறவும் சுந்தரபாண்டியன் திகைத்தான்.

சோழ மன்னன் இராசராசன் நிலையைக் கண்டு சிரிப்பதா வேதனைப்படுவதா என்று அவனுக்குத் தெரியவில்லை. கோபமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது.

சோழநாட்டில் ஒருவித எதிர்ப்புமின்றி மிக எளிதாக உலாவருவோம் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. வீரபாண்டியன் தலையைக் கொய்து பந்தாடிய சோழர்களா இன்று பூச்சிபோல் நெளிந்து வருகிறார்கள்?

'சேசே எனக்கே அவமானமாக இருக்கிறது. ஒரு வீரன் தனக்குச் சமமாக உள்ள மற்றொரு வீரனுடன்தான் மோதவேண்டும். அந்த மோதலில் கிடைக்கும் வெற்றி தோல்வியைத்தான் மதிப்பிட வேண்டும். பாண்டிய வீரர்களைக் கண்டவுடன் ஓடி ஒளிந்த சோழ வீரர்களிடம் பெற்ற வெற்றியை நான் வெற்றி என்று எவ்வாறு கருதமுடியும்? இந்தச் சோழநாடு எனக்கு வேண்டாம், கிடைத்த தோல்வியினின்று பெரும் படிப்பினையை அடைந்து, இனியும் மதுரை மீது படையெடுக்காமல் இருக்கும் உணர்வைச் சோழ மன்னன் அடையட்டும். அல்லது மீண்டும் படைபலத்தைப் பெருக்கிக்கொண்டு மோதுவதற்கு ஆயத்தமாகட்டும். அப்பொழுது உண்மையான போர் நடக்கும். வெற்றி தோல்வியை அப்பொழுது முடிவு செய்வோம்.'



சுந்திரபாண்டியன் இவ்வாறு எண்ணி, இராசராசனை மிக அலட்சியமாக நோக்கி, ஆனால் மரியாதையைக் குறைக்காமல், ''சோழரே! உங்கள் மகளை எனக்கு மணம் பேசி சமாதானம் கேட்க வந்த உங்கள் நிலைக்கு மிக வேதனைப்படுகிறேன். உங்கள் மகளை நான் விரும்பியது உண்மைதான். உங்கள் நாட்டிற்கு வந்து அவள் அழகைக் கண்டு மனத்தில் அவளை ஏற்றுக்கொண்டது உண்மைதான். ஆனால் அவள் விரும்பவில்லை. சோழ மன்னரே! என் உள்ளத்தில் வீரமும் உண்டு, ஈரமும் உண்டு. உங்கள் மகள் என் மனத்தை மாற்றிவிட்டாள். என்னை அவள் பாண்டிய மன்னரே என்று அழைக்கவில்லை. அப்பா என்று குரல் கொடுத்தாள். அந்த ஒலி, தந்தைப் பாசத்தை என் உள்ளத்தே முளைக்க வைத்துவிட்டது. சோழ இளவரசியின் உள்ளம் அறிந்து, அவள் விரும்பிய இளவரசருக்கு அவளை மணம் புரிவித்திருக்க வேண்டியது தந்தையாகிய உங்கள் கடமை. கடமையில் தவறி விட்டீர்கள். நாட்டைக்காக்கும் கடமை, மக்களைக் காக்கும் கடமை, மகள் விருப்பத்தை நிறைவேற்றும் கடமை... மூன்றிலும் தவறிய உங்களைப் பார்க்கவே எனக்கு விருப்பம் இல்லை. இங்கிருந்து போய் விடுங்கள், நிற்காதீர்கள். சோழநாடு எனக்கு வேண்டாம். நீங்களே வீரத்துடனும் விவேகத்துடனும் ஆட்சி புரியுங்கள். மீண்டும் மதுரைமீது படையெடுத்து வரும் எண்ணத்தை மறந்துவிடுங்கள். பாண்டியர் மகுடத்தையும் வாளையும் அடைய வேண்டும், பாண்டியரை அடக்க வேண்டும் என்ற தங்கள் பரம்பரை எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். மறந்து விடுங்கள். சந்திரவதனா என்னை நோக்கி 'அப்பா' என்று குரல் கொடுத்தாள். அதனால் ஏற்பட்ட பாச உணர்வுடன் பேசுகிறேன். தந்தை உணர்வுடன் பேசுகிறேன். அந்த அழகிய

இரு விழிகளும் கண்ணீர் சிந்தச் செய்யாதீர்கள். அவளுக்குள்ள பாசம் என்னைக் குலுக்கிவிட்டது. சந்திரவதனாவை அழைத்துக்கொண்டு உடனே புறப்படுங்கள். தக்க மரியாதையுடன், பாதுகாவலுடன் கங்கைகொண்ட சோழபுரத்துக்குத் தங்களை அனுப்பி வைக்கிறேன். சோழ நாட்டைப் பாண்டியன் கைப்பற்றினான் என்ற அவப்பெயர் இப்பொழுது எனக்கு வேண்டாம். கோழைச் சோழனைச் சுந்தரபாண்டியன் எளிதில் வென்றான் என்ற பெயர் எனக்கு வேண்டாம். போய் விடுங்கள்'' என்று கூறிச், சந்திரவதனாவை அழைத்து வரச் சொன்னான். அவள் வந்ததும் அருகில் அழைத்து, நெற்றியில் திலகமிட்டு, ''உனக்குப் பிடித்தவனை மணம் புரிந்துகொண்டு நீடு வாழ்வாயாக'' என்று ஆசி கூறினான்.

சந்திரவதனாவின் அழகிய இரு விழிகளில் ஒளி பிறந்தது. சோழ மகுடமும், புகழ் மிகுந்த வாளும் காப்பாற்றப்பட்டன. உணர்ச்சிப் பெருக்கால் எழுந்த கண்ணீர்த் துளிகள் முத்தைப்போல் பிரகாசித்தன.

இராசராசன், புவனமுழுதுடையாள், சந்திரவதனா மூவரும் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

*

